# தமிழ் இலக்கிய மாதிரி வினாவிடை

1967ஆம் ஆண்டு மார்கழியிலும்
அதன்பின்னும் நிகழும்
க. பொ. த. (சாதாரண) பரீட்சைகளுக்குரியது

சுன்னாகம்:
வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

பதிப்புரிமை] 1967 [விலை ரூ. 2-50

மா. ஞானலிங்கம்

# தமிழ் இலக்கிய மாதிரி வினாவிடை

1967ஆம் ஆண்டு மார்கழியிலும்
அதன்பின்னும் நிகழும்
க. பொ. த. (சாதாரண) பரீட்சைகளுக்குரியது

T. 100

தமிழ் இலக்கியம்
கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம்
(மந்தரை சூழ்ச்சிப் படலம் - கைகேயி சூழ்வினைப் படலம்)
பாரதச் சுருக்கம்
ஆகிய நூல்களின்
வினாக்களையும் விடைகளையும் கொண்டது.

"ஐயன்ன"
எழுதியது.

கின்னுகம் :
வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

பதிப்புரிமை] 1967 [விலை ரூ. 2-50

சுன்னாகம், வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தினருக்காக, குரும்பசிட்டி, திரு. முத்தையா சபாரத்தினம் அவர்களால், சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

# தமிழ் இலக்கிய மாதிரி வினவிடை

1967ஆம் ஆண்டு மார்கழியிலும்
அதன்பின்னும் நிகழும்
க. பொ. த. (சாதாரண) பரீட்சைகளுக்குரியது

தமிழ் இலக்கியம்
கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம்
(மந்தரை சூழ்ச்சிப் படலம் - கைகேயி சூழ்வினைப் படலம்)
பாரதச் சுருக்கம்
ஆகிய நூல்களின்
வினாக்களையும் விடைகளையும் கொண்டது.


"ஐயன்ன"
எழுதியது.



சுன்னாகம்:
வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்



பதிப்புரிமை]



1967 [விலை ரூ. 2-50

சுன்ஞகம், வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தினருக்காக, குரும்பசிட்டி, திரு. முத்தையா சபாரத்தினம் அவர்களால், சுன்ஞகம், திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

# தமிழ் இலக்கியம்

1. பின்வருவனவற்றின்:

அ. இடஞ் சுட்டிக் காட்டுக.

ஆ. பொருளை இலகுவான தமிழில் எழுதுக.

இ. ஒவ்வொன்றின் கீழுள்ள வினாவுக்கும் விடை தருக.

i. மாவண்ண விந்துமகா வாரிதியாந் தெய்வ
வலம்புரிசூ லுளைந்தீன்ற வண்டரள மன்றிப்
பூவண்ணன் திருவோடு புதுவண்ண மாடும்
பூங்காவும் போலுமெங்கள் பொன்னிலங்கை நாடு.

இதிலுள்ள உவமையை விளக்குக.

அ. நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் அவர்கள் ஈழமணித் திருநாட்டின் இயற்கை, செயற்கை அழகுகளையும், பழம் பெருஞ்சிறப்புகளையும், பழைய வரலாறுகளையும் அழகிய பாடல்கள்மூலம் எடுத்துக் காட்டியுள்ளார். அவற்றிலே இப்பாடல் 'மணி யிலங்கை நாடு' என்ற தலைப்பில் உள்ள பாடலாகும். இப்பாடலில் எமது பொன்போலும் இலங்கை நாடு வலம்புரிச் சங்கு ஈன்று எடுத்த முத்துப்போன்றது என்றும், திருமாலும் திருமகளுஞ் சேர்ந்து விளையாடுஞ் சோலை போன்றது என்றுங் கூறப்பட்டுள்ளது.

ஆ. பொன்போலும் எமது இலங்கை நாடு, நீலநிறத்தை உடைய இந்து சமுத்திரம் என்று சொல்லப்படுந் தெய்வத் தன்மை பொருந்திய வலம்புரிச் சங்கு பிரசவ வேதனை யுற்று ஈன்ற வளம்மிக்க முத்தையும், காயாம்பூ நிறத்தை யுடைய திருமால் இலக்குமியுடன் புதுமையான வகையில் விளையாடுதற்கமைந்த பூஞ்சோலையையும் போன்றது.

இ. இலங்கைக்கு வலம்புரிச்சங்கு ஈன்ற முத்தும், திருமாலும், திருமகளும், விளையாடுஞ் சோலையும் உவமைகளாகச் சொல்லப்பட்டுள்ளன.

| உவமேயம் | உவமானம் | பொதுத்தன்மை |
|---|---|---|
| இலங்கை | (i) வலம்புரி ஈன்ற முத்து | நீண்டு வளைந்த தன்மை<br>அழகு<br>மதிப்பு |
| | (ii) திருமாலும் திருமகளும் விளையாடுஞ் சோலை | மலை நீரூற்று<br>மலர்தரு மரங்கள் உடைமை<br>ஐம்பொறிகளுக்கும் இன்பம் நல்கல் |

ii. மேருவைச் செண்டால் அடித்துத் திரித்தவன்
வேலையை வேலைவிட் டேயழித்தோன்
ஆரம் பூண்ட வீரபாண்டியன் வழியிலே
அருமணஞ் செய்தனன் வாள்விசயன்.

**இதிலுள்ள கதைகளைச் சுருக்கி எழுதுக.**

அ. இலங்கையின் அழகுகளையும், வரலாறுகளையும் தங்கத் தாத்தாவாகிய சோமசுந்தரப்புலவர் இலகுவான சொற்களினுல் அழகிய பாடல்களாகப் பாடியுள்ளார். "மணியிலங்கை நாடு" என்ற தலைப்பில் உள்ள பாடல்களில் இதுவும் ஒன்று. இப்பாடலில் சிங்களச் சகோதரர் தமிழரினும் வேறுபட்டவர் அல்லர் என்பதையும், சிங்கள வம்ச முதல்வன் பாண்டிய மன்னன் மகளை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டான் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். வேற்றுமை பாராட்டி நாட்டைக் கூறுபடுத்தி வாழும் அரசியல்வாதிகளுக்கு நல்லதோர் பாடமாக வமைந்தது இப்பாடல்.

ஆ. மேருமலையைச் செண்டு என்னும் படைக்கலத்தால் அடித்து அதன் செருக்கை நீக்கியவனும், கடலைத் தனது வேலால் எறிந்து வற்றச்செய்தவனும், முத்துமாலையை அணிந்தவனுமாகிய வீரம்பொருந்திய உக்கிரகுமார பாண்டியனது வம்சத்திலே சிறந்த விஜயன் சிறப்பு நல்குந் திருமணத்தைச் செய்தான்.

இ. மேருவைச் செண்டால் அடித்தமை: பாண்டிநாடு உக்கிர குமாரன் ஆட்சியில் மழைவளங்குன்றி வறுமையுற்றது. தன்னுட்டின் வறுமையை நீக்க விரும்பிய அரசன் மதுரையில் எழுந்தருளியிருக்குஞ் சோமசுந்தரப் பெருமானை

வணங்கிக் குறையிரந்தான். அரசனின் வேண்டு கோளைச் செவிமடுத்த எம்பெருமான் ஒருநாள் கனவிற் றோன்றி, மேருமலையினுள் ஒரு குகையில் திரவியங்கள் உண்டென்றும், அதனைப்பெற்று நாட்டின் நலிவை நீக்கலா மென்றும் அருளிச் செய்தார். நாட்டின் நலிவைப்போக்க நாட்டங்கொண்ட மன்னன் உடனே வடக்கு நோக்கிப் பிரயாணஞ் செய்தான். மேருமலையை அடைந்தான். காவற் தெய்வத்தைக் கருத்திற் கொண்டான். தெய்வம் அருள் செய்யத் தாமதித்தமையாற் கோபங் கொண்ட மன்னன் தனது செண்டால் மலைச்சிகரத்தில் அடித்தான். தெய்வங் காட்சி கொடுத்து, வேண்டுவது யாதென வினவி, பொற்குவியல் உள்ள இடத்தைக்காட்டி விரும்பிய வற்றை எடுத்துச் செல்லுமாறு பணித்தது. மன்னன் விரும்பியதை எடுத்துவந்து நாட்டின் கேட்டை நீக்கி நற்புகழ் பெற்றான்.

ஈ. வேலையை வேலைவிட்டழித்தமை: உக்கிரகுமார பாண்டியன் கோல் கோடாது பாண்டிநாட்டை ஆட்சி புரிந்தான். வானம் மலிவளஞ் சுரந்தது. தானந் தவம் இரண்டும் தலையோங்கியது. மன்னனுந் தொண்ணூற்றாறு அசுவ மேதயாகஞ் செய்தான். தனது இந்திரப் பதவிக்கு அபாயம் வருமெனப் பயந்த இந்திரன் வருணன் உதவி பெற்று கடலைப் பொங்குமாறு செய்தான். பாண்டிநாடு கடலினால் அழியுந் தன்மையிலிருந்தது. யாது செய்வ தெனத் திகைத்த மன்னன் கனவிற் தோன்றிய சித்தர் உபதேசப்படி தனது வேலினாற் கடலை வற்றச்செய்து நாட்டைக் காப்பாற்றி ஏட்டில் இடம்பிடித்தான்.

iii. <u>செம்பவளக்கோம்பினிடைச் சேர்ந்தமுத்து மாலையைப்போல்</u>
எம்பெருமான் செஞ்சடையை யெய்திநின்ற வானதியே
எம்பெருமான் செஞ்சடைவிட் டிங்குவந்து தண்ணளியால்
வெம்பருதித் தீயகற்றும் மின்னே நினைத்தொழுதேன்.

கீறிட்ட பகுதியை விளக்குக.

அ. முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தருக்கும், அவர்போல் பிரமச்சாரியாகவிருந்து தமிழ் முழுவதுங் கரைத்துக் குடித்த கந்தசாமிப் பெரியாருக்கும் இடையில் அண்ணா மலையிற் சந்தித்த நாட்டொடக்கம் நட்பு வளர்ந்தது.

இருவரும் ஓர் உயிர் என்னும்படி வாழ்ந்தார்கள். சுவாமி விபுலாநந்தர் அவர்கள் அவரைப் பிரிந்து வடநாடு சென்றார். அடிகளார் ஆண்டு வதிந்தகாலை கந்தசாமிப் பெரியார் மாரடைப்பு நோயினால் விண்ணவர்க்கு விருந்தானார். இச் செய்தி கேட்டு வேதனை அடைந்த அடிகளார், கங்கைக் கரையை அடைந்து சந்திரனிடமிருந்து பல உண்மைகளை உணர்ந்து கந்தசாமியாருக்கு ஓர் ஓலை எழுதி, அதை வானாட்டு வதியும் நண்பனிடம் சேர்க்க விரும்பித் தெய்வ நதியாகிய கங்கையை இவ்வாறு விளித்துத் தனது ஓலையைக் கங்கையில் இட்டார். இது கங்கையில் விடுத்த ஓலை என்ற தலைப்பில் உள்ள பாடல்களில் ஒன்று.

ஆ. சிவந்திருக்கும் பவளம்போலும் நிறம் பொருந்திய கொடியினிடையே சேர்ந்திருக்கும் முத்துமாலை போல, எமது தலைவனாகிய சிவபெருமானது சடையிற் றங்கிநிற்கும் ஆகாய கங்கையே! எமது தலைவனது சிவந்த சடையை விட்டுப் பூமிக்கு வந்து வெப்பமான கதிர்களை வீசி உண்டாக்கும் நெருப்பை ஒத்த சூரியனது வெப்பத்தைக் குளிர்ச்சியான கிரணங்களால் நீக்குகின்ற மின்னல் போன்றவளே! உன்னை வணங்குகின்றேன்.

இ. செம்பவளக் கொம்பினிடை சேர்ந்த முத்துமாலை என்ற உவமை மூலம், ஆசிரியர் இறைவனது சடையில் வீற்றிருக்குஞ் ~~சந்திரனை~~ விளக்குகின்றார். சிவந்த பவளக் கொடியினிடை உள்ள முத்துமாலை என்பது இச் சொற்றொடரின் பொருள். இதிலுள்ள உவமான உவமேயங்கள் பின்வருமாறு :

| | உவமேயம் | உவமானம் | பொதுத்தன்மை |
|---|---|---|---|
| (i) | சிவனதுசடை | செம்பவளக்கொம்பு | செம்மை |
| (ii) | சடையில்உள்ள கங்கைநதி | கொம்பிலுள்ள முத்துமாலை | வெண்மை அழகு |

iv. ஐயமன் னிக்கச் சித்த மாயின்மற் றளிய னேன்யான்
உய்யுமா றருளி நம்பா லூழியத் தொருவ னாக்கி
வையகத் திருத்து கென்னா வாய்திறந் தரற்றி நிற்ப
நையலேன் றருளிற் கூட்டிச் சென்றன னகத்துள் நண்பால்.

இதிலிருந்து தந்தையின் பெருந்தன்மை யாதெனவறிகின்றீர்?

அ. இது கென்றி அல்பிரட் கிருஷ்ணபிள்ளை அவர்கள் எழுதிய இரட்சணிய யாத்திரிகம் என்ற நூலில் உள்ளது. தன் தந்தையிடம் தனது அரைப்பங்கு சொத்தையும் வாதிட்டுப் பெற்றுத் தீய வழியில் நடந்த ஒருவன் சொல்லொணு இன்னல் அடைந்தான். வறுமையால் வாடினுன். கூலிவேலைசெய்து கொடுமைகள் பல அனுபவித்தான். ஆதரிப்பார் ஒருவரின்றித் தன்பிழையை உணர்ந்து தன் தந்தையிடஞ் சென்று தந்தையை நோக்கிக் கூறியதையும், தந்தை அன்புடன் ஏற்று ஆதரித்ததையும் இச் செய்யுள் கூறுகின்றது.

ஆ. "ஐயனே! எனது பிழையைப் பொறுத்தருளத் திருவுளமுளதாயின், இரக்கத்திற்குரியனுகிய யான் நற்கதி பெறும்படி கருணை செய்து, தங்களது தொண்டருள் என்னையும் ஒருவனுக்கி இப் பூமியில் நிலைத்து வாழச் செய்வீராக" என்று இவ்வாறு வாய்திறந்து முறையிட்டு அழுதுகிற்க, பேரன்பினுலே 'கவலைப்படாதே' என்று ஆறுதல்மொழிகள் கூறி, கருணையோடு அம்மைந்தனைக் கூட்டிச் சென்று வீட்டினுட் புகுந்தான்.

இ. தந்தைமாருடைய பெருந்தன்மைகள் இப் பாடலிற் கூறப்பட்டுள்ளன. மக்கள் செய்யும் பிழைகளை யெல்லாம் பொறுத்து, அவர்கள் நல்வாழ்வு கருதி வேண்டுவன யாவும் செய்வார்கள் தந்தையர் என அறியக்கிடக்கின்றது. இக் கதையில் தந்தையெனக் குறிப்பிடப்படுபவர் கடவுள். கடவுள் எல்லா வுயிர்களுக்கும் நல்வாழ்வு அளிப்பரென நாம் அறிகின்ருேம்.

V. அங்க லார்மொழி தன்னைப் பழித்ததென்று
   ஆடவர் மண்ணில் மூடுங் கரும்பு
துள்ளி மீள வளர்ந்து மடந்தையர்
   தோளை வென்று கூடார்முத்தம் ஈன்று
பின்னும் ஆங்கவர் மூரலை வென்று
   பிரியுங் காலத்தில் பெண்மையை வெல்ல
கன்னல் வேளுக்கு வில்லாக ஓங்கும்
   கடவுள் ஆரிய நாடெங்கள் நாடே.

இப் பாடலில் வந்துள்ள அணி யாது?

அ. இப் பாடல் திரிகூட விராசப்பக் கவிராயர் எழுதிய குற்ருலக் குறவஞ்சி என்னும் நூலில் உள்ளது. இந் நூலிலே குறத்தி தனது நாட்டுவளம், மலைவளம் கூறுவதாக உள்ள பாடல்கள் எமது பகுதியில் உள்ளன. படிப்பவர் உள்ளத்தில் நன்கு பதியக்கூடியவகையாக, ஆசிரியர் எளிமையும் ஓசைநயமும் அமையக்கூடியதாகப் பாடல்களை ஆக்கியுள்ளார். கரும்பின் இயல்பான செயலில் தனது மனக்கருத்தை ஏற்றி மிக அழகாக ஆசிரியர் பாடியுள்ளார்.

ஆ. அழகிய பெண்களின் சொல்லை இகழும் இனிமை உடையனவாய்க் கரும்புகள் இருக்கின்றன என்று கருதி ஆண்கள் அவற்றை மண்ணிலே மூடினுர்கள். அவ்விதம் மூடப்பட்ட கரும்புகள் திரும்பவும் வளர்ந்து பெண்களது தோளினை வென்று, அத்தோடமையாது பின்னரும் அப் பெண்களின் பற்களை வெல்லுமாறு முத்துக்களை ஈன்று, இறுதியாகக் கணவரைப் பிரிந்திருக்குங் காலத்தில் அவர்கள் பெண்மையை வெல்ல மன்மதனுக்கு வில்லாகி ஓங்கி வளர்வதும், இறைவனுடையதுமாகிய சிறந்த நாடு எங்கள் நாடாகும்.

இ. இப்பாடலில், ஆசிரியர் தமது மனக்கருத்தைக் கரும்பின் செயலில் ஏற்றிக் கூறியுள்ளார். ஆதலின் இப்பாடலில் வந்துள்ள அணி தற்குறிப்பேற்றமாகும்.

vi. அருகி லவர்வந் தரசனைமுன் கண்டு
பேரியீ ரிவனஞ்சாப் பிள்ளை வெருவந்த
செய்யாமற் சிங்கத்தின் குட்டிதனைக் காத்திடுவீர்
ஐயா வெனவிரந்தா ராங்கு.

கீறிட்ட பகுதியை விளக்குக.

அ. வடமொழியில் காளிதாச மகாகவி இயற்றியுள்ள சகுந்தலை நாடகத்தைத் தமிழில் அண்மையிற் காலஞ்சென்ற இலக்கிய கலாநிதி சு. நடேசபிள்ளை அவர்கள் 'சகுந்தலை வெண்பா' என்ற நூலாக மொழிபெயர்த்துள்ளார்கள். வான்வழிப் பயணஞ் செய்த துடியந்த மன்னனை ஓர் வலவன் அழகிய சோலையில் இறக்கினுன். அவ்விடத்தில்

இருந்து இயற்கையை இரசித்த அரசன், சிங்கக்குட்டி ஒன்றை ஒரு சிறுவன் பற்றித் தழுவியதைக் கண்டு, அதிசயம் அடைந்து அவனைப்போல் ஒரு மகனைப் பெற ஊழுண்டோ என நினைத்தான். அவன் பக்கல் அடைந்தான். சிறுவனைத் தேடிய தவமகளிர், மன்னன் பக்கல் சென்று அவனைப்பார்த்துக் கூறியவை இப்பாடலிற் சொல்லப்பட்டுள்ளது.

ஆ. (தவமகளிர் அச்சிறுவன்) பக்கத்தே வந்து, அரசன் அங்கே நிற்பதனைக் கண்டு, "பெரியவரே! இவன் ஒன்றுக்கும் பயப்படாத சிறுவன். அஞ்சத்தக்க தீங்கு ஒன்றுஞ் செய்யாமல் இவனை இச் சிங்கக்குட்டியினின்றுங் காப்பாற்றியருள்க" என்று அரசனை இரந்து கேட்டார்கள்.

இ. 'இவன் அஞ்சாப்பிள்ளை வெருவந்த செய்யாமற் சிங்கத்தின் குட்டிதனைக் காத்திடுவீர்' என்ற சொற்றொடரில் இரு பொருள்கள் இருக்கின்றன. இவன் பயம் என்பது சிறிதுமில்லாத பையன். இளங்கன்று பயமறியாது என்பது பழமொழி. ஆகையினால் இவனால் சிங்கக்குட்டிக்குப் பங்கம் வராமல் பாதுகாக்க என்றும், இவனுக்குப் பங்கம் வராமல் சிங்கக்குட்டியைப் பாதுகாக்கவும் எனவும் இரு பொருள்கள் கூறலாம். ஆசிரியர் இம்முறையிற் சொற்றொடரை அமைத்தது நயக்கத்தக்கது. தவமகளிரின் கல்வியறிவின் சிறப்பும் பிரதிபலிக்கின்றது.

vii. உடல்பிரியா நிழல்போல வோதியவப் புதல்வ
ருடன்கூடி விளையாடி யொன்றாக வளர்ந்தேன்
அடல்பெரியர்; அருளுருவர்; அலகில்வடி வுடையர்;
அவருடைய திருநாமம் அறைவேனோ வடிகாள்.

உவமையை விளக்குக.

அ. திரு. பெ. சுந்தரம்பிள்ளை இயற்றிய மனோன்மணீயம் என்ற நாடகத்தில் உபகதையாய் வருஞ் சிவகாமி சரிதையில் வரும் ஒரு செய்யுள் இது. சிறு முனிவன் வேடம் பூண்டு, தன்னால் அவமதிக்கப்பட்ட கணவனாகிய சிதம்பரனைத் தேடிச்சென்ற சிவகாமி பல கஷ்டங்கள் அனுபவித்து ஈற்றில் கானத்தில் ஒரு பெருமுனிவனைச் சந்தித்தாள். தனக்கு இளைப்பாற ஒருவீடு காட்டும்படி வேண்டினாள்.

பெருமுனிவன் தன்னுடன் அழைத்துச்சென்று தனது இருப்பிடத்தை அடைந்து, குளிர்நீக்கத் தீமூட்டினான். இருவரும் நெருப்பின் அருகில் இருந்தனர். பெருமுனிவன் நெருப்பின் ஒளியால் சிறுமுனியாய் வந்தவன் ஒரு பெண்ணெனக்கண்டு அவளின் வரலாற்றை வினவினார். அப்போது சிறு முனியான சிவகாமி தன் வரலாற்றைக் கூறினாள். அவள் கூறியவற்றுள் இஃதும் ஒன்று.

ஆ. உடம்பை விட்டு நீங்காது உடன் செலும் நிழல்போலச் சொல்லப்பட்ட அந்தப் புதல்வனோடு சேர்ந்து விளையாடும் போதெல்லாம் ஒன்றாக விளையாடி மகிழ்ந்தேன். வலிமையிற் பெரியவரும், அருள் நிறைந்த வடிவை உடையவரும், அளவு இல்லாத அழகினை யுடையவருமாகிய அவருடைய திருப்பெயரை வாயினாற் சொல்வேனோ சுவாமிகளே! (சொல்லத்தகாது.)

இ. உடல்பிரியா நிழல் என்ற உவமை மூலம் இருவரினதும் ஒற்றுமை விளக்கப்பட்டது. உடலை விட்டு நிழல் ஒரு போதும் பிரிந்திருக்கமாட்டாது. உடல் செல்லுமிடமெல்லாம் நிழலும் உடன் செல்லும். சிவகாமி, தாசன் சிதம்பரனுடன் சிறுவயதில் வாழ்ந்த தன்மையை இதன்மூலம் எடுத்துக் கூறுகின்றாள். உவமேய உவமானங்கள் பின் வருமாறு :

| உவமேயம் | உவமானம் | பொதுத்தன்மை |
|---|---|---|
| சிவகாமி | நிழல் | பிரியாது இருத்தல் |
| சிதம்பரன் | உடல் | |

viii. மெய்ப்பொருளே பொருளென்ன விளங்கவைத்து முன்னோர்
விரித்துரைத்த வகமேழும் புறமேழும் பயின்றேன்
பொய்ப்பொருளை நச்சுபவர் புறக்கடைநோக் காதோன்
பொதுபுனை மாதர்நலந் தீதெனவிட் டகன்றேன்.

அகமேழும் புறமேழும் எவை?

அ. கந்தசாமிப் பேரறிஞர்க்கும், சுவாமி விபுலாநந்தருக்கும் இடையில் அண்ணமலையிற் பெருநட்பு ஏற்பட்டது. இமயமலை அடிவாரத்தில் இராமகிருஷ்ண மடத்தில் துறவியாகவிருந்து தொண்டாற்றிய அடிகளார் கந்தசாமிப் பெரியாரின் மரணச் செய்தி கேட்டு உளம் நொந்து

தமது துயரைப் போக்கவும், உலகின் உண்மையை அறியவும் கங்கைக் கரையை அடைந்தார். அங்கு பல உண்மைகளை உணர்ந்தார்; சந்திரனிடத்தும் பலவற்றை உணர்ந்தார். தமது அனுதாபச் செய்தியை "கங்கையில் விடுத்த ஓலை' என்ற தலைப்பில் கவிதைகளாக எழுதி நண்பரிடம் சேர்க்கும்படி கங்கையில் விட்டு அதனை வேண்டினார். இப்பாடலில் கந்தசாமிப் பெரியாரின் கல்விச் சிறப்பும் குணநலமும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன.

ஆ. உண்மைப் பொருளே ஒருவர் கற்றற்குரிய பொருள் என்று எல்லோர் மனத்திலும் பதியும்வண்ணம் அமைத்து, நமது முன்னோர் ஆகிய அகத்தியர் முதலாயினோர் விரிவாக எடுத்துரைத்த அகப்பொருள் ஏழினையும், புறப்பொருள் ஏழினையுங் கற்று உணர்ந்தோன். அழிவுள்ள பொருள்களை விரும்புபவர் வீட்டுவாயிலை எட்டியும் பாராதோன். மலர் அணியும் மாதரை மணந்து பெறும் மகிழ்ச்சி அழிவைத் தருமென்று கருதி இல்வாழ்வை வெறுத்துத் துறவு வாழ்வை மேற்கொண்டோன்.

இ. அகம் ஏழு : கைக்கிளை, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், பெருந்திணை.

புறம் ஏழு : வெட்சி, வஞ்சி, உழிஞை, பாடாண், தும்பை, வாகை, காஞ்சி.

ix.

அன்பரும்பி யறந்தழைத்தே
அணைவுசினை விட்டகலி
இன்பநிழல் எல்லவர்க்கும்
இன்றுதந்து நின்றிடுமே.

இப்பாடலில் வந்த அணி யாது?

அ. இலங்கையின் இயற்கையழகு, செயற்கையழகு, வரலாறு என்பவற்றை நவாலியூர்ச் சோமசுந்தரப்புலவர், இலகுவான அழகிய சொற்களினால் பாடல்களாக 'மணியிலங்கை நாடு' என்ற தலைப்பில் பாடியுள்ளார். இதில் இந்திய மன்னனான அசோகனது மகனும் மகளும் கொண்டுவந்து

அனுராதபுரியில் நாட்டிய வெள்ளரசுக் கொம்பு செழித்து, வளர்ந்து சிறப்புற நிற்கும் தன்மை செப்பப்பட்டுள்ளது.

ஆ. (கொம்பனியாள் கொண்டுவந்து நாட்டிய வெள்ளரசுக் கொம்பு) அன்பாகிய தளிர்களை ஈன்று, அறமாகிய இலைகளை உடையதாய், எல்லாவுயிர்களையும் அணைத்துப் பாதுகாத்தலாகிய கிளைகளைப் பரப்பி, விசாலமுடையதாய் எல்லோர்க்கும் இன்பமாகிய நிழலைத் தந்து இன்றும் நிற்கின்றது.

இ. வெள்ளரசு மரத்தின் தளிர், இலை, கொம்பு, நிழல் என்பன முறையே அன்பு, அறம், அணைவு, இன்பம் என்பனவாக உருவகஞ் செய்யப்பட்டமையால் இப் பாடலில் வந்த அணி உருவகவணியாம்.

x. வருந்தித்தாங் கற்றகல்வி மாய்ந்து மறைந்திடுமோ ?
மறுமையிலு முதவுமோ? வான்மதியே என்றேன்
திருந்துகல்வி யெழுமையுமே மாப்புடைத்தேன் றுரைத்த
செம்மொழியைத் தேர்தியென வெண்மதியம் விடுக்க.

கீறிட்ட பகுதியை விளக்குக.

அ. கந்தசாமிப் பேரறிஞர்க்கும், சுவாமி விபுலாநந்த அடிகளுக்கும் அண்ணாமலையிற் பெரு நட்பு ஏற்பட்டது. அவரைப் பிரிந்து இமயமலை அடிவாரத்திற்குச் சென்ற சுவாமிகள் நண்பர் விண்ணவர்க்கு விருந்தானார் என்ற செய்தி கேட்டு மனங் கலங்கினார். தமது துயரைப் போக்கவும் வாழ்வின் உண்மையை அறியவும் கங்கைக்கரையை அடைந்தார். அங்கு பல உண்மைகளை அறிந்தார். சந்திரன் ஒளியை வீசியது. சந்திரனை நோக்கிப் பல வினாக்கள் வினவினார். அவற்றுள் ஒன்று இது. இதில் ஒருவர் கற்ற கல்வி அவர் இறப்போடு அழியுமா? அல்லது மறுபிறப்பிலும் உதவுமா? என்ற வினாவும் அதற்குச் சந்திரன் பகர்ந்த விடையும் உள்ளன.

ஆ. வானத்திலுள்ள சந்திரனே! ஒருவர் வருந்தி ஒரு பிறவியிலே கற்ற கல்வி அவர் இறக்கும்போது அழிந்துவிடுமா? மறுபிறப்பிலும் அவர் கல்வி அழியாது நின்று அவருக்கு உதவிபுரியுமா என்று வினாவினேன். திருந்திய கல்வி ஒருவர்க்கு ஒரு பிறவியில் மட்டுமன்றி அதன் பின்வரும்

ஏழுபிறவியிலும் அவர்க்கு உதவியாகும் என்று திருவள்ளுவர் கூறிய உண்மையான பொருளை அறிந்துகொள்வாயாகவெனச் சந்திரன் விடைகூற.

இ. ஒருவனோ, ஒருத்தியோ ஒரு பிறவியில் கற்ற கல்வி வீண் போகாது அஃது அவர்க்கு ஏழு பிறப்பிலுஞ் சென்று உதவிபுரியும். 'ஒருமைக்கட் டான்கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப் புடைத்து' என்பது வள்ளுவர் வாய்மொழி. இதன்மூலம் கல்வி என்றும் அழியாது என்பது வற்புறுத்தப்பட்டது.

xi. ஆடுகழை ஈனுமணி கோடிவெயில் எறிக்கும்
அம்புலியைக் கவளம்என்று தும்பிவழி மறிக்கும்
வேடுவர்கள் தினைவிளைக்கச் சாடுபுனந் தோறும்
விந்தையகில் குங்குமமுஞ் சந்தனமும் நாறும்
காடுதோறும் ஓடிவரை யாடுகுதி பாயும்
காகமணு காமலையில் மேககிரை சாயும்
நீடுபல வீசர்கயி லாசகிரி வாசர்
நிலைதங்கும் திரிகூட மலைஎங்கள் மலையே.

கீறிட்டபகுதியில் உள்ள அணி யாது?

அ. திரிகூடவிராசப்பகவிராயர் 'குற்றாலக் குறவஞ்சி' என்னுஞ் சிறந்த நூலைச் சொல்லின்பம், பொருளின்பம் நிறைந்ததாக இயற்றியுள்ளார். இந் நூலே குறவஞ்சி நூல்களுள் முற்பட்டதாகும். இந்நூலில், குறத்தி தன் மலைவளம், நாட்டுவளம் கூறும் பகுதியே ஓசை இன்பமும், பொருள் நயமும் எளிமையும் நிறைந்த பகுதியாகும். இப்பாடலில் திரிகூடமலையின் சிறப்புச் சொல்லப்படுகின்றது.

ஆ. ஆடுகின்ற மூங்கில்கள் ஈன்ற முத்துக்கள் புதுமையான ஒளியை வீசும். சந்திரனைத் தான்உண்ணும் கவள உணவு என எண்ணி யானை ஆகாயத்திற் செல்லவிடாது தடுக்கும். வேடுவர்கள் தினை விதைப்பதற்காக வெட்டுங் காடுகள்தோறும் அகில், சந்தனம், குங்குமம் ஆகியவை நறுமணத்தை வீசும். காடுகளில் ஓடித்திரியும் மலை யாடுகள் ஆங்காங்கு குதித்து விளையாடும். காகங்கள்

அணுக முடியாத மலை இடங்களிலெல்லாம் மேகக் கூட்டங்கள் தவழும்; நீண்டு உயர்ந்த பலாமரத்தின்கீழ் எழுந்தருளியிருப்பவரும், கயிலாயமலையில் வீற்றிருப்பவருமாகிய இறைவன் நிலையாகத் தங்கியிருக்கும் மலை திரிகூடம் என்று அழைக்கப்படும் எங்கள் மலையே.

இ. அம்புலியைக் கவளம் என்று தும்பி வழிமறிக்கும் என்பதில் மலையின் உயரம் சொல்லப்படுவதால் உயர்வு நவிற்சி அணியுளதென்றும், அம்புலியை யானை கவளம் என மயங்கியதால் மயக்கவணியுளதென்றுங் கூறலாம்.

xii. நீர்த்திரையா லிழுப்புண்ட குச்சியொன்று கணமும்
நில்லாது மேலெழுந்தும் கீழ்விழுந்து மலைந்து
சீர்க்கரையி லெற்றுண்டு கிடந்தசெயல் நோக்கிச்
சிந்திக்கின் மானிடர்தம் வாழ்க்கையிது வென்றேன்.

நீரலையால் இழுப்புண்ட குச்சியிலிருந்து ஆசிரியர் அறிந்த உண்மை யாது?

அ. தமது ஆருயிர் நண்பராகிய கந்தசாமிப் பெரியார் மாரடைப்பு நோயால் வானுலகு படர்ந்த செய்தி கேட்ட, இமயமலையடிவாரத்தில் இராமகிருஷ்ண மடத்தில் இருந்த சுவாமி விபுலாநந்த அடிகள் ஆற்றொணாத்துயரம் அடைந்தார். தமது துயரை நீக்கவும், மனித வாழ்வின் உண்மையை உணரவுங் கங்கைக்கரையை அடைந்தார். அங்கு நீர்த்திரையால் இழுப்புண்ட குச்சி ஒன்று மேலுங் கீழும் அலைந்து ஈற்றில் கரையில் எற்றுண்டு கிடந்தமையைக் கண்டு, சிந்தித்து மனித வாழ்வின் இயல்பை உணர்ந்தார். மனிதவாழ்வின் இயல்பை உணரச்செய்த குச்சியைப் பற்றிக் குறிப்பிடுகின்றார் இப்பாடலில். இது கங்கையில் விடுத்த ஓலை என்ற பகுதியில் உள்ள பாடலாகும்.

ஆ. நீரலையால் இழுப்புண்ட குச்சி யொன்று, சிறுநேரந் தானும் ஓர் இடத்தில் நிலைத்து நிற்காமல் அலையோடு மேலுங் கீழும் விழுந்து அலைந்து, சிறந்த கரையிலே வீசப்பட்டுக் கிடந்த தன்மையைப் பார்த்து, ஆராய்ந்து, மனித வாழ்க்கையும் இத் தன்மையது என உணர்ந்தேன்.

இ. நீர்த்திரையால் குச்சி மேல் எழுந்துங் கீழ் விழுந்தும் அலைவது போல உயிர்களும் ஊழ்வினையால் செல்வம் முதலியன பெற்றுச் சிறந்து வாழ்வதும், வறுமைமுதலியன பெற்று அழிந்து தாழ்வதும் என்பதையும் நீர்அலையால் எறியப்பட்ட குச்சி அசைவற்றுக் கிடப்பதுபோல ஊழின் தொழிற்பாடு முடிய உயிர்கள் மரணத்தை அடையும் என்பதையும், ஆசிரியர் நீர் அலையால் இழுப்புண்டு, பின்செயலின்றிக்கிடந்த குச்சிமூலம் உணர்ந்தார்.

xiii. ஐந்திணையின் மாட்சி யகத்தடக்கி வேல்வேந்தர்
முந்திடு கோலோச்சு முறைநிறுவி மெய்ந்நெறியின்
வந்திடுமோ நுண்மையறம் வழுத்துமொரு மாதரசை
அந்தமிழைப் பாடியாம் ஆடாமோ ஊசல்
அறிவுபடைத் தோமென் றாடாமோ ஊசல்.

முதல் மூன்று வரிகளையும் விளக்குக:

அ. தொன்மை, இனிமை, செம்மை வாய்ந்த தமிழ் மொழியை நன்கு பயின்ற முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்கள், தமிழ் மொழியின் அரும்பெரும் புகழைப் பாராட்டி ஊஞ்சல் ஆடும் முகத்தாற் பாடிய ஊசல் வரியில் உள்ள ஒரு பாடல் இது. இப்பாடலில் அன்பை அடிப்படையாகக்கொண்ட ஐந்து ஒழுக்கங்களும், அரசர்கள் சிறந்த முறையில் செங்கோல்புரியும் நுண்மையான அறமும் தமிழ் மொழியில் உள்ளன என்று கூறப்படுகின்றது.

ஆ. அன்பினுற் றோன்றும் ஐந்து வகையான ஒழுக்கங்களின் சிறப்புக்களை அகத்திணை என்ற பொருட்பிரிவில் அடக்கிக் கூறி, வேல்தாங்கிய மன்னர் செங்கோல் நெறியில் ஆட்சி புரியும் மாட்சியைப் புறத்திணை என்ற பொருட்பிரிவில் நிலைபெறக்கூறி எல்லோரும் உண்மை வழியில் வாழுமாறு நுண்ணிதான அறத்தைக் கூறுகின்றவளும், ஒப்பற்ற பெண்களின் அரசிபோன்றவளும், ஆகிய அழகிய தமிழ்த் தாயைப் புகழ்ந்து பாடி 'நாம் ஊஞ்சல் ஆடுவோம். அவளால் நல்லறிவு பெற்றோம்' என்று கூறி ஊஞ்சல் ஆடுவோம்.

இ. அன்பினால் உண்டாகும் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து வகையான ஒழுக்கங்களையும், அரசர்கள் முறையாகச் செங்கோல் செலுத்தி வாழுதற் குரிய வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், காஞ்சி என்னும் எழுவகையான ஒழுக்கங் களையும், தமிழ்மொழி கூறி அவற்றின் மூலம் உண்மைப் பொருளைக் காணும் அறத்தையும் விளக்குகின்றது. வேறெம் மொழியுந் தமிழ் மொழிபோல் செம்பொருளைக் காணும் வழியைக் காட்டவில்லை.

xiv. சீறரவும் மூர்க்கனுந் தீங்குபுரி வாரேனினுஞ்
சீறரவில் மூர்க்கனே தீயவன்காண் — சீறரவு
மந்திரத்தால் கைவசமாம் மூர்க்கன் வசப்படுதல்
எந்தவிதத் தாலென் றியம்பு.

இப்பாடலில் வந்த அணி யாது?

அ. ஆரியம், தமிழ் என்னும் இரு மொழிகளிலும் ஆழ்ந் தகன்ற மெய்ப்புலமை உடைய சுன்னைக் குமாரசுவாமிப் புலவர் தமிழ் அன்னைக்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பில. பலவாராய்ச்சி நூல்களை எழுதினார்; பல வட மொழி நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தார். அவர் மொழி பெயர்த்த நூல்களில் சாணக்கிய நீதிவெண்பாவும் ஒன்று. சாணக்கிய நீதிவெண்பா அரிய பெரிய நீதிகளைக் கூறுவது. இப்பாடலும் அதில் ஒன்று. இதில் திருந்தா தவன் யார் என்று கூறப்படுகின்றது.

ஆ. கோபிக்கின்ற பாம்பும், மூர்க்க குணமாகிய கொண்டது விடாதவனும் தீமைசெய்வாராணலும் பாம்பிலும் மூர்க் கனே கொடியவனாவான். கோபங்கொண்ட பாம்பை மந்திரத்தினால் வசப்படுத்தலாம். மூர்க்கனை எந்தவிதத் தினால் வசப்படுத்தலாம் என்று சொல்வாயாக. (மூர்க்கனை எதுவிதத்திலும் வசப்படுத்த முடியாது.)

இ. இப்பாடலில் வேற்றுமை அணிவந்துளது.

xv. மாடுகன்று மேய்த்திடுவேன் மக்களைநான் காத்திடுவேன்
வீடுபெருக்கி விளக்கேற்றி வைத்திடுவேன்
சொன்னபடி கேட்பேன் துணிமணிகள் தோய்த்திடுவேன்
சின்னக் குழந்தைகளுக்குச் சிங்காரப் பாட்டிசைத்தே

ஆட்டங்கள் காட்டி அழாதபடி பார்த்திடுவேன்
காட்டு வழியானாலும் கள்வர் பயமானாலும்
இரவிற் பகலிலே எந்நேர மானாலும்
சிரமத்தைப் பார்ப்பதில்லை தேவரீர் தம்முடனே
சுற்றுவேன் தங்களுக்கோர் துன்பமுறா மற்காப்பேன்
கற்றவித்தை யேதுமில்லை காட்டுமனிதன் ஐயே!
ஆனபோழுதுங் கோலடி குத்துப்போர் மற்போர்
நானறிவேன் சற்றும் நயவஞ்சனை புரியேன்.

இவ்வேலையாளைப்பற்றி யாதறிவீர்?

அ. புதுமைக்கவி பாரதியார் அருமைச் சுதந்திரத்திற்காகவும், இனிமையான வாழ்வுக்காகவும், பல பாடல்கள்பாடி அழியாப் புகழ்பெற்றுள்ளார். இத்தோடு அமையாது பல தெய்வப் பாடல்களும் பாடி மக்கள் பேரின்பவாழ்வுபெறவும் வழிசெய்தார். அவற்றுள் கண்ணன் என் சேவகன் என்பதும் ஒன்று. கடவுள் தம்மீது அன்புள்ள அடியார்க்குச் சேவகனாய் வந்து வேண்டிய உதவிகள் எல்லாஞ் செய்வர் என்பது இப்பாடலிற் பொதிந்துள்ள உண்மை. இப்பாடலில் இக்கால வேலையாட்களின் இயல்பும், கண்ணன் சேவகனாய்வந்து தான் செய்யும் வேலைகள் எவையென்று கூறியவையும், அவனிற் கண்ட அரிய பண்புகளுஞ் சொல்லப்பட்டுள்ளன. சேவகனாய் வந்த கண்ணன் தான் செய்யும் வேலைகள் எவையென்று கூறியவையே இப்பகுதியாகும்.

ஆ. நான் மாடுகன்று மேய்த்திடுவேன், சிறு பிள்ளைகளையும் பாதுகாப்பேன். வீடெல்லாந் துப்புரவு செய்து விளக்கு ஏற்றி வைப்பேன். சொல்லிய கட்டளைகளை யெல்லாந் தவறாது கேட்டு நடப்பேன். துணிமணிகளைத் தோய்த்து உலரவைப்பேன். சிறு குழந்தைகள் அழாமல் பாட்டுகள் பாடி, ஆட்டங்கள் ஆடிக் காத்துக்கொள்வேன். காட்டு வழியாக விருந்தாலும் கள்வர் பயமுள்ள இடமாகவிருந்தாலும் இரவு பகல் என்று பாராது தங்களுடனே சுற்றுவேன். தங்களுக்கு எவ்வித துன்பமும் வராமல் காத்திடுவேன். யான் கல்வி கற்கவில்லை எனினும் குத்துப்போர், மற்போர், சிலம்பம் எல்லாம் அறிவேன். நான் ஒருபோதும் நயவஞ்சகம் செய்யேன்.

இ. இச் சேவகன்மூலம் ஆசிரியர் உண்மையான சேவகனின் இயல்பைத் தெளிவாகக் காட்டியுள்ளார். இறைவன் அடியவர்க்குச் சேவகனாய் வந்து அடியவர் மனத்தில் நினைப்பதைக் குறிப்பால் அறிந்து அவர் விருப்புறும்வண்ணஞ் செய்து இன்பம் நல்குவான் என நாம் அறியலாம்.

xvi. வருகவென வழைத்து வாள்வேந்தற் காசி
குருமுனிவர் கூறியவன் றேவி — துருவாசர்
இட்டவொரு சாபத்தா லேத மடைந்ததைமெய்த்
திட்டியினுற் சொன்னுர் தெரிந்து.

கீறிட்ட பகுதியில் உள்ள கதையைச் சுருக்கி எழுதுக.

அ. இலக்கிய கலாநிதி சு. நடேசபிள்ளை அவர்கள் இயற்றிய 'சகுந்தலை வெண்பா' என்ற நூலில் உள்ள செய்யுள் இது. சோலையில் இறங்கிய துடியந்தன் சிங்கக்குட்டி ஒன்றைத் தழுவிய ஒரு சிறுவனைக் கண்டான். அதிசயத்துடன் நோக்கி அருகிற் சென்று தவமகளிர்மூலம் அவன் வரலாற்றை அறிந்து, தன்மகன் என உணர்ந்து, மனமகிழ்ந்து அவர்மூலம் சகுந்தலையை வரவழைத்து, தன்பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டி, மோதிரந் தொலைந்ததையும் எடுத்துச் சொல்லி, கண்ணுவ முனிவரிடம் ஆசி பெறும்பொருட்டு, மனைவியாகிய சகுந்தலையோடு தவப்பள்ளி சேர்ந்தான். சென்று கண்ணுவ முனிவரின் மனக்கருத்தறியச் சேவகனை அனுப்பினுன். இருவர்க்கும்முனிவர் வாழ்த்துக்கூறிச் சகுந்தலை அடைந்த சாபத்தையும் எடுத்துச் சொல்வதாகவுள்ளது இப்பாடல்.

ஆ. குருவாக மதிக்கத்தக்க கண்ணுவமுனிவர் 'வருக' என்று துடியந்தனை அழைத்து, வாட்போரிற் சிறந்த அவனுக்கு நல்வாழ்த்துக்கள் கூறி, அவன் மனைவியாகிய சகுந்தலைக்குத் துருவாசமுனிவர் முன்பு இட்ட சாபத்தினுல் இத்துன்பம் நேர்ந்தது என்னும் பழைய சம்பவத்தையும் மெய்ஞ்ஞானத்தால் அறிந்து சொன்னுர்.

இ. துருவாசரால் சகுந்தலை பெற்ற சாபம்: கண்ணுவமுனிவரின் தவச்சாலையில் வளர்ந்துவந்த சகுந்தலை, துடியந்த மன்னன்மீது காதல்கொண்டாள். அவனும் அவளை

விரும்பினான். துடியந்தன் அவளை மணப்பதாக வாக்குப் பண்ணி, தன் மோதிரத்தையுஞ் சான்றாகக் கொடுத்து, சில நாளிருந்து தன்னிருப்பிடஞ் சேர்ந்தான். காதலன் பிரிவால் வாடிய சகுந்தலை வேதனையோடு காலங்கழித்தாள். ஒரு நாள் அத்தவச்சாலைக்கு, எழுந்தருளிய துருவாச முனிவருக்கு, துடியந்தன் நினைவோடு இருந்த சகுந்தலை உபசாரஞ்செய்யாமலிருந்தாள். தம்மைம உபசரிக்கவில்லை என்று கோபங்கொண்ட துருவாசமுனிவர், சகுந்தலையை நோக்கி, 'எவன் நினைவால் என்னை நீ அவமதித்தாயோ அவனால் நீ கைவிடப்படுவாய்' என்று சாபமிட்டார். அதன் பலன்தான் இப்படி நடந்தது என்று கண்ணுவ முனிவர் கூறினார்.

xvii. மைந்தநீ யென்னோ டுள்ளாய் வாழ்வெனக் குள்ள யாவுஞ்
சொந்தமற் றனக்கே யன்றோ சோதரன் மதியற் றேகி
நொந்துவந் தணைந்தான் மீண்டு நுண்மதி யுடையை நீயுன்
சிந்தனை திருகல் நன்றோ சேர்ந்துடன் களித்தி யென்றான்.

இப்பாடலில் வருந் தந்தையிலிருந்து நீர் கற்கும் பாடம் என்ன ?

அ. இப்பாடல் ஹென்றி அல்பிரட் கிருஷ்ணபிள்ளை பாடிய 'இரட்சணிய யாத்திரிகம்' என்ற நூலில் உள்ள ஒரு பாடல். தனது இளைய மகனின் வற்புறுத்தலுக்கு இணங்கி, அவனது பாகத்தை ஒரு தந்தை பகிர்ந்தளித்தார். தனது பாகத்தைப் பெற்றவன் தலைகீழாக நடந்து பொருள் யாவையும் இழந்து, அடிமையாக ஒருவனின் கீழ் வேலைசெய்து சொல்லொணா அல்லலுற்று இறுதியில் தந்தையை அடைந்து, தனது பிழைகளைப் பொறுத்துத் தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினான். தந்தையும் மன்னித்து, வாழ்வளித்து இன்பமாகச் சேர்த்துக் கொண்டான். அவ்விடம் வந்த மூத்த மகன், தனது தந்தை தம்பியாரை அன்புடன் சேர்த்து வைத்திருப்பதைக் கண்டு கடுங் கோபங்கொண்டான். அப்போது மூத்த மகனை நோக்கித் தந்தையார் கூறியதாகவுள்ளதே இப்பாடல்.

ஆ. மகனே ! நீ எப்பொழுதும் என்னுடன் கூடிவாழ்கின்றாய். வாழ்வுக்கு எனக்கு உரியனவாய் உள்ள யாவும்

உனக்கே சொந்தமானவை. உனது தம்பி அறிவுகெட்டுத் தவருனவழியிற் சென்று, அதனுல் ஏற்பட்ட கேடுகளை எல்லாம் நினைந்து, மனம்வருந்தி, திரும்பவும் நம்மிடத்திற்குவந்து சேர்ந்தான். நுட்பமான புத்தியையுடைய நீ அவனை வெறுத்து நிற்பது நன்ரு? அவனைச் சேர்த்து இன்பமடைவாயாக என்று நல்லுரை கூறினன்.

இ. தவறு செய்கின்றவர்கள், தவறை உணர்ந்துகொள்ளும் போது, அவரை இன்முகத்தோடு அணைத்து, நல்வாழ்வு வாழ ஆவன புரிந்து இன்பமாக வாழ உதவவேண்டும் என்ற நல்ல பாடத்தைத் தந்தையின் செயலில் இருந்து நாம் கற்றுக்கொள்ளலாம்.

xviii. பருவமழை பொய்யாது பெய்ய வேண்டும்
பயிர்களெலாம் செழித்தோங்கி வளர வேண்டும்
தருமநெறி தவருது தழைக்க வேண்டும்
சாதிமதச் சண்டையெலாம் ஒழிய வேண்டும்
திருமகளும் கலைமகளும் சிறக்க வேண்டும்
தேசாபிமான மெங்கும் திகழ வேண்டும்
கருமமெலாம் நற்கரும மாக வேண்டும்
காந்திமதி நின்னடிகள் வாழ்த்தி னேனே.

இவற்றிலிருந்து நூலாசிரியரைப்பற்றி யாதறிகின்றீர்?

அ. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள் தமக்கென வாழாப் பெருந்தகையாளர். பரந்த மனப்பான்மையும், விரிந்த கொள்கையும் உடையவர். நாட்டுப்பற்று, மொழிப் பற்று நிரம்பியவர். நாட்டுமக்கள் நலங்கள் உற்று இன்பமாக வாழவேண்டும் என்று கடவுளை வேண்டுகின்ருர். தான் வாழவேண்டும், தன் குடும்பம் வாழவேண்டும் என்னும் குறுகிய நோக்கம் இவரிடம் இல்லை. இவர் பாடிய விண்ணப்பம் என்ற தலைப்பில்வரும் ஒரு பாடல் இது.

ஆ. பருவந்தோறும் மழை பொய்யாமற்பெய்ய வேண்டும். பயிர்கள் எல்லாஞ் செழித்து உயர்ந்து நல்ல பலனைக் கொடுக்கவேண்டும். மக்கள் வாழ்வில் அறநெறியானது தவறுதலின்றித் தழைக்க வேண்டும். சாதிபற்றியும்,

சண்டைபற்றியும் உண்டாகுஞ் சண்டைகள் இல்லாமற் போகவேண்டும். செல்வமும், கல்வியும் சிறந்து விளங்கி எல்லோரும் வாழவேண்டும். மக்கள் செய்யும் கருமங்கள் எல்லாம் சிறந்த கருமங்களாக இருக்கவேண்டும். ஒளி யுள்ள தேவியே! இந்த நன்மைகளை வேண்டி உன்னு டைய திருப்பாதங்களை வணங்குகின்றேன்.

இ. 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்ற தமிழன் பண்பு நிறைந்தவர் ஆசிரியர். உலகம் முழுவதும் ஒன்று, எல் லோரும் இன்புற்று இருக்கவேண்டும் என்னுங் கொள் கைகள் உடையவர் நூலாசிரியர் என்பதை நாம் அறிய லாம்.

xix. அம்மென் சிலம்புநின் றரற்றுஞ் சீறடி
செம்மல ரென்னத் திகழ வம்மலர்ப்
பாசடை கடுக்கும் பட்டினி யன்ற
தூசு செறியிடை துவள மாசில்
வான்மதி முகத்திற் புன்னகை தவழ
மகர மீன்மிசை யிவர்ந்து
காரிடைத் தோன்றிய மின்னுக் கொடிபோல்
நீரிடைத் தோன்றி மறைந்தனள்.

இதில் வந்த அணி யாது?

அ. அருட்டிரு விபுலாநந்த அடிகள் தமது நண்பர் கந்த சாமிப் பெரியார் வானுலகு புகுந்த செய்தி கேட்டு வேதனை அடைந்தார் கங்கை யலைமூலமும், சந்திரன் மூலமும் மனித வாழ்வின் தன்மையை உணர்ந்தார். பிறந்தவர் யாவரும் இறப்பர் என்னும் உண்மையை உணர்ந்தவராயினும் அன்புத் தொடர்பு அகலாமையால் ஓலையொன்று எழுதி அதை வான் அடைந்த நண்பர் கையிற் சேர்க்க விரும்பி ஆகாய கங்கையை மும்முறை வணங்கினார். கங்காதேவி அவர்முன் காட்சி கொடுத்த தன்மை இப்பகுதியிற் சொல்லப்படுகின்றது.

ஆ. அழகிய மெல்லிய சிலம்பு கிடந்து ஒலிக்கின்ற சிறிய அடிகள் செந்தாமரை மலர்போல் விளங்க, அழகிய மல ரோடு கூடிய பசுமையான இலைகளை ஒக்கின்ற பட்டினாற்

செய்யப்பட்ட ஆடையணிந்த இடையானது அசைய குற்றமற்ற ஒளி பொருந்திய சந்திரன் போன்ற முகத்திலே புன்சிரிப்பு விளங்க, மகர மீனாகிய வாகனத்தில் அமர்ந்து, கரிய மேகத்திேனாடு தோன்றி மின்னுகின்ற மின்னற் கொடிபோல் கங்கையின் நீரிலே தோன்றிக் காட்சி கொடுத்து மறைந்தாள்.

இ. இப்பகுதியில் கங்காதேவியின் தோற்றம் சிறப்பாக வருணிக்கப்பட்டுள்ளது. கங்காதேவியின் தோற்றம் கரியமேகமிடையே தோன்றிய மின்னல்போல் இருந்த தென்றும், திருப்பாதம் செம்மலர் போன்றது என்றும், பட்டினால் ஆகிய திருவாடை பச்சிலை போன்றது என்றும், திருமுகம் களங்கமில்லாத சந்திரன் போன்றது என்றுங் கூறப்பட்டுள்ளது. ஆகவே இப்பாடலில் உவமை அணி வந்துள்ளது எனலாம்.

XX. போதி நீழலிற் போந்தருள் மாமுனி
புன்மை தீர்த்திட மும்முறை யாகவே
பாத பங்கயம் வைத்திட மெய்த்தவம்
பண்ணும் புண்ணிய நாடெங்கள் நாடே.

இப்பாடலில் வந்த அணி யாது?

அ. நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் அவர்கள், இலங்கை வளத்தையும், வரலாற்றையும் இனிய எளிய சொற்க ளால் அழகிய பாடல்களாகப் பாடியுள்ளார். அவர் பாடிய பாடற்றொகுதிகளில் ஒன்று 'மணியிலங்கை நாடு' என்ப தாம். இம்மணியிலங்கை நாட்டிற்கு புத்தமுனிவர் மும் முறை திருப்பாதம் வைத்ததாக இப்பாடலிற் கூறு கின்றார்.

ஆ. அரசமரத்தின் நிழலிலே ஞானம் பெறுதற்காகச் சென் றருளிய பெரிய முனிவராகிய கௌதம புத்தர் இலங் கையில் அந்நாளில் உண்டாகிய குற்றங்களைப் போக்கும் பொருட்டாக மூன்றுமுறை தம்முடைய திருவடிகளாகிய தாமரை மலர்களை வைக்கும் வண்ணம் உண்மையான தவத்தைச் செய்த காரணமான புண்ணியத்தைப் பெற்ற நாடு எங்கள் நாடாகும்.

இ. இப்பாடலில் புத்த பகவானின் திருவடிகளைத் தாமரை யென உருவகித்துப் 'பாதபங்கயம்' என்ற சொற்றொடரால் ஆசிரியர் குறிப்பிட்டார். ஆகையினால் இச் செய்யுளில் உருவக அணி உள்ளது.

xxi. ஆரிய பாடையை யப்ப னருளினான்
அருந்தமிழ்ப் பாடையை அன்னை தந்தாள்
சீரிய பாடைக ளோரிரண்டுங் கொண்டு
சிங்கள பாடையோன் றுளதுவே.

இப்பாடலிலிருந்து புலவர் மனக்கருத்து யாதெனவறிகின்றீர்?

அ. நவாலியூர்ச் சோமசுந்தரப்புலவர் 'மணியிலங்கை நாடு' என்ற தலைப்பில் இலங்கையது வளத்தையும், இலங்கையின் ஆதிவரலாற்றையும் அழகான பாடல்களாற் பாடியுள்ளார். அவர் பாடிய பாடல்களுள் இதுவும் ஒன்று. ஆரிய பாடையும், அருந்தமிழ்ப் பாடையுஞ் சேர்ந்தே சிங்கள பாடை தோற்றியது என்று இப்பாடலிற் சொல்லப்படுகின்றது. மொழி வெறியுள்ளவர்களுக்குச் சிலவுண்மைகளை விளக்குகின்றது இப்பாடல்.

ஆ. ஆரிய பாடையாகிய வட மொழியைச் சிவபெருமான் அருளினார். அழகிய தமிழ் மொழியை உலகமாதாவாகிய உமாதேவியார் தோற்றுவித்தார். சிறந்த மொழிகளாகிய வடமொழியும், தமிழ் மொழியும் சேர்ந்து சிங்கள மொழி என்று ஒரு மொழி தோன்றிற்று.

இ. இப்பாடலுக்குப் புலவரின் வாக்குகள் கொண்டு பின்வருமாறும் பொருள் கூறலாம்:
ஆரிய பாடையாகிய சமஸ்கிருத மொழியை நமது மூதாதையாகிய விஜயன் தந்தான். அருமையாகிய தமிழ் மொழியை எமது மூதாட்டியாகிய பாண்டியன் மகள் தந்தாள். சிறந்த இருபாடைகளுஞ் சேர்ந்து சிங்கள பாடை தோன்றியது.

ஈ. இலங்கைவாழ் மக்களுக்குத் தமிழ் மொழியே தாய்மொழியாகவுள்ளது என்று புலவர் கருதினார் என நாம் அறியலாம்.

xxii. ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒதுங்கக் காண்பது யோகியர் உள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கு
வருந்தக் காண்பது சூலுளை சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறங் கீர்த்தி
திருக்குற் றாலர்தென் ஆரிய நாடு.

இப்பாடலில் வந்த அணி யாது ?

அ. திரிகூட விராசப்ப கவிராயர் பாடிய குற்றாலக் குறவஞ்சியில் ஒருபாடல் இது. இப்பாடலில் குறத்தி தனது நாட்டின் வளத்தை மிகவழகாக எடுத்துக் கூறுகின்றாள்.

ஆ. திருக்குற்றாலரது நாட்டில் ஓடுவதாகக் காணப்படுவது பூக்கள் பரந்த நீர்ப்பெருக்கேயாகும். ஒடுங்கிக் கிடப்பதாகக் காணப்படுவது யோகிகளின் உள்ளமேயாகும். வாடியிருக்கக் காணப்படுவது மின்னலைப் போன்றவராகிய பெண்களின் இடையே யாகும். வருந்துவதாகக் காணப்படுவது முத்து ஈனுவதற்காக வருந்துகின்ற சங்குகளே யாகும். வயல்களிலே வீசப்படுவதாய்க் காணப்படுவது விதைக்கப்படும் விதைகளேயாகும். புலம்பி ஒலிப்பதாய்க் காணப்படுவது மகளிர்காலில் அணிந்திருக்கும் கிண்கிணி என்னும் ஆபரணமேயாகும். தேடப்படுவதாகக் காணப்படுவது நல்ல அரிய புகழேயாகும்.

இ. இப்பாடலில் காண்பது என்னும் சொல் ஒரே பொருளில் திரும்பத் திரும்ப வருவதால் சொற் பொருட் பின்வருநிலை அணியுள தெனலாம். பாடல் முழுவதிலும் ஒழித்துக் காட்டணி வந்துள்ளது என்றுஞ் சொல்லலாம்.

2. முதுவேனிற் பருவவருணனையை விளக்குக.

பாரத நாட்டு மக்கள் ஒரு வருடத்தை ஆறுபெரும் பருவங்களாகப் பகுத்துள்ளார்கள். அவையாவன: கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பனவாகும். ஆவணி தொடக்கம் இவ்விரண்டு மாதம் ஒவ்வொரு பருவத்திற்கும் உரியவையாகும். முகாந்திரம் தி. சதாசிவ ஐய

ரவர்கள் இயற்றிய நூல்களுள்ளே இருதுசங்கார காவியம் தலை சிறந்தது. அதிலுள்ள முதுவேனிற் காலத்தின் தன்மையை விளக்கும் சில பாடல்கள் எமது பகுதியில் உள்ளன. அவற்றிலே சொல்லப்பட்ட சில உயிரினங்களின் செயல்கள் பின் வருமாறு :

மான்கள் : சூரியனது அதிகரிக்கின்ற வெப்பம் நன்கு உடலை உலரச்செய்ய, தாகம் அதிகரித்து நாவறட்சிபெற்ற மான்கள், நன்ருகப் பூசப்பட்ட கரிய மையைப்போல் தோற்றுகின்ற நீலநிற ஆகாயம் நிலத்துடன் பொருந்துவதைப் பார்த்து, அங்கே நீருண்டு என்று தவறுதலாக எண்ணி அதனை நோக்கி அடுத்துள்ள காட்டுக்கு ஓடுகின்றன.

பாம்பு : சூரியனது கதிர்கள் நெருப்பைப்போல மிக வெப்பத்தை வீச, அதனுல் வழியில் உள்ள சூடேறப்பெற்ற புழுதிகள் உடம்பைச்சுட, பதைப்புற்ற படத்தையுடைய பாம்பு உள்முகமாகச் சுற்றிய வண்ணம் ஊர்ந்து சென்று, தனக்குத் துன்பம் விளைவிப்பதான மயிலைத் தனக்குப் பகை யானது என்றும் நினையாது, அதன் நிழலில் தங்கும்.

மயில் : நெய்யூற்றப்பெற்ற ஓமகுண்டத்து நெருப்பைப் போல, சூரியனது கதிர்கள் எல்லாவிடத்தையும் சூடாக்க, அதனுல் வெதும்பியனவாய் தமக்கு உள்ள வலிமையையும், பிறபிராணிகளிடத்துள்ள பகைமையையும் மறந்த மனத்தினை உடையனவாய்த் தமது தலையைத் தோகைக்குள் நுழைத்துக் கிடந்தன மயில்கள். அத்தோகைக்குள் பாம்புகளும் நுழைந்து கிடந்தன.

புள்ளினம் : பசிய இலைகள் ஒன்றுமில்லாத மரக்கிளைகளில் பறவைகள் வெயிலாற் களைத்திருந்தன.

குரங்குகள் : உச்சியோடு கூடிய மலைகளில் உள்ள குகை களுக்குள் குரங்குக் கூட்டம் ஓடிச்சென்று மறைந்தன.

கவயமா : நீர்குடிக்கவிரும்பி, அங்கும் இங்கும் நீரைத் தேடி ஓடின காட்டுப்பசு.

சரபம் : மரக்குச்சிகளிற் றங்கும் சரபப் பட்சி ஆழமான கிணற்றிலுள்ள நீரைக் குடிக்கும்.

யானை, சிங்கம், காட்டுப்பசு : சூரியவெப்பத்தால் வெதும்பிய உடல்களை உடைய யானை, காட்டுப்பசு, சிங்கம் என்பன தமக்குள்ள பகையை மறந்து, நண்பர்போல், வெயிலால் வாடி ஒன்றுசேர்ந்து கானகத்தை விட்டு நீங்கி ஆற்றங்கரையில் உள்ள மணலில் தங்கின.

3. சிவகாமி சரிதையில் வரும் உவமைகளை விளக்குக.

தமிழில் சிறந்த நாடகநூல் தோன்ற வழிகாட்டியாய் விளங்கும் மனோன்மணியம் என்ற நாடகத்தை திரு. பெ. சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றியுள்ளார். இந்நூலில் வருஞ் சிவகாமி சரிதை என்னும் உபகதை மிக்க சுவையும், சிறந்த பயனுமுடையது. இதன்கண்வரும் உவமைகள் இன்பம் பயப்பதோடு பொருளைச் செவ்வனே விளங்கவும் துணையாயுள்ளன. இப்பகுதியில்வரும் உவமைகளும் அவற்றால் தெளிவாக்கப்படும் பொருள்களும் பின்வருமாறு :

i. சாரும்வரை குறியாது தன்னிழலை அளத்தல் : தன்னை அவமதித்து நடந்த சிவகாமியை வெறுத்துச் சிதம்பரன், ஔவையார் உபதேசப்படி, முனிவராகி வாழ்ந்தான். தன்தவறை உணர்ந்த சிவகாமி முனிவர் வேடந்தாங்கித் தன்கணவனைத் தேடியலைந்தாள். ஈற்றில் ஒரு பெருங் காட்டில் ஒரு முனிவரைச் சந்தித்தாள். தான் அலைந்த காட்டின் தன்மையை முனிவருக்கு இவ்வுவமை மூலங் கூறினாள் சிவகாமி. இச் சொற்றொடர் மூலம் கானகத்தின் விசாலத்தை விளக்கினாள் சிவகாமி. அடியெடுத்து வைக்குந்தோறும் வளரும் நிழல்போலக் கானகமும் விசாலமுடையது.

ii. உயிர்விடுப்பவர்போல் : உயிர்விடுபவர்படும் வேதனைபோல் என்பது இச்சொற்றொடரின் பொருள். சிறுமுனி வேடமுடன் சென்ற சிவகாமி பெருமுனியைச் சந்தித்த காட்டில், இரவு நேரத்தில் துணையைச் சிறிது பிரிந்த அன்றிலின் துன்ப நிலையை ஆசிரியர் இச் சொற்றொடர்மூலம் விளக்குகின்றார்.

iii. பிரிவரிய ஊசிவழி பின்றொடரும் நூல் : பிரிதற்கரிய ஊசி சென்றவழியே அதன் பின்னே செல்லும் நூல் என்பது இச் சொற்றொடரின் பொருள். பெருமுனியைத் தொடர்ந்து அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றி, பெருமுனியிருப்பிடம் சிவகாமி சென்ற தன்மையை இச் சொற்றொடர்மூலம் ஆசிரியர் விளக்கு

கின்ருர். இதிலிருந்து இருவரினதும் அன்புநிலையை நாம் உணரலாம். இளமுனி வேடம் பூண்ட சிவகாமி கானகத்தில் பெருமுனியின்பின் எதுவித துன்பமும் இன்றிச் சென்ருள் என்பது இதன்மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளது.

iv. திகழ்ந்த சுவரோவியம்: சுவரிலே விளங்கும் சித்திரம் என்பது இச்சொற்ருெடரின் பொருள். இளமுனியாகிய சிவ காமி பெருமுனியின் இருப்பிடத்தில், பெருமுனியின் முன்பு நெருப்பின் பக்கலில் ஆடாமல், அசையாமல், பேசாமல் இருந்த நிலைமை இவ்வுவமைமூலம் விளக்கப்பட்டது.

v. திகைக்க எலிபிடித்தலைக்குஞ் சிறு பூனை: மயங்கும்படி எலியைப் பிடித்து அலைக்கும் பூனை என்பது இச் சொற் ருெடரின் பொருள். இருவருக்கும் இடையில் (சிவகாமி – சிதம்பரன்) இருந்த நெருப்பு இருளைப் போக்கிய தன்மையை இச் சொற்ருெடர்மூலம் ஆசிரியர் விளக்குகின்ருர். எலியைப் பிடிக்கும் பூனை அதனைச் சிறிது நேரம் வருத்தி விளையாடி உண்ணும். விளையாடும்போது தள்ளியும் இழுத்தும் பல துன்பங்கள் செய்யும். ஈற்றில் உண்ணும். அதுபோல நெருப்பும் வளர்ந்தும் குறுகியும் இருளை வளரவுங் குறையவும் செய்து போக்கியது.

vi. அழலால் இங்கு எழுந்தடங்கும் நிழல்: தன் முன்னே ஆடாமல், அசையாமல், பேசாமல் கண்களில் இருந்து நீர் சொரிய இருந்த இளமுனியைப் பார்த்து, கவலை யாதெனப் பெருமுனிவர் வினவினர். அப்போதும் சிறுமுனியாகிய சிவ காமி பேசாமல் இருந்தாள். பெருமுனியாகிய சிதம்பரன், உலக சுகமனைத்தும் நெருப்பினுல் உண்டாகிப் பின் அடங்கிப் போகும் நிழல்போன்றவை என விளக்கினன். இதில் சுக மெல்லாம் நிலையற்றவை என்பது விளக்கப்பட்டுள்ளது.

vii. நறுநெய்க்குடத்து எறும்பு நண்ணல்: வாசனை பொருந்திய நெய்நிரம்பிய குடத்தினை எறும்புகள் அடைதல் என்பது இச் சொற்ருெடரின் பொருள். தனது இருப்பிடம் வந்து நெருப் பின்முன் இருக்குஞ் சிவகாமியைப் பெருமுனிவன் கவலைக்குக் காரணம் யாதென வினவினன். பின் உலக நீதிகள் பல வற்றை எடுத்துக் கூறினன். அவற்றுள் ஒன்று இது. இதன் மூலம் செல்வமுள்ள காலத்தில் எல்லோரும் நம்மை வந்து சேர்வர், உறவாடுவர் என்பன வற்புறுத்தப்பட்டது. இதில்

நமக்குக் குடமும், நம்மிடம் உள்ள செல்வத்துக்கு நெய்யும், செல்வமுள்ள காலத்தில் உறவினர் சேர்ந்து ஒழுகலுக்கு நறு நெய்க்குடத்தை எறும்புகள் அடைதலும் உவமைகளாகக் கூறப்பட்டுள்ளன.

**viii.** முயற்கொம்பு: எக்காலத்தும், எவ்விடத்தும் இல்லாத பொருள்களுள் முயற்கொம்பும் ஒன்று. பெருமுனியாகிய சிதம்பரன், இளமுனியாக நின்ற சிவகாமியை நோக்கிப் பெண்கள் காதல் முயற்கொம்பு என்று கூறினன். தன்மனைவி தன்னிடம் காட்டிய அன்பு இல்லாத ஒன்று என்பதைப் பெரு முனிவன் சுட்டிக் காட்டினன்.

**ix.** விரிவெயிலில் விளக்கொளி: சூரியப் பிரகாசத்தின்முன் ஒளிமங்கியிருக்கும் விளக்கது ஒளி என்பது சொற்றொடரின் பொருள். பெருமுனிவன் கூறியவற்றைக் கேட்ட இளமுனிவன் வெட்கமுற்றதையும், அவளது முகம் வெளுத்ததையும் ஆசிரியர் இவ்வுவமைமூலம் விளக்கினர். இரவிற் பிரகாசமாக இருக்கும் விளக்கு சூரிய ஒளியின்முன் பிரபை குன்றுவது போலப் பெருமுனிவன் வார்த்தைகளைக்கேட்ட இளமுனிவன் முகம் பிரகாசங் குன்றியது.

**x.** ஏதிலன் நீள்கனவு விழித்தெழுதல்: பெருமுனிவன் வார்த்தைகளைக் கேட்ட சிறுமுனிவன் பரபரப்பினுல் கண்களை அகல விழித்தான். அவ்வாறு விழித்தமையை ஆசிரியர் இந்த உவமை மூலம் விளக்கினர். வறியவன் ஒருவன் இன்பக் கனவுகள் கண்டு விழித்தபோது அவை உண்மையல்லவென வுணர்ந்து பரபரப்புக்கொண்டு கண்களை அகல விழித்தல் போலச் சிறுமுனிவனது முகமும் பெருமுனிவன் வார்த்தைகளைக் கேட்டபோது இருந்தது. முகத்தோற்றம் இந்த உவமை மூலம் விளக்கப்பட்டது.

**xi.** வெளிப்பட்ட கள்வன்: தனது இருப்பிடத்தில் தன்முன் சிறுமுனியாயிருந்த சிவகாமிக்குப் பெருமுனிவன் பல உண்மைகளைக் கூறினன். அவற்றைக் கேட்ட சிவகாமியின் முகத் தோற்றம் மாறுபட்டது. முகத்தோற்றம் மாறுபட்டதை ஆசிரியர் இந்த உவமைமூலம் விளக்கினர். தன்னை யாரும் அறியார் என்றிருந்த சிவகாமி மனநிலைமை, முகத்தோற்றம் என்பனவையும் மெய்யுமாகப் பிடிபட்ட கள்வன் நிலைமை போன்றிருந்தன.

xii. மின்னொளியிற் கண்: மின்னொளியிற் கண் பிரபை இழந்து பார்க்குஞ் சத்தி இல்லாதிருப்பதுபோல, பெருமுனிவன் சொற் கேட்ட சிவகாமி நாணத்தால் நாணம் அடைந்து தலை குனிந்து இருந்தாள். சிவகாமி அடைந்த நாணத்தை ஆசிரியர் இவ்வுவமை கொண்டு விளக்குகிறார்.

xiii. நீறுபடி நெருப்பு: நீறுபடி நெருப்பின் வெளியிற் சாம்பரும், உள்ளே செந்நிற நெருப்பும் இருக்கும். இந்த உவமை கொண்டு இளமுனி வேடம் பூண்ட சிவகாமியின் மேனி செந்நிறம்பூண்டதென்றும், அதன்மேல் விபூதி அணிந்திருந்தாள் என்றும் விளக்கினார் ஆசிரியர். நீறுநீங்க நெருப்புத் தெரிவது போல விபூதி சிறிது நீங்கச் சிவகாமியின் பொன்மயமான மேனி பெருமுனிவராகிய சிதம்பரனுக்குத் தோற்றியது.

xiv. வீசுலையின் மூக்கு: இளமுனி வேடத்தில் இருந்த சிவகாமியினது பெருமூச்சை ஆசிரியர் இந்த உவமைகொண்டு விளக்கினார். உலைக்களத்திலுள்ள காற்றை வீசுகின்ற துருத்தியினது மூக்கினின்று உண்டாகும் காற்றுப் போலச் சிவகாமியினது பெருமூச்சுச் சூடும், விட்டு விட்டு அதிகரிக்குந் தன்மையையும் பொருந்தியிருந்தது. இப்பெருமூச்சு அவள் பெண் என்பதையுங் காட்டியது.

xv. உடல்பிரியா நிழல்: சிவகாமி, தானுந் தமது மைத்துனனும் சிறுவயதில் அன்பால் இணைந்திருந்த தன்மையைப் பெருமுனியாகவிருந்த சிதம்பரனுக்கு விளக்குகின்றாள்.

xvi. உயிர் தின்னும் நமன்: இதன்பொருள் உயிரை உடலினின்றும் பிரித்துக்கொண்டு செல்லும் நமன் என்பதாம். தன் கணவனைத் தான் பிரிந்திருந்தகாலத்தில் தன்னைச் சந்திரனும், சமுத்திரமும் யமன் போல வாட்டியதாகக் கூறுகின்றாள் சிவகாமி. பெருமுனியாகிய சிதம்பரன் அவள் உண்மையான அன்பை அறிந்தான்.

xvii. கண்டுயிலும் இல் இடத்துத் தீக்கதுவ வெளியோடல்: நித்திரை செய்வதற்கு இடமாயிருந்த வீடு எதிர்பாராதவகையில் நெருப்புப்பிடித்து எரிய, ஒருவர் தம்முயிரைக் காப்பாற்றும் ஒரே நோக்குடன் புறப்படல் என்பது இதன் பொருள். இதன் மூலம் சிவகாமி தன்னுயிராகிய கணவனைத் தான், பிறபொருளையும், மற்றையோர் பேச்சையும் பொருட்படுத்தாது தேடப் புறப்பட்டதாகச் சிதம்பரனாகிய பெருமுனிக்குச் சொன்னாள்

4. சாணக்கிய நீதிவெண்பாவிலுள்ள நீதிகளெவை?

சுன்னைக்குமாரசுவாமிப் புலவர் அவர்கள் பல செந்தமிழ் நூல்களை இயற்றியதோடமையாது, மேகதூதக் காரிகை, இராமோதந்தம், சாணக்கிய நீதிவெண்பா முதலிய வடமொழி நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தும் தமிழ்த் தொண்டு செய்தார். சாணக்கிய நீதிவெண்பாவிற் கூறப்பட்ட நீதிகளாவன:

வஞ்சகன்: நுனிநாக்கில் தேனும் நெஞ்சில் நஞ்சும் நிலை பெற்ற கெட்டவன் இனிய சொற்களைப் பேசுகின்றான் என்று அவனை நம்பாதே. என்ன சொன்னாலும் அவன் துன்பமே செய்வான்.

திருந்தாதவன்: கோபிக்கின்ற பாம்புங் கொடியவனும் தீங்கு செய்வனவாக விருந்தாலும் பாம்பிலும் கொடியவனே பொல்லாதவன். பாம்பு மந்திரத்துக்குக் கட்டுப்படும். கொடியவனை எதுவிதத்திலும் வசப்படுத்தமுடியாது.

வசப்படுத்தும் வழி: கற்று வல்ல பண்டிதனை உண்மை பேசியும், கடுங்கோபங்கொண்டவனைக் கைகூப்பி வணங்கியும், மூர்க்ககுணமுள்ளவனை எதிர்க்காது அவனைப் பின்தொடர்ந்து சென்றும் எம்பக்கமாக்கலாம்.

சிந்தித்த காரியம்: ஒருவர் தம்மனத்தில் செம்மையாகச் சிந்தித்துச் செய்வதெனத் தீர்மானித்த ஒரு காரியத்தை ஒருவருக்குஞ் சொல்லாதிருக்க, பலரறியின் கேடுண்டாவதோடு பயனும் இல்லாமற் போகும்.

முற்றுங்களைதல்: வட்டியோடு கூடிய கடனையும், வளர்ந்தெரியும் நெருப்பையும், கொடிய நோயையும் சிறிதேனும் இல்லாது அழித்தல் வேண்டும். குறைவிட்டால் பின்பு அழிக்க முடியாது.

5. சோமசுந்தரப்புலவர், சுப்பிரமணிய பாரதி, முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி என்போரின் பாடல்களை ஆதாரமாகக்கொண்டு தமிழ்மொழியின் சிறப்புக்களை எழுதுக.

தமிழ்நாட்டிலுள்ள அழகிய பொதிய மலையிற் றங்கிய அகத்திய மாமுனிவர் மடியில் வளர்ந்த செந்தமிழ் மொழியாகிய சிறந்த தெய்வம், தவம் முதலியவற்றால் வராத சித்திகளை

ஒருவரிடத்து வந்தடையச் செய்கின்ற தெய்வமாகும்; கல்வி, கேள்விகளிற் சிறந்த சான்றோரது வாயிலே மொழிவடிவாய் நிறைந்துள்ள தெய்வமாகும்; மாடங்கள் நிறைந்துள்ள மதுரை யென்னும் அழகிய நகரில் முச்சங்கங்களிலே சிறப்புடன் வாழ்ந்த தெய்வமாகும். சிறப்புப்பொருந்திய வேங்கடமலைக்கும், குமரிக்கும் இடையில் உள்ள தேசங்களில் அரசகருமமொழி யாய் இருந்த தெய்வமாகும். பாண்டியன் ஆதிய முடிமன்னர் மூவராலும் போற்றிப் பாதுகாக்கப்பட்ட தெய்வமாகும்; உலக மக்கள் உவந்தேற்குந் திருக்குறளைத் தன்பாற்கொண்ட தெய்வ மாகும்; படிக்குந்தோறும் வெறுப்பைக் கொடாது இன்பத்தை நல்கின்ற தெய்வமாகும். பல்கலையுங் கற்றுணர்ந்த பண்டிதர் களுக்குப் பருவரல் வருங்காலத்துப் பற்றுக்கோடாக நின்றுதவுந் தெய்வமாகும். மருந்து, மந்திரம் என்பவற்றால் நீக்கமுடியாத உடல் நோய், மனநோய், உயிர் நோய் ஆதியவற்றை அடி யோடு மாற்றுகின்ற தெய்வமாகும்.

ஆகாயத்தினாற் சூழப்பட்ட அவனியில் உள்ள எக்கலை யையும் எடுத்து விளக்கக்கூடிய சொல்வளம் நிரம்பியது எமது தமிழ் மொழியாகும்.

உலகில் உள்ள பழைமையான மொழிகளுள் சிறந்ததும், இன்பம் பயப்பதாகவுள்ளதும் எமது தமிழ் மொழியாகும். தனது வயிற்றிற் றோன்றிய மற்றைய மொழிகள் போலல் லாமல், தன் தனித்தன்மையோடு விளங்குவதும், மன்னர் பலர் மணிமுடிமேல்வைத்து மதித்ததும், மலர்க்கொழுந்து போன்றதும் ஆகவிளங்குவது எமது தமிழ் மொழி. வேறெந்த மொழிகளிலும் இல்லாத அன்பை அடிப்படையாகக்கொண்ட ஐந்திணையையும், அரசியல் அறம் கூறும் புறத்திணையையும் எடுத்துக் கூறுவது எமது தமிழ்மொழியாகும்.

6. ‘இரட்சணிய யாத்திரிகம்’ என்ற பகுதியிற் சொல்லப்பட்ட கதையைச் சுருக்கி எழுதி அதிலிருந்து நீருணரும் படிப்பினையுந் தருக.

ஓர் ஊரில் அன்பும் பண்பும் நிறைந்த ஒரு தந்தைக்கு இரு மக்கள் இருந்தனர். இருவரில் இளையவன் தனது பாகத்தைத் தனக்குப் பங்கிட்டுத் தருமாறு தந்தையாரை இரந்து கேட்டான். தந்தையும் தன் சொத்துக்களையெல்லாம் இருசம கூறாக்கி இரு மைந்தர்க்குங் கொடுத்தான். இளையவன்

தனது பாகத்தைப் பெற்றுத் தந்தையார் கூறிய நல்லறிவுரைகளையும் பொருட்படுத்தாது உண்மைப் பொருளையும் உணராது சிற்றின்ப வேட்கைகொண்டு பொருள் எல்லாவற்றையும் இழந்து சில நாட்களில் வறுமை அடைந்தான். அங்கு ஓர் ஊரில் வாழ்ந்த ஒரு குடும்பத் தலைவனுக்கு வேலையாள் ஆகி, அவனது பன்றிகளை மேய்த்து, நாட்டிற் பஞ்சமேற்பட, பசியால் உமியோடு கூடிய தவிட்டை உண்டு வாழ்ந்தான். பஞ்சம் அதிகரிக்க உமித் தவிட்டிற்கும் வழியின்றி, தன் தவறை உணர்ந்து தனது தந்தையினது வேலையாட்களின் சிறப்பை எண்ணி, தந்தையிடம் சென்றால் சிறப்பாக வாழலாம் என நினைந்தான். உடனே தந்தையிடம் விரைந்து சென்றான். பிரிந்து சென்ற தன்மகன் வந்தவுடன் அளவிலா மகிழ்ச்சி அடைந்தான் தகப்பன். தந்தையை அடைந்தவுடன் மகன் தந்தையை நோக்கி, "எந்தையே! எந்தையே!! உமது முன்னும், கடவுள் முன்னும் அளவிலாப் பாவஞ் செய்துவிட்டேன். நான் உம் மைந்தனல்லேன், என்னை மன்னித்து உமது ஏவலாளரில் ஒருவனுக்கி எனக்கு வாழ்வு தரவேண்டும்;" என்று இரந்தான். தந்தையும் பழைய மகன் இறந்தான் என்று எண்ணிச் சந்தோஷமடைந்து, நல்லுணவு சமைப்பித்து எல்லோரையும் உண்பித்து, தானும் உண்டு இன்பங் கொண்டாடினர். அதுகாலை மூத்தமகன் வந்து மகிழ்ச்சிக்குக் காரணங்கேட்டுக் கடுங் கோபங்கொண்டான். தந்தையும் தமது மகிழ்ச்சிக்கு இளையவன் மனமாற்றமே காரணம் என்று சொல்லி, அவன் கோபத்தைத் தணிவித்துத் தங்களுடன் இன்பங்கொண்டாடி மகிழுமாறு அறிவுரை கூறினன்.

இக்கதைமூலம் நாம் எவ்வளவு தீமைகள் செய்தாலுங் கடவுள் எம்மையெல்லாம் பொறுத்து இன்பவாழ்வு நல்குவர் என்பதை அறியலாம். இறுதிவரையும் நமக்குக் கடவுளே துணையாவார்.

7. மணியிலங்கை நாட்டைப்பற்றிச் சோமசுந்தரப்புலவர் யாது கூறுகின்றார்?

i. நாட்டின் சிறப்பு: பொன்னையும், முத்தையும், புகழையும் கொண்டு மிளிர்வது எமது நாடு. மலைவளமும் மலர்வனமும் நிறைந்த நாடு எமது நாடு. தேவர்கள் விரும்புவதும் எமது நாடு. எல்லா வளங்களும் இலங்குவதனல் இலங்கை என்ற பெயர் பொருந்தியது எமது நாடு. புலவர்களினுல்

புகழ்ந்துபாடப்பட்ட நாடு எமது நாடு. மலைவளங்காட்ட மலயன் தன் கைவண்ணங் காட்டிய நாடு எமது நாடு. காட்டு விலங்குகளே பகையின்றி வாழும் நாடு எமது நாடு. இந்து சமுத்திரம் ஈன்ற முத்து என்றும் திருமாலும் திருமகளும் கூடிக்குலவி இன்பமுடன் விளையாடுஞ் சோலை போன்றது என்றும் சொல்லக்கூடிய நாடு எமது நாடு. மாமுகில்கள் தவழும் மலைகளை உடையதும், முகில்களைக்கண்டு மயில்கள் நடனமாடுவதும் முருகனும் வள்ளியும் விளையாடுவதுமாகிய நாடு எமது நாடு. குபேரன், இராவணன், விபீடணன், இயக்கர், நாகர் முறையாக ஆண்ட நாடு எமது நாடு துக்கம், துக்க காரணம், சுகம், சுகத்திற்குக் காரணம் என்பவற்றைக் கூறிய புத்தர் கருத்துக்களைப் போற்றிப் பாதுகாத்த நாடு எமது நாடு. இம்மை, மறுமை இன்பம் பெறும் முயற்சிகள் பொருந்திய நாடு எமது நாடு. பல்வேறு நாட்டுக் கலாச்சாரமும் பொருந்திய நாடு எமது நாடு. விராட புருடனுக்கு இடநாடி எனப் போற்றத்தக்க நாடு எமது நாடு. திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம், கதிர்காமம் என்னும் மூன்று கண் கொண்டு அருள் செய்கின்ற தெய்வத்தின் தன்மை பொருந்தியது எமது நாடு.

ii. புத்தன் வருகை: வெள்ளரசமரத்தின் கீழிருந்து மெய்ஞ் ஞானம் பெற்ற வள்ளல் புத்தபகவான் இழிவுநிலை போக்கத் தமதுதிருவடித் தாமரையை வைக்க உண்மையான பெரிய தவங்களைச் செய்தது எமது நாடு. நாகர் பல பிரிவினராய்ச் சிங்காசனத்தின் பொருட்டுப் போட்டியிட்ட காலத்தும், மாமலங்கை நாட்டில் உள்ள ஆயிரம் நாகர்க்கு ஆன்மாவைப் பற்றிய உண்மைகளைப் போதிப்பதற்காகவும், களனி அரசனுக்கு அறம் போதிப்பதற்காகவும் புத்தபகவான் இலங்கைக்கு வந்தார். முதன்முறை வந்து நாகரைச் சமாதானஞ்செய்து மக்களுக்குச் சுதந்திரம் நல்கினர். இரண்டாம்முறை வந்து நாகர்க்கு ஆன்மாவின் உண்மைத்தன்மையை விளக்கி வீடு பேறடையும் ஞானத்தை உபதேசித்தார். மூன்றும்முறைவந்து களனி அரசனுக்கு அறமுபதேசித்து அவன்மூலம் இராசமா விகாரையைக் கட்டுவித்தார். புத்தரின் வேதவித்து முளைக்க வயல் என்று சொல்லக்கூடிய நாடு எமது நாடு.

iii. விஜயன் வருகை: புத்தபகவான் பரிபூரண ஞானம் அடைந்த மங்கல நன்னாளிலே, கல்வி நிரம்பிய வங்காள நாட்

லிருந்து விஜயனும் தோழரும் எமது இலங்கைக்கு வந்தனர். அவன் வந்தபின்பு இலங்கையில் ஓர் ஒளி தோன்றியது. அவனது பரம்பரையினரே நாம். எல்லோரும் சண்டை சச்சரவின்றி ஒற்றுமையாகச் சகோதரர்போல் வாழ்வோம். வீரம் நிறைந்த பாண்டியன் மரபில் விஜயன் திருமணஞ் செய்தான். பாண்டியன் மகளே நமது மூதாட்டி. இருபகுதியினரும் ஒற்றுமையாய் வாழவேண்டும். இதனுலே வடமொழியுந் தமிழுங் கலந்த சிங்களபாடை தோன்றிற்று. இலங்கை முழுவதும் முதன் முதலரசாண்டு சிறப்படைந்தவன் விஜயன்.

iv. புத்த சமயம் பரவல்: பார்புகழும் பாரத தேசத்தை யாண்ட பேரும் புகழும் நிறைந்த அசோக மன்னன், புத்தரின் உத்தம நெறியைப் பரப்பவிரும்பி, தனது மக்களாகிய மகிந்தனையும், சங்கமித்திரையையும் இலங்கைக்கு அனுப்பினுன். அவர்கள் மிகுந்தலையிற் தேவநம்பியதீசனைச் சந்தித்து, புத்த மதத்தைப் போதித்தனர். புத்தர் மெய்ஞ்ஞானம் எய்திய வெள்ளரசு மரத்தின் கொம்பொன்றைக் கொண்டுவந்த சங்கமித்திரை ஆச்சரியத்துடன் மக்கள் குலம் ஈடேற, அன்புத்தளிர் ஈன்று, அறந் தழைத்து, அணைவுசினைவிட்டு இன்பநிழல் நல்கி இன்றும் அழியாமல் நிற்க அநுரதபுரத்தில் நாட்டி வைத்தாள். அம்மரம் ஒற்றுமைக்கும், ஒப்புரவிற்கும் ஒழுக்கத்திற்கும், தெய்வவுண்மைக்கும் அறிகுறியாய் நிற்கும். இவ்வநுரதபுரம் அரசர் தலைநகராயும், புத்தர் ஞானம் பொருந்திய நகராயும் விளங்குகின்றது. இது தெய்வ நகரம் என்று சொல்லப்படுஞ் சிறப்புடையதாய் கோபுரங்களும், மண்டபங்களும், பொற் கோயில்களும், விகாரைகளும், சோலைகளும் நிரம்பியது. அன்றியும் ஆட்சியில் சுதந்திரம் நிலைபெறச் செய்து, செல்வம் நிறையப்பெற்று, தமிழரின் சிற்பக் கலைநிறைந்த கோயில்கள் கொண்டு, நீர்வளம்மிக்க வயல்களை நாற்புறமுங்கொண்டு இலங்கைக்கு ஒரு மணிமுடியாய் இது திகழ்கின்றது.

8. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை "விண்ணப்பம்" என்று பகுதியிற் கூறுவன யாவை?

கவிமணியவர்கள் நிர்மலனுகிய இறைவனை நோக்கி, உலகிற் பரந்து பாழ்பட்டுக்கிடக்கும் பாலைவனங்களெல்லாம் சோலைகளாகவும், நாடெங்கும் உள்ள தொழிற்சாலைகளில் பல தொழில்கள் பெருகவும், சபைகளிலே அறிஞர்கள் தமிழில் அரிய கருத்துக்களை விரித்துரைக்கவும், எல்லோரும் சுயதேச

வுடைகளை உடுக்கவும், எல்லோரிடத்தும் நாட்டுப்பற்று உண்டாகவும், வேலையில்லாத் திண்டாட்டம் ஒளியவும், கஞ்சா, மதுபானம் என்பன அழியவும், பிறர்க்குத் தீமைசெய்யாத, அச்சமில்லாவீரர்கள் நாட்டிற் றேன்றவும், சாதிபற்றி உயர்வு தாழ்வு பேசிச் சண்டை செய்யாமல் இருக்கவும் அருள்புரியும்படி வேண்டுகின்றார். அன்றியும் ஒளிபொருந்திய தேவியை நோக்கி, பருவ மழை தவருது பெய்யவும், அதனல் பயிர்கள் வளர்ந்து நற்பயனைக் கொடுக்கவும் அறந் தழைக்கவும் சாதி மதப் பூசல்கள் ஒழியவும், நாட்டிற் கல்வி செல்வம் என்பன பெருகவும், நாட்டுப்பற்று எல்லோரிடமும் உண்டாகவும், மக்கள் நற்கருமங்கள் செய்யவும் திருவருள் பாலிக்குமாறு கேட்கின்றார். இவரின் விண்ணப்பம் இவரது தூயவுளத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் காட்டுகின்றது.

9. 'கங்கையில் விடுத்த ஓலை' என்ற பகுதியிற் சொல்லப்பட்டவற்றை விளக்கமாக எழுதுக.

இதைப் பாடியவர் அருட்டிரு விபுலாநந்த அடிகள். அடிகளார் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பேராசிரியராய் இருந்த காலத்தில் கந்தசாமிப் பெரியாரும் தமிழ் விரிவுரையாளராகவிருந்தார். இருவரும் துறவுவாழ்வை மேற்கொண்டிருந்ததோடமையாது நண்பர்களாகவும் இருந்தனர். அடிகளார் பல்கலைக்கழகத்தினின்றும் நீங்கி, இமயமலையடிவாரத்தில் உள்ள இராமகிருஷ்ணமடத்தாருடன் சேர்ந்து தொண்டாற்றினர். எனினும் கந்தசாமிப்பெரியார்மீது கொண்ட அன்பு குறையவில்லை. அப்போது கந்தசாமிப்பெரியார் மாரடைப்பு நோயால் இவ்வுலக வாழ்வை நீத்தார். இதனை அறிந்த அடிகளார் ஆருத்துயரில்மூழ்கி, கங்கைக்கரையை அடைந்து, அன்புநிறை கடிதம் ஒன்று எழுதி, வானவருடன் வாழ்வுபெற்று இருக்கும் நண்பரிடம் சேர்க்குமாறு கங்கையில்விட்ட செய்தியே இதிற் சொல்லப்படுகின்றது.

i. கந்தசாமிப் பெரியாரின் சிறப்புக்கள் : தமிழ் மொழியிலுள்ள இலக்கண, இலக்கிய நூல்களை எழுத்தெண்ணி ஐயந்திரிபறக் கற்ற ஒரு தமிழ்ப் பேரறிஞர் இவர். சொற்களின் வகைகளையும், தொகைகளையும் சொற்கள் ஒன்ருேடொன்று சேரும்வகையையும் நன்குணர்ந்தவர். கேட்டார்ப் பிணிக்கும்வகையாக இனிமையும் தெளிவும் பொருந்த எதையும் சொல்ல வல்லவர்.

தமிழ் நூல் அனைத்தையும் அகத்திற் கொண்டவர். சொற்களில் அமைந்த நுட்பமான இலக்கண அமைதிகளை யெல்லாம் தெளிவாகவறிந்து, அதன் காரணமாக முதனூல்களையுந் தெளிவாகவுணர்ந்தவர். நற்கருத்துக்களையே எப்போதும் பேசுபவர். தூய சிந்தை, இரக்கம், அடக்கம் என்பவற்றை ஆபரணமாகப் பூண்டவர். அறவழியில் ஒழுகுபவர். உண்மைப் பொருள் இதுவென அகத்தியர் முதலானோர் கூறிய, கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் அகத்திணை ஏழையும், வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், காஞ்சி என்ற புறத்திணை ஏழையும் நன்குணர்ந்தவர். நிலையில்லாப் பொருள்களை விரும்புபவரைக் கண்ணெடுத்தும் பாராதவர். பெண்ணாசையை வெறுத்துத் துறவு வாழ்வை மேற்கொண்டவர். எந்நாட்டையும் தன்னுடாகப்போற்றி வருபவரானாலும், பாண்டி நாட்டில் சோழவந்தான் ஊரில் உள்ள சைவத் திருநெறி மடத்தில் வாழ்ந்தவர்.

ii. இருவர் நட்பும் பிரிவும்: விபுலாநந்த அடிகள் அண்ணாமலையில் கந்தசாமிப் பெரியாரைச் சந்தித்தார். இருவரையும் அன்பு ஒட்டவைத்தது. இருவரும் நண்பர்களானார்கள். அடிகள் வடநாடு சென்றார். இருவரும் உடலாற் பிரிந்தாலும் உள்ளத்தாற் பிரியாது வாழ்ந்தனர். வடநாட்டில் உள்ள விபுலாநந்தருடன் தொடர்புகொள்ளக் கந்தசாமிப்பெரியார் விரும்பினார். அவர் எதற்காக விரும்பினார் என்று அடிகளார் அறியாதிருந்தார்.

iii. கந்தசாமிப் பெரியார் இறப்பும் அடிகளார் செயலும்: கந்தசாமிப் பெரியார் மார்படைப்பு நோயால் இவ்வுலக வாழ்வை நீத்தார் என்ற செய்தி நெருப்புச்சுவாலையாய் அடிகளாரின் செவியில் நுழைந்து மனதை வாட்டியது. மனத்துயரைப் போக்கவும், உலகின் உண்மை நிலையை உணரவுங் கங்கைக் கரையை அடைந்தார். அப்போது மாலை நேரம். மேற்றிசை வான் சிவந்திருந்தது. கல்லென்று சொல்லி ஓடும் அலைகளைக் கண்டார். காற்றுக் குளிர்ந்த நீர்த்துளிகளை வீசியது. இருள் இரிந்தோட ஆகாயத்தில் பத்துக்கலைகள் நிரம்பிய சந்திரன் உதயமாகி அன்புக்கிரணங்களைச் சொரிந்தான். அடிகளார் மனித வாழ்வைப்பற்றிச் சிந்தித்து அங்கிருந்தார். நீரலையால் இழுப்புண்ட குச்சி ஒன்றின் மூலம் மனித வாழ்வைப்பற்றி நன்குணர்ந்தார். பின் சந்திரன் வாயிலாகப் பல உண்மைகளையும் அறிந்தார்.

iv. சந்திரனை வினவிய வினாக்களும் அது கூறிய விடைகளும் :

வினா : நன்மையை அறிந்து வாழ்பவராகிய கலைஞர்களுக்கிலக் காகுஞ் சந்திரனே! சிவபெருமான் திருமுடியில் வாழ் கின்ற நற்பேறுடையாய்! பூமியிற் பிறந்தோர் புகழ் பெருக்கி நல்வாழ்வு வாழ்வதும், பின் வறுமையால் இழி நிலை அடைந்து இறப்பதுவும் எத்திறத்தால் வரு கின்றன?

விடை : பூமியிற் பிறந்தோர் வளர்தல், தேய்தல், இறத்தல், பிறத்தல் என்னும் உண்மைகளை அறிவில்லாதோரும் தெளிந்துகொள்ளும்படி நான் இவைகளையுடையவனா யிருக்கின்றேன்.

வினா : உயிர்களுக்கு நரகம், சுவர்க்கம் என்பன எதனால் கிடைக்கின்றன ?

விடை : நற்கனவு போன்ற சுவர்க்கமும், மனம் வருந்த வரு கின்ற தீயகனவு போன்ற நரகமும், ஒருவர் செய்த நல்வினையின் பயனாகவும், தீவினையின் பயனாகவுங் கிடைக்கின்றன.

வினா : வானத்திலுள்ள சந்திரனே ! ஒருவர் ஒரு பிறவியில் வருந்திக் கற்ற கல்வியானது அவர் இறக்கும்போது அழிந்துவிடுமா? அல்லது அழியாது நின்று மறுபிறப் பிலும் உதவுமா ?

விடை ; சிறந்திடுகின்ற கல்வியானது ஒருவருக்கு ஒரு பிறவியில் மட்டுமன்றி அதன் பின்வரும் ஏழு பிறவியிலும் அவ ருக்கு உதவியாகவிருக்கும்.

v. கந்தசாமிப் பெரியாருக்கு அடிகளார் ஓலை எழுதல் : மணம் முடியாது வாணாள் முழுவதும் இலக்கண நூல்களைக் கற்ற தமது நண்பர் தேவர் உலகத்தும் அது கற்க, பாணினி, தொல் காப்பியர், பதஞ்சலி என்போர் வாழும் இடம் சென்றிருப்பார் என அடிகள் நினைத்தார். பிறந்தவர் யாவரும் இறப்பர் என்ற உண்மையை அறிந்த அடிகளார் துயரை விட்டாரெனி னும், அன்பு அருமையால் தனக்கு ஒரு வார்த்தையும் சொல் லாமற் சென்ற நண்பருக்கு, 'அறிவு அற்றம் காக்கும்; அறம் இன்பம் நல்கும்; உண்மை நட்பு நிலைபெறும்' என்ற வாச

கங்கள் பொதிந்த கடிதம் ஒன்று எழுதி, தேவருலகில் கலைத் தெய்வம் வாழும் நகரில், தமிழ் வழங்கும் வீதியில் இருக்கும் இடத்திற்கு அனுப்ப விரும்பினர்.

vi. கடிதம் அனுப்பல்: தாம் எழுதிய கடிதத்தை அனுப்பக் கங்கையே உதவிசெய்யும் என நினைத்து அதன்மூலம் அனுப்ப விரும்பினர். செம்பவளக் கொம்பிடை விளங்கும் முத்து மாலை போலவும், பொன் மலைமேல் வைத்த வெள்ளிக்கோல் போலவும், சூரியனைச் சூழ்ந்து இருக்கும் வெண்முகில்போலவும் சிவபெருமான் திருமுடியிற் காட்சி அளிக்கும் கங்கையை மும்முறை வணங்கினர். கங்கா தேவியும் காட்சி கொடுத்து ஓலையை ஏற்றுக் கடலை நோக்கி விரைந்து சென்றது.

## 10. சகுந்தலை வெண்பாவில் கூறப்பட்ட கதையை விரிவாக எழுதுக.

"கற்பகச் சோலை இது காண்பீர்" என்று சொல்லிச் சாரதி துடியந்த மன்னனைப் புற்றரையில் இறக்கினன். "சிங்கத்தின் குட்டியே! நீ கோபித்துப் பயன் யாது?" என்று மழலை மொழி பேசும் ஒரு சிறுவன் மல்லனைப்போல் சிங்கக் குட்டி ஒன்றைத் தழுவி நிலத்தில் வீழ்த்தியதைப் பார்த்த துடியந்தன் ஆச்சரியம் அடைந்து, "இப்பையன் போல் ஒரு சிறுவனைப் பெற எனக்கு விதியுண்டோ?" என்று நினைத்தான். பின், வலது கண் துடிப்பதால் நற்பயன் உண்டு என்று சந்தோஷமடைந்து சிறுவனின் பக்கலை அடைந்தான். சிறுவனைத் தேடிய தவமகளிர், 'எல்லாவற்றையும் வெல்லக் கூடியவன்' என்று முனிவன் இட்ட பெயர் பொருத்தமானது எனத் தமக்குள் சொல்லிக்கொண்டு, சிறுவன் பக்கலில் இருந்த அரசனைப்பார்த்து, "இவன் அஞ்சாப்பிள்ளை. இவன் சிங்கக் குட்டிக்கும், சிங்கக்குட்டி இவனுக்கும் தீமை செய்யாது காப்பீர்" என்று இரந்து கேட்டனர். துடியந்தன் சிறுவன் வனமிருகத்தைத் தாக்கல் ஆச்சரியம் என்று அப்பெண்களுக்குக் கூறினன். தவமகளிர் அரசனை நோக்கி, "பூமியில் புருக்குலத்திற் றோன்றிய புதல்வன் இவன். தவஞ்செய்யுந் தேவி இவன் தாய். இவள் இங்கு இருக்கும்போது இவன் பிறந்தான். பார்ப்பதற்கு இவன் உம்மைப்போன்றுள்ளான். நீர் யார்?" என்று வினவினர். அதற்கு அரசன் தான் யாம் திரிகன் என்றும் சிறுவன் வரலாறு ஆச்சரியம் என்றுங் கூறினன். பின் தவமகளிர் மூலம் அச்சிறுவன் தாய் மேனகை

யின் மகள் என்றும், ஓர் அரசன் அவளைக் கர்ப்பவதியாக்கி விட்டகன்றான் என்றும் அறிந்து, அப்பையன் தன்மகனேதான் என்பதை உணர்ந்து தழுவினான் துடியந்தன். தவமகளிர் அவ்வரசன் துடியந்தன் என்பதைக் கணையாழியால் அறிந்தனர். துடியந்தன் தழுவியவுடன் சிறுவன் சினங்கொண்டு "யார் இம் மனிதன்; என்தந்தை துடியந்தன் என்று தாய் கூறினாள்" என்று ஓலமிட்டான். உடனே துடியந்தன் சிறுவனைப் பார்த்து, "யானே துடியந்தன். நீ யென் மகன். என்னை மணந்த பெண்ணின் காலில் விழுந்து எனது குறையை முடிப்பேன்" என்று கூறித் தன் மடிமேல் இருத்தித் தவமகளிரைச் சகுந்தலைக்கு நடந்தவற்றைக் கூறும்படி குறையிரந்தான். தவக் கோலம் பூண்டுவந்த சகுந்தலையைக் கண்டு வேதனையோடு அணைத்துக்கொண்டான். உடனே சகுந்தலை கண்ணீர் சொரியக் கணவரின் பாதங்களைப் பற்றினாள். துடியந்தன், "நீங்காத பழியை உனக்குச் செய்துள்ளேன். அதைப் பொறுத்து எனக்கு வாழ்வு நல்கு" என்று சகுந்தலையை வேண்டினான். கண்களில் நீர் சொரிய, "விதியினால் வாழ்வு குலைந்தது" என்று சகுந்தலை கூறி, "சபையில் மறைந்த மோதிரம் இதுவா?" என்று கேட்க, "உன்னை நினைவூட்ட இது கிடைத்தது" என்று துடியந்தன் விடைபகர்ந்தான். கண்ணுவ முனிவர் மனக்கருத்தறியச் சேவகனை அனுப்பினான். அவர் மனக்கருத்தறிந்து துடியந்தனும், சகுந்தலையும் முனிவர் முன் சென்றனர். முனிவர் இருவருக்கும் வாழ்த்துக் கூறி, சகுந்தலைக்குள்ள சாபத்தையும் ஞானக்கண்ணால் அறிந்து கூறினார். அரசன் முனிவர் காலடியில் விழுந்து நன்றி கூறினான். சகுந்தலையும் மகனுடன் முனிவர் காலடியில் வீழ்ந்தாள். பஞ்சாட்சரம் உச்சரிப்பவர் பூமியில் நல்வாழ்வு பெறுவதுபோல் துடியந்தனும் நல்வாழ்வு பெற்றான். கண்ணுவமுனிவர், "இப் பையன் இந்தியா முழுவதும் பாரதம் என்று பெயர்பெறச் சிறப்புடன் அரசாள்வான். நாடும் சிறப்படையும்" என்று வாழ்த்தினர். மூவரும் வான்வூர்தியில் ஏறித் தம்நாடு சேர்ந்தனர்.

**11. குற்றாலக் குறவஞ்சியில் வரும் நாடு, மலை என்பவற்றின் சிறப்புக்களைத் தருக.**

நாட்டின் சிறப்பு: கூட்டமாகப் பெண் எருமைகள் பாலைச் சொரிந்துகொண்டு நீரில் இறங்க, சொரிந்த பாலை உண்ட

வாளை மீன்கள் சந்தோஷத்தினால் துள்ளிக் குதித்து, குறுகிய தும் நறுமணம் உள்ளதுமான பழங்களையுடைய பலாமரத்தில் தாவிப்பாய, பலாமரத்தின் கொழுத்த பழம் வாழைமரத்தில் விழ, வாழை சரிந்து தாழை மரத்தைத் தாக்க, வருவிருந்தை உபசரிக்கும் இல்லற மகளிர்போலத் தாழைமரம் வாழைக் குருத்தில் சோறிடும் சிறப்புடையதும், பிறைச்சந்திரனை அணிந்த சிவனுக்குரியதும் ஆகிய நாடு அந்நாடாகும்.

உழவர்கள், தமது பெண்களது சொல்லின் இனிமையை வென்றனவென்று துண்டு துண்டுகளாக வெட்டி மண்ணினுள் மூடிய கரும்பு வளர்ந்து பெண்களின் தோளை வென்று, பின்னும் முத்துக்களை ஈன்று அவர்களின் பற்களையும் வென்று அத்தோடமையாது, கணவரைப் பிரியுங்காலத்து அவர்களை வருத்த மன்மதனுக்கு வில்லாக அமையும் வளம்பொருந்தியதும், இறைவன் இருப்பிடமானதும் அந் நாடு.

பூமியில் முன்தோன்றியதும், எல்லாத் தேவரிடத்தும் அன்புள்ளதும், உலகம் முழுவதும் புகழ் பரப்பியதும், சிவனுக்கும் சிவனடியார்க்குந் துரோகம் செய்யாததும், முக்கணுடை சிவன் அறுபத்துநாலு திருவிளையாடல்கள் செய்ததும் நான்மறையைத் தந்ததும், உமைபாகனாகிய சிவனுக்குரியதும் அந்நாடு ஆகும்.

அநேக வேள்விகள் புரிந்ததும் அநேக ஆண்டுகள் நிலை பெற்றிருப்பதும், பிரமன் தோற்றியதும், திருமகளும் கலைமகளும் போற்றுவதும், அகத்திய மாமுனிவர் தங்கியதும், திருமால் சிவனாகப் பெற்றதும், உமைபாகர் திரிகூடநாதர் எழுந்தருளியிருப்பதும் அந்நாடு ஆகும்.

மாதமும்மாரியும், வருடம் மூன்று போகமும் அமைந்துளதும், வேதப்பலா நிறைந்ததும், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றுஞ் சிறந்ததும், ஞானம் நிலை பெற்றதும், நல்லறங்கள் செய்வதும், மூவுலகமும் போற்றுவதும், ஒலி, அருவம், உருவம், அருவுருவம் ஆகிய வடிவமுடைய திரிகூடநாதர் வீற்றிருப்பதும் அந்நாடு ஆகும்.

ஓடுகின்ற நீர்ப்பெருக்குடையதும், ஒடுங்கிய உள்ளமுள்ள யோகியர் வாழ்வதும், வாடிய இடையையுடைய மாதர் வசிப்பதும், முத்துக்களைப் பிரசவிக்க வருந்துகின்ற சங்குகளை

உடையதும், வித்துக்கள் வீசும் வயல்களை உடையதும், சப்திக்கின்ற கிண்கிணிகளை உடையதும், நல்ல புகழைத் தேடும் மக்களை உடையதும் திருக்குற்றுலர் வசிக்கும் அந்நாடு ஆகும்,

மலைச் சிறப்பு: இனிய பழங்களைப் பிடுங்கிக் கொடுத்துப் பெண் குரங்குகளோடு ஆண் குரங்குகள் விளையாடுவதும். பெண் குரங்குகள் சிந்துகின்ற பழங்களுக்குக் கிழக்குரங்குகள் மன்றுடுவதும், குறவர்கள் தமது பார்வையால் தேவர்களை அழைப்பதும், சித்தர்கள் காயசித்தி விளைப்பதும், அருவி போலத் தேன் பாய்வதும், அத் தேலினுல் சூரியனதும், குதிரைகளினதும் கால்கள் வழுக்குவதும், மூன்றும் பிறைச் சந்திரனை அணிந்த சடாபாரத்தையுடைய சிவன் வீற்றிருப்பதும் குற்றுலத்திலுள்ள திரிகூட மலையாகும்.

முத்துக்களை அருவிகள் எறிந்து, பரந்து சிறு பெண்கள் கட்டிய மணல் வீடுகளை அழிப்பதும், குறவர் கிழங்கு அகழ்ந்து தேன் எடுத்து மலைவளம் பாடி மகிழ்வதும், யானைத் தந்தத்தால் தினையரிசியை இடிப்பதும், குரங்குகள் மாங்கனிகளைப் பந்தாக அடிப்பதும், சண்பகமலர் மணத்தைத் தேவருலகில் வீசுவதும், வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும், பலவின்கீழ் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானது இருப்பிடமாகவுள்ளதும் திரிகூட மலையேயாகும்.

அசைகின்ற மூங்கில்களிற் றேன்றிய முத்துக்கள் ஒளி விசுவதும், சந்திரனைத் தாம் உண்ணுங் கவளம் என்று யானைகள் வழிமறிப்பதும், அகில், சந்தனம், குங்குமம் என்பவற்றின் நறுமணம் வீசுவதும், மலையாடுகள் துள்ளி விளையாடுவதும், காகம் பறவாத மலைகளில் முகில்கள் படிவதும், பலாவின்கிழ் எழுந்தருளியிருக்கும் கடவுள் வசிப்பதும் திரிகூட மலையேயாகும்.

கயிலாயமலைக்குத் தெற்கே யுள்ளதும், பொன்மயமான மேருமலை போன்றதும், சயிலமலைக்கு வடக்கேயுள்ளதும், சகல மலைவளங்கள் நிரம்பியதும் வயிரம் மாணிக்கம் என்பன விளைவதும், சூரிய கிரணங்கள் மலைக்குகைகளுள் நுழைவதும் மேகங்கள் முழவு கொட்ட மயிலினங்கள் ஆடுவதும் திரிகூட மலையே.

12. "கண்ணன் என் சேவகன்" என்ற பகுதியில் பாரதியார் சொல்வன யாவை? இதன் மூலம் அவர் எப்போதனையை எமக்கு ஊட்டுகின்றார்?

'கண்ணன் என் சேவகன்' என்ற பகுதியில் பாரதியார் இக்காலச் சேவகரின் தன்மையையும், வேலையாளாகவந்த கண்ணன் தனது வேலைத்திறன்பற்றிக் கூறியதையும், அவன் தோற்றத்தையும், கண்ணன் தன் நிலைமை சொல்லியதையும், தாம் அவனிற் கண்ட நற்குணங்களையும், அவனால் தமக்குக் கிடைத்த நன்மைகளையும் இலகுவான சொற்களாற் பாடலாகப் பாடியுள்ளார்.

i. இக்காலச் சேவகரின் தன்மைகள்: இக்காலச் சேவகர் அதிகம் கூலி கேட்பார். எவற்றைக் கொடுத்தாலும் அவற்றை எல்லாம் உடனே மறப்பார்கள். அதிக வேலைகள் இருந்தால் தங்கள் வீட்டிலே தங்கிவிடுவார்கள். வராமைக்குக் காரணம் கேட்டால், பானையிலே தேள் இருந்து கொட்டியது என்றும், மனைவிமேல் பூதம் வந்தது என்றும், பாட்டி இறந்த பன்னிரண்டாம்நாள் என்றுஞ் சமாதானம் சொல்வார்கள். எப்போதும் பொய் பேசுவார்கள். ஒன்று சொல்ல வேறு செய்வார்கள். உறவினரோடு தனியிடத்திற் சென்று 'குசு, குசு' என்று பேசுவார்கள். வீட்டில் நடப்பவற்றை எல்லோருக்கும் பறையறைவார்கள். வீட்டில் இல்லாதவற்றை வெளியிலே சொல்வார்கள்

ii. சேவகனாய் வந்த கண்ணன் கூறியவை: சேவகனாய் வந்த கண்ணன் பாரதியைப் பார்த்து "நான் மாடுகன்று மேய்த்திடுவேன், பிள்ளைகளை நன்றாகப் பேணுவேன், வீடெல்லாம் சுத்தம் செய்து ஒளிபெறச் செய்வேன். துணிமணிகள் துவைப்பேன். சிறுகுழந்தைகளை அழாதபடி பார்த்திடுவேன். எங்கும், எப்பொழுதும் எசமானுக்குப் பாதுகாப்பாகவிருப்பேன். கல்வியறிவு இல்லாவிடினும் சிலம்பம், மற்போர், குத்துப்போர் என்பன அறிவேன். வஞ்சகக்குணம் நெஞ்சகத்துச் சிறிதேனும் இல்லை." என்று கூறினான்.

iii. சேவகனது தோற்றமும் குணமும்: அவனது உடல் கட்டுக்கோப்போடு கூடிய வலிமை உடையது. அவனுடைய கண்கள் நற்குணத்தைப் பிரதிபலிப்பன. அன்பும் பண்பும் பொருந்த அழகாகப் பேசுவான்.

iv. சேவகன் தன்னிலைமை கூறல்: "ஐயா! நான் ஒரு தனியாள். கட்டிய மனைவியோ பிள்ளைகளோ எனக்கு இல்லை

நரை திரை தோன்றுவிடினும் வயது அதிகம். என்னைப் பாது காத்தாற் போதும். எனக்குப் பணத்திலும் அன்பே பெரிது'' என்று கண்ணன் பாரதியைப் பார்த்துக் கூறினன்.

v. சேவகன் வேலைகள் : கண்ணன், கண்ணை இமைகாப்பது போல் என் குடும்பத்தைப் பாதுகாக்கின்றான். முணுமுணுத்தல் கிடையாது. வீட்டினைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தமாக்குகின்றான். ஏவலாட்டிகள் குற்றம் செய்யாமற் காக்கின்றான். பிள்ளைக ளுக்குச் செவிலியாயும், வைத்தியனுயு மிருக்கின்றான். வீட் டுக்குத் தேவையானவற்றை முன்கூட்டியே வாங்கி வைக்கின் றான். உணவுக்குத் தேவையான மோர், பால் என்பவற்றைத் தானே வாங்குகிறான். பெண்கள் எல்லோரையும் தாயாகப் பாவிக்கின்றான். வேலையாளாகவன்றி நண்பனுகவும், மந்திரி யாகவும், நல்லாசிரியனுகவும் விளங்குகின்றான். அவன் பார் வையிற் சேவகன். ஆனால் பண்பிலே தெய்வம்.

vi கண்ணனால் அடைந்த நன்மைகள் : கண்ணன் சேவகனாய் வந்தபின் எனக்கு வீட்டு எண்ணமே இல்லை. எல்லாவற் றையும் அவனே கவனிப்பான். செல்வம், இளமை, சீர், சிறப்பு, புகழ், கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம், சிவஞா னம் எல்லாம் தாமாக என்னிடம் வருகின்றன. அவனால் நான் அடையும் நலங்கள் அளப்பில.

எல்லாவுயிர்களிடத்தும் கண்ணுள்ளவன் ஆனமையாற் போலும் கண்ணன் என்னும் பெயர் பெற்றான். கடவுளை அன்பினால் அடிமையாக்கினால் நாம் இன்பம் நிறைந்த நல் வாழ்வு பெறலாம் எனப் பாரதியார் இதன் மூலம் போதனை செய்கின்றார்.

13. பின்வருவனவற்றின்

அ. சந்தர்ப்பங்களைக் கூறுக.

ஆ. கருத்தை இலகுவான நடையில் எழுதுக.

இ. ஒவ்வொரு பிரிவின் கீழும் உள்ள வினவுக்குச் சுருக்கமான விடை தருக.

i. ''எம்பெருமானே! அடியேனுக்குத் தந்தையும் தாயு மில்லை. விவாகத்தில் விருப்பமுற்றிருக்கின்றேன். அதற்குப் பொருள் சிறிதுமில்லை. அடியேன் வேதசிவாகமங்களெல் லாம் ஓதினேனாயினும், இல்வாழ்க்கையின்றி உமது

பூசைக்கு அருகனுவேனே? ஆகேன். நீர் சர்வஞ்ஞர்; பாண்டியனுடைய மனக்கருத்தையறிந்து ஒரு செய்யுள் செய்து தந்தருளும்"

**தருமி சோமசுந்தரக் கடவுளிடம் ஏன் இவ்வாறு விண்ணப்பஞ் செய்தான்?**

அ. இது நல்லைநகர் ஆறுமுகநாவலர் எழுதிய திருவிளையாடற் புராணமென்னும் நூலில் உள்ள தருமிக்குப் பொற்கிழி அளித்த கதையில் உள்ளது. தனது மனைவியின் கூந்தல் வாசனை இயற்கையா செயற்கையா என ஐயங்கொண்ட வம்சசூடாமணி என்னும் பாண்டியன் தனது ஐயத்தை நீக்கச் செய்யுள் செய்பவர் பெற சங்கமண்டபத்தில் ஆயிரம் பொன்னடங்கிய பொற்கிழி ஒன்றைத் தூக்குவித்தான். இல்லறத்தில் ஈடுபடவிரும்பிய தருமி என்னும் ஆதிசைவன் சோமசுந்தரப்பெருமான் சந்நிதியை அடைந்து, அவரை வணங்கி, இவ்வாறு கூறினன்:

ஆ. "எமது கடவுளே! நான் தாய் தந்தை அற்றவன்; விவாகம் செய்யும் ஆசை உடையேன். அதற்குத் தேவையான பொருள் என்னிடம் இல்லை. நான் வேதம், சிவாகமம் என்னும் இரண்டையும் கற்றுள்ளேன். ஆனல் மணம் முடித்தால் அன்றி உமது பூசைக்குப் பாத்திரன் ஆகமாட்டேன். நீர் முற்றும் உணர்ந்தவர். ஆகலின், பாண்டியன் உள்ளக் கருத்தை ஒரு பாடலில் அமைத்துத் தந்தால் என் ஆசையும் நிறைவேறும்."

இ. எல்லாம் அறிந்த இறைவன், பாண்டியன் மனக்கருத்தையும் அறிவர் ஆதலின், அவரிடம் பாடல் பெற்ருல் பொற்கிழிமூலம் தன்னெண்ணமும் இனிது நிறைவேறும் என்று கருதித் தருமி இவ்வாறு விண்ணப்பஞ் செய்தான்.

ii. "நக்கீரர் இல்லாத சங்கம் அரசன் இல்லாத குடியும், நாயகமணியில்லாத கண்டிகையும், ஞானமில்லாதவர் கல்வியும் போன்றது. ஐயையோ! சொற்பொருள் வடிவாகிய சிவபிரானேடு வாதுசெய்த இப்பிழையோ பெரிது, இது தீர்வதெப்படி? உய்வதரிது அரிது."

இதிலுள்ள உவமைகளை விளக்குக.

அ. இஃது ஆறுமுக நாவலர் எழுதிய திருவிளையாடற் புராணம் என்னும் நூலின்கண் உள்ள கீரனைக் கரையேற்றிய கதையில் வருவதாகும். சிவபெருமான் தருமிக்கு எழுதிக் கொடுத்த பாடலில் குற்றங்கூறி, சிவபெருமானோடு வாதிட்டு, அவரின் நெற்றிக்கண் அக்கினியினால் துயர் அடைந்த நக்கீரர் நிலையை நினைந்து மற்றைய புலவர்கள் வருந்திய தன்மையை இப் பந்தி கூறுகின்றது.

ஆ. நக்கீரர் இல்லாத சங்கம் அரசன் இல்லாது அவலமுறும் குடிகள் போலவும் சிறந்ததாகிய நாயகமணியில்லாத உருத்திராக்க மாலை போலவும், மெய்யறிவில்லாதவர் கல்வி போலவும் இருக்கின்றது. ஐயையோ! சொல்லும் பொருளும் போல ஒன்ருகவும்,, வேருகவும் உள்ள கடவுளோடு சொற்போர் செய்த குற்றமோ மிகவும் பெரியது. இக்குற்றத்தினின்றும் நீங்கி நற்கதி அடைவது அரிதினும் அரிது.''

இ. அரசனில்லாக் குடிகள், நாயகமணி இல்லாத உருத்திராக்க மாலை, மெய்யறிவில்லாதவர் கல்வி என்ற மூன்று உவமைகள் மூலமும் நக்கீரர் இல்லாத சங்கத்தின் சிறப்பின்மை விளக்கப்பட்டது. இவற்றில் வருகின்ற உவமான உவமேயங்கள் பின்வருமாறு:

| | உவமேயம் | உவமானம் |
|---|---|---|
| i. | நக்கீரர் | அரசன், நாயகமணி, ஞானம் |
| ii. | மற்றையபுலவர்கள் | குடிகள், உருத்திராக்கம், கல்வி. |

iii. "சிவகாமி! நீதானே கேட்கிருய் கலைகளினுல் என்ன பிரயோசனம் என்று? மகளே! நான் கேட்கிறதற்கு விடை சொல். வசந்த காலத்தில் மரங்களும் செடிகளும் பூத்துக்குலுங்குவதனல் என்ன பிரயோசனம்? பௌர்ணமி இரவில் பூரணசந்திரன் பால்நிலவைப் பொழிகிறதே. அதனுல் என்ன உபயோகம்? மயில்கள் ஆடுவதினுலும் குயில்கள் பாடுவதினுலும் யாது பயன்? கலைகளின் பயனும் அவைபோன்றதுதான். கலைகளைப் பயில்வதிலேயே ஆனந்தம் இருக்கிறது. இந்த ஆனந்தத்தை நீ அனுபவித்ததில்லையா? இன்றைக்கு ஏன் இப்படிப் பேசுகின்ருய் அம்மா!"

**கலைகளின் பயன் யாது ?**

அ. இது கல்கியவர்கள் எழுதிய சிவகாமி சரிதம் என்ற நவீனத்தில் "ஆயனச் சிற்பி" என்ற பகுதியில் வருவது. காஞ்சிமா நகரத்திற் பிறந்து கலைபயின்று, இளவயசிலே மகாசிற்பி எனப் போற்றப்பட்ட ஆயனர், தமது கலைக்கு மற்றையோராற் குந்தகம்வரும் என நினைத்து, மகள் சிவகாமியுடன் கானக மத்தி ஒன்றில் வீடமைத்து வாழ்ந்தார். பல சிற்பிகள் அவரிடம் கலைபயின்றனர். அரசர்கள்கூட அவர் இல்லம் சென்று அவர் செதுக்கிய சிற்பங்களைக் கண்டு அளவிலா ஆனந்தம் அடைந்தார்கள். மகளின் நடனத் தோற்றங்களையும் பல சிற்பங்களாக அமைத்திருந்தார். ஒருநாள் நடனக் கலையைப்பற்றி ஆயனர்க்கும் சிவகாமிக்கும் இடையில் நீண்டதோர் உரையாடல் நிகழ்ந்தது. பரதநாட்டியக் கலையினால் எதுவித பயனும் இல்லை எனக் கூறினாள் சிவகாமி. அதுகாலை ஆயனர் சிவகாமியைப் பார்த்து இவ்வாறு கூறினார்:

ஆ. "சிவகாமி! நீதானா இப்படிக் கேட்கின்றாய்? மகளே! நான் கேட்பதற்கு விடைசொல். இலைதளிர் காலத்தில் மரங்களும், செடிகளும் அழகாகப் பூக்கின்றன. பௌர்ணமி இரவில் நிறைநிலா பால் நிலவைப் பொழிகின்றது. மயில்கள் அழகாக ஆடுகின்றன. குயில்கள் இனிமையாகப் பாடுகின்றன. இவற்றினால் என்ன பிரயோசனம்? கலைகளினால் வரும் பிரயோசனமும் இவைபோன்றது தான். கலைகளைக் கற்பதும் ஓர் ஆனந்தமே! இந்த இன்பத்தை நீ அடையவில்லையா? இப்படியான கேள்வியை ஏன் அம்மா நீ இன்று கேட்கின்றாய்?"

இ. மரஞ்செடிகள் வண்ணமலர்கள் தாங்கியும், நறுமணத்தை நல்கியும், சந்திரன் பால்நிலவைச் சொரிந்தும் உயிரினங்களை மகிழ்விக்கின்றன. அதனால் மதிப்பையும் பெறுகின்றன. மயில்களும் குயில்களும் மற்றைய உயிர்களுக்கு மகிழ்ச்சியை யூட்டி, தாமும் மகிழ்ந்து, மதிப்பைப் பெறுகின்றன. இவைபோலவே கலைகளும் மற்றவர்களுக்கு மகிழ்ச்சி நல்கியும், தம்மைப் பயில்வோருக்குப் பெருமையையும், ஆனந்தத்தையும் நல்கின்றன.

iv. "முத்து, நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. உனக்கு வேட்டி துணி நான் வாங்கித் தருகிறேன். உன் அப்பர் இருந்த செல்வஞ் செல்வாக்கென்ன! பெருமையென்ன!

உனக்குத்தெரியாது. அவருடைய பிள்ளையாகிய உனக்கா இந்த நிலைமை வந்ததென்று நினைக்க என் மனம் பயப் படுகின்றது ; உன்னப்பர் எனக்கும் எவ்வளவோ உதவி அந்தக்காலத்திற் செய்தவர். ஆகையால் அவருடைய பிள்ளையாகிய உனக்கு நான் பதிலுதவி செய்யாவிட்டால் நான் நன்றிகெட்டவனுவேன். நீ ஒன்றுக்குங் கவலைப் படாதே! இன்று தொடக்கம் உன்னை என் பிள்ளையாக வைத்து நடத்துவேன்."

பதில் உதவி என்றால் என்ன ?

அ. திரு. ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை எழுதிய "ஓம், நான் சொல்கிறேன்" என்ற கதையில் வருகின்றது இது. சண்முகச் சட்டம்பியார் பாடசாலைக்கு வராத பிள்ளைகளைக் காரணங்கேட்டுத் தண்டித்தார். தனக்கும் தண்டனை கிடைக்கும் எனப் பயந்த வல்லிபுரத்துக்கும், தையலம்மைக்கும் புத்திரனைப் பிறந்த முத்தன் தனது வறுமைநிலையைச் சண்முகச் சட்டம்பியாருக்குக் கூறினன். சண்முகச் சட்டம்பியார் முத்தனை நோக்கிக் கூறியவை இவை.

ஆ. "முத்து ! நீ ஒன்றுக்கும் வருந்தாதே. உனக்கு வேண்டிய வற்றை நான் வாங்கித்தருகின்றேன். உன் தகப்பனது செல் வாக்கும் பெருமையும் உனக்குத் தெரியாது. அவருடைய பிள்ளையாகிய உனக்கு இந்த நிலை வந்ததையிட்டு நான் மிகவும் மனம் வருந்துகின்றேன். உனது தகப்பனுர் முன் பெல்லாம் எனக்கு எவ்வளவோ உதவி செய்தவர். ஆதலால் அவருடைய பிள்ளையாகிய உனக்கு நான் பதிலுதவி செய்யாவிட்டால் நான் செய்ந்நன்றி கொன் றவன் ஆவேன். நீ ஒன்றிற்கும் வருத்தப்படாதே! இன்று தொடக்கம் உன்னை என்பிள்ளையாக நடத்துவேன்."

இ. ஒருவன் செய்த உதவிக்குப் பதிலாகச் செய்யும் உதவி பதிலுதவி என்று சொல்லப்படும். இது பிரதியுபகாரம், கைம்மாறு என்றுஞ் சொல்லப்படும்.

v. "ஐயா ! நீங்களே எனக்குத் தாய் தந்தையும் குல தெய்வமும் ஆவீர்கள். உங்கள் புண்ணியத்தாற்றன் நான் இப்போது நல்லாயிருக்கிறேன் ; நீங்கள் அந்த நேரத்தில் எனக்குத் தந்துதவிய ஆறுரூபாவும் எனக்கு

அறுநூறு ரூபாவுக்குச்சரி; ஆனதால் இப்போது அறு நூறு ரூபா கொண்டுவந்திருக்கின்றேன். நீங்கள் அரைச் சதமேனும் வாங்கமாட்டீர்கள் என்பதை நான் அறி வேன்; ஆனாலும் உங்கள் பள்ளிக்கூடத் தருமத்திற்கு நான் தரும் அற்ப பணத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று உங்களைப் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்."

இது கூறியவனைப்பற்றி யாது எண்ணுகின்றீர் ?

அ. இது இந்துசாதனப் பொன்விழா மலரில் திரு. ம. வே திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய "ஓம், நான் சொல்லு கிறேன்" என்ற கதையில் வருவதாகும். சீருஞ் சிறப்பு மாக விருந்த வல்லிபுரம் என்பவர் வியாபாரத்தில் நொடிந்து தனது மனைவி தையலம்மையையும், மகன் முத்தனையும் வறுமையில் வாடவிட்டுக் காலமானார். தையலம்மை வறுமையில் வாடினாலும், கணவன் கட்டளைப் படி செம்மையாக வாழ்ந்து மகன் முத்தனையும் காப் பாற்றினார். முத்தன் தாய்படும் வேதனையால் மன முடைந்து ஈற்றில் வேலாயுதபிள்ளை என்பவரிடம் ஆறு ரூபா பெற்று, தாயையும் அழைத்துத் திரிகோணமலை சென்று ஒரு கடையில் வேலைக்கமர்ந்து அக்கடை முத லாளியின் மகளையும் மணமுடித்து முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை எனப் பேரும் பெற்று இன்பமாக வாழ்ந்தார். வேலாயுதபிள்ளை செய்த நன்றியை மறவாது, ஒருநாள் அறுநூறுரூபாவுடன் சென்று வணங்கி, அவரைப் பார்த்துக் கூறியவை இவை:

ஆ. "ஐயா, நீங்கள் தாய், தந்தை, குலதெய்வம் என்னும் மூன்றுமாவீர்கள். உங்கள் நற்செயலால் நான் இன்று பெருமையோடு இருக்கின்றேன். நீங்கள் நான் கஷ்டப் பட்டநேரத்தில் தந்த ஆறு ரூபாவும் எனக்கு அறுநூறுரூபா வுக்குச் சமன். நான் இப்போது அறுநூறுரூபா கொண்டு வந்திருக்கின்றேன். இதை நீங்கள் மேற்கொண்டு இருக் கும் பள்ளிக்கூடத் தருமத்திற்கு ஏற்றுக்கொள்ளுமாறு பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்."

இ. இது கூறியவர், "காலத்தினாற் செய்த நன்றியை ஞாலத்திலும் மாணப் பெரிதாக" மதிக்கும் பண்புள் ளவர் என நினைக்கின்றேன்.

vi. "நீர் எனது தம்பியாயிருப்பின், உம்மை இந்தியாவுக்கு உடனே ஓட்டிவிடுவேன். எழுத்து வாசனை அறியாத மூடத்தாய் முன்கூறிய உறுதி மொழிக்கு ஏதாயினும் மதிப்புண்டா? அஃது இந்நாட்டு நிலைதெரியாக் காலத்தில் வழங்கப்பட்டது. அது சூள் ஆகவே ஆகாது. சட்டப்படி அது சூள் அன்று. அவ்வுறுதி மொழியைக் கட்டியழுவது மூடநம்பிக்கையாகும். இப்பிடிவாதம் உமக்கு நலன் செய்யாது. முன்னே புலால் உண்டதாகவும், அஃது உமக்குச் சுவைத்ததாகவுஞ் சொல்கின்றீர். அநாவசியமான இடத்தில் அதை உண்டீர்; அவசியமான இடத்தில் அதை மறுக்கின்றீர்."

சூள் என்பதற்கு இதைக் கூறியவர் சொல்லும் வரைவிலக்கணம் யாது?

அ. இது திரு. வி. கலியாணசுந்தரனார் எழுதிய "காந்தியடிகளும் மனித வாழ்க்கையும்" என்ற நூலில் உள்ளது. இங்கிலாந்து சென்ற காந்தியடிகள் அங்கே டாக்டர் மேத்தாவுடன் தங்கியிருந்தார். அவர், காந்தியடிகள் மீது கொண்ட பேரன்பினால் காந்தியடிகளைப் புலால் உண்ணுமாறு வற்புறுத்துவார். காந்தியடிகள் தாயாருக்கு அளித்த வாக்குறுதியை எடுத்துக் கூறிப் புலால் உண்ணாது இருந்து உணவு விடயத்தில் பல கஷ்டம் அநுபவித்தார். அப்போது ஒருநாள் டாக்டர், காந்தி அடிகளைப் பார்த்து இவ்வாறு கூறினார்:

ஆ. "நீர் எனது சொற்படி நடக்கவேண்டியவராய் இருந்தால் உம்மை உடனே இந்தியாவுக்குக் கலைத்திருப்பேன். படிப்பு இல்லாத – உலகநிலை தெரியாத தாய்க்குக் கூறிய உறுதி மொழிக்கு மதிப்பு அளிக்கவேண்டியதில்லை. அவ்வுறுதி மொழியும் இங்கிலாந்துநிலை தெரியாக் காலத்து அளிக்கப்பட்ட ஒன்றாகும். அது சட்டப்படி உறுதிமொழி அன்று. அதை உறுதிமொழி என்று கட்டி அழுவது மூடநம்பிக்கையாகும். நீர் முன்பே புலால் உண்டுள்ளீர். தேவையற்ற இடத்தில் அதனை உண்டீர். தேவையான இடத்தில் உண்ணாது பிடிவாதம் செய்கின்றீர்."

இ. ஒன்றின் குணகுற்றம் அறிந்து, சிந்தித்து உணர்ந்து சொல்லும் உறுதி மொழிகளே உண்மைச்சூள் என்று இதைக் கூறியவர் சொல்கின்றார்.

vii. "அவன் பெரிய ஆசாடபூதி; அவ்வளவு பெரியநிலம் வைத்திருக்கிறவனுக்குப் பணம் இல்லாமலா போகும்? ஏதோ சிலருக்குச் சோற்றைப் போட்டுவிட்டு, அன்ன தானம் என்று பேர்வைத்துக்கொண்டு பணத்தை மறை வாகச் சேர்த்து வைத்திருக்கிறன் என்றே எண்ணு கிறேன். தன் வீட்டிலுள்ள நகைகளையும் ஒளித்துவைத் திருப்பான். துரையவர்கள் சிறிதேனும் இரக்கம் காட் டாமல் அந்த மனிதனைத் தக்கபடி தண்டிக்கவேண்டும்; அப்போதுதான் மற்றவர்களும் பயப்படுவார்கள்."

தாசில்தாரைப்பற்றி யாதறிவீர்?

அ. இது டாக்டர், உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுதிய 'நல்லுரைக்கோவை' என்னும் நூலில் உள்ள 'தருமம் தலை காக்கும்' என்ற கதையில் வருகின்றது. தருமத்தையே தன்தொழிலாகக்கொண்ட ஆங்கரைச் சுப்பையர், வறுமை யால் அரசாங்கத்திற்கு வரிகட்டவில்லை. தாசில்தார் எவ் வளவு முயன்றும் வரிவசூலிக்க முடியவில்லை. அவர் நிலத் தையும் ஏலம் போட்டுப் பார்த்தார். அதுவும் பலனளிக்க வில்லை. மாவட்ட அதிகாரிக்கு அறிவித்தார். மாவட்ட அதிகாரி ஆங்கரைக்கு வந்தபோது, மாவட்ட அதிகாரி யைப் பார்த்துத் தாசில்தார் இவ்வாறு கூறினர்:

ஆ. "அவன் பெரிய மோசக்காரன். பெரிய நிலபுலம் வைத் திருப்பவனுக்குப் பணம் இல்லாமலா போகும்? ஒரு சில ருக்கு உணவு கொடுத்து, அன்னதானம் செய்பவன் என்று புகழ்பெற்று, பணத்தைச் சேமித்துவைத்திருக் கின்றன். தன் வீட்டில் உள்ள நகைநட்டுகளையும் மறைத்து வைத்திருப்பான். ஐயா அவர்கள், கொஞ்ச மேனும் இரக்கம் காட்டாமல் அவனுக்குத் தண்டனை வழங்க வேண்டும். அப்படிச் செய்தாற்றன் மற்றவர் களும் பயப்படுவார்கள்."

இ. தான் கடமையைச் செவ்வனே செய்பவன் என மேலதி காரிக்குக் காட்டி அவரிடம் நன்மதிப்புப் பெறவேண்டும் என்னும் பேரவா உடையவராகத் தாசில்தார் இருந்தார் என அறியலாம்.

viii. "சோரபுத்திரர்களாகிய பாண்டவரையும், வயது சென்ற கிழவனாகிய வீட்டும சந்நியாசியையும், கஞ்சனுடைய

ஏவலாளனுகிய கண்ணபிரானையும் நீவிர் இன்னுங் கொல்லாதிருத்தல் என்னையோ? இந்தக் கண்ணபிரான் போர்முகத்திலே வந்து என்முகத்துக்கெதிரே ஒரு காலமும் நிற்கமாட்டார். இவரைக் கொல்லுதல் அரிய காரியமன்று. இவரை அக்கிரபூசைக்குத் தக்கவரென்று தெரிந்தெடுத்த வீட்டுமரும், தருமபுத்திரரும் யுத்தமாகிய உரைகல்லிலே இவரையும், என்னையும் வைத்து உரைக்கையாகிய பரீட்சை செய்து பார்க்கக்கடவர். பார்க்கும்போது என்னுடைய பாணங்கள் குடித்துக் கழித்துவிட்ட இவருடைய இரத்தமாகிய எச்சிலைப் பறவைகளும், பூமியும் விரைவிலே பருகுக.''

அக்கிர பூசை என்றால் என்ன?

அ. சுன்னைக் குமாரசுவாமிப் புலவர் எழுதிய சிசுபால சரிதம் என்ற நூலில் வருவது இது. இராசசூயயாகஞ் செய்த தருமர் தானதருமங்களை முடித்து, அக்கிர பூசை செய்யக் கருதிச் சபையில் இருந்தோரை நோக்கி, அதற்குத் தக்கவர் யாரென வினவினர். அதற்கு வீட்டுமர், கண்ணபிரானே தகுதியானவர் என விடை கூறினர். தருமரும் அக்கிர பூசையை அவருக்கே செய்தார். பொறாமைகொண்ட சிசுபாலன் கண்ணபிரானைப் பலவாறு நிந்தித்தான். கோபங்கொண்ட வீட்டுமர் போர்க்கழைத்தார். அப்போது சிசுபாலன் அரசர்களைப் பார்த்துக் கூறியதாகும் இது:

ஆ. "விபசார மக்களாகிய பாண்டவரையும், வயோதிப வீட்டுமரையும், கஞ்சனின் வேலையாளாகிய கண்ணனையும், நீங்கள் கொல்லாது ஏன் இருக்கின்றீர்கள்? இப் போரில் கண்ணன் என் எதிரே நிற்கமாட்டான். இவனைக் கொல்லுதல் மிகவும் எளியது. பாண்டவரும் வீட்டுமரும் இருவர் ஆற்றலையும் பார்க்கட்டும். எனது அம்புகள் குடிக்கும் இவனது மிகுதி இரத்தத்தைப் பறவைகளும், பூமியும் குடிக்கட்டும்.''

இ. இராசசூய யாகத்தில் சகல கருமங்களையும் முடித்து, இறுதியில் சபையில் இருப்பவரில் சிறந்தவரைக் கௌரவிப்பார்கள். அவ்வாறு கௌரவிப்பது அக்கிர பூசை எனப்படும். முதல் மரியாதை என்றும் இதைக் கூறலாம்.

ix. "அப்படியே அந்த நாற்காலியில் உட்காரும். நீர் வரிப் பணத்தை மோசம் செய்யமாட்டீர் என்பது எனக்கு நன்ருகத் தெரியும். நானும் உம்முடைய மரக்காலை மோசம் செய்யாமல் இதோ கொடுத்துவிட்டேன் ; எடுத்துக்கொள்ளும். உம்முடைய தருமம் குறைவின்றி நடைபெற இந்த வரிப்பணம் உதவுமாளுல் இந்த அரசாங்கத்திற்கு அதனினுஞ் சிறந்த இலாபம் வேறில்லை. உம்மால் எப்போது கொடுக்கமுடியுமோ அப்போது கொடுக்கலாம். உம்மை எவரும் நிர்ப்பந்தம் செய்யமாட்டார். நான் இந்த மாவட்டத்தில் இருக்கும்வரையில் உமக்கு ஒருவிதமான துன்பமும் இராது."

மாவட்ட அதிகாரி எத்தகையவர் என நினைக்கின்றீர்?

அ. இது டாக்டர் உ. வே. சாமிநாதையரின் கட்டுரைகள் அடங்கிய 'நல்லுரைக்கோவை' என்னும் நூலில்வரும் "தருமம் தலைகாக்கும்" கதையில் வருவது. அன்னதானத்தைத் தம் வாழ்வின் இலட்சியமாகக் கொண்ட ஆங்கரைச் சுப்பையரைப்பற்றி அதிகாரிகள் மேலதிகாரிகளுக்கு முறையிடு செய்தனர். அவர்கள் முறையீடுகளை நம்பாமல், தானே நேரிற்சென்று உண்மையை அறிந்து அவரைத் தம் அலுவலகத்துக்கு வரவழைத்த மேலதிகாரி, அவருடன் உரையாடி இறுதியில் அவரைநோக்கிக் கூறியவை இவை:

ஆ. "அப்படியே அந்த நாற்காலியில் அமரும். நீர் வரிப் பணத்தைக் கொடாதுவிடமாட்டீர். நானும் உமது நெல் லளக்கும் கருவியை ஏமாற்றமாட்டேன் ; இதோ பெற்றுக் கொள்ளும். நீர் செய்துவரும் தருமம் சிறப்படையின் அரசாங்கத்துக்குப் பெருமை உண்டு. நீர் வசதியான நேரம் வரிப்பணத்தைக் கொடும். அரசாங்க உத்தியோகஸ்தர்கள் உம்மைத் தொந்தரவு செய்யமாட்டார்கள். நான் இங்கு இருக்கும்வரை உமக்கு எதுவிதமான கஷ்டமும் நேராது.

இ. மாவட்ட அதிகாரி, நீதிவழி ஒழுகுகின்றவர் என்றும் தருமத்தில் விருப்புள்ளவர் என்றும், எதையும் ஆராய்ந்து பார்ப்பவர் என்றும் நான் நினைக்கின்றேன்.

ஈ. "சீ! கிழட்டுப்பிணமே! உனக்குக் கல்யாணம் வேண்டி யிருக்கிறதா? எழுந்திருந்து நடக்கக்கூடச் சத்தியில்லையே! நீ கலியாணம் செய்துகொண்டு என்ன செய்யப்போ கின்ருய்! அநியாயமாக ஒரு பெண்ணைக் கெடுக்கத் துணிந்தாயே! எந்தப் பைத்தியக்காரன் உனக்குப் பெண் கொடுக்கத் துணிந்துவந்தவன்? அந்தப் பேராசைக்கார னுக்குப் பணம் பெரிதாகிப் போய்விட்டதுபோலிருக்கிறது. உனக்குக் கொடுப்பதைவிட எங்கேயாவது ஒரு பாழுங் கிணற்றில் அந்தப் பெண்ணைத் தள்ளிவிடலாமே. கல் யாணம் பண்ணிக்கொள்கிறேனென்று சொல்ல உனக்கு வெட்கம் சிறிதும் இல்லையா? உனக்கு இனிமேல் பெண்டாட்டி எதற்கு?"

இதைக் கூறியவர் நோக்கம் என்ன?

அ. டாக்டர் உ. வே. சாமிநாதையர் எழுதிய புதியதும் பழை யதும் என்ற நூலில் உள்ள 'கலியாணப் படித்துறை' என்ற கதையில் வருகின்றது இது. தாரம் இழந்த பூசகராய் வாழ்ந்த—செல்வராயிருந்த—ஐம்பத்தெட்டு வய தடைந்த—சுப்பராயக் குருக்களிடம் இருந்த பணமீது ஆசைகொண்ட ஒருவர் தம் இளம் பெண்ணைச் சுப்பராய ருக்குக் கொடுக்க விரும்பினுர். கல்யாண ஒப்பந்தமும், கல்யாணமும் நடக்கும் நாளில் அவ்வழியே வந்த சுப்பிர மணிய ஐயர், சுப்பராயக்குருக்கள் தமக்குக் கல்யாணம் என்று கூறியதைக் கேட்டு அவரைப்பார்த்துக் கூறியது இது:

ஆ. "சீ! நரைதிரை மூப்படைந்தவனே! எழுந்து நடக்கச் சத்தி இல்லாதவனே! உனக்கு ஏன் கல்யாணம்? ஓர் இளம்பெண்ணின் வாழ்வை அநியாயமாகக் கெடாதே! பணவாசைபிடித்த ஒரு பைத்தியக்காரன் உனக்குப் பெண்தரவந்துள்ளான். உனக்கு அந்தப்பெண்ணைத் தரு வதிலும்பார்க்க அவளைக் கொலை செய்யலாம்! கல்யா ணம் செய்யப்போகின்றேன் என்று சொல்ல உனக்கு வெட்கமில்லையா? பெண் உனக்கு ஏன்?"

இ. சீர்திருத்தவாதியான பெரியாரின் நோக்கம் எதுவிதத் திலும் திருமணத்தைத் தடைசெய்து பெண்ணின் வாழ்வு பாழாவதை நீக்குவதேயாகும்.

xi. "மூன்று குணங்களாலும் மூன்று வடிவங்கொண்டு மூன்று தொழில்களையும் தாமே செய்கின்றார். இராசத குணந் தழுவிப் பிரமாவாய் நின்று படைக்கின்றார். சத்துவ குணந்தழுவி விட்டுணுவாய் நின்று காக்கின்றார். தாமோ குணந்தழுவி உருத்திரராய் நின்று அழிக்கின்றார். படை, கா, அழி என்னும் வினைப்பகுதிகள் விகுதி முதலிய வற்றோடு விரவிப் படைக்கின்றார், காக்கின்றார், அழிக் கின்றார் என்பதுபோலச் செய்வினையாய் வழங்கப்படுத லன்றிப் படுவென்னும் விகுதி நடுவிற்சேர்ந்து படைக்கப் படுகின்றார், காக்கப்படுகின்றார், அழிக்கப்படுகின்றார் என இவர் செயலிலே செயப்பாட்டு வினையாய் வழங் கப்படுவதில்லை. 'துதி' யென்னும் வினைப்பகுதியோ விகுதி முதலியவற்றோடு விரவி இவைபோலச் செய் வினையாய் வழங்கப்படுதலில்லை. அது படுவிகுதியை நடுவிற் பொருந்தித் துதிக்கப்படுகின்றார் எனச் செயப் பாட்டு வினையாயே இவர்செயலில் வழங்கும்."

இப்பந்தியால் உரைக்கப்பட்டது யாது?

அ. இராசசூயயாகம் செய்த தருமர், தானதருமங்கள் முடிந்த பின், சபையில் இருந்த தக்கோரை அக்கிர பூசைக்குத் தக்கவர் யார் என்று வினவினார். அதுகாலை வீட்டுமர், தருமரைநோக்கி, கண்ணபிரானே தகுதியானவர் என்று விடைபகர்ந்து அவரது கடவுட்டன்மையையும் விளக் கினார். இது சுன்னைக் குமாரசுவாமிப்புலவரால் எழுதப் பட்ட சிசுபால சரிதத்தில் கண்ணன் பரத்துவம் என்ற பகுதியில் இருப்பதாகும்.

ஆ. (கண்ணன்) "இராசத குணந் தழுவிப் பிரமாவாய் நின் றும், சத்துவ குணந் தழுவி விட்டுணுவாய் நின்றும், தாமோ குணந் தழுவி உருத்திரராய் நின்றும் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலை யும் செய்கின்றார். இவரது செயலில் செயப்பாட்டு வினையில்லை (படைக்கப்படுகின்றார்போல), துதி என்னும் வினையடியில் இருந்து பிறக்கும் செய்வினை இவரது செயலில் இல்லை."

இ. படைக்கப்படுகின்றார் எனக் கூறினும் (செயப்பாட்டு வினையாய்) துதிக்கின்றார் எனக் கூறினும் (செய்வினை யாய்) கண்ணபிரானது கடவுட்டன்மையின் முதன்மைக்கு இழுக்கு நேரும் என நினைத்து முழுமுதற் கடவுள் கண்ணன் என்பது இப்பந்தியால் உரைக்கப்பட்டது.

xii. "அரசாட்சியாரும் தமது வித்தியாசாலை மாணுக்கருக்கு, அவரவர் சொந்தப் பாஷையையுங் கற்பிக்கும் விருப்புடையவராய்த் தமிழ்ப் பிள்ளைகளுக்கும் அவரது சுய பாஷையாகிய தமிழை ஒரோவழி ஓதுவிக்கின்றனர். நீந்துதற்றொழிலைக் கற்பிப்பான் ஒரு நீராசிரியன், கற்பானை ஏரி, நதி, கிணறு குளங்களில் இறங்கவிடாது குடத்தில் தண்ணீர்மொண்டு சிறுகுழியில் விட்டுக் கால் மறையாத தண்ணீரில் மாரடிக்க விட்டாற்போலக் கடல் நீரெனில் உடல் கசியும், உப்புப் பூக்கும்; குளநீரெனிற் சளிபிடிக்கும், தலை நோவுண்டாம்; யாற்றுநீரெனிற் சர்ப்பந்தீண்டும், முதலை பிடிக்கும் என்று ஓரோர் நூலுக்கு ஓரோர் குற்றஞ்சாற்றி ஒன்றிலும் இறங்கவிடாது ஒரு நூலில் ஒரு குடமும் இன்னொரு நூலிற் பின்னொரு குடமுமாக அள்ளிவைத்துப் படிப்பிக்கும் அவரது முயற்சியாற் பெரும்பயன் விளைவதே இல்லை. அவரிடங் கற்றுத் தமிழ் வல்லோராயினாரை யாண்டுங் கண்டிலோம்."

உவமையை விளக்குக.

அ. சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்ட வீரசோழியப் பதிப்புரையின் ஒருபகுதி தமிழ் மொழியின் தனிச்சிறப்பு என்ற தலைப்பில் எமது பாடப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. இப்பகுதியில் இக் காலக் கல்விமுறையில் உள்ள குறைபாடுகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வோரு நூலிலும் ஒவ்வொரு சிறு பகுதியைக் கற்பிப்பதனால் மாணுக்கர் தமிழ் வல்லராய் வரமுடியாது என்பது இப்பகுதியால் அழகிய உவமை மூலம் விளக்கப்பட்டுள்ளது.

ஆ. "அரசாட்சியார் மாணுக்கருக்குத் தமிழையும் ஒரு பாடமாகக் கற்பிக்கின்றனர். நீந்துதற்றொழிலைப் படிப்பிக்கும் ஓர் ஆசிரியன், மாணுக்கனை நீரில் இறங்கவிடாது, நதி, குளம், ஆறு என்பனவற்றிற் குறைகள் உண்டென்று கூறி, குடத்திலே தண்ணீர்அள்ளி அதை ஒரு குழியில் விட்டு அதில் மாணுக்கனைப் பயிலும்படி செய்வதுபோல அரசாங்கத்தாரும் ஒரு நூலில் ஒரு பகுதியையும், இன்னொரு நூலில் இன்னொரு பகுதியையும் எடுத்துப் படிப்பிக்கின்றனர். குழியில் நீந்தல் பயின்ருன்போல் மாணுக்கரும் தமிழ் வல்லுனர் ஆதல் அரிது."

இ. ஒவ்வொரு நூலுக்கும் ஒவ்வொரு குற்றங்கூறி ஒவ்வொரு நூலிலும் ஒவ்வொரு சிறுபகுதியை மாத்திரம் கற்பித்தலால் வரும்பயனை நீந்தல் பயில்வோனை, குடத்தில் நீர்மொண்டு குழியில் விட்டுப் பயிற்றுதல் என்ற உவமைகொண்டு விளக்கினர். ஒவ்வொரு நூலுக்கும் ஒவ்வொரு குறைகூறலுக்கு, ஆறு, குளம், கடல் என்பவற்றில் அபாயம் உண்டென்று கூறலும், ஒவ்வொரு நூலிலும் ஒவ்வொரு பகுதியை எடுத்துப் படிப்பித்தலுக்கு, குடத்துநீர் அள்ளிக் குழியில் விட்டுப் பயிற்றலுக்கும், படிப்பித்தலில் பயனில்லை என்பதற்கு, குழியில் மாரடிப்பவன் நீந்தல் பயிலாமைக்கும் உவமைகளாக வந்தன.

xiii. "நீ ஒன்றிற்கும் கவலைப்படாதே. இது எனக்கு முடிவுக்கு வந்த நோய். விதியை விலக்கப் பிரமாவாலும் முடியாது. ஆனல் ஒன்று சொல்கிறேன் கேள். நான் இல்லாக்காலம் நீ பெற்ற ஆண்குஞ்சினல் உனக்குப் பிற்காலத்தில் நன்மையுண்டு. அவனுடைய சாதகம் அதிஷ்டமான சாதகம். எங்கள் பிள்ளையையும் உன் மரியாதையையும் நீ பாதுகாத்துக்கொள்."

கூழியவரைப்பற்றி யாதறிவீர்?

அ. சீருஞ் சிறப்புமாகவிருந்த வல்லிபுரம் வாணிபத்தினல ஈடுசெய்யமுடியாத நட்டத்துக்கு ஆளானர். கடன் கொடுத்த செட்டிமார் பணம் கொடுக்கும்படி வல்லிபுரத்தாரை நெருக்கினர்கள். உடனே அவர் தன்னிடம் உள்ள காணிபூமி, பொருள் பண்டம் எல்லாவற்றையும் விற்றுப் போதாமையால் நகைநட்டுக்களையும் விற்றுக் கடனைத் தீர்த்தார். தீராக் கவலையினல் நோய்வாய்ப் பட்டார். அவர் தனக்கு இறக்கும்போது கூறியவற்றைத் தையலம்மை, சண்முகச்சட்டம்பியாரிடம் அநுதாபம் பெற்றுவந்த முத்தனுக்கு இவ்வாறு தந்தை கூறியதாகக் கூறுகின்ருர். இது ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை எழுதிய "ஓம், நான் சொல்லுகிறேன்" என்ற கதையில் உள்ளது.

ஆ. "நீ ஒன்றிற்கும் கவலைப்படாதே. இது என்னைச் சாகடிக்கவந்த நோய். விதியை விலக்கப் படைப்புக் கடவுளாலும் முடியாது. என்ருலும் ஒன்று சொல்லுகிறேன்

கேள். நான் இல்லாக்காலத்தில் நீ பெற்றெடுத்த ஆண் குழந்தையால் பிற்காலத்தில் நன்மை அடைவாய். அவனுடைய சாதகம் நல்ல சிறப்புள்ள சாதகம். எங்கள் பிள்ளையையும், உனது ஒழுக்கத்தையும் காப்பாற்றிக் கொள்."

இ. இது கூறியவர் விதியை நம்புகின்றவர் என்றும், சாதகத்தில் நம்பிக்கை உடையவர் என்றும், ஒழுக்க நெறியை விரும்புகின்றவர் என்றும் அறியலாம்.

xiv. "இஃது என் தாயாரால் அணியப்பட்டது. தாயாரின் அன்புக்கொடையென்று மிகப் புனிதமாக இம்மணியைப் போற்றி வருகின்றேன். அதன் உட்பொருள் எனக்குத் தெரியாது. அதை அணியாவிடின் அதனால் கேடுவிளையும் என்று நான் நம்புகிறேனில்லை. என் அன்னையாரால் அணியப் பெற்ற ஒன்றை வலிந்து அறுத்தெறிய மனம் ஒருப்படவில்லை. அது தானே அறுந்து விழுந்தால் புதியதொன்றை யான் அணியேன்.

இதிலிருந்து நாம் யாதறியலாம்?

அ. இது "மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்" என்ற வி. கலியாணசுந்தர முதலியாரின் நூலிலிருந்து எடுக்கப்பட்ட பகுதியில் உள்ளது. காந்தியடிகள் தென்னாபிரிக்காவில் வாழ்ந்தபோது பல கிறீஸ்தவரோடு நட்புப்பூண்டிருந்தார். அவர்களில் கோட்டஸ் என்பவரும் ஒருவர். இருவரும் சமயங்களைப்பற்றி வாதம் செய்வதுண்டு. ஒரு நாள் காந்தியடிகளைத் துளசிமணி யணிந்திருப்பதன் காரணத்தைக் கேட்டார் கோட்டஸ். அதற்குக் காந்தியடிகள் கூறியவையே இவை:

ஆ. "இத் துளசிமணி என் தாயாரால் கட்டப்பட்டது. தாயார் அன்பினாலே தந்த ஒரு பொருளென்று இம்மணியை நான் போற்றிவருகின்றேன். இதை அணிவதன் காரணத்தையும், அதனால் வரும் நன்மைகளையும் நான் அறியேன். தரிக்காவிடில், கேடுவரும் என்ற நம்பிக்கையும் இல்லை. அது தானாக அறுந்தாலன்றி நான் ஒருபோதும் அறுக்கமாட்டேன். அறுந்தால் புதிதாக ஒன்றை அணியவும் மாட்டேன்."

இ. இதிலிருந்து காந்தியடிகள் தாயார்மீது கொண்டுள்ள அன்பை நாம் அறியலாம்.

XV. "இந்தக் காலத்தில் அன்னமிடாவிட்டால் இவ்வளவு காலமும் செய்தும் பயனில்லை. இப்போதுதான் அவசியம் இந்தத் தருமத்தை நடத்திவரல் வேண்டும். கஷ்டம் என்பது எல்லோருக்கும் இருப்பதுதானே! பல ஏழைகள் பசியோடு வரும்போது நாம் சும்மாவிருப்பதைவிட இறந்து விடலாம். இப்போது கடன்பட்டாவது இந்தத் தருமத்தைச் செய்து வந்தால் நன்றாக விளையுங்காலத்தில் உண்டாகும் இலாபத்தில் ஈடுசெய்து கொள்ளலாம். இப்போது செய்யாமல் நிறுத்திவிட்டால் அந்த நட்டத்துக்கு ஈடுசெய்யவே முடியாது!"

கீறிட்ட பகுதியை விளக்குக.

அ. இது உ. வே. சாமிநாதையர் எழுதிய "தருமம் தலை காக்கும்" என்ற கதையில் வருகின்றது. ஆங்கரைச் சுப்பையர் அரசாங்கத்துக்குச் செலுத்தவேண்டிய வரியைச் செலுத்தாமல் அன்னதானத்தை மட்டும் நடத்தி வந்தார். அதனால் அரசாங்க அதிகாரிகள் மேலதிகாரிகளுக்கு முறையீடு செய்தார்கள். சுப்பையருடைய நிலையை உணர்ந்த – சுப்பையரில் அநுதாபங்கொண்ட — அவ்வூர் மக்களிற் சிலர் சுப்பையரிடம் வந்து, "இந்த அன்னதானத்தைச் சிலகாலம் நிறுத்தினால் நல்லதல்லவா?" என்று கூறினார்கள். அதுகாலை சுப்பையர் அவர்களுக்குக் கூறியது இது:

ஆ. "மக்கள் பட்டினியால் வாடுகின்ற இப்பொழுதுதான் அன்னதானம் கட்டாயம் செய்யவேண்டும். இப்போது செய்யாவிட்டால் இவ்வளவு காலமும் செய்ததன் பலன் கெட்டுவிடும். ஏழைகள் பசித்து வருந்தும்போது நாம் பார்த்துக்கொண்டு இருப்பதிலும் இறந்துவிடுதல் நல்லது. இப்போது கடன்பட்டுத் தருமஞ் செய்தால் விளையுங் காலத்திலே கடனைத் தீர்த்துவிடலாம். இப்போது செய்யா விட்டால் அதனால் வரக்கூடிய நட்டத்தை ஒருகாலமும் திரும்பப் பெறமுடியாது."

இ. இவ்வளவுகாலமும் செய்த தருமம் இப்போது செய்யா விட்டால் பயன் கெட்டுவிடும். கடனைத் திருப்பிக் கொடுக்கலாம். ஆனால் தருமஞ் செய்யவேண்டிய காலம் இது. இப்படியான சந்தர்ப்பம் ஒருகாலத்தும் திரும்பிவரமாட்டாது. "காலத்தினாற் செய்த நன்றி ஞாலத்தில் மாணப்

பெரிது" என்பது வள்ளுவர் வாய்மொழி. ஆங்கரைச் சுப்பையர் தரும சிந்தையை நாம் இதன்மூலம் அறியலாம்.

xvi. "ஆதலால், மகனே; சண்முகச்சட்டம்பியாரிடத்தாயினும் வேறு யாரிடத்தாயினும் ஒன்றும் வாங்கவேண்டாம். இஃது உன் தகப்பனார் கட்டளை. அவர் சொல்லை மீற வொண்ணாது. அல்லாமலும் என்னருமை மகனே! 'பஞ்சம் போம் பஞ்சத்திற் பெற்ற வடுப் போகாது', நான் இன்னும் உன்னை மரியாதையாகத்தான் வளர்க்க எண்ணியிருக்கின்றேன்."

இதைக் கூறியவர் எப்படிப்பட்டவர்?

அ. இது திரு. ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் எழுதிய "உலகம் பலவிதம்" என்ற கதையில் வருவது இது. வல்லிபுரத்தின் மகன் முத்து வறுமை காரணமாகப் பாடசாலைக்கு வரவில்லை என்பதை அறிந்த சண்முகச் சட்டம்பியார், தான் வேண்டியன வாங்கித் தருவதாகக் கூறினார். அதனை முத்து தன் தாயிடம் போய்ச் சொன்னான். அதுகாலை தாய் தமது முன்னைய வாழ்வின் சிறப்பை எடுத்துக் கூறியபின் அவனை நோக்கிக் கூறியது இது:

ஆ. "எவரிடமும் ஒன்றேனும் வாங்காதே; சண்முகச் சட்டம்பியாரிடத்தும்கூட வாங்காதே. இது உன் தந்தையாரது கட்டளை. அதை மீறுதே. அல்லாமலும் பஞ்சம்போய் விடும். பஞ்சத்திலேபட்ட களங்கம் ஒருகாலத்தும் மறையாது. நான் என்றால் இயன்றவரை உன்னைக் கௌரவத்தோடு காப்பாற்ற எண்ணியுள்ளேன்."

இ. இதைக் கூறியவர் மானம் உள்ளவர்; "ஏற்பது இகழ்ச்சி" என்பதைப் போற்றி நடப்பவர்; கணவன் இறுதிக் காலத்துக் கூறியதைப் போற்றி வாழ்பவர்.

2. "கடல் கடந்த தமிழ்" என்ற கட்டுரையில் கூறப்படுவன யாவை?

தொன்மையும், செம்மையும், இனிமையும் நிறைந்த தமிழ் மொழி வணிகர்களால் உலகின் பல்வேறுபாகங்களுக்கும் பரப்பப்பட்டது. வேற்று நாடுகளில் இன்றும் வழங்கும் தமிழ்ச்

சொற்கள் இதை வலியுறுத்துகின்றன. இக் கட்டுரையில் தமிழ் மொழி இலங்கையில் வளர்ந்த வரலாற்றை ஆசிரியர் கூறுகின்றார்.

சங்ககாலம்: சங்ககாலத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் நிலைபெற்றிருந்தனர் என்பதை, சங்க இலக்கியங்களில் வருஞ் செந்தமிழ்ச் சொற்கள் இன்றுஞ் சாதாரண மக்கள் பேச்சு வழக்கில் இருப்பதைக்கொண்டு நாம் அறியலாம். சங்க இலக்கியங்களில் ஈழத்துப் பூதந்தேவனார் இயற்றிய செய்யுள்கள் சில காணப்படுகின்றன. பூதன் என்ற பெயர் இன்றும் யாழ்ப்பாணத்தில் வழங்கி வருவதால் இவர் யாழ்ப்பாணத்திலிருந்து மதுரைக்குச் சென்றிருக்கக்கூடுமென ஊகிக்கக்கூடியதாக விருக்கின்றது.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலம்: ஆரியச் சக்கரவர்த்திகள் இலங்கை முழுவதும் ஆட்சி செய்த கி. பி. 14ஆம் நூற்றுண்டில் தமிழ்மொழி சிறந்த நிலையில் விளங்கியது. இவ்வரசர்கள் தமிழ்ச் சங்கம் ஒன்று நிறுவி, பாண்டி நாட்டினின்றும், சோழ நாட்டினின்றும் ஓலைச் சுவடிகளைத் தேடிப்பெற்று, நூல் நிலையம் ஒன்று அமைத்துத் தமிழ் வளர்த்தார்கள். இவர்களில் பலர் தமிழ் நன்குணர்ந்த சான்றோராக விளங்கினர். இவர்கள் காலத்தில் தெக்கணகைலாச புராணமும், செகராசசேகர மாலை, சரசோதி மாலை என்ற சோதிட நூல்களும், பரராச சேகரம், செகராசசேகரம் என்ற வைத்திய நூல்களும், கைலாய மாலை என்ற வரலாற்று நூலும், இரகுவம்சம் என்ற மொழி பெயர்ப்புச் சரித்திர நூலும் வெளிவந்தன.

போத்துக்கேயர் காலம்: இவர்களது ஆட்சிக்காலத்தில் தமிழ் மொழி வளர்ச்சி தடைப்பட்டது.

ஒல்லாந்தர் காலம்: இவர்கள் இலங்கையை ஆட்சிசெய்த காலத்தில் தோன்றிய சில தமிழ்ப் புலவர்கள் சிறந்த இலக்கியங்கள் செய்தனர். மறைசை அந்தாதி, கல்வளை அந்தாதி, பருளை விநாயகர் பள்ளு, கரவை வேலன் கோவை ஆகிய நூல்களை இயற்றிய சின்னத்தம்பிப் புலவரும், யாழ்ப்பாண வைபவ மாலை எழுதிய மயில்வாகனப் புலவரும், நல்லையந்தாதி, நல்லைக் குறவஞ்சி என்பவற்றை ஆக்கித்தந்த சேனுதிராய முதலியாரும் இவர்களில் குறிப்பிடத்தக்கவராவர். இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்த வரத பண்டிதர், கூழங்கைத்தம்பிரான் என்போர் முறையே சிவராத்திரி புராணம், ஏகாதசிப்

புராணம் முதலிய நூல்களை இயற்றித் தமிழணங்கை அழகு செய்தனர்.

ஆங்கிலேயர் காலம்: இக்காலத்தில் தமிழ் வளர்ச்சி உச்ச நிலையை அடைந்தது. நல்லைநகரில் தோன்றிய ஆறுமுகநாவலர் பல நூல்களைச் சிறந்தமுறையில் அச்சிட்டுதவியதோடு, பல சிறந்த உரைநடை நூல்களை எழுதியும், உணர்ச்சிமிக்க பிரசங்கங்கள் செய்தும் தமிழை வளர்த்தார். இவர் நூல்களை வெளியிட்ட முறையைப் பின்பற்றி சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் தொல்காப்பியம், வீரசோழியம், சூளாமணி, கலித்தொகை முதலிய நூல்களை அச்சுவாகனம் ஏற்றினர். இவர்கள் இருவரும் ஈழநாட்டிலன்றி இந்தியாவிலும் புகழ் ஈட்டினர். இவர்களின்பின் சபாபதி நாவலர், குமாரசுவாமிப்புலவர், நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர், விபுலாநந்தவடிகள், நவநீத கிருஷ்ண பாரதியார், கணேசையர் என்போர் தமிழ் வளர்த்தவர்களில் தலையானவராகச் சொல்லக்கூடியவர்கள்.

இலங்கையில், தமிழ்மொழி பெருந் தொகையினராகிய சிங்கள மக்களிடையேயும் செல்வாக்குப்பெற்ற ஒன்ருக விளங்கியது. விஜயன் சரித்திரத்திலிருந்து, இலங்கைச் சரித்திரத்தின் ஆரம்பகாலத்திலேயே தமிழ்மொழி இலங்கையில் நிலைபெற்றிருந்தது என அறியக்கிடக்கின்றது. தமிழ் மன்னர் இலங்கை மீது கொண்டிருந்த ஆதிக்கம் இடைக்கிடை தமிழ் மொழி இலங்கையின் ஆட்சிமொழியாக வழிகோலியது. இதைச் சிங்கள மொழியில் உள்ள தமிழ்ச் சொற்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. பௌத்த பிக்குகளும், சில சிங்கள அரசரும் தமிழை விரும்பிக் கற்றனர். சிங்களவரசர்களில் சிலர் தமது சாசனங்களைத் தமிழ், சிங்களம் என்ற இரு மொழிகளிலும் எழுதியுள்ளார்கள். இலங்கையை ஆட்சிபுரிந்த ஆரும் பராக்கிரமபாகு காலத்திலும், நாயக்க வம்சத்தினர் ஆட்சிக் காலத்திலும் தமிழ்மொழி அரசாங்க மொழியாயிற்று. கடைசிக் கண்டியரசனது பிரதானிகளிற் சிலர் ஆங்கிலேயருடன் செய்துகொண்ட உடன்படிக்கையில் தமிழிற் கைச்சாத்திட்டனர் என அறிகிருேம்.

### 3. வி. கனகசபைப்பிள்ளையின் தமிழ்த் தொண்டை விபரி.

ஆங்கிலம் கற்ற தமிழறிஞர்கள் பல்வேறு வழிகளில் தமிழ்த் தொண்டு செய்தனர். தமிழரின் பண்டைக்காலத்து நாகரிகச்

சிறப்பைத் தமிழ் நூல்களின் சான்றுகள் கொண்டு தெளிவித்தலை மேற்கொண்டவர்களிற் றலைசிறந்தவர் வி. கனகசபைப்பிள்ளை அவர்கள். இவர் தந்தை சென்னைச் சர்வகலாசாலையில் பி. ஏ. பட்டம் பெற்று இந்திய அரசாங்கத்தில் மொழிபெயர்ப்பாள ராகக் கடமைபுரிந்து, பல ஆங்கில நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்ததோடு தமிழ் ஆங்கில அகராதி ஒன்றும் எழுதினர். தந்தையைப்போல் கனகசபைப்பிள்ளையும், தமிழ் ஆங்கிலம் என்ற இரு மொழிகளிலும் சிறந்து விளங்கினர்.

அரசாங்க சேவை தமிழ்த்தொண்டிற்குக் குந்தகம் விளைக்கும் என நினைத்து, வழக்கறிஞர் வேலையில் ஈடுபட்டு அதையும் வெறுத்துப்பழையபடி தபாற்சேவை இலாகாவுக்குத் திரும்பினர். அச்சில் வராத சங்கவிலக்கிய ஏட்டுப் பிரதிகளைச் சேகரித்தும், சிலாசாசனம் சேகரித்தும், ஆங்கிலத்திற் கட்டுரைகளை எழு தியும் தமிழின் பெருமையைத் தரணியறியச் செய்தார்.

சங்க இலக்கிய ஏடுகள் சேகரித்தல்: அச்சில் வராத சங்க விலக்கிய ஏட்டுச் சுவடிகளை உத்தியோக பூர்வமாகத் தாம் செல்லும் இடங்களில் எல்லாம் சேகரித்து, அவற்றையெல் லாம் பிழையின்றிப் பிரதி செய்ய அப்பாவுப்பிள்ளை என்பவரை இருபது ஆண்டுகாலம் வைத்திருந்தார். ஏட்டுப் பிரதிகளையும் தாம் எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புக்களையும், அவற்றின் பிரதி களையும் நூல்களைப் பதிப்பிக்க விரும்பியவர்க்குத் தாராள மனப்பான்மையோடு வழங்கினர். சங்க இலக்கியங்களுக்குச் சாகாவரம் அளிக்க விரும்பிய சாமிநாதையருக்குப் பத்துப் பாட்டு, புறநானூறு, சிலப்பதிகாரம் என்ற நூல்களின் ஏட்டுப் பிரதிகளைக் கொடுத்தமையே இவரின் தாராள மனப்பான் மையை நமக்கு எடுத்துக்காட்டும்.

சிலாசாசன அறிவு: சிலாசாசனவறிவு, தமிழ் உணர்ச்சிக்கும், சுதேசவுணர்ச்சிக்குந் தேவையென வுணர்ந்து, சிலாசாசனங் களைக் கற்றுர். சுற்றுப்பிரயாணகாலங்களில் பல கோயில்களைப் பார்வையிட்டு ஆங்காங்குள்ள சிலாசாசனங்களைக் குறித்தும் தொகுத்தும் வந்தார். கல்வெட்டுக்களை அப்பாவுப்பிள்ளை உதவி கொண்டு பிழையின்றிப் பிரதிசெய்வித்து வேண்டுவார்க்கு வழங்கியும் வந்தார். இவ்வறிவு இவர் சிறந்தவாராய்ச்சிக் கட்டுரைகள் எழுதப் பெரிதும் உதவியது.

ஆங்கிலக் கட்டுரைகள்: ஆங்கிலம் நன்கறிந்தவரானமையின் தமது தமிழ் அறிவு, சிலாசாசனப் பயிற்சி, தமிழ் உணர்ச்சி என்பவற்றின் உதவிகொண்டு ஆங்கிலத்தில் செய்யுள்களும், கட்டுரைகளும் எழுதினர். இக்கட்டுரைகளில் தமிழ் நாட்டு வரலாறு, சமயநிலை, நாகரிகம், தமிழரசரின் சரித்திரம், தமிழ்ப் புலவர் சரித்திரம் என்பவற்றைச் சிறந்தமுறையில் யாவரும் மெச்சக்கூடியவகையில் எழுதினர். இக்கட்டுரைகளைப் படித்தோர் கனகசபைப்பிள்ளையின் அறிவாற்றலையும், கல்விப் பெருமையையும், ஆராய்ச்சித் திறத்தையும், எழுத்துவன்மையையும் புகழ்ந்து பாராட்டினர். இக்கட்டுரைகள் "1800 ஆண்டுகளுக்கு முந்திய தமிழர்" என்ற பெயரில் 1904ஆம் ஆண்டு நூல்வடிவாக வந்துள்ளன. ஆராய்ச்சி செய்வோர்க்கு ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளன இந்நூலிலுள்ள கட்டுரைகள். இவர் சோழ சரித்திர நூல் ஒன்று எழுத விரும்பி, குறிப்புக்கள் சேகரித்து ஆரம்பிக்குமுன் இவ்வுலக வாழ்வை நீத்தார். மதுரைத் தமிழ்ச்சங்க ஆண்டுவிழாவொன்றில் ஆற்றிய தலைமையுரையும், 'செந்தமிழ்'ப் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளும் இவரது தமிழ்ப்புலமையையும், தமிழ்ப்பற்றையும் நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோற் காட்டும் என்பார் கற்றுணர்ந்தோர்.

4. "ஓம், நான் சொல்லுகிறேன்" என்ற கதையைச் சுருக்கி எழுதுக.

யாழ்ப்பாணத்தில் ஓர் ஊரில் வாழ்ந்துவந்த வல்லிபுரத்திற்கும், தையலம்மைக்கும் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அவர்கள் அக்குழந்தைக்கு முத்து என்று பெயரிட்டனர். வாணிபத்தால் சிருஞ் சிறப்பும் பெற்றிருந்த வல்லிபுரம், முத்து சிறு குழந்தையாக விருக்கும்போதே வறுமையடைந்து இவ்வுலக வாழ்வை நீத்தார். தையலம்மை, கணவன் இறக்கும்போது சொன்ன சொற்களை நினைந்து, 'ஏற்பது இகழ்ச்சி' என்பதை உணர்ந்து, வறுமையிலும் செம்மையாய்த் தன்னையும், மகனையும் பாதுகாத்து வந்தாள்.

முத்து இளம் வயதிலே நற்குணங்களின் உறைவிடமாய் வாழ்ந்தான். எல்லோரும் அவனை முத்தன் என அழைத்தார்கள். தனது ஊரில் உள்ள சண்முகச் சட்டம்பியாரிடம் சென்று கல்வி பயின்று வந்தான். உடுத்த துணிக்கு அடுத்த துணியில்லாவிட்டாலும், அதைத் துப்புரவாக்கி, தனது வறுமையைப் பிறருக்குக் காட்டாது ஒழுங்காகப் பாடசாலைக்குச்

சென்று வந்தான். சண்முகச் சட்டம்பியார் பாடசாலைக்குச் செல்லத் தவறிய மாணுக்கரைக் கடுமையாகத் தண்டிப்பார். ஒருநாள் முத்துவுக்குப் பாடசாலைக்குச் செல்லமுடியாத நிலை மழையினுல் ஏற்பட்டது. வழமைபோல் மாணுக்கரைத் தண்டிக்க முற்பட்ட சட்டம்பியார் மற்றவர்களைத் தண்டித்து, முத்துவின் நிலையை உணர்ந்து தண்டியாது விட்டுத் தன்னிடம் வேண்டிய உதவிகளைப் பெறும்படி கூறினுர். முத்து மற்றவரிடம் உதவி பெறுவதைத் தாயாகிய தையலம்மை விரும்பவில்லை. முத்துவுக்கும் அதை வற்புறுத்திவந்தாள். முத்துவும் எவரிடமும் எதற்கும் கைநீட்டாது வாழ்ந்து வந்தான்.

முத்து, தாய்படும் வேதனையைக் கண்டு, தனது படிப்பை நிறுத்தி எங்காவது சென்று சம்பாதித்துத் தாயைக் காப்பாற்ற விரும்பினுன். தனது எண்ணத்தைத் தாயாரிடம் கூறி, அவ்வூரில் உள்ள ஒரு பெரியாரிடம் ஆறு ரூபா கடன் பெற்று, தாயையும் அழைத்துக்கொண்டு, திருகோணமலையை அடைந்து அங்குள்ள ஒரு கோயிலில் தங்கினுன். கோயிற் பூசகர் உணவு கொடுத்து அவர்களை ஆதரித்தார். இருவரும் அக்கோயிலில் வாழுங்காலத்தில் தையலம்மை கோயிற் றெண்டுகள் செய்துவந்தாள். முத்து வேலைக்காக வீதிதோறும் அலைந்து திரிந்தான். சிலநாட்களின்பின் ஒருநாள் ஒரு பெரிய முதலாளி முத்துவைக் கண்டு, அவனது நிலையை அறிந்து, அவனுக்குத் தன் கடையில் வேலை கொடுக்க முன்வந்தார். அவனுந் தாயின் அனுமதியுடன் அக்கடையில் வேலைபார்த்தான். தனது மகனின் சொற்ப சம்பளத்தைப் பெற்ற தையலம்மையும், சிக்கன வாழ்வைக் கடைப்பிடித்து, சம்பளத்தின் ஒருபகுதியை மிச்சமும் பிடித்தாள். முத்துவின் பெருமையை உணர்ந்த முதலாளி முத்துவின் பொறுப்பிலேயே கடையை விட்டுவிட்டார். அவர்கள் வசிப்பதற்கு ஒரு வீடும் வாடகைக்குப் பெற்றுக் கொடுத்தார்.

கடைமுதலாளியும், கடையில் உள்ள வேலையாட்களும், அவ்விடத்தில் உள்ளவர்களும் முத்துவின் நடத்தையால் கவரப்பட்டனர். அவனது பெயரும் முத்துவிலிருந்து முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை வரையும் உருமாற்றம் பெற்றது. அவனது வரலாறு முதல் ஒழுக்கம் ஈறுகவுள்ள அத்தனையிலும் தன் மனதைப் பறிகொடுத்த முதலாளி, தன் மனைவியின் சம்மதத்தையும் கேட்டு, அவனது தாய்க்கும் அறிவித்து தனது மகள்

தனலட்சுமியையும் முத்துவுக்கு மணம்முடித்து வைத்தார். இருவரினதும் இன்பவாழ்வைக் கண்ட மூவரும் உவகைக் கடலுள் மூழ்கினர்.

முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, தமது மனைவி தனலட்சுமியுடன் சிலகாலம் தம்மூரிற் சென்று தங்கினர். அவரது உறவினர் உள்ளத்திற் பொருமைத்தீ கொழுந்துவிட்டெரிந்ததாயினும், அவரைக் காணும்போது மரியாதைசெய்யத் தவறுவதில்லை. அவர்கள் மரியாதை செய்யும்போதெல்லாம் இவர் "ஓம், நான் சொல்லுகிறேன்" என்று கூறுவார். இவர் இவ்வாறு சொல்லுவதன் காரணத்தை ஒருவரும் விளங்கிக் கொள்ளவும் இல்லை; விளக்கும்படி கேட்கவும் இல்லை. தானும் தனது தாயாரும் திருகோணமலைக்குச் செல்லப் பொருள் உதவி புரிந்த வேலாயுதபிள்ளை என்ற பெரியாரை இவர் மறக்கவில்லை. ஒருநாள் வேலாயுதபிள்ளையிடம் சென்று, வணங்கி அறுநூறு ரூபா கொடுத்து அதைப் பெறும்படி வற்புறுத்தினர். அவரோ அதைப் பெற மறுத்துவிட்டார். இறுதியில் பாடசாலைத் தருமத்திற்கு உபயோகப்படுத்தும்படி அந்த ரூபா அறுநூறையும் கொடுத்து வேலாயுதபிள்ளையை மன்றாடிக் கேட்டுக்கொண்டார். பலமுறை மறுத்தும் அதை ஈற்றில் அவர் பெற்றுக் கொண்டார். முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை சந்தோஷமடைந்தார். வேலாயுதபிள்ளை இவரின் செய்ந்நன்றி மறவாமையை உள்ளத்துள் வியந்தார். பின்பு அன்போடு அளவளாவிக் கொண்டிருக்கும்போது, முத்துக்குமாரசுவாமிப்பிள்ளையிடம், "ஓம், நான் சொல்லுகிறேன்" என்று அவர் கூறுவதற்கு விளக்கம் கேட்டார். அதற்கு முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை, "ஐயா, இவர்கள் எல்லோரும் எனக்கு மரியாதை செலுத்தவில்லை. என்னிடம் உள்ள பணத்திற்கே மரியாதை செலுத்துகின்றனர். இவர்கள் எனக்கு மரியாதை செலுத்தும்போது, அதைப் பணத்திற்கு நான் சொல்லுகிறேன் என்று சொல்லுவேன்" என்று விளக்கம் கொடுத்தார். உண்மையை உணர்ந்த வேலாயுதபிள்ளை வியப்பில் ஆழ்ந்தார். இதை அறிந்தவர் பலரும் தமது அறியாமையை எண்ணி, வருந்தினர். முத்துக்குமாரசுவாமிப்பிள்ளையும் மனைவி மக்களுடன் இன்பமாக வாழ்ந்தார்.

5. முத்தனின் குணாதிசயங்களை ஆராய்க.

திரு. ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் எழுதிய, "ஓம், நான் சொல்லுகிறேன்" என்ற கதையில்வரும் முத்து என்னும் கதாபாத்திரத்தின் குணாதிசயங்கள் போற்றற்குரியனவாகும். அவனை நற்குணங்களின் திருவுருவெனல் இலகுவானதாகும். அவனது நற்குணங்களைத் தனித்தனி எடுத்துச் சொல்லுதல் அரிதாகும். மனிதப்பிறவி எடுத்தவர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு ஓர் இலக்கியமாக அமைந்தவன் முத்து. தக்கவர் செப்பிய குணங்கள் அத்தனையும் தப்பின்றி வாய்க்கப் பெற்ற ஒப்பிலா ஒரு பிறவி முத்து. அவனிடம் விளங்கிய குணங்களிற் சில பின்வருமாறு:

i. தாய்மீது பற்றுள்ளவன்: கண்கண்ட தெய்வமாகிய தாயைப் போற்றி அவள் சொற்படி நடந்தான். தந்தையை இழந்து வறுமையிற் கிடந்தபோதும் தாய் சொல்லை மீறி நடந்ததில்லை. கண்போன்ற கல்வியைக் கருத்திற்கொள்ளாது, தாயைப் பேணவேண்டும் என்ற பேரவாவினாலே வேலைசெய்து சம்பாதிக்க விரும்பினான். அதற்கு வேண்டிய முயற்சிகள் செய்து, தாயையும் உடன் கூட்டித் திருகோணமலைக்குச் சென்று ஒரு கடையில் வேலை செய்தான். இறுதிவரை தன் தாயை எதுவித கஷ்டமுமின்றி வாழ வழிசெய்த முத்துவின் தாய்ப்பாசத்தைச் சொல்லவும் வேண்டுமா?

ii. உண்மை பேசுபவன்: "உண்மை பேசு" என்ற உறுதி மொழியை உள்ளத்திற் கொண்டு வாழ்ந்தவன் முத்து. சண்முகச் சட்டம்பியார் தண்டிப்பார் என்று உணர்ந்தும், அவரிடம் உண்மையைச் சொல்லி அவரின் அனுதாபத்தைப் பெற்றான். உண்மை வழிநின்று ஒழுகியமையால் எல்லோராலும் விரும்பப் படுபவனாகவும், முதலாளியின் விருப்பத்திற்குரிய ஒருவனாகவும், வாழ்ந்து சிறப்புப் பெற்றான். துன்பங்கள் வரும்போது பொய் பேசுவது பெரும்பாலாரின் இயல்பு. ஆனால், முத்துவோ ஒருபோதும் பொய் பேசியதில்லை. பொய்யாமையே இவனுக்குச் சிறப்பையும், புகழையுங் கொடுத்தது.

iii. செய்ந்நன்றி மறவாதவன்: செய்ந்நன்றி மறவாமை என்னும் பண்பை முத்து போற்றிப் பாதுகாத்தான். தாயாரும், தானும் திரிகோணமலைக்குச் செல்லும்போது வேலாயுதபிள்ளை ஆறு ரூபா கொடுத்ததை முத்து மறக்கவில்லை. காலத்தினாற்

செய்த நன்றியை ஞாலத்தில் மாணப் பெரிதாக மதித்து, ஆறு ரூபாவுக்குப் பதிலாக அறுநூறு ரூபாகொண்டு சென்று அவரிடம் கொடுத்தான். தனக்காக வாயை, வயிற்றைக் கட்டி வாழ்ந்த தாயையும், தனக்கு வேலை கொடுத்த முதலாளியையும் அவன் ஒருபோதும் மறவாதிருந்தான். தாயைக் காப்பாற்ற வேண்டும் என்ற பேரவாவினால் தன் கல்விக்கே முற்றுப்புள்ளிவைத்து, சம்பாதித்துத் தாயைக் காப்பாற்றினான். இவையனைத்தும் முத்துவின் செய்ந்நன்றி மறவாமையைக் காட்டுகின்றனவல்லவா?

iv. கடமை உணர்ச்சி உள்ளவன்: தன்னைப் பெற்று, வறுமையிற் செம்மையாய்ப் பேணிவளர்த்த தாயாருக்குத் தன் கடமை செய்யவேண்டும் என்று நினைத்து, கண்போன்ற கல்விக்கே முற்றுப்புள்ளி வைத்தான். முதலாளியின் கடையில் செவ்வனே கடமையைச் செய்தமையால், கடையில் உள்ள பணியாட்களாலும், ஊரவர்களாலும், முதலாளியாலும் விரும்பப் பட்டான். அவனது கடமை உணர்ச்சியை உணர்ந்தே முதலாளி தன் மகளை அவனுக்கு மணம்முடித்து வைத்தார். கடமையைக் கண்ணுங் கருத்துமாய்ச் செய்தமையாலேயே முத்து வாழ்வில் பேரும் புகழும் பெற்றுச் சீருஞ் சிறப்பும் எய்தினான்.

v. தற்பெருமை இல்லாதவன்: வறுமையால் வாடி, படிப்பை நிறுத்தி, ஐந்து ரூபா சம்பளத்தில் வேலை பார்த்து உயர்நிலை அடைந்தும் தற்பெருமை கொள்ளவில்லை. பணிவுடைமை, இன்சொல், தருமசிந்தை யுடையவனாக வாழ்ந்தான் முத்து. செல்வம்வந்துற்றகாலை மண்ணின்மேல வாழும் மாந்தர், மனநிலை மாறுபட்டு மனம்போன போக்கெல்லாம் நடப்பர். இவனோ இவ்வளவு உயர்நிலையடைந்தும் தற்பெருமை கொள்ளவில்லை. தனது பழைய நிலையை நினைந்து முதலாளி, வேலாயுதபிள்ளை என்பவர்களோடு முன்னையதிலும் பன்மடங்கு மரியாதையாக நடந்தான். பணியுமாம் என்றும் பெருமை என்பதை உணர்ந்து வாழ்ந்தவன் முத்து.

vi. தெய்வ நம்பிக்கை உள்ளவன்: உலகம் உண்டென்ற தெய்வத்திடம் முத்துவுக்கு நம்பிக்கையிருந்தது. தான் ஐந்து ரூபா கேட்டதற்குத் தாயார் வாயை வயிற்றைக் கட்டித் தருவதாகக் கூறிய வார்த்தைகள் முத்துவின் மனதைவிட்டகலவில்லை. தன் வீட்டின் அருகிலுள்ள சிவன் கோயிற் சன்னிதானத்தை

அடைந்து அங்கு வீற்றிருக்கும் இறைவனிடம் முறையிட்டான். தாயாரும், தானுந் திருகோணமலையில் ஆரம்பத்தில் தங்கியிருந்த கோயிலில் எழுந்தருளியிருக்கும் கந்தப் பெருமானிடம் தங்கள் குறைகளை ஒருவரும் அறியாமல் எடுத்துக் கூறினன். இவையனைத்தும் முத்துவிடம் தெய்வ நம்பிக்கையும், கடவுள் பத்தியும் உண்டென்பதை நமக்குக் காட்டுகின்றன.

6. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்னும் முதுமொழிக்கு, காந்தியடிகள் வாழ்வு ஓர் இலக்கியமாக மிளிர்கின்றது.'' இக்கூற்றை ஆராய்க.

கண்கண்ட தெய்வங்களாகிய தாய் தந்தையைப் போற்றி, அவர்தம் சொல்லைப் பொன்னெனநினைந்து வாழ்ந்தவர் காந்தியடிகள். தன்னை ஈன்ற அன்னையைத் தெய்வமாகவும், அவர்தம் சொல் தமக்குத் தவறெனத் தோன்றினும் அதுவழி நிற்றலே சரியென நினைந்து வாழ்ந்தவர் காந்தியடிகள். தாயாருக்குப் பொய் சொல்ல வேண்டுமே என்பதற்காகப் புலால் உண்ணலை வெறுத்த காந்தியடிகள், தாய்க்குக் கொடுத்த வாக்குறுதிகளை மீறவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டகாலங்களிலும் அவற்றை மீருது காப்பாற்றினர். தமக்கு அவமானம் ஏற்பட்டபோதும் அவமானங்களைப் பொருட்படுத்தாது, மது, மாது, மாமிசம் என்பன சம்பந்தமாகத் தாயாருக்குச் செய்து கொடுத்த சத்தியங்களை மனங்கலங்காது வாஞள் பூராவுங் காப்பாற்றினர்.

இங்கிலாந்துக்குச் செல்லும் வழியில் ஆங்கிலேய நண்பரொருவர், புலாலுண்ணுவிடில் வாழமுடியாது என்று வற்புறுத்திக் கூறியகாலத்தும், இங்கிலாந்தில் டாக்டர் மேத்தா அடிக்கடி புலாலின் பெருமையை எடுத்துக்கூறி இவரை வெறுத்துரைத்தபோதும், உணவு உண்ணும் மேசையில் பலர் முன்னிலையில் சாப்பாடு பரிமாறுபவர் 'காட்டுமிராண்டி' எனச் சொல்லி அவமானப்படுத்தியபோதும் அன்னை மொழியை அகத்திற்கொண்டு புலால் உண்ணுது வாழ்ந்தார் காந்தியடிகள்.

முட்டை உயிருள்ள பொருள் எனத் தன் கருத்துக்கு மாருயதைத் தாயார் கூறியதை மதித்தும், துளசிமாலை அணிவதை மூடநம்பிக்கை என இகழ்ந்து நண்பர் அறுக்க முனைந்தபோது தனக்கு நம்பிக்கை இல்லாதிருந்தும் தாயார் சொல்லுக்கு மதிப்புக்கொடுக்க விரும்பி துளசி மாலையை அணிந்தும், முட்டையை உண்ணுதும் வாழ்ந்தார் காந்தியடிகள். நீண்ட

ரைத் திண்டுகின்ற காலத்தும் அன்னைமீது கொண்ட அன்பு காரணமாக அவர் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்தார் இவர்.

1890ஆம் ஆண்டு இங்கிலாந்தில் போர்ட்ஸ் மௌத் என்னும் ஊரில் நடந்த சைவவுணவு மகாநாட்டிற் பங்கு கொண்ட இவர், மகாநாட்டின்பின் நடந்த ஒழுக்கவீனங்களைக் கண்டு வேட்டை நாயால் துரத்தப்பட்ட மான்போல் உடனே அவ்விடத்தை விட்டகன்றார். இவையெல்லாம் இவர் தாயைத் தெய்வமாகவும், தாய் சொல்லை மறைமொழியாகவும் போற்றினார் என்பதை நமக்கு எடுத்து விளக்குகின்றன.

தாயைப் போலவே தந்தையையும் தெய்வமாக வழிபட்டு, அவர் சொல்லையும் மந்திரம் என நினைந்து அதன்படி நடந்தார். தந்தையார் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்து இவர் செய்த சேவைகளும், பணத்தைத் திருடிச் சுருட்டுப் புகைக்குந் தம் தவறை உணர்ந்து, கடிதமூலந் தம் தவறைத் தந்தைக்கு அறிவித்து, (அவர்) தம்மை அகிம்சைமுறையில் திருத்தியமைக்க நினைந்து வாழ்ந்த வாழ்க்கையும் இவர் தந்தைபால் வைத்திருந்த மதிப்பை நமக்குக் காட்டுகின்றன.

இவற்றிலிருந்து " அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் " என்னும் முதுமொழிக்குக் காந்தியடிகள் ஓர் இலக்கியமாகத் திகழ்ந்தார் எனக் கூறுவது மிகையாகாது.

7. தமிழ் மொழியின் தனிச் சிறப்பு யாது?

தமிழ்மொழி, தொன்மையும், தனித்தன்மையும் வாய்ந்த ஒரு மொழி என சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் வீரசோழியப் பதிப்புரையில் கூறியுள்ளார்கள்.

தமிழ்மொழியின் பழைமை: தமிழ்மொழியை இறைவரே தந்தருளினார் என்று கூறப்படுவதாலும், அகத்தியர் காலத்துக்கு முன்பே தமிழ்மொழி பாரத மக்கள் பேச்சு மொழியாக இருந்தது என்று சொல்லப்படுவதாலும் தமிழ்மொழியின் பழைமையை நாம் உணரலாம். அன்றியும், ஆரியர் இமயமலைக்கப்பாலிருந்து வந்து கங்கைக்கரையை அடைந்தகாலத்தில் அங்கு வசித்தவர் தமிழரென்றும், ஆரியரை வெல்ல முடியாமையாலும், அவர்கள் கீழ்ப்பட்டிருக்க விரும்பாமையாலும் தமிழ் பேசிய மக்கள் தெற்கு நோக்கிவந்து குடியேறினர் என்றும் ஆராய்ச்சியாளர்

சிலர் கூறுகின்றனர். இதிலிருந்து இந்தியாவின் ஆதிக்குடிகள் தமிழர் என்றும், ஆதிமொழி தமிழ் என்றும் நாம் சொல்லலாம்.

தமிழ்மொழியின் சிறப்பு : காசியிலிருந்த வடமொழிச் சங்கத்தாரோடு மாறுபட்ட அகத்தியர் தென்னாடு போந்து, பொதிய மலையில் வசித்து, தமிழ் நன்குணர்ந்து, தமிழ் இலக்கணஞ் செய்து, வடமொழியாளரைத் தலைகுனியச் செய்தார் என்றும், தமிழ் என்ற சொல் தனக்கிணையில்லா மொழி, இனிமையுடைய மொழி என்ற பொருள்களை உடையது என்றும், பிறமொழிகளில் இல்லாத புதிய இலக்கணமுடையது தமிழ் மொழி என்றும் அறிஞர்கள் கூறுகின்றார்கள். இக் கூற்றுகளே தமிழின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றன. தமிழின் பெருமையைத் தரைமட்டமாக்க விரும்பிய சிலர் தமிழ் என்ற சொல் வடமொழியிலிருந்து வந்ததாகவும், வேறுசிலர் திராவிடம் என்ற சொல்லே தமிழ் என உருப்பெற்றதாகவும், இன்னுஞ் சிலர் ஐந்தெழுத்தாலாகிய பாடை தமிழ் என்றும் வாளா புலம்புகின்றனர்.

தனித்து நின்று இயங்கி இனிமை பயக்குந் தமிழ்மொழியை வடமொழியினின்றும் பிறந்தது எனக் கூறுதல் எவ்வாற்றானும் பொருந்தாது. தமிழ் என்ற சொல்லின் பொருளை உணர்ந்தோர் ஒருகாலத்தும் அவ்வாறு கூற ஒருப்படார். திராவிடம் என்ற வடமொழிச் சொல்லே மருவித் தமிழ் என வந்ததெனக் கூறுவோர் கூற்று, திராவிடம் என்ற சொல் தோன்றமுன் தோன்றிய தமிழ் மொழியின் பெயர் கூறமாட்டாராகையினாலும், இரண்டாயிரம் ஆண்டிற்கு முன் தோன்றிய கன்னடத்தோடு, பத்தாயிரம் ஆண்டிற்குமுன் தோன்றிய தமிழ்மொழியைச் சேர்க்கின்றமையாலும், பழைய இலக்கண நூலாசிரியர்கள் தனித்தமிழ் நடையில் தோன்றிய நூல்களுக்கும், வடமொழிக் கலப்போடு கூடிய நூல்களுக்கும் வேறுபாடு கூறியிருக்கமாட்டாராகையினாலும் பொருத்தமற்றதாகும். உலகின் பல்வேறு மொழிகளிலும் பல ஒலிகள் ஒரேமாதிரியாக இருப்பதைக்கொண்டு ஒரு மொழியை மற்றைய மொழியிலிருந்து தோன்றியது எனக் கூறல் முடியாது. கூற முடியுமாயின் வடமொழியும் பிறமொழியிலிருந்தே தோன்றியது எனலாம். ஆகவே, தமிழ் மொழி தனித்தியங்கக்கூடிய ஒரு மொழியாகும்.

8. தமிழ்மொழியின் வரலாற்றினை ஆசிரியர் எவ்வெக் காலங்களாகப் பிரித்து விளக்குகின்றார். (சுருக்கமாகத் தருக)

தமிழ்மொழியின் வரலாற்றை, சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் அபோதகாலம், அட்சரகாலம், இலக்கணகாலம், சமுதாயகாலம், அநாதாரகாலம், சமணகாலம், இதிகாசகாலம், ஆதீனகாலம் என எட்டுவகையாகப் பிரித்து விளக்குகின்றார்.

அபோதகாலம்: அகத்தியருக்குமுன், தமிழ்மொழி ஒலிவடிவில் இருந்த காலம் அபோதகாலம் எனப்படும். அவலோகித முனிவர்பால் அகத்தியர் தமிழைக் கற்றார் என்று சமண சமயத்தவர் கூறும் கூற்றிலிருந்தும், சிவபெருமானிடத்தும், முருகப் பெருமானிடத்தும் முறையே தமிழ் மொழியையும் தமிழ் இலக்கணத்தையும் கற்றார் என்று சைவசமயத்தவர் கூறுவதிலிருந்தும் அகத்தியருக்குமுன் தமிழ்மொழி இருந்ததென அறியலாம். சிலர் சுவடி, எழுத்து, நெடுங்கணக்கு முதலிய சொற்களை ஆதாரமாகக்காட்டி வரிவடிவெழுத்து அகத்தியருக்கு முன்பும் இருந்ததெனக் கூறுவர்.

அட்சரகாலம்: தமிழ் எழுத்துகள் அகத்தியரால் தோற்றுவிக்கப்பட்ட காலம் முதல் அகத்தியம் என்ற இலக்கணநூல் நிறைவேறியது வரையும் உள்ள காலம் அட்சரகாலமாம். தமிழின் ஆதி இலக்கிய காலம் அட்சரகாலமேயாகும். உலக வரலாற்று முறைமையும் இதுவே.

இலக்கணகாலம்: அகத்தியரது பன்னிரு மாணுக்கரும் சிற்றகத்தியம், பேரகத்தியம் என்ற இரு இலக்கண நூல்களையும் கற்றுத் தத்தம் பெயரால் தனித்தனி இயற்றிய தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களும், அனைவருஞ் சேர்ந்து செய்த புறப்பொருட் பன்னிரு படலமும் எழுதிய காலம் இலக்கண காலம் எனப்படும்.

சமுதாயகாலம்: சமுதாயகாலம் என்பது தலைச் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற மூன்று சங்கங்களும் ஒன்றன்பின் ஒன்றாய் இருந்து தமிழ் வளர்த்த காலமாகும். இக்காலத்தில் வடமொழிச் சொற்கள் சில தமிழிற் கலந்தன.

i. முதற் சங்கம்: இதில் அகத்தியர் உட்பட 549 புலவர் வீற்றிருந்தனரென்றும், அகத்தியம் இலக்கண நூலாக விளங்

கியதென்றும், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்கள் அரங்கேற்றப்பட்டதென்றும், இஃது ஏறக்குறைய 4500 ஆண்டுகள் நிலைபெற்றிருந்தது என்றும் கூறுவர்.

ii. இடைச் சங்கம்: இதில் இருந்தையூர் கருங்கோழி மோசியார் முதல் 59 புலவர் தமிழ் ஆராய்ந்தனர் என்றும், தொல்காப்பியம், அகத்தியம் இரண்டும் இலக்கண நூல்களாக விளங்கியதென்றும், கலி, குருகு என்னும் நூல்கள் அரங்கேறின என்றும், இது 3500 வருடம் இருந்ததென்றும் கூறுவர்.

iii. கடைச் சங்கம்: இதில் நக்கீரர் முதலிய 49 புலவர்கள் இருந்தனரென்றும், தொல்காப்பியம் இலக்கண நூலாய் விளங்கியதென்றும், நெடுந்தொகை முதலிய நூல்கள் அரங்கேற்றப்பட்டனவென்றும், இது 2000 வருடம் மதுரையில் நிலைபெற்றிருந்ததென்றுங் கூறுவர்.

புத்தர் காலம்: சமுதாய காலத்தின்பின் 200 வருடம் தமிழ் மொழி தமிழரசர்களது ஆதரவு பெற்ற காலம் புத்தர் காலம் எனப்படும்.

சமணர் காலம்: இக்கால்த்தில் நன்னூல், காரிகை, அகப்பொருள் முதலிய நூல்கள் தோன்றினமையால் இக்காலத்தை இலக்கணகாலம் எனவும் அழைப்பர். புத்த வைணவ அறிஞர்கள் சமயச் சார்பான நூல்கள் பலவியற்றினர். இக்காலத்திலேயே சீவகசிந்தாமணி முதலிய பெருங்காப்பியங்களும் இயற்றப்பட்டன. இவர்கள் கையில் 300 வருடம் தமிழ் நின்றது.

இதிகாச காலம்: இக்காலத்தில் நைடதம், பாரதம், இரகுவம்சம் முதலிய இதிகாசங்களும், பற்பல புராணங்களும் தோன்றின. இதனால் இக்காலத்தை இதிகாசகாலமெனவும் அழைப்பர். வடமொழிச் சொற்கள் பல தமிழ்மொழியிற் கலந்தன. கம்பர் முதலிய பல புலவர்கள் தமிழ் நாட்டிற் றோன்றினர். முஸ்லீம்களின் படையெடுப்பால் தமிழ்நூல்கள் பல அழிந்தொழிந்தன. ஏறக்குறைய 800 வருடங்களுடையது இக்காலம்.

ஆதீன காலம்: இற்றைக்கு 700 வருடங்களுக்கு முன்னே தோன்றிய காலமாகும் இது. சந்தானகுரவர் தோன்றிச் சித்தாந்த சாஸ்திரங்களும் இலக்கியங்களும் செய்தனர். நன்னூல்

விருத்தி, இலக்கணக் கொத்து முதலிய இலக்கண நூல்கள் தோன்றின. திருவாவடுதுறை முதலிய பலவாதினங்கள் தோன்றித் தமிழோடு சமயத்தையும் வளர்த்தன.

9. விருந்தோம்பலைப்பற்றி ஒரு கட்டுரை வரைக :

விருந்தோம்பல் : விருந்து என்பது புதுமை என்ற பொருளை உடையது. அஃது இங்கு பண்பாகு பெயராய் வீட்டிற்குப் புதிதாக வந்தவரைக் குறிக்கின்றது. முன்பு பழக்கமுடைய வராய் வீட்டிற்கு வருபவரும், முன்பு பழக்கமில்லாதவராய் வீட்டிற்கு வருபவரும் ஆகிய இருவகை விருந்தினரையும் உணவு முதலியனவுதவிப் பாதுகாத்தலே விருந்தோம்பல் எனப்படும். தாமே சமைத்து உண்டுவாழ முடியாது வீடுகளுக்கு வருப வர்களே விருந்தினர் எனப்படுவர்.

விருந்தோம்பலின் பெருமை : இல்லறத்தான் பேணிப் பாது காக்கவேண்டியவராகிய தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றம், தான் என்பவர்களுள் முதல் இருவரும் கண்ணுக்குத் தெரியாதவராகையினுலும் பின்னைய இருவரும் தொடர்புடைய வராகையினுலும் விருந்தினரைப் பாதுகாத்தலே இல்லறத் தானுக்குச் சிறப்புடைய அறமாகின்றது. துறவிகளும் விருந் தினருள் ஒருவராக அமைவர். ஆகலின் அவரின் அருளும் விருந்தோம்புவார்க்குக் கிடைக்கும். தினந்தோறும் சிறு சிறு பொழுது தோன்றுவதும், பத்தையும் பறந்தோடச் செய்வதும், உயிர்களை வாழ்நாள் முழுவதும் வாட்டி வதைப்பதும், மற்றைய நோய்களுக்குக் காரணமாயிருப்பதும் ஆகிய பசியை நீக்குதல் எல்லா அறங்களிலும் மேலானதாகும். மற்றைய உயிர்களுக்கு உண்டாகும் துன்பங்களைத் தனது துன்பமாக நினைப்பதுவே உண்மை அறிவாம். இல்வாழ்வானுக்குரிய கடமைகளுள் தலைசிறந்தது விருந்தோம்பலாகும். பிறர் பசித்திருக்கத் தான் உண்பவன் விலங்குகளிலும் இழிவான மரங்களுக்கு ஒப்பா வான். விருந்தோம்பாதவனினும் காக்கைகள் மேலானவை. விருந்தோம்புவானது செல்வம் ஊற்றுநீர் போலப் பெருகும். திருமகள் அவன் இல்லத்தில் உவகையுடன் உறைவாள். விருந் தோம்பாதவனது செல்வம் பயனின்றிப் போகும். விருந் தினரை உண்பித்துத் தானும் உண்பவனது விளைநிலத்துக்கு வித்திடவேண்டியதில்லை; அவர்களுடைய சந்ததி உலகில் என் றும் நிலைத்து நிற்கும்.

விருந்தினரை உபசரிக்கும் முறைமை: விருந்தோம்புவார்க்கு இன்முகமும், இன்சொலும், இனிதாற்றலும் இன்றியமையாதன. விருந்தினரைத் தூரத்திற் கண்டபொழுதே மலர்ந்த முகமும், சமீபத்திற் கண்டதும் இன்சொலும், வந்தவிடத்து நன்குற்றலும் விருந்தோம்புவார்க்குத் தேவை. விருந்தினர் அனிச்சம்பூவிலும் மென்மையானவர். இன்சொல்லே எல்லோரையும் மகிழ்விக்கும். பொருள் கொடுத்தலிலும் இன்சொலும் இன்முகமுமாகிய இரண்டுமே மேலானவை. ஒருவர் கூறும் இன்சொல் பொருளால் மட்டுமன்றிச் சத்தத்தாலும் இனிமையாக விருக்கவேண்டும். இன்சொலினுல் ஒருவர் பகைவரின்றி எல்லாச் செல்வமும் பெற்று வாழலாம். இதனுலே பாவம் தேய்ந்து, அறம் பெருகி இன்பங் கூடும். பிறர் கூறும் இன்சொல்லின் இனிமையை அநுபவிப்போன் ஒருகாலும் வன்சொல் வழங்கமாட்டான். இன்சொல் இருக்க வன்சொல் பேசுவது கனி இருக்கக் காய் பறித்தலுக்குச் சமனுகும்.

10. கல்யாணப் படித்துறை தோன்றிய கதையைச் சுருக்கமாக எழுதுக.

சுப்பராயக் குருக்கள் என்னும் ஆதி சைவர் இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்குமுன் திருவாவடுதுறையில் இருந்தார். விவாகமான சிலவருடங்களின்பின் இவர் மனைவி இறந்துவிட்டாள். தனிமையாக வாழ்ந்து, திருவாவடுதுறையில் இருக்கும் ஸ்ரீ கோமுத்திசுவரர் கோயிலில் முன்போலவே பூசைசெய்து வந்தார். அதனுல் அதிக வருமானமும் கிடைத்தது. செல்வம் பெருகிற்று. சீட்டாடுவதே இவரின் பொழுதுபோக்கு. வயதும் ஐம்பத்தெட்டானமையின் உடலில் தளர்ச்சியும், அடிவயிறு, கால் என்பவற்றில் வீக்கமும் இருந்தன. இவருடைய பணத்தையும், இவரைப்பேண ஒருவரும் இல்லாமையையும் கண்ட சில முதிய கிழவிகள் இவரை மறுமணம் புரியும்படி பலமுறை வற்புறுத்தினுர்கள். முதலில் மறுமணத்தைப்பற்றி அலட்சியம் செய்தவர் ஈற்றில் மறுமணத்தில் விருப்பங்கொண்டார். தமது எண்ணத்தைப் பலரிடமுங் கூறினுர். மணப்பேச்சும் மிக மும்முரமாக நடைபெற்றது. இவரது பணம் மீது பற்றுக்கொண்ட பலர் தமது இளம் பெண்களையே இவருக்கு மணம் முடித்துக் கொடுக்க விரும்பினர். ஒருவர் தமது இளம் பெண்ணை மணம் முடித்துத் தருவதாகவும் வாக்குக்கொடுத்துவிட்டார். ஒருநாள் சுப்பராயக் குருக்கள் வீட்டில் மங்கலவாத்தியங்கள் ஒலி தன.

அன்றையதினம் அவ்வழியே கோட்டூர்ச் சுப்பிரமணிய ஐயர் என்னும் பெரியார் சென்றார். சுப்பராயக் குருக்கள் வீட்டில் மங்கல ஒலி கேட்பதைக் கேட்டு, திகைத்து அவருடைய வீட்டுள் நுழைந்தார். குருக்களும் அவரை இன்முகத்தோடு வரவேற்றார். சுப்பிரமணிய ஐயர் மங்கல நிகழ்ச்சி யாதெனக் கேட்கக் குருக்கள் தமது திருமணத்தைப்பற்றிச் சந்தோஷமாகக் கூறினார். அதனைக் கேட்ட பெரியாராகிய சுப்பிரமணிய ஐயர், அடங்காக் கோபங்கொண்டு, குருக்களின் கன்னத்திலும் அறைந்து, வன் சொற்களினாற் குருக்களையும், பெண்கொடுக்க வந்தவரையும், அங்கு இருந்த அனைவரையும் வைது திருமணத்தையே தடை செய்தார். பின் வீதியில் நின்று கைகளை மேலே தூக்கி, மேலாடையை எடுத்து, "அக்கிரமம், அக்கிரமம்" என்று உரத்துக் கூறினார். யாவரும் 'தப்பினோம் பிழைத்தோம்' என்று கூறிக்கொண்டு அவ்விடத்தைவிட்டு ஓடி மறைந்தனர். குருக்கள் மனத்தில் மணத்தைப்பற்றிய கவலை குடிகொண்டது. என்னினும் சில தினங்களின்பின் அவ்வெண்ணத்தை அடியோடு மறந்தார். அன்பர்களின் அறிவுரைப்படி, தம்மிடமுள்ள பணத்தைத் திருவாவடுதுறையில் காவிரியில் நீராடும் இடத்தில் ஒரு படித்துறை கட்டுவதற்கு உதவினார். குருக்களின் மனம் தனது நற்செயலை நினைந்து பூரிப்படைந்தது. படித்துறை வேலைமுடிந்து நான்காண்டுகளில் குருக்களும் காலமானார். இப் படித்துறை, இன்றுங் கலியாணப் படித்துறை என்னும் பெயருடன் குருக்களின் பெயரை நினைவுறுத்திக்கொண்டிருக்கின்றது.

11. "தருமந் தலைகாக்கும்." இக்கதையைச் சுருக்கி எழுதுக.

இற்றைக்கு நூற்றைம்பது வருடங்களுக்குமுன் ஆங்கரை என்னும் ஊரில் தெய்வ பத்தியும், அன்பும், தருமசிந்தையும் உடைய சுப்பையர் என்ற ஒரு பெரியார் இருந்தார். இவர் அதிக நிலம், புலம் படைத்தவர். தமது வயலில் விளையும் நெல்லில் அரசிறை போக, மிகுதியை ஏழைகளுக்கும், விருந்தினர்க்கும் உணவளிப்பதிலேயே செலவிட்டார். இவரது வீடு ஒரேசமயத்திலே பலர் உடன் இருந்து உண்ணக்கூடிய விசாலம் உடையது. ஏழைகளுக்கும் விருந்தினர்க்கும் உணவளித்த பின்பே தாமுண்பர். இவரது வீட்டில் உள்ள அனைவரும் இவர் கைக்கொண்டிருக்கும் தருமத்துக்குப் பூரண ஒத்துழைப்பு நல்கினார்கள். சுப்பையருடைய வீடு அன்ன சத்திரம் போல் என்றுங் காட்சியளிக்கும். இவர் அன்னதானத்தை

அல்லும் பகலும் அன்போடு செய்துவந்தமையால், இவரை யாவரும் அன்னதானச் சுப்பையர் எனவும், அன்னதான ஐயர் எனவும் அழைப்பாராயினர்.

ஒருமுறை வானம் பொய்த்தது. நீர்நிலைகளில் எல்லாம் நீர் வறண்டது. வயல்களில் விளைவு குன்றியது. நாட்டிற் பஞ்சம் ஏற்பட்டது. ஆயினும், சுப்பையர் தமது அன்னதானத்தைக் கைவிடவில்லை. தம்மிடமுள்ள பொருள்பண்டங்களையும், பெண்களின் நகைகளையும் விற்று, அன்னதானத்தை எவ்வித குறைவுமின்றி நடத்தி வந்தார். ஆனால் அரசினர்க்கு வரிப் பணம் மாத்திரம் செலுத்தவில்லை. வரிப்பணத்தை உடனடியாகச் செலுத்துமாறு அரசாங்க உத்தியோகத்தர் வற்புறுத்தினர். அவரோ விளைவு குறைந்தமையைக் காரணங்காட்டி, வரி செலுத்தாதுவிட்டார். இவரின் தருமத்தையும், விளைவு குறைந்தமையையும் அறிந்த உத்தியோகத்தர்கூட மேலதிகாரிகளுக்குப் பயந்து இவர் கூறியவற்றை மேலதிகாரிகளுக்கு அறிவித்தனர். மேலதிகாரி கோபங்கொண்டு, சுப்பையரிடம் வந்து வரிப் பணத்தை உடனே செலுத்துமாறு கட்டளையிட்டார். சுப்பையர் மறுக்கவே காணியை ஏலம் போட்டனர். சுப்பையரின் பெருங் குணத்தை உணர்ந்தமையினுல் மக்கள் ஒருவரும் அதை வாங்க முன்வரவில்லை. கோபங்கொண்ட மேலதிகாரி சுப்பையருக்குக் கடுந்தண்டனை பெற்றுக்கொடுக்க விரும்பி மாவட்டத் தலைவருக்குச் சுப்பையரைப்பற்றி முறையீடுசெய்தார்.

மதிநுட்பம் வாய்ந்தவரும், எதையும் ஆராய்ந்து பார்ப்பவரும், ஆங்கிலேயருமாகிய மாவட்டத் தலைவர், அதிகாரிகளின் கூற்றை நம்பாது தாமே ஆங்கரைக்குச் சென்று, சுப்பையரைப் பற்றி விசாரித்தார். ஒரு சிலரைத் தவிர எல்லோரும், இவரின் பெருந்தன்மைகளைப் புகழ்ந்து கூறினர். மாவட்டத் தலைவர் தாமே இவரை ஆராய்ந்துபார்க்க விரும்பி, ஒரு நாள் ஊர் உறங்கும் நள்ளிரவு, பறையன்போல் வேடம்பூண்டு, சுப்பையரது வீட்டுக்குச் சென்று உணவு கேட்டார். சுப்பையரும் ஒருமரக்காலினுள் உணவு போட்டு அன்புடன் அவருக்குக் கொடுத்தார். கொடுக்கும்போது மரக்காலை, விரும்பிய நேரம் திருப்பிக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். மாவட்டத் தலைவரும் தம்மிருப்பிடந் திரும்பினுர்.

தமது கட்டளைப்படி, தம்மை மறுநாள் காணவந்த சுப்பை யரைத் தாசில்தார் முன்னிலையில், மாவட்டத் தலைவர் வரி செலுத்தாமைக்குரிய காரணத்தை வினவினர். வரி செலுத் தாமைக்குரிய காரணம் விளைவின்மையே என்று பணிவுடன் விடை கூறினர் சுப்பையர். மாவட்டத் தலைவர் சுப்பையரிடம் உணவளிக்குந் தருமம்பற்றி வினவிய வினக்களுக்கெல்லாம் சுப்பையர் அன்புடனும், பணிவுடனும் விடைகளைக் கூறினர். ஈற்றில் பறையனுக்கும் உணவளிப்பதாவென்றும், அண்மை யில் அப்படிப்பட்டவர்க்கு அளித்ததாவென்றும் வினவினர். உண்மை எல்லாவற்றையும் ஒளிவு மறைவு இன்றிக் கூறினர். மேலதிகாரி அவை யாவும் பொய்யென்று கூறினர். மாவட்டத் தலைவர், சாட்சியாக யாரேனும் உளரோவென வினவச் சுப்பையர் "தெய்வமே சாட்சி" என்றார். மாவட்டத் தலைவர் முதனுள் தான்பெற்ற மரக்காலைச் சுப்பையர் முன்னிலையில் வைத்து, பறையனுக வந்தது தானென்றும், அன்னதானத்தைத் தொடர்ந்து செய்யும்படியும், வரிப்பணத்தை வசதியான நேரம் கொடுக்கும்படியும் சொல்லி வழியனுப்பினர். தலைகவிழ்ந் திருந்த உத்தியோகத்தரைக் கண்டித்ததோடு அறிவுரையும் வழங்கினர். சுப்பையரின் தருமம் புகழையும், மேலதிகாரிகளின் பாராட்டையும் அவருக்கு வழங்கியதல்லவா?

**12. தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் இருந்த தொடர்பை விளக்குக.**

ஈழநாட்டிற்கும் தமிழ் நாட்டிற்கும் இடையே பழமை யான தொடர்பு உண்டு. தமிழ் இலக்கியமே இதற்குச் சான்று. பண்பாட்டு முறையிலும், பண்டமாற்றுமுறையிலும், இருநாடு களுக்குமிடையில் தொடர்பிருந்தமையைச் சங்கத்துச் சான்றோர் நூல்களும், பிற்காலப் பெருநூல்களும் நமக்குக் காட்டுகின்றன.

சோழநாட்டுத் தொடர்பு: பட்டினப்பாலை என்ற நூலிலே இலங்கைக்கும், சோழநாட்டிற்கும் இடையே இருந்த தொடர்பு கூறப்படுகின்றது. காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள கடை வீதி யில் இலங்கையில் இருந்து கொண்டுசெல்லப்பட்ட உணவுப் பொருள்கள் இருந்தன என்று பட்டினப்பாலை பகர்கின்றது. இதிலிருந்து சோழ நாட்டு மக்கள் விரும்பிய உணவுப் பொருள்கள் இலங்கையில் இருந்தனவென்றும், இருநாடு களுக்குமிடையே வணிகவுறவு இருந்தது என்றும் நாம் உணரலாம்.

சேரநாட்டுத் தொடர்பு: சேரநாட்டில் வசிக்கும் மக்களில் ஒருபகுதியினர் ஈழவர் என அழைக்கப்படுவர். இவர்கள் ஈழம் என்ற பெயரை உடைய இலங்கையிலிருந்து அங்குச் சென்று குடியேறினவர் என்று சொல்லப்படுவர். செங்குட்டுவன் கண்ணகிக்கு அமைத்த கோயிலின் திறப்பு விழாப்போது இலங்கை வேந்தனான கஜபாகு மன்னனும் கலந்துகொண்டதாகச் சரித்திரம் கூறுகின்றது. கண்ணகி வழிபாட்டை இலங்கையில் உண்டாக்கியவன் கஜபாகு மன்னனே. சேரநாட்டிற்கும் இலங்கைக்கும் இடையே வழிபாட்டுமுறையில் தொடர்பிருந்ததை இது காட்டுகின்றது.

சமயத் தொடர்பு: இலங்கையில் இருக்கும் புண்ணிய தலங்களாகிய திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம் இரண்டையும் சம்பந்தப் பெருமானும், சுந்தரரும் பாடித் துதித்தார்கள். தமிழ்நாட்டில் இருக்கும் முருக அடியார்கள், கதிரமலைக் கந்தனை நினைத்து, காதலாகிக் கண்ணீர் பெருக்குவர். ஈழநாட்டில் உள்ளோர் சிதம்பரத்தைத் தரிசித்துச் சிவனருளையும், ஆறுபடை வீடுகளைத் தரிசித்து அறுமுகப்பெருமான் அருளையும் பெறுவர் இவை இருநாடுகளுக்கும் இடையே உள்ள சமயத் தொடர்பைக் காட்டும்.

இலக்கியத் தொடர்பு: ஈழநாட்டிலே பிறந்து, தமிழ் நாட்டிலே வளர்ந்து, தமிழ்த் தொண்டு புரிந்து பேரும் புகழும் பெற்ற பெரியார் பலராவர். அவர்களில் சி. வை. தாமோதரம் பிள்ளை, ஆறுமுக நாவலர், விபுலாநந்தர் என்போர் குறிப்பிடத் தக்கவராவார். சி. வை. தாமோதரம்பிள்ளை, பழைய இலக்கண இலக்கிய நூல்களைப் பதிப்பித்தும், ஆறுமுகநாவலர் பல நூல்கள் எழுதியும், சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், விபுலாநந்தர் யாழ்நூல் தந்தும் இருநாடுகளுக்கும் இடையே இலக்கியத் தொடர்பை உண்டாக்கினர்.

பண்ணொடு இசைபாட வல்லவர் பாணர் எனப்பட்டனர். இசைக் கருவியினதும், பாணரினதும் பெயரைத் தாங்கி, தமிழ்ப் பண்பாட்டை விளக்கி நிற்பது யாழ்ப்பாணமாகும். இவற்றால் ஈழநாட்டிற்கும், தமிழ் நாட்டிற்கும் இடையே அன்று தொடக்கம் இன்றுவரை இருந்த தொடர்பு அறியப்படுகின்றது.

13. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் இசைத்தமிழ் விழாவில் ஆற்றிய தலைமையுரையின் சாரத்தைத் தருக.

முத்தமிழில் நடுநாயகமாய் நிற்பது இசைத் தமிழ். முத்தமிழை முனிவரும், மன்னரும் முன்னின்று முறையாகப் பேணினார்கள். ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரும், சண்முகம் செட்டியாரும் இசைத்தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டைத் தமிழ் நாடு என்றும் மறவாது. தமிழ்நாட்டில் வசிக்கும் பொருள் உடையார் பொருள் உதவியும், அருள் உடையார் ஆசி நல்கியும் தமிழிசை வளர்த்தமை போற்றற்குரியது.

முத்தமிழையும் முறையாகக் கற்ற அகத்தியர், தமிழ் நாட்டுக்கு இராவணனால் வந்த இடரை இசைத் தமிழாற் காத்தார் என்பதை, தொல்காப்பியவுரையும், மதுரைக்காஞ்சி உரையும் நமக்குக் காட்டுகின்றன. இசைத் தமிழ் கடல் கடந்து சென்று இலங்கையிலும் வெற்றிபெற்றுள்ளது. இசைக் கருவியினதும், இசைக் கலைஞரினதும் பெயரை இன்றும் நிலைக்கச் செய்வது யாழ்ப்பாணமாகும்.

பண்ணொடு இசைபாட வல்ல பாணரை, மன்னரும், குறுநில மன்னரும் வரிசை யறிந்து, பரிசளித்து ஆதரித்தனர். கரிகாற் சோழனும், இளந்திரையனும், நல்லியற்கோடனும் பாணரைப் பேணிக் காத்தமையைப் பத்துப்பாட்டும் பகர்கின்றது. சிலப்பதிகாரம், காவிரிப்பூம்பட்டினத்தில் பாணர்குலம் சிறப்புற்றிருந்ததைச் செப்புகின்றது.

சங்கநூல்களில் உள்ள இசைப் பாடல்கள், இயற்கை நலங்களையும், இறைவன் பெருமையையும் அழகுறவெடுத்து அறைகின்றன. பரிபாடல் என்னும் பழைய இலக்கிய நூலில் வைகை ஆற்றைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் உண்டு. இளங்கோவடிகள் காவிரி ஆற்றை இசைப்பாடல்களாற் புகழ்ந்து வாழ்த்தியுள்ளார். மன்னராலும், புலவராலும் வளர்க்கப்பட்ட தமிழிசையை, சைவசமய நாயன்மார்களும், வைணவ சமய ஆழ்வார்களும் பத்தி நெறியைப் பரப்பப் பயன்படுத்தினார்கள். இறைவன் இசைப்பிரியன் ஆனமையின் அவன் அருள்பெற இசைப்பாடல்கள் ஏற்றதென யாவரும் இசைப்பாடல்கள் பாடித் துதித்தனர். இசைப் பாடல்களைப் பாடுவோருக்கு இறைவன் ஈர் உலக வின்பங்களையும் அளிப்பான் என்று அப்பரும், சம்பந்தரும் இசைப்பாடல்களை அருளினார்கள். இசைப்பாடல்களாற்

பத்தி பெருக்கெடுத்தோடியது. கோயில்களில் நாடோறும் பத்திப் பாடல் பாடும் வழக்கம் ஏற்பட்டது. இடைக்காலத்தில் இசை, கோயில்களின் ஆதரவில் வளர்ந்தது.

இசையிற் கலந்து இன்புறும் தமிழ் மக்கள் தாம் செய்யும் தொழில்களிலும் இசையைப் பயன்படுத்தினர். உழவர் நீர்ப் பாய்ச்சும்போதும், நாற்று நடும்போதும், அருவி வெட்டும்போதும் பாட்டிசைத்தார்கள். குறிஞ்சி நிலத்தில் குறத்திப் பாட்டும், மருத நிலத்தில் பள்ளுப் பாட்டும் முழங்கும். பெண்கள் பந்தாடும்போதும், தாலாட்டும்போதும், நெற்குற்றும்போதும், அம்மானை ஆடும்போதும் இசைப் பாட்டுக்கள் பாடினர். போரிலும் இசை கலந்தது. குலோத்துங்க சோழன் இசையிலே பெரிதும் ஈடுபாடுடையோன். இவன் இசைமீதுகொண்ட பற்றினாலே தன்மனையாளுக்கும் 'ஏழிசை வல்லி' என்ற பெயரைச் சூட்டினான். பாரதியார் மக்களிடையே அரசியலறிவைக் கொளுத்தி, நாட்டுப்பற்றை உண்டாக்க இசையைப் பயன்படுத்தினார். நாம் இசையை வளர்க்கவேண்டின், சிலப்பதிகாரம் காட்டிய வழியில் இயற்கை அழகுகள் இசைப்பாடல்களில் அமைக்கப்படல் வேண்டும். பழமையான பண்களின் வரலாறு ஆராயப்பட்டு புத்தம்புதிய இசைப்பாடல்கள் அமைக்கப்படின் தமிழ் இசை தழைத்து வளரும்.

14. "உயிரிளங்குமரன் கதையில் சைவ சித்தாந்த உண்மைகள் அழகாகக் கூறப்பட்டுள்ளன." இக்கூற்றை விளக்குக,

நீலகண்ட வேந்தனதும், சிவகாமியினதும் மைந்தனாகிய உயிரிளங்குமரன், பற்பல வடிவங்கள் எடுத்து, தன் தாய் தந்தையரால் வளர்க்கப்பட்ட, அமுதச் சிலையாகும் பேரின்ப வல்லியைக் காதலித்து அதனால் வருந்தினான். இதனைக் கண்ட சிவகாமி, மைந்தன் நிலையைக் கணவனுக்கு முறையிட, வேந்தனும் ஒரு மந்திரக் கவசம் வழங்கி, வருத்தம் மாற்றி, அறிவன் என்னும் துணையையும் கூட்டி வேட்டைக்கு அனுப்பினான்.

மாயாபுரியில் ஆட்சி செய்த இருண்மல வேந்தன், பகைவனாகிய நீலகண்டன் ஆட்சியைக் கவிழ்க்க, மந்திரிமாருடன் ஆலோசித்து, காமன் ஆதியோரை, நீலகண்டவேந்தன் மக்களை மயக்கும்படியும், வேட்டையாடச் சென்ற நீலகண்டவேந்தன் மகன் உயிரளங்குமரனைச் சிற்றின்பவல்லியின் உதவியோடு மயக்கிக் காயாபுரிக் கோட்டையினுள் சிறைவைக்கும்

படியும் கட்டளையிட்டான். அவர்களும் அவனைச் சிறைசெய்து காயாபுரிக் கோட்டைக்குள் அடைத்தனர். உயிரிளங்குமரன், பெற்றோர், பேரின்பவல்லி, அறிவன் அனைவரையும் சிற்றின்ப வல்லியினது வஞ்சக வார்த்தைகளால் மறந்தான். ஆனால், காதல் நோயால் வருந்திய பேரின்பவல்லி குறத்தி ஒருத்தி சொன்ன குறியினால் தேறியிருந்தாள்.

வேட்டைமேற் சென்ற உயிரிளங்குமரனைக் காணாது வருந்திய சிவகாமி, வேந்தனிடம் முறையிட, அவனும் அவளைத் தேற்றிச் சுப்பிரமணிய முனிவரை, உயிரிளங்குமரனைக் கண்டுபிடித்துவருமாறு அனுப்பினார். சுப்பிரமணியமுனிவர், மாயாபுரி சென்று காயாபுரிக் கோட்டையினுள் நுழைந்து, சிற்றின்பவல்லியோடு ஊடியிருந்த உயிரிளங்குமரனுக்கு அவனது உண்மைத் தன்மையையும், தாம் யாரென்பதையும் உணர்த்தினார். உயிரிளங்குமரனுக்குப் பேரின்பவல்லியின் நினைவுண்டாயது. அதைச் சுப்பிரமணியமுனிவரிடங் கூற, அவர் காயாபுரிக் கோட்டையின் தன்மையை அறிய ஓர் அற்புதக் கண்ணாடியையும், காயாபுரிக் கோட்டையினின்றும் வெளியேற உதவியாக ஒரு ஞான வாளையும் நல்கினார். காயாபுரிக் கோட்டையை வெறுத்தான்; சிற்றின்பவல்லியை வெறுத்தான். சிற்றின்பவல்லிக்குப் பல தீங்குகள் செய்தான். சிற்றின்பவல்லி விரைந்து சென்று முறையிட, இருண்மலவேந்தன் படைகளுடன் வந்து உயிரிளங்குமரனுடன் போர் தொடுத்துத் தோல்வி கண்டான்; புறமுதுகுகாட்டி ஓட்டம்பிடித்தான். அறிவன் உதவியுடன் பில வழியாகச் சென்று, பலவரண்களைத் தாண்டி, பலதெய்வங்களை வணங்கி, உயிரிளங்குமரன் பெருவெளியை அடைந்து, யாவரினதும் வரவேற்பைப்பெற்றுப் பெருமகிழ்ச்சி அடைந்தான். மைந்தனைக் கண்ட நீலகண்ட வேந்தனும், மனைவி சிவகாமியும் சுப்பிரமணிய முனிவர் சொற்படி, அவனுக்குப் பேரின்பவல்லியைத் திருமணம்முடித்துவைத்தனர். இருவரும் இன்பக்கடலில் மூழ்கினர்.

இக்கதைமூலம் சைவசமயத்தின் முடிந்த முடிபுகள் மிக வழகாகக் கூறப்பட்டுள்ளன. பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களின் இயல்புகள் செப்பமுறச் செப்பப்பட்டுள்ளன. மனிதவுருவிற் றோன்றிய உயிர்கள் மும்மலங்கள் வசப்பட்டு, இறைவனை மறந்து, சிற்றின்பங்களை விரும்பும் நேரத்தில் முருகப் பெருமான் தோன்றி, நல்லறிவு நல்கி, அவற்றிற்கு உண்மை நிலையை விளக்குவார். அப்போது அவை சிற்றின்

பங்களை வெறுத்து, மும்மலங்களையும் அறிவினால் கொன்று, தவத்தினால் அழிவில்லாப் பேரின்பத்தை அடையும். இவ்வுண்மைகள் பாத்திரங்கள்மூலம் உணர்த்தப்பட்டன. பாத்திரங்களும் உணர்த்தப்படும் பொருள்களும் பின்வருமாறு:

| பாத்திரங்கள் | — | பொருள்கள் |
|---|---|---|
| நீலகண்ட வேந்தன் | : | இறைவன். |
| சிவகாமி | : | உமை. |
| பேரின்பவல்லி | : | பேரின்பம். |
| உயிரிளங்குமரன் | : | உயிர்கள். |
| சிற்றின்பவல்லி | : | ஐம்பொறிகளால் அமையும் இன்பம். |
| சுப்பிரமணியமுனிவர் | : | முருகப்பெருமான். |
| அறிவன் | ; | அறிவு. |
| மாயாபுரி | : | மாயை. |
| காயாபுரி | : | உடம்பு. |
| சாளரக்கதவுகள் | : | இடகலை, பிங்கலை. |
| நடுவழி | : | சுழிமுனை. |
| முக்கோணம் முதலிய அரண்கள் | } | மூலாதாரம் முதலியன. |
| உயிரிளங்குமரன் திருமணம் | } | உயிர்முத்திபெறல். |

இக்கதையில் சைவசித்தாந்த உண்மைகள் அழகுறக் கூறப்பட்டுள்ளன என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

15. "சிசுபாலன் வாக்குவன்மை படைத்தவன்." இதை விளக்குக.

இராசசூய யாகத்தில், முதல் மரியாதை கண்ணபிரானை அடைந்தமையைக் கண்ட சிசுபாலன் குந்தி புத்திரரையும், வீட்டுமரையும், கண்ணபிரானையும், அரசர்களையும் நோக்கிக் கூறியவை யாவும் அவனது வாக்குவன்மையைப் பிரதிபலிக்கின்றன.

சிசுபாலன், பாண்டவரைச் சோரபுத்திரர், குந்தி புத்திரர் எனக் கூறி அவர்களின் பிறப்பை இழிவுபடுத்தினான். அன்பு காரணமாக அக்கிரபூசைக்குத் தகுதியானவர் யார் என்று தருமருக்குத் தெரியாதுபோய்விட்டது என்றுங் கடிந்துரைத்

தான். சத்தியம் தவறுவதில்லை என்று தம்பட்டம் அடிக்குந் தருமர் சத்தியம் தவறினுர் என்றுங் கோபங்கொண்டான். கண்ணனுக்கு அவிப்பாகம் கொடுத்தமை, சேரியிற் கிடக்கும் நாய்க்குக் கொடுத்ததுக்குச் சமன் என்றும், தருமரைத் தரும ராசன் என்று அழைத்தல் செவ்வாயை மங்கலவாரம் எனச் சொல்லுவதற்குச் சமன் என்றுஞ் சொல்லுகின்ருன்.

வீட்டுமரை நோக்கி, யார் யார் அக்கிர பூசைக்கு உரியார் என்று அறியாமையாலே அவரது அறிவும், வயதும் வீண் என்றும், அவரது விருப்பம், தாயாகிய கங்கைபோல் இழிந்த இடத்தைச் சேர்ந்தது என்றும், தாய்வழியைத் தொடருதல் மிருகங்களின் தன்மை என்றும் வாதமுறையாக நீதியற்றன கூறுகின்ருன்.

அன்றியும், கண்ணபிரானை நோக்கிப் பலராமராற் சிறப் படைந்தவர் என்றும், காலயவன், சராசந்தனுக்குப் பயந்து ஓடினவர் என்றும், அவரின் வீரத்தைப் பழித்துக் கூறுகின்ருன். அவருக்குப் பெருமையாகக் கூறப்படும் பெயர்கள் இழிவினுல் ஏற்பட்டவை என்று எடுத்துக்காட்டுகின்ருன். சத்தியன் என் பது சத்தியம் பேணியமையால் ஏற்படாமல், சத்தியபாமை யால் வந்தது என்றும், மதுசூதனன் என்பது மதுவென்ப வனைக் கொன்றமையால் ஏற்படாமல் தேனை நக்கி அழித்த லால் உண்டாயதென்றும், சக்கரதரன் என்பது சக்கராயுதத் தைத் தரித்தமையால் வராமல், பகைவருக்குப் பயந்து சேனை யைத் தரித்தமையால் ஏற்பட்டதென்றும், விக்கிரமன் என்பது வீரமுடைமையால் வராமல் விண்ணில் அடி வைத்தமையால் வந்ததென்றும், நிர்க்குணன் என்பது முக்குணங்களைக் கடந் தமையால் சேராமல் முக்குணங்களில் நின்றுழல்வதால் வந்த தென்றும், ஸ்ரீபதி என்பது இராச்சிய இலக்குமி உடைமை யால் வராமல், இலக்குமிக்குப் பதியாக இருக்கின்றமையால் வந்தது என்றும், நரகவிஜயன் என்பது நரகத்தை வென்றமை யால் வராமல் நரகாசுரனைக் கொன்றமையால் வந்ததென்றும் கூறுகின்ருன்.

இவற்றேடு அமையாது அரசர்கள் உள்ளத்திலே, எருது வடிவிலே வந்த அரிட்டனையும், பூதனை என்ற பெண்ணையும், மாமனுகிய கஞ்சனையும், கோழையாகிய சகடாசுரனையும், வைரமற்ற மருதமரத்தையும் அழித்த கண்ணபிரான் வீர

GA 11496



மற்ற ஒருவன் எனப் பதியவைத்து, அவர்களைத் தன்பாற் சேர்க்க விரும்பினன். இவற்றையெல்லாம் நாம் நோக்கும் போது சிசுபாலன் சொன்வன்மை படைத்தவன் என அறியலாம்.

16. சுந்தரகாண்டத்தை வால்மீகியும் கம்பனும் பாடியமுறையில் உள்ள சிறப்பை ஒப்பிட்டு விளக்குக.

கம்பராமாயணத்தில் உள்ள காண்டங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது சுந்தரகாண்டம். மற்றைய காண்டங்கள் எல்லாம் இராமன் கதையோடு தொடர்புடையனவாகப் பெயர் பெற இதுமாத்திரம் சுந்தரகாண்டம் எனப் பெயர் பெற்றுள்ளது. இக்காண்டத்தில் இராமன், சீதை என்போருடைய உள்ள அழகும், அநுமன் (சுந்தரன்) வரலாறும், சிறந்தமுறையில் சுவை நிரம்பியனவாகச் சொல்லப்படுகின்றன. இரு இராமாயணங்களிலும் இக்காண்டம் தனித்தன்மை பொருந்தியதாய் விளங்குகின்றது.

சுந்தரகாண்டத்தின் முதற்படலம் கடல்தாவு படலம் என்பது. வால்மீகி தாம் பாடிய இப்படலத்தில் இயற்கைக்குப் பொருத்தமான முறையில் வருணனைகளை அமைத்து, கடல் ஆழம், அநுமன் வேகம் என்பனவற்றைச் சிறப்பாகக் காட்டாத கம்பரை விஞ்சிவிடுகின்ருர். எனினும் மைந்நாக பர்வதத்தினுக்கும் அநுமனுக்கும் இடையில் நடந்த உரையாடலிலும், இலங்கிணிக்கும் அநுமனுக்கும் இடையில் நடந்த உரையாடலிலும், சீதைக்கும் இராவணனுக்கும் இடையில் நடந்த உரையாடலிலும், அநுமனுக்கும் சீதைக்கும் இடையில் நடந்த உரையாடலிலும் வால்மீகியிலும் கம்பர் சிறந்து விளங்குகிருர்.

ஊர்தேடுபடலத்தில், கம்பர் கதை நிகழ்ச்சிகளை, அழகுற முன்பின் தொடர்புறுத்தி, தமது கற்பனு சத்தியைத் தொழிற்படுத்தி, பாடல்கள் பாடியுள்ளார். இலங்கையைச் சுவர்க்க லோகத்திலும் மேம்பட்ட இடமாகக் கூறியமையும், அநுமன் இலங்கையில் வீடுவீடாகத் தேடினன் என்று வால்மீகியைப் போல் பாடாமல், கும்பகர்ணன், விபீடணன் என்போர் தோற்றம், தன்மை என்பவற்றை எடுத்துக் காட்டிச் செய்யுள்கள் செய்தமையையும் கம்பரது கற்பனுசத்தியையும், கதை நிகழ்ச்சிகளை முன்பின் தொடர்புபடுத்தும் வகையையும் ஊர்தேடு படலத்திற் காணலாம்.

வால்மீகி இராமாயணத்தைப் பின்பற்றிக் கம்பர் இராமாயணம் பாடினுர் எனினும் சுதந்திரமாகவும், கம்பீரமாகவும், பொருத்தமானமுறையில் கதையை மாற்றி அமைத்துள்ளார். இவற்றை நாம் சுந்தரகாண்டத்தில் பலவிடங்களிற் கண்டு கொள்ளலாம். இராவணன் படைகளை அநுமன் கண்டவிடத்தும், மந்தோதரியைச் சீதையென்று ஐயுற்றுப் பின் பாபம் என அநுமன் எண்ணியவிடத்தும், இராவணனைக் கண்டு கோபங் கொண்டு பின் கோபத்தை அடக்கியவிடத்தும், சீதையைத் தேடியவிடத்தும், சீதையின் நிலையை எண்ணியவிடத்தும், சீதையைக் கண்டவிடத்தும், இராவணனையும் சீதையையும் சந்திக்கவைத்து அநுமனைப் பேசவைத்தவிடத்தும், உருக்காட்டு படலத்தை அமைத்தவிடத்தும், சூளாமணியைக் கொடுக்கு முன் சீதை இராமனுக்கு அனுப்புஞ் செய்தியையும், அநுமன் பதிலையுஞ் சொல்லுமிடத்தும், அநுமன் வானரவீரருக்குச் சீதையின் கற்பைக் கூறுமிடத்தும், சீதையைக் கண்டமையை இராமனுக்குச் சொல்லுமிடத்தும் கம்பர் பல மாற்றங்கள் செய்து தமது ஆற்றலைக் காட்டியுள்ளார். ஆனுல், இலங்கையை அநுமன் எரிக்கும் சம்பவத்தில் கடல்தாவு படலத்திற்போல் வால்மீகி கம்பரைத் தோற்கடித்துவிட்டார்.

## 17. ஆயனரின் சிற்பக்கலைத்திறனை விபரிக்குக :

ஆயனர், கலைக்காகவே வாழ்ந்தார் என்று கூறுதல் மிகையாகாது. அவரைச் சிற்பக்கலையின் திருவுருவெனச் செப்புதல் சாலப் பொருந்தும். அவர் திரிகரணமும் ஒன்றுபடக் கலை வளர்த்தார் அவரது செயல்களும், கலை வளர்த்தலிற்கொண்ட ஆர்வமும், அவரது உரைகளும் அவரது சிற்பக் கலைத்திறனை நமக்குக் காட்டுகின்றன. அவருக்கு மன்னர் முதலியோர் கொடுத்த மதிப்பு அவர் கலைக்காகவே வாழ்ந்தார் என்பதையும் கலையில் அவர் பெற்றிருந்த திறமையையும் வலியுறுத்தும்.

காஞ்சிமாநகரத்திலே பிறந்து, வளர்ந்து, கலைபயின்ற ஆயனர், இளம் வயதிலேயே 'மகா சிற்பி' எனப் பட்டமும் பெற்ருர். இவர் பெற்ற பெயரே இவரின் சிற்பக் கலைத்திறனைச் செப்பப் போதுமானது. இவர் புகழ் வளர்மதிபோல் வளரத் தொடங்கியது. சிற்பக்கலைமீது கொண்ட பேரவாவினுல், தமது மகள் சிவகாமியின் நடனத்தைப் பார்த்து, அவற்றை எல்லாம், சிந்தைக்குக் களிப்பை யூட்டுஞ் சிறந்த சிலைவடிவங்களில் சித்திரிக்க விரும்பினுர். சிற்பக்கலையிற் சிந்தையைப் பறி

கொடுத்தமையாலும், பௌத்த பிக்குகளும், சமணத்துறவி களும், இவரின் கலைத்திறனை உணர்ந்து, இவரைத் தத்தஞ் சமயத்திற் சேர்க்க விரும்பினமையாலும் ஆயனர் காஞ்சிமா நக ரத்தினின்றும் நீங்கி, அண்மையில் உள்ள கானகத்தில் வசிக்க விரும்பினார். தமது விருப்பை மகேந்திரவர்மனுக்குத் தெரி வித்தார். மன்னனும் இவர் ஆசையைப் பூர்த்திசெய்ய ஆவன செய்தார். ஆயனரும் அருமை மகளுடனும், ஆருயிர்த் துணை யிழந் தவலமுறுந் தமக்கையுடனும் அங்குச்சென்று வசித்தார்.

கானகத்தில் ஆயனர் வசித்த வீடு ஒரு கலைக் கோயிலாகக் காட்சி அளித்தது. வீட்டுத் தூண்களோ சிறந்த சிற்பவேலைப் பாடுகள் பொருந்தியிருந்தன. சுவர்களிலெல்லாம் நடராச மூர்த்தியினுடைய நாதாந்தநடனம், தாண்டவநடனம், குஞ்சித நடனம், ஊர்த்துவநடனம் ஆதியன ஓவியமாகக் காட்சியளித் தன. இம் மாதிரியே அழகிய பெண்களின் தோற்றங்களும் விளங்கின. பரதசாஸ்திரத்திற் சொல்லியிருக்கும் நூற்றெட்டு அபிநயத் தோற்றங்களில் நாற்பத்தெட்டுத் தோற்றங்களை மகள் நடனமாடும்போது பார்த்துச் சிலைகளாகச் செதுக்கி வைத் திருந்தார்.

மன்னன் மகேந்திரவர்மனும் மகன் மாமல்லரும் ஆயன ரது சிற்ப வேலைகளைக் கண்டு களிக்கவும், மாமல்லைக் கடற் கரையில் அமைந்த பாறைகளில் தம்மால் ஆரம்பிக்கப்பட்ட சிற்ப வேலைகளைப் பற்றி ஆலோசனைகள் கேட்கவும், அவரை அழைத்துச் சென்று நடந்த வேலைகளைக் காட்டவும் ஆயனர் வீட்டுக்கு வந்து போவார்கள். மக்களும் அவர் வீட்டுக்குச் சென்று சிற்பங்களைப் பார்த்து உவகை அடைவார்கள். சிற்பக் கலையில் தம் சிந்தையைப் பறிகொடுத்த சிறுவர் பலர் ஆயன ரைக் குருவாகக் கொண்டனர்.

கலைகளைப் பற்றியும், கலைகளின் பயனைப் பற்றியும் தமது மகளுடன் நிகழ்த்திய உரையாடலில் இவர் கலைத்திறனை நாம் அறியலாம். மகள் கன்னியாய் இல்லத்தில் இருக்க, அவள் எதிர்காலத்தைச் சிந்தியாமல் வாழ்ந்த வாழ்வொன்றே கலைமீது இவர் கொண்டிருந்த பற்றை, திறனைக் காட்டப் போதுமானது.

## 18. தையலம்மையின் குணவியல்பை ஆராய்க:

வல்லிபுரத்தின் மனைவி பெயர் தையலம்மை. "தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர் விலாள் பெண்" என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கிய

மாகத் திகழ்ந்தவர் தையலம்மை. மனைத்தக்க மாண்புகள் பொருந்தி, தற்கொண்டான் வளத்தக்கவளாய் வாழ்ந்தவர் தையலம்மை. தன்கணவன் வியாபாரத்திற் பொருள் யாவற்றையும் இழந்தபோதும், அவற்றைப் பொருட்படுத்தாது கணவனுக்கு ஆறுதல் மொழிகள் அன்புடன் கூறி வறுமையிற் செம்மையாய் வாழ்ந்தவர் தையலம்மை. கணவன் செல்வம் ஒன்றும் வையாது வையக வாழ்வை நீத்த காலத்தும், மனம் மாறுபடாது, அப்பஞ் சுட்டு விற்று, தமது மகனையும் பேணி வளர்த்துப் பெருமை அடைந்தவர் தையலம்மை.

தமது கணவன், சாகுங்காலத்துக் கூறிய, "எங்களுக்குத் தருமதியானவர்கள் ஏதுந் தந்தாலொழிய, எவரிடமுந் தருமத்துக்குப் பொருள் கேளாதே; கை நீட்டி வாங்காதே. 'நல்கினூர் நாவெடார்' என்று ஊரிலே சொல்வார்கள். இயன்றவரை பாடுபட்டு உழைத்து உன்பிள்ளைக்குங் கொடுத்து நீயும் வறுமையிற் செம்மையாய்க் காலங்கழி. அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரங்காசு கொடுத்தாலும் வராது. பசிப்பிணியால் வாடுவோர் காலமும் போகும். பாலுடனே அன்னம் புசிப்பவருடைய காலமும் போகும். ஆனைமுதல் எறும்பீறுகவுள்ள அனைத்துயிர்க்கும் அமுதமளிக்கும் ஆண்டவனுக்கு நீயும் உன் மகனும் அதிகம் என்றெண்ணிக் கவலைகொள்ளாதே. எங்கள் குலதெய்வம் வயிரவப் பெருமானிடம் என் அருமை மனைவியாகிய உன்னையும், மகனையும் ஒப்படைத்துள்ளேன். அவர் உங்களைக் காப்பாற்றுது விடவா போகின்றார். அப் பெருமானை எப்பொழுதும் வழிபாடுசெய். ஒரு குறையும் நேராது. தேறியிரு, ஆறியிரு" என்னும் சிரிய வாசகங்களைச் சிந்தையில் வைத்து, கடுகளவேனும் வழுவாமல் நடந்து செம்மையாய் வாழ்ந்தவர் தையலம்மையார்.

காலஞ்சென்ற கணவன் வார்த்தைகளைக் கடவுள் வாக்குகளாக நினைத்து, "ஏற்பது இகழ்ச்சி" என்பதை உணர்ந்து, மகனை ஒருவரிடமும் கை நீட்ட விடாது காப்பாற்றினார். தானும் கைந் நீட்டாது வாழ்ந்தார். அப்பஞ்சுட்டு விற்றுத் தம் வாழ்க்கையைக் கண்ணியமான முறையில் எண்ணுமற் செய்தார். வறுமையால் வாடிய காலத்தும் விழுப்பந்தரும் ஒழுக்கத்தினின்றுந் தவறவில்லை, கடவுளை நம்பித் தமது குலதெய்வமாகிய வயிரவப் பெருமானை அநுதினமும் வழிபாடு செய்தார். கணவனூர் இறக்குந் தறுவாயில் சொல்லிய உறுதிமொழிகளை

மகனுக்குஞ் சொல்லி, அவனையும் அவற்றின்படி நடப்பித்தார். முயற்சியால் முன்னேறலாம் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாய்க் கூறக்கூடியவர் தையலம்மையார். கணவனுக்குச் சாகுந் தறுவாயில் கூறிய வார்த்தைகளும், சண்முகச் சட்டம்பியாரது வார்த்தைகளை முத்து கூறிய காலத்து எடுத்தியம்பிய மொழிகளும், எவரைத்தான் கவராது. சொல்லுஞ் செயலும் ஒன்றுபட வாழ்ந்த தையலம்மையைத் தாய்க்குலத்தின் தனி விளக்கு என்றே கூறலாம்.

குறிப்பு: 'தமிழ் இலக்கியம்' 4ஆம் பக்கத்தில் 'இ' பகுதியில் 3ஆம் வரியில் சந்திரனை என்றிருப்பதை கங்கையை எனத் திருத்தி வாசிக்குக.

❊

# கம்பராமாயணம்

1. பின்வரும் செய்யுள்களின்

அ. சந்தர்ப்பங்களைக் கூறுக.

ஆ. கருத்தைத் தெளிவான வசனநடையில் எழுதுக.

இ. அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை கூறுக.

i. அணங்குவாள் விடவரா வணுகு மெல்லையும்
குணங்கெடா தொளிவிரி குளிர்வெண் திங்கள்போல்
பிணங்குவான் பேரிடர் பிணிக்க நண்ணவும்
உணங்குவா யல்லைநீ யுறங்குவா யென்றாள்.

இச் செய்யுளில் வந்த அணி யாது? விளக்குக:

அ. நரை, திரை மூப்படைந்த தசரதன் அரச பதவியை இராமனிடம் ஒப்படைத்து ஓய்வுபெற விரும்பினான். தனது தீர்மானத்தைச் சோதிடருக்கு அறிவித்து முடிசூட்டுவிழாவிற்கு ஏற்ற மங்கலநாளை அறிவிக்கும்படி கட்டளையிட்டான். அவர் களும் அறிவித்தனர். வசிட்டன்மூலம் முடிசூட்டு விழாவிற்கு வேண்டிய யாவுஞ் செய்வித்து, நகரையும் அலங்கரிப்பித்தான். இதனை அறிந்த கூனி, இராமன்மீது கொண்ட வஞ்சத்தைத் தீர்க்க இதுவே தருணமெனவுணர்ந்து, கைகேயியே வஞ்சந் தீர்க்க உதவியாவாள் என அறிந்து, அவளிடஞ் சென்று இவ் வாறு கூறினாள். இதிற் கைகேயியின் உயர்ந்த பண்பும், கூனி யின் வாக்கு வல்லமையும் நமக்குப் புலப்படுகின்றன.

ஆ. வருத்துகின்ற கொடிய விடத்தினையுடைய இராகு என்னும் பாம்பு தன்னை விழுங்குவதற்கு வந்துகொண்டிருக் குஞ் சமயத்திலும், தனது தன்மையிற் சிறிதேனுங் குறை படாது, தண்ணிலவைச் சொரியும் வெண்மையான சந்திரனைப் போல, வருத்தத்தைச் செய்கின்ற பெரிய துன்பம் தன்னுள் உன்னை அகப்படுத்த வந்துகொண்டிருக்கவும், அதற்காக வருந்தாது ஆழ்ந்த நித்திரை செய்கின்றாய்.

இ. இச் செய்யுளில் உவமை அணி வந்துளது. நிம்மதி யாய்த் துயின்றுகொண்டு இருந்த கைகேயிக்குத் துன்பம் வருவதைக் கூனி, "அணங்குவாள் விடவரா அணுகு மெல்லையும் குணங்கெடா ஒளிவிரி வெண்திங்களை" உவமை யாக்கி அதன்மூலம் தனது காரியத்தைச் சாதிக்க விரும்பு

கின்றான். பாம்பு தன்னை விழுங்கும்போதும் ஒளியைப் பரப்பிச் சந்திரன் உலகுக்கு உவகை அளிக்கின்றது. அதுபோலக் கைகேயியும் துன்பம் வரவும் இன்பமாக விருக்கின்றாள் என்று இடித்துக்கூறுகின்றாள் கூனி. இதில் வரும் உவமான உவமேயங்கள் பின்வருமாறு :

| உவமேயம் | உவமானம் | பொதுத்தன்மை |
|---|---|---|
| கைகேயி | திங்கள் | துன்பம் வரவும் அதனைத் தடுக்க |
| வான்பேரிடர் | விடவரா | முயலாது இன்பமாகவிருத்தல். |

ii. வெள்ளிய கரியன செய்ய வேறுள
கொள்ளைவான் கொடிநிரைக் குழாங்கள் தோன்றுவ
கள்ளவிழ் கோதையான் செல்வங் காணிய
புள்ளெலாந் திருநகர் புகுந்த போன்றவே.

இச் செய்யுளில் வந்த அணி யாது ?

அ. தசரதன் சொற்படி, சோதிடர்கள் இராமனுக்கு முடிசூட்டுவதற்கு ஏற்ற நன்னாளை ஆராய்ந்து தசரதனுக்கு அறிவித்தனர். தசரதன் குலகுருவாகிய வசிட்டனை அழைத்து, வேண்டிய சடங்குகளை விரைவிற் செய்தும், அறவுரைகளைக் கூறும்படியும் சொன்னான். வசிட்டன் யாவும் செய்து தசரதனுக்கு அறிவித்தான். தசரதன் அயோத்திநகரை அலங்கரிக்கும்படி வள்ளுவமாக்கள் மூலம் அறிவித்தான். மக்கள் இன்பக் கடலுள் மூழ்கி, அயோத்தி நகரைப் பொன்னகர் என்னும்படி அலங்கரித்தனர். இச் செய்யுளிற் பல வண்ணக் கொடிகள் விண்ணிற் பறந்தமை செப்பப்படுகின்றது.

ஆ. வெண்மை, கருமை, செம்மை முதலிய நிறங்களையும், மற்றும் வேறு நிறங்களையுங் கொண்டு விளங்கிய பலவாகிய உயர்ந்த கொடிகளின் கூட்டம், தேனொழுகும் மலர்மாலையை அணிந்த இராமனது முடிசூட்டு விழாவின் சிறப்பினைக் காணும் பொருட்டுச் சிறப்புப் பொருந்திய அயோத்திநகரை வந்தடைந்த பல பறவைகள்போற் றோன்றின.

இ. முடிசூட்டு விழாவிற்கு அயோத்திமா நகரம் பல நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டது. இயல்பாகப் பறக்குங் கொடிகளின் செயலில் கம்பர் தனது குறிப்பை ஏற்றி, பல நிறப் பறவைகள் இராமனின் அரச செல்வத்தைக் காணவந்து பறப்பனவாகக் கூறுகின்றார். ஆதலின் இச் செய்யுளில் தற்குறிப்பேற்ற அணி உண்டு.

iii. நவ்வி வீழ்ந்தென நாடக மயிறுயின் றென்னக்
கவ்வை கூர்தரச் சனகியாங் கடிகமழ் கமலத்
தவ்வை நீங்குமேன் றயோத்திவந் தடைந்தவம் மடந்தை
தவ்வை யாமேனக் கிடந்தனள் கேகயன் றனயை.

*இச் செய்யுளில் வந்த அணிகள் எவை?*

அ. இராமன் முடிசூடுவதை அறிந்த மந்தரை, இராமன் சிறப்பை நினைந்தாள். இராமன் முடிசூடுவதைத் தடுக்க விரும்பினுள். தன் மாளிகையிற் றுயின்றுகொண்டிருந்த கைகேயியை எழுப்பிச் செய்தியை அறிவித்தாள். நற்செய்தி யறிவித்த மந்தரைக்கு முத்துமாலை பரிசளித்தாள். முத்துமாலையை வீசியெறிந்து மந்தரை, இராமன் முடிசூடுவதால் கைகேயிக்கு ஏற்படுந் துன்பங்களை ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினுள். மனம் மாறுபடாத கைகேயி, மந்தரையின் வாக்கு வன்மையால், இறுதியில் மனம்மாறி, இராமன் முடிசூடலைத் தடுக்கும் உபாயத்தை வினவினுள். மந்தரையும் சம்பராசுரனுடன் தசரதன் போர் நிகழ்த்திய காலையிற் கொடுத்த வரங்களை ஞாபகப்படுத்தித் தன் சூழ்ச்சியை நிறைவேற்றினுள். கைகேயி மந்தரையைப் பாராட்டிப் பரிசில்களும் வழங்கினுள். பின் தசரதனின் வருகை நோக்கிய கைகேயி, அணிகள் களைந்து அவனியில் தலைவிரி கோலமாய்க் கிடந்த தன்மையைப் புலவர் இச் செய்யுளிற் கூறுகின்றுர்.

ஆ. பெண்மான் விளையாடுதலை நீக்கி வீழ்ந்து கிடப்பது போலவும், நாடகமாடிய மயில் துயில்கொள்வதுபோலவும், செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் சீதையாகிய திருமகள் துன்பம் மிகும் வண்ணம் அயோத்தி நகரை விட்டகன்று காடு செல்லப்போகின்றுள் என்று கருதி அவ் வெற்றிடத்தை நிரப்ப அயோத்தி நகரை வந்தடைந்த, திருமகளின் தமக்கையாகிய மூதேவிபோலவும் துன்பம் மிகுந்தவளான கைகேயி நிலத்தில் வீழ்ந்து கிடந்தாள்.

இ. கைகேயி வீழ்ந்துகிடந்தமைக்குத் துள்ளி விளையாடிய பெண்மான் துள்ளி விளையாடலை விட்டு நிலத்தில் வீழ்ந்து கிடந்தமையையும், மயில் விழுந்து கிடந்தமையையு உவமைகளாகக் கூறியமையால் உவமை அணியும், சீதை அயோத்தி நகரை விட்டு நீங்கப்போகின்றுளென அவ்விடத்தை நிரப்ப மூதேவி வந்து கிடந்தாளெனக் கம்பர் தனது குறிப்பை ஏற்றிச் சொல்வதால் தற்குறிப்பேற்ற அணியும் இச் செய்யுளில் வந்துள்ளன.

iv. சேணு லாவிய நாளே லாமுயிர் ஒன்று போல்வன செய்துபின்
ஏணு லாவிய தோளி ஞானிட ரெய்த வோன்று மிரங்கிலா
வாணி லாநகை மாத ராள்செயல் கண்டு மைந்தர்மு னிற்கவும்
நாணி ஞளென வேகி ஞணளிர் கங்கு லாகிய நங்கையே.

இச் செய்யுளில் வந்த அணி யாது?

அ. மந்தரையின் வஞ்சனை பொருந்திய நஞ்சனைய மொழிகளால் தன் தூய சிந்தை திரிந்த கைகேயி, தனது அழகுக் கோலத்தை அழித்து அலங்கோலஞ் செய்து, பெண்மான் விளையாடலை நீக்கிப் பூமியிற் கிடத்தல்போலவும், நாடகமயில் பூமியில் துயின்றதுபோலவுங் கிடந்தாள். மன்னன் தசரதனிடம் தான் எண்ணியபடி இருவரங்களையும், அவனைக் கொடுமைப்படுத்தி, அவன் உயிர் பிரியப் போதலையும் பொருட்படுத்தாமல் வாங்கினாள். தெளிவு இல்லாத, செயல் மறந்த தசரதன் மயங்கிக் கிடந்தான். தான் கருதிய செயல் முற்றுப் பெற்றதனால் மகிழ்ச்சி சுரக்கின்ற கைகேயி துயில்கொண்டு கிடந்தாள். கைகேயியின் செயலைப் பார்த்துக் கங்குல் என்ற பெண் ஆண்கள் முன்னிற்க நாணி மறைந்ததாகக் கம்பர் இச் செய்யுளிற் கூறுகின்றார்.

ஆ. மணம் முடித்த நெடுங்காலந் தொட்டே தனக்கும் தன் கணவனாகிய தசரதனுக்கும் உயிர் ஒன்றே என்று கூறத் தக்கதாகக் காரியங்களை ஆற்றிவந்து, இப்பொழுது வலிய தோள்களை உடைய தன் கணவனாகிய தசரதன் துன்பம் அடையக்கண்டும் சிறிதும் இரங்காத கைகேயியின் கொடிய செயலைப் பார்த்து, இரவு என்னும் பெண்ணானவள் ஆண் பாலாரின் முன் நிற்க வெட்கமுற்று மறைந்தாள்.

இ. இச் செய்யுளில் இரவை நங்கையாக உருவகம் செய்ததோடமையாது, இரவு நீங்கி விடிதலாகிய இயற்கை நிகழ்ச்சியை, இரவாகிய பெண் கைகேயி தன் கணவனாகிய தசரதனுக்குச் செய்த கொடுமையை நினைந்து, ஆடவர் முன்னிற்க அஞ்சி மறைந்தாள் என்றுங் கூறுகின்றார். கங்குலாகிய நங்கை என்பதில் உருவக அணியும், மற்றையதிற் தற்குறிப்பேற்ற அணியும் உள்ளன.

v. இப்பொழு தெம்ம ஞேரா லியம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்தி ராமன் திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசக முணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா.

இச் செய்யுளில் வந்துள்ள அணி யாது?

அ. இராமபிரான் முடிசூட்டு விழாவிற்கு வேண்டிய யாவுஞ் செய்த வசிட்ட முனிவர், தசரதனை அழைத்துவருமாறு சுமந்திரனை ஏவினர். கைகேயியின் மாளிகைக்குத் தசரதன் சென்றிருப்பதை அறிந்த சுமந்திரன் அங்கே செல, கைகேயி 'இராமனைக் கொணர்க' என்று சுமந்திரனிடங் கூறினள். சுமந்திரன் விரைந்து இராமனிடஞ் சென்றான். சென்று கைகேயியின் கட்டளையைக் கூறினன். இராமனும் திருமாலை வணங்கி கைகேயியின் மாளிகையை அடைந்தான்; கைகேயியின் காலில் விழுந்து வணங்கினன். கைகேயி உடனே, இராமனைப் பார்த்து, "உனது தந்தை உனக்குக் கூற விரும்பியது ஒன்றுளது" என்றனள். இராமனும் மனமகிழ்வுடன் கூறும்படி வேண்டி நின்றான். கைகேயி "பரதன் நாடாள வேண்டும், நீ தவ வேடம் பூண்டு பதினன்காண்டு காட்டில் வாழ வேண்டும்" என்பது தந்தையின் கட்டளை என்றாள். அப்போது இராமனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியையும், முகமலர்ச்சியையும் கம்பர் இப் பாடல் மூலம் விளக்குகின்றார்.

ஆ. எவராலுஞ் சொல்ல முடியாத பெருங் குணங்கள் பொருந்திய இராமனுடைய திருமுகத்தின் அழகை இப்பொழுது எம்போன்றாராலே கூறுதற்கு எளியதாகாது. முன்பெல்லாம் அன்றலர்ந்த செந்தாமரையினை ஒத்திருந்த அம்முகமானது கைகேயியின் வார்த்தைகளைக் கேட்டபின்னும் அத்தாமரையினைத் தோற்கடித்துவிட்டது.

இ. இச் செய்யுளில் உவமை அணி வந்துளது. இராமனது திருமுகச்செவ்வி உவமேயம். அன்றலர்ந்த செந்தாமரை உவமானம்.

vi. தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கய ரால்வரும்
காம மில்லை யெனிற்கடுங் கேடேனும்
நாம மில்லை நரகமு மில்லையே.

இதிலுள்ள உவமையை விளக்குக.

அ. வாசனை வீசும் மாலையை அணிந்த தசரதன், சோதிடரைப் பார்த்து, இராமனுக்கு முடிசூட்டுவதற்கான நன்னாளைக் கேட்க அவர்களும், 'நாளையே அந்நாள் உளது' என்றனர். அப்போது தசரதன் குற்றமற்ற தவத்தைச் செய்தவ

ஞகிய வசிட்டனை அழைத்து, அடுத்தநாள் நடைபெறப் போகும் முடிசூட்டு வைபவத்தைக் கூறி, அதற்காக இராம னுக்குச் செய்யவேண்டிய சடங்குகளை விரைவிற் செய்வதோடு நல்லறிவுரைகளையும் வழங்குமாறு கேட்டுக்கொண்டான். மகிழ்ச்சி உற்ற வசிட்டன் இராமன் இருக்கும் இடத்தை அடைந்தான். தன்னை அன்போடு வழிபட்ட இராமனுக்கு முடிசூட்டு வைபவத்தைக் கூறித் திருமால் கோவிலுக்கு அழைத்துச் சென்று, சடங்குகள் யாவற்றையும் முடித்தான். கோவிலுக்கு அழைத்துச் செல்லுமுன் இராமனுக்குச் சில உறுதிப் பொருள்களைக் கூறினான். அவற்றுள் ஒன்று இது. இதில் பெண்ணாசை இன்றேல் ஒருவனுக்கு இருமையுந் துன்பம் இல்லையென்று கூறப்பட்டுள்ளது.

ஆ. பூமிக்குத் துன்பம் உண்டாக்க வால்வெள்ளி தோன் றுதல்போல, மக்களுக்கு அழிவை உண்டாக்க அவர்கள் மனத்தில் தோன்றுகின்றதும், அழகிய மேகலையை அணிந்த பெண்களால் வளர்கின்றதுமாகிய ஆசை இல்லை என்றால், இப் பிறப்பில் பெருந் துன்பம் என்கின்ற பேரும் இல்லாது ஒழியும்; மறுமையில் நரகத் துன்பமும் இல்லாது ஒழியும்.

இ. புகைக்கொடி என்று சொல்லப்படும் வால்வெள்ளி யால் உலகுக்குத் தீமை விளையும் என்பது அறிஞர் கொள்கை. இதுபோலப் பெண்களின் தொடர்பால் வளர்ச்சி பெற்றுத் தோன்றுங் காமத்தால் மக்களுக்கு இருமையும் பெருந்துன்பம் உண்டாகும். இதில் வரும் உவமான உவமேயம் பின்வருமாறு:

| உவமேயம் | உவமானம் | பொதுத்தன்மை |
| --- | --- | --- |
| காமம் | தூமகேது | கேடுவிளைத்தல் |

இப் பாடலில் வரும் தூமகேது புவிக்கெனத் தோன்றிய காமம் என்ற தொடரில் உவமைஅணி உண்டு.

vii. வெயின்மு றைக்குலக் கதிரவன் முதலிய மேலோர்
உயிர்மு தற்பொருள் திறம்பினு முறைதிறம் பாதோர்
மயின்மு றைக்குலத் துரிமையை மனுமுதன் மரபைச்
செயிர் உறப்புலைச் சிந்தையால் என்சொனாய் தீயோய்.

கீறிட்ட பகுதியை விளக்குக :

அ. அயோத்திமாநகரம் முடிசூட்டு வைபவத்திற்காக அலங்கரிக்கப்பட்டது. இராமன் முடிசூடுவதைத் தடுக்க

வேண்டும் என விரும்பிய மந்தரை, ஆழ்ந்து சிந்தித்துத் திட்டம் தீட்டினாள். திட்டத்தை நிறைவேற்றக் கைகேயியின் அரண்மனைக்கு விரைந்து சென்றாள். மலர்ப் படுக்கையிற் றுயின்று கொண்டிருந்த கைகேயியின் சிறடியைக் கையாற்றீண்டி, 'பெரிய துன்பம் வரவிருக்கும் இவ்வேளையில் நீ இப்படித் துயில்வது பொருந்துமா' என்று சொல்லி இராமன் முடிசூடப் போவதை அறிவித்தாள். கைகேயி பெருமகிழ்ச்சி அடைந்து, இராமன் முதலியோர் இருக்கும்போது துன்பம் ஏற்படாது என்று கூறி, மந்தரைக்கு முத்துமாலை ஒன்று பரிசாகவும் அளித்தாள். முத்துமாலையை வீசியெறிந்து இராமன் முடிசூடுவதால் ஏற்படுந் தீமைகளை விளக்கிக் கூறினாள். கோபமுற்ற கைகேயி இராமன் முடிசூடுவது சரியெனக் காரணங்கள் காட்டிக் கூனியைக் கடிந்துரைத்தாள். அவற்றுள் ஒன்று இது.

ஆ. கொடியவளே! ஒளியை ஒழுங்காக ஒவ்வொரு நாளுந் தருகின்ற சூரியனை முதலாகக்கொண்டு தோன்றிய சிறப்புமிக்கச் சூரியகுலத்து வேந்தர்கள் உயிர் முதலிய பொருள்கள் அழிந்தாலும், தாங்கூறிய சொல்லினின்றும் மாறுபடமாட்டார்கள்; மயிலின் முறையைக் கொண்ட குலத்தின் உரிமையையும், மனுக்குலத்துக்கு உரிய வழக்கத்தையும் மாறுபடும்படி இழிந்த எண்ணத்தால் என்ன சொன்னாய்?

இ. மயில் பல முட்டைகளை இடும். அவற்றுள் இருந்து முதற் பொரிக்குங் குஞ்சுக்குக் கலாபம் முளைக்கும். அதுபோல ஒரு மன்னனுக்கு முதற் பிறக்கும் மைந்தனுக்கே அரசுரிமை உரித்துடையது. இந்த முறையிலே இராமனுக்கு அரசுரிமை கொடுத்தது தவறாகாது என்று கைகேயி கூறினாள். இச் சொற்றொடருக்கு மயில் முறையைப் பின்பற்றும் மனுக்குலம் என்றும், தோன்றிய (கேகயகுலம்) மயிற்குலத்திற்கும், புகுந்த மனுக்குலத்துக்கும் உரியமுறை என்றும் பொருள்கள் கூறலாம்.

viii. விளையுந் தன்புகழ் வல்லியை வேரறத் தேன்னக்
கிளைகோள் மேகலை சிந்தினள் கிண்கிணி யோடும்
வளைது றந்தனள் மதியினின் மறுத்துடைப் பாள்போல்
அளக வாணுதல் அரும்பெறற் றிலகமு மழித்தாள்.

இச் செய்யுளில் வந்த அணிகள் எவை?

அ. தன்னில் வில்வித்தை பயின்ற இராமன் முடிசூடுவதைத் தடுக்க விரும்பிய மந்தரை கைகேயியின் அரண்மனையை அடைந்தாள். துயின்றுகொண்டிருந்த கைகேயியை

எழுப்பி இராமன் முடிசூடப்போவதை அறிவித்தாள். மகிழ்ச்சி அடைந்த கைகேயி முத்துமாலை நல்க, அதை வீசியெறிந்த மந்தரை இராமன் முடிசூடுவதால் ஏற்படுந் தீமைகளை விளக்கிக் கூறினாள். கூறியும் மனமாறுதல் அடையாத கைகேயி அது தனக்குத் தீமையில்லை எனக் கூறிக் கூனியைக் கடிந்துரைத்தாள். எனினுந் தனது பேச்சின் திறமையால் கைகேயியின் நெஞ்சத்தில் நஞ்சுறையும்படி செய்தாள்; பரதன் அரசுரிமைபெற உபாயங்களுங் கூறினள். பரிசு நல்கிக் கூனியை அனுப்பிய கைகேயி, தன் ஆபரணங்களைக் களைந்து அலங்கோலமாய்ப் பூமியிற் படுத்திருந்தாள். கைகேயி தன் அலங்காரத்தைச் சிதைத்ததைப் புலவர் இப்பாடலிற் சித்திரிக்கின்றார்.

ஆ. வளர்ந்துவரும் தன் புகழாகிய கொடியினை வேருடன் அறுத்தெறிபவள் போன்ற, எழுகோவை மணிகளாலான மேகலையை அறுத்துச் சிந்தினாள்; கிண்கிணி என்னுங் காலணியுடன், கை வளையல்களையுங் கழற்றி எறிந்தாள்; மதியில் உள்ள மறுவைத் துடைப்பதுபோலத் தன் ஒளி பொருந்திய நெற்றியின் கண்ணுள்ள பெறுதற்கரிய பொட்டினையும் அழித்தாள்.

இ. இச் செய்யுளில் உருவகவணி, தற்குறிப்பேற்றவணி, உவமையணி என மூன்று அணிகள் வந்துள்ளன. புகழைக் கொடியாக உருவகித்தமை உருவகம். மேகலையைக் கைகேயி அறுத்தெறிந்த செயலில் தன் குறிப்பை ஏற்றி விளையுந் தன் புகழ் வல்லியை வேர் அறுத்தது என்னக் கம்பர் கூறியது தற்குறிப்பேற்றவணி. நெற்றியிற் திலகத்தை அழித்தமை மதியில் உள்ள மறுவைத் துடைத்தமை போன்றிருந்ததெனல் உவமை அணியின் பாற்படும்.

ix. தெருளுடை மனத்து மன்ன னேவலிற் றிறம்ப லஞ்சி
இருளுடை யுலகந் தாங்கு மின்னலுக் கியைந்து நின்றான்
உருளுடைச் சகடம் பூட்ட வுடையவ னுய்த்த காரே
றருளுடை யொருவ னீக்க வப்பர மகன்ற தோத்தான்.

உவமையை விளக்குக:

அ. சுமந்திரன் இராமனுக்குக் கைகேயியின் கட்டளையை விரைந்து சென்று கூறினான். திருமாலை வணங்கிய இராமன் மங்கல வாத்தியங்கள் ஒலிக்க, மன்னர் குழாம் புடைசூழ

முடிசூட்டு மண்டபம் போகாமல் கைகேயியின் மாளிகையை அடைந்தான். தாயென நினைவான் முன்னே கொடுமை புரிதலில் வல்லவளான கைகேயி தோன்றினாள்; தசரதன் கட்டளைகளைக் கூறினாள். அதனைக் கேட்டபோது இராமனது முகம் அன்றலர்ந்த செந்தாமரையினையும் வென்றது. இராமன் அடைந்த மகிழ்ச்சியைக் கம்பர் இச் செய்யுள் மூலம் சித்திரிக்கின்றார்.

ஆ. தெளிந்த அறிவு வாய்ந்த உள்ளமுடைய தசரத மன்னன் கட்டளைக்கு மாறுபட அஞ்சி, அறியாமை என்னும் இருளையுடைய உலகத்தைத் தாங்கிப் பாதுகாக்கின்றதாகிய துன்பம் மிகுந்த இராச்சிய பாரத்தை ஏற்க உடன்பட்ட இராமன், வண்டியிற் பூட்டுதற்காகத் தலைவனால் செலுத்தப் பெற்ற கரிய எருது, இடையில் வந்த அருளாளன் ஒருவன் அவ்வண்டியில் தன்னைப் பூட்டாமல் விலக்குவதால் அப் பாரம் நீங்கப்பெற்று மகிழ்ந்ததை ஒத்த மகிழ்ச்சியை உடையவனானான்.

இ. இன்னல் நிறைந்த இராச்சிய பாரம் நீங்கிய இராம பிரானின் தன்மையை, "உருளுடைச் சகடம் பூட்ட உடையவன் உய்த்த காரேறு, அருளுடை ஒருவன் நீக்க அப்பாரம் அகன்றது" என்ற உவமைமூலம் விளக்குகின்றார். இராச்சியத்துக்குச் சகடமும், இராமனுக்கு எருதும், தசரதனுக்கு உடையவனும், கைகேயிக்கு அருளுடை ஒருவனும் உவமைகளாக வந்தன. கரிய இராமனுக்குக் கார்ஏறை உவமை கூறியதும், இராச்சிய பாரத்தைத் தன்மீதுகொண்ட அன்பினால் நீக்கிய கைகேயியை இராமன் நினைத்தலையும் நாம் இதிலே கவனிக்கக் கூடியதாக இருக்கின்றது.

x. நாகமெனுங் கொடியாட ணுவி னீந்த
சோகவிடந் தொடரத்து ணுக்க மெய்தா
ஆகமடங் கலும்வெந்த ழிந்த ராவின்
வேகமடங் கியவேழ மென்ன வீழ்ந்தான்.

இச் செய்யுளில் வந்த அணி யாது?

அ. மந்தரையின் போதனையால் மனம் மாறிய கைகேயி தன் கோலத்தை மாற்றி அலங்கோலமாய், தசரதன் வருகையை நோக்கி நிலத்திற் கிடந்தாள். நள்ளிரவு, அவ்விடம் வந்த தசரதன் நெஞ்சு நொந்து மானை எடுக்கும் யானை

போல் கைகேயியைத் தனது தடக்கையால் வாரி எடுத்தான். உடனே கைகேயி கைகளை நீக்கி மின்னல்போல் துவண்டு நிலத்தில் வீழ்ந்தாள். தசரதன் அஞ்சி 'உனக்கு நேர்ந்தது யாது? உனக்குத் தீங்கு செய்தார் யாரேனும் உளரேல் அவரை என்ன செய்கின்றேன் பார்' என்று தேறுதல் கூறினன். அது கேட்ட கைகேயி, 'உனக்கு என்மீது உண்மையான அன்பு இருக்குமானல் நீ முன்பு தருவதாகக் கூறிய இரு வரங்களையும் இப்போது தா' என்று கேட்டாள். அவளது வஞ்சனையை உணராத தசரதன் வரங்களைத் தருவதாகக் கூறினன். 'வரங்கள் ஒன்றினல் என்மகன் பரதன் முடிசூடவும், மற்றொன்றால் இராமன் காடேகவும் நல்குவாய்' என்றாள் கைகேயி. கேட்ட தசரதன் அடைந்த நிலையைக் கம்பர் இக் கவியிற் சித்திரிக்கின்றார்.

ஆ. நாகத்தைப்போன்று கொடியவளான கைகேயியின் வாயிலிருந்து புறப்பட்ட துன்பத்தைத் தருஞ் சொற்களாகிய நஞ்சு பரவப்பெற்றமையால் நடுக்கம் எய்தி, உடல் முழுவதும் வெதும்பிச் சோர்ந்து நாகத்தின் நஞ்சினல் ஆற்றல் முழுவதும் அழிந்துபோன யானையைப்போன்று தசரதன் வீழ்ந்தான்.

இ. சின்னஞ் சிறிய பாம்பின் கொடிய நஞ்சால் வெள்ளம் பெரிய யானை ஆற்றல் அடங்கி வீழ்தல் போலச் சிறிய பெண்ணாகிய கைகேயியின் வார்த்தைகளால் ஆண்மையும் ஆற்றலும் நிறைந்த தசரதன் தன் வல்லமை எல்லாம் இழந்து வீழ்ந்தான். இதில் உவமைஅணி யுண்டு. உவமான உவமேயம் பின் வருமாறு:

| உவமேயம் | உவமானம் |
|---|---|
| கைகேயி | பாம்பு |
| வார்த்தை | நஞ்சு |
| தசரதன் | வேழம் |

சோகத்தை விடமாக உருவகித்தமையால் உருவக வணி யென்றும் சொல்லாம்.

xi. சேம மேன்பன பற்றி யன்பு திருந்த வின்றுயில் செய்தபின்
வாம மேகலை மங்கை யோடு வனத்துள் யாரு மறக்கிலா
நாம நம்பி நடக்கு மென்று நடுங்கு கின்ற மனத்தவாய்
யாழு மிம்ம ணிறத்து மேன்பன போலே ழுந்தன யானையே.

இச் செய்யுளில் வந்த அணி யாது?

அ. மந்தரையின் நஞ்சனைய, வஞ்சனை பொருந்திய மொழிகளால் மனமாற்றம் அடைந்த கைகேயி, தனது அழகை அழித்து அலங்கோலஞ் செய்து பெண்மான் விளையாடலை நீக்கிப் பூமியிற் கிடத்தல் போலவும், நாடக மயில் பூமியிற் றுயின்றது போலவுங் கிடந்தாள். தான் எண்ணியபடி இருவரங்களையுந் தசரதனைக் கொடுமைப்படுத்தி வாங்கினாள். தசரதன் மயக்கம் அடைந்து தெளிவற்ற நிலையிற் கிடந்தான். சூரியன் உதித்தான். யானைகள் துயில் நீங்கி எழுந்தன. இச் செயலைக் கம்பர், "வாம மேகலை மங்கையோடு வனத்துள் யாரும் மறக்கிலா, நாம நம்பி நடக்கும், என்று நடுங்குகின்ற மனத்தவாய், யாமும் இம்மண் இறத்தும் என்பனபோல் எழுந்தன யானை" எனக் கதை நிகழ்ச்சியுடன் பொருத்திக் காட்டுகின்றார்.

ஆ. யானைகள் தமது காவற்கூடங்களைப் பொருந்தி அன்போடு இனிதே துயின்ற பின்னர், அழகிய மேகலாபரணத்தை அணிந்த சீதாபிராட்டியோடு எவராலும் மறக்க முடியாத பேரினை உடைய இராமன் காட்டுக்குச் செல்லப்போகிறான் என்பதை நினைத்து நடுங்கிய மனத்தை உடையனவாய்த் தாமும் இந்நாட்டை விட்டுச் செல்வோம் என்று எழுந்தன போல் தம் படுக்கையைவிட்டு எழலாயின.

இ. படுக்கையைவிட்டுத் துயில் நீங்கி வெளியே சென்ற யானைகளின் செயலில் இராமன் பிரிவை நினைத்துக் காட்டுக்குச் செல்ல எழுந்தன எனத் தன்குறிப்பைக் கம்பர் ஏற்றி இப்பாடலிற் கூறினமையின் தற்குறிப்பேற்ற அணியுளது எனக் கூறலாம்.

xii. குவளையி னெழிலும் வேலின்
கொடுமையுங் குழைத்துக் கூட்டித்
திவளுமஞ் சனமேன் றேய்ந்த
நஞ்சினைத் தெரியத் தீட்டித்
தவளவொண் மதியுள் வைத்த
தன்மைசா றடங்க ணல்லார்
துவளுநுண் ணிடையா ராடுந்
தோகையங் குழாத்திற் றேக்கார்.

இச் செய்யுளில் உள்ள சிறப்பை விளக்குக:

அ. எவ்வளவு வேண்டிக் கேட்டும் மனமிரங்காத கைகேயிக்கு விரும்பிய வரங்களைக் கொடுத்த தசரதன் அறிவிழந்து கிடந்தனன். தன்னெண்ணம் நிறைவேறிய மகிழ்ச்சியால்

கைகேயி துயின்றாள். பொழுது புலர்ந்தது. இராமனுக்கு முடி சூட்டுநாள் இதுவென்பதைக் கண்ட மக்கள் அனைவரும் மகிழ்ச்சியா லாரவாரித்தனர். இளைஞர் இராமனது தம்பிமாரையும், கற்புடைப் பெண்களாகிய அன்னையரனைவரும் கோசலையையும், மற்றைய மகளிர் சீதாபிராட்டியையும், வேதியர் வசிட்டனையும், நல்லோர் தசரதனையும் போன்று மகிழ்ச்சி அடைந்தனர். அரசர்கள் அமிழ்தம் உண்ணக்கூடுந் தேவர்போல் அயோத்தி வந்தடைந்தனர். மங்கையர் கூட்டமும் மைந்தர் கூட்டமும் வீதிகளிலே நின்று நடவுங்கள் நடவுங்கள் எனக் கூறின. இச்செய்யுளில் வள்ளல் இராமன் முடிசூடுவதைக் காணும் வேட்கையால் அயோத்திநகரை வந்தடையும் பெண்களின் தன்மையைக் கம்பர் வருணிக்கின்றார்.

ஆ. கருங்குவளையின் அழகையும், வேலின் தீமையையும் ஒன்றுகூட்டி, விளங்குகின்ற மை என்று பெயர் சொல்லப் பட்டுப் பொருந்திய நஞ்சினை அதில் எழுதி, வெண்மையான ஒளிமிக்க சந்திரனிடத்தில் வைத்தாற்போன்ற நீண்ட கண்களை உடையவரும், அசைகின்ற இடையினை உடையவரும் ஆகிய மங்கையர்கள் நடனமாடும் மயில்களின் கூட்டத்தைப்போல் வந்து குவிந்தார்கள்.

இ. இச் செய்யுளில் கம்பர் அயோத்திநகரை அடைந்த பெண்களின் கண்களை, "குவளையின் எழிலும், வேலின் கொடுமையுங் குழைத்துக் கூட்டித் திவளும் அஞ்சனம் என்று ஏய்ந்த நஞ்சினைத் தெரியத் தீட்டித் தவளவொண் மதியுள் வைத்த தன்மைசால் தடங்கண்" என்று குறிக்கின்றார். கண்கள் குவளைபோல் அழகுடையனவாயினும், கண்டோருக்குக் கொடுமைசெய்யுந் தன்மையிலது. இதனால் குவளையின் அழகையும், வேலின் கொடுமையையும் சேர்த்துக் கண்ணுக்கு உவமை கூறினார். கண்ணில் எழுதிய மை மேலுந் தன் அழகால் ஆடவர்க்குத் துன்பங் கொடுப்பதால் அதனை மை யென்ற பெயரால் அழைக்கப்படும் நஞ்சு என்றார். பெண்களின் முகம் மதியை ஒத்தது. ஆதலால் அவர்கள் முகத்தில் உள்ள கண்களை மதியத்துள் வைத்த கண்கள் என்று சிறப்பித்துக் கூறினார். அங்கு வந்த பெண்களின் இடை சிறிதானமையினாலும், பெண்கள் யாவரும் அழகுள்ளவராக விருந்தமையாலும் "துவளு நுண்ணிடையா ராடுந் தோகையங் குழாத்திற் றெக்கார்" என்று கூறுகின்றார்கள். இச் செய்யுளில்

பெண்களின் கண்கள் முகம் என்பவற்றையும் பெண்களின் அழகையுஞ் சிறந்த உவமைமூலங் கம்பர் கூறுவதால் இதில் உவமை அணி உள்ளது. இப்பாடலில் கம்பரின் கற்பனைச் சிறப்பு அற்புதமாகப் பிரகாசிக்கின்றது.

xiii. அறநி ரம்பிய வருளுடை யருந்தவர்க் கேனும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்
மறநி னைந்துமை வலிகில ராயினும் மனத்தால்
இறலு றும்படி யியற்றுவ ரிடையறா வின்னல்.

இச் செய்யுளால் கூறப்பட்டது யாது? அணி என்ன?

அ. இராமன் முடிசூடப்போவதை அறிந்த மக்கள் மகிழ்ச்சி, ஆரவாரம் என்பவற்றை அறிந்த மந்தரை வேதனை அடைந்தாள். இராமன் முடிசூடலைத் தடுக்க விரும்பினாள். கைகேகியியின் அரண்மனை விரைந்துசென்று செய்தியை வெளியிட்டாள். மிக்க மகிழ்ச்சி அடைந்த கைகேயி முத்துமாலை ஒன்று பரிசாக நல்கினாள். பரிசை உதறித்தள்ளிய கூனி, இராமன் முடிசூடுவதால் அவளுக்கு வரும் தீமைகளையும் எடுத்துக் கூறினாள். நஞ்சனைய கூனியின் வஞ்சனை உரைகளை மறுத்துக் கைகேயி வெஞ்சினங்கொண்டாள். தசரதன் செய்கை நீதியானது என வாதிட்டாள். எனினுந் தன் செயலை விடாத மந்தரை பல தந்திர உரைகள் பகன்றாள். அவற்றுள் ஒன்று இது.

ஆ. துறவறத்தால் அருள் நிறைந்த அரிய தவத்தை உடையோர்க்காயினும் பெறுதற்கரிய செல்வம் பெற்றபின் மனநிலை பிறிதாதல் இயல்பாகும். (இராமனுங் கோசலையுங் கொடுமை செய்ய நினைந்து துன்புறுத்தவில்லையாயினும் அரசு பெற்றபின்) நீங்கள் துன்பத்தால் அழியும்படி இடையறாத இன்னல் இயற்றுவர்.

இ. இச் செய்யுள்மூலங் கூனி, முற்றத்துறந்தோரும் திருப்பெற்றபின் மனம் மாறுபடுவர் என்றால் இல்லறத்து இராமனும் (கோசலையும்) சும்மா இருப்பானா என்ற பொருள் படக் கூறித் தூயவுள்ளத்தைத் திரிக்கின்றாள். இதில் கூனியின் வாக்குவன்மை பிரதிபலிக்கின்றது. இதில் உள்ள அணி வேற்றுப்பொருள் வைப்பாம்.

xiv. நாற்கடற் படுமணி நளினம் பூத்ததோர்
பாற்கடற் படுதிரைப் பவள வல்லியே
போற்கடைக் கண்ணளி பொழியப் பொங்கணை
மேற்கிடந் தாள்தனை விரைவி னெய்தினள்.

இதிலுள்ள உவமையை விளக்குக:

அ. தசரதன், சோதிடர்களிடம் இராமனுக்கு முடிசூட்ட ஏற்றநாள் அறிவிக்கும்படி வேண்டினன். அவர்களும் ஆராய்ந்து அடுத்தநாள் நன்னாள் என்றனர். அதுகேட்ட தசரதன் குலகுருவாகிய வசிட்டனை அழைத்து, செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து, உணர்த்தவேண்டிய உறுதிப் பொருள்களையும் உணர்த்தும்படி கேட்டுக்கொண்டான். வசிட்டன் இராமனிடம் விரைந்து சென்று சிறந்த நீதிகளை எடுத்தோதி, திருமால் கோயிலுக்கு அழைத்துச் சென்றான். அங்கே திருமால் முன் திருமுழுக்காட்டி, வேண்டிய சடங்கு களைச் செய்து, வெண்ணிறத் தருப்பையிலிருத்தி நோன்பு செய்யுமாறு சொல்லி மன்னனுக்கு அறிவித்தான். மன்னன் நகரமக்கள் அறிய ஆவன செய்தான். மக்கள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி நகரை அலங்கரித்தனர். மந்தரையின் மனம் வேதனை அடைந்தது. இராமன் முடிசூடலைத் தடுக்கக் கைகேயி அரண்மனை விரைந்தாள். கூனி செல்லும்போது கைகேயி படுக்கையிற் கிடந்த தன்மையைப் புலவர் இதன்மூலம் சித்திரிக்கின்றார்.

ஆ. நான்கு திசைகளிலும் உள்ள கடலின் கண்மணிகளோடு தாமரை பூத்ததும், பாற்கடலின் அலையிற்றோன்றியதுமாகிய ஒரு பவளக்கொடிபோல், கடைக்கண் கருணைபொழிய உயர்ந்த படுக்கைமேல் படுத்திருந்த கைகேயியை விரைவில் அடைந்தாள்.

இ. மாணிக்கக் கற்கள் பதித்த அணிகலன்கள் அணிந்த தாமரைபோன்ற முகம், கை, கால் உடையவளும், வல்லிக் கொடி போன்றவளுமாகிய கைகேயி, அருள்வழியுங் கண்களோடு வெண்டுகிலால் மூடப்பட்ட படுக்கையிற் கிடந்தமைக்கு, பாற்கடலிற் தோன்றிய, மணியுந் தாமரையும் பூத்த ஒரு பவளக்கொடியை உவமையாகக் கூறினார் கம்பர். இதிலுள்ள உவமான உவமேயம் பின்வருமாறு:

| உவமேயம் | | உவமானம் |
|---|---|---|
| அணிகளிற் பதித்த மணிகள் | — | நாற்கடற்படுமணி |
| கைகேயியின் முகம், கை, கால் | — | தாமரைமலர் |
| கைகேயி | — | பவளவல்லி |
| கைகேயி படுக்கை | — | பாற்கடற்படுதிரை |

XV. கல்வியு மிளமையுங் கணக்கி லாற்றலும்
வில்வினை யுரிமையும் அழகும் வீரமும்
எல்லையில் குணங்களும் பரதற் கெய்திய
புல்லிடை யுக்கநல் லமுதம் போலுமால்.

கீறிட்ட சொற்றொடரை விளக்குக.

அ. இராமன் முடிசூடலைத் தடுக்க விரும்பிய மந்தரை கைகேயியிடம் விரைந்துசென்று, தன்னைப் பாம்பு விழுங்க வரும்போதும் துன்பம் அடையாது முன்போல் ஒளிநல்கும் சந்திரன்போல் பெரிய துன்பம் வரவும் கவலையுறாது இருக்கின்றாய் என்று கூறினள். கைகேயி தெவ்வடு சிலைக்கைச் சிறுவர் இருக்கும்போதும், வேதமே அனைய இராமன் இருக்கும்போதும் தனக்கு எவ்விதம் குறைவரும் என்று வினவினள். மந்தரை கைகேயிக்கு வரும் இன்னல்களை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கிக்கொண்டே போனாள். அவற்றுள் ஒன்று இது: இதிற் கைகேயியைப் பார்த்துக் கூனி, உனது பரதனிடம் பொருந்திய கல்வி, இளமை முதலியன யாவும் அவமே போகப்போகின்றன என்று எடுத்துக் காட்டினாள்.

ஆ. உன் மகனாகிய பரதனிடம் அமைந்துள்ள கல்வி, இளமை, கணக்கில் அடங்கா ஆற்றல், அழகு, வீரம் முதலியவையும், பிற நற்குணங்களும், இழிந்த இடத்திற் சிந்திய இனிமையும், சாவாமையும் பொருந்திய அமுதம்போற் பயனின்றிப் போகும்.

இ. தன்னேரில்லாத் தலைவனாயிருந்து தரணியை ஆளக் கூடிய ஆற்றல்கள் பரதனிடம் இருக்கின்றன. அவன் அரசனாகாமல், இராமன் அரசனாவதால் அவனிடம் இருப்பன யாவும் பயனற்றுப் போகும். இதை விளக்குவதன்மூலம் தன் எண்ணத்தை முடிக்க விரும்புகின்றாள் கூனி. புல்லிடை உக்க நல்லமுதம் என்ற சொற்றொடர் இழிந்த நிலத்தில் சிந்திய அமுதம் என்னும் பொருளை உடையது. இனிமையும், இற

வாத் தன்மையும் அளிக்கவல்லது அமுதம். இந்தச் சிறந்த அமுதத்தை இழிந்த இடத்திற் கொட்டின் அஃது ஒருவருக்கும் பயன்படாது போம். அதுபோலப் பரதனின் சிறப்புகளும் பயனற்றுப்போம்.

| உவமேயம் | உவமானம் | பொதுத்தன்மை |
| --- | --- | --- |
| பரதனிடம் பொருந்துங் குணங்கள் | புல்லிடை உக்க அமுதம் | பயனிலவாதல். |

xvi. ஏய்ந்தெழு செல்வமு மழகு மின்பமும்
தேய்ந்தில வனையது தெரிகி லாமையால்
ஆய்ந்தனர் பெருசுவு மமரர் இம்பரில்
போந்தவர் போந்தில மென்னும் புந்தியால்.

இச் செய்யுளில் வந்த அணி யாது?

அ. தசரதன் கட்டளைப்படி வசிட்டமுனிவர் முடிசூட்டுக்கு வேண்டிய சடங்குகளைச் செய்து, அறவுரையுங் கூறித் தசரதனுக்கு அறிவித்தார். தசரதனால் ஏவப்பட்ட வள்ளுவர், "வள்ளல் இராமன் நாளைக்கே மண்மகளின் தலைவனாய் மணிமுடி புனைவான்; அயோத்தி மாநகரை அலங்கரியுங்கள்" என்று முரசறைந்து அறிவித்தார்கள். மக்கள் மகிழ்ச்சியில் மூழ்கி நகரை அலங்கரித்தார்கள். நகரம் அமராவதி எனும்படி இருந்தது. அயோத்தி நகரிற் பொருந்தியுள்ள செல்வத்தின் சிறப்பும், மக்களின் அழகும், அவர்கள் பெறும் இன்பமும் அமரரையே அதிசயிக்கச் செய்தன. முடிசூட்டுவிழாவைக் கண்டுகளிக்க அயோத்தி நகர் வந்தடைந்த அமரர்கள் அயோத்திநகரைத் தாம் அடையவில்லை; தாம் தமது நகரிலேயே இருப்பதாக மயங்கினரெனக் கம்பர் இக்கவியில் எடுத்துக் காட்டுகிறார்.

ஆ. அயோத்திமாநகரில் உள்ள செல்வமும், மக்களின் அழகும், அவர் பெறும் இன்பமும் விண்ணுலகினும் குறைவாகவில்லை; அதற்கு ஒப்பாகவே உள்ளன. அதனைத் தேவர்கள் தெரிந்துகொள்ளாமையால், அவர்கள் முடிபுனை விழாவிற்காக அயோத்திக்கு வந்திருந்தும், வரவில்லையே என்னும் எண்ணத்தால் மிகவும் சிந்திக்கலாயினர்.

இ. தேவர்கள் அயோத்திநகரைப் பொன்னகர் என மயங்கியதாகக் கூறப்படுவதால் இச் செய்யுளில் வந்த அணி மயக்கவணியாம்.

xvii. கண்ணே வேண்டு மென்னினு மீயக் கடவேனென்
உண்ணே ராவி வேண்டினு மின்றே யுனதன்றோ
பெண்ணே வண்மைக் கேகயன் மானே பெறுவாயேல்
மண்ணே கொண்ணீ மற்றைய தொன்றும் மறவென்றான்.

*இதிலிருந்து தசரதனைப்பற்றி யாதறிகின்றீர்?*

*அ. மந்தரையின் சூழ்ச்சியால் மனம் மாறுபட்ட கைகேயி, தன்னை அலங்கோலஞ் செய்து நிலத்திற் கிடந்தாள். கைகேயியின் மாளிகைக்கு நள்ளிரவில் வந்த தசரதன் கைகேயியின் நிலைகண்டு காரணங் கேட்டான். கைகேயி பெருமூச்சுடன், 'என்னிடம் அன்பு இருப்பது உண்மையாயின், முன்பு தந்த வரத்தை இன்று தா' என்றாள். இராமன் மீது ஆணையாகத் தருவதாக வாக்களித்தான் தசரதன். கைகேயி தான் விரும்பிய வரங்களைக் கேட்டாள். இது கேட்ட மன்னன் விடவேகம் அடங்கி விழும் யானைபோல் நிலத்தில் விழுந்து புரண்டான். அவன் துயர் கண்டும் கலங்காது நிற்பதைக் கண்டு பல வினாக்கள் வினாவினான் தசரதன். கைகேயியைக் கொலை செய்யவும் விரும்பினான். பின்னர் மனம் மாறி இரந்து பயன் பெற விரும்பினான். காலில் விழுந்து இவ்வாறு கூறினான்.*

*ஆ. எனது கண்களை நீ கேட்டாலுந் தருவேன்; என் உயிரைக் கேட்டாலும் இப்பொழுதே தருவேன்; இரக்கம் வாய்ந்த பெண்ணே! வரையாது கொடுக்கும் வள்ளலாகிய கேகயநாட்டு மன்னனுக்கு மகளே! வரம் பெறுவதானால் உலகை மட்டும் பெற்றுக்கொள்; மற்றையதாகிய ஒரு வரத்தை மறந்து விடுவாயாக.*

*இ. தசரதன், என் கண்ணும் பொருளல்ல, என்னுயிரும் பொருளல்ல, மண்ணும் பொருளல்ல என்று கூறுவதாலும், மற்றைய தொன்றும் மறவென்று கூறுவதாலும் தசரதனுக்கு இராமன் மீதுள்ள பாசத்தை நாம் அறிகின்றோம். கேகயன் மகளாகிய பெண்ணே எனப் புகழ்ந்து கூறியும் இராமன் காடேகாது இருக்க வழி பார்க்கின்றான்.*

xviii. உயரரு ளோங்க லுனைக்குந்
தாமரை நிறத்தை யொக்கும்
புயல்பொழி மேக மென்ன
புண்ணியஞ் செய்த வென்பார்

செயலருந் தவங்கள் செய்திச்
செம்மலைத் தந்த செல்வத்
தயரதற் கென்ன கைம்மா
றுடையம்யாங் தக்க தென்பார்.

கீறிட்ட பகுதியை விளக்குக.

அ. இரவு கழிந்து பொழுது புலர்ந்தது. முடிசூடும் விழாக் காணத் தம்மை அலங்காரஞ் செய்துகொண்டு எல்லோரும் வந்து கூடினர். மன்னர்களும் முடிபுனை மண்டபம் வந்து கூடினர். வசிட்டனும் வந்து தோன்றினன். முடிசூடும் நேரம் வந்துவிட்டது என்று சோதிடர் கூற மன்னனை அழைத்துவரச் சுமந்திரன், கைகேயி மாளிகையை அடைந்தான். கைகேயி இராமனைத் தன்னிடம் அழைத்துவரப் பணித்தாள். இராமன் முடிசூட விழா மண்டபம் நோக்கி வீதியிற் செல்வதைக் கண்ட மக்கள மகிழ்ச்சிகொண்டு வாயினுற் சொன்னவற்றை இச் செய்யுள் சொல்கின்றது.

ஆ. அருள் பொழியும் இவன் கண்களுக்கு உவமை ஆகும் தாமரையும், இவன் நிறத்திற்கு உவமை ஆகும் மழைமேகமும் என்ன புண்ணியஞ் செய்தனவோ என்பார் சிலர். தவஞ் செய்து இராமனைப் பெற்று மன்னனுகத் தந்த தயரதனுக்கு யாம் செய்யக்கூடிய கைமமாறு ஒன்றும் இல்லை என்பார் சிலர்.

இ. புயல்பொழி மேகம் என்ற சொற்றொடர் மழைபொழியும் மேகம் என்ற பொருளை உடையது. மேகம் நிறத்தினுல் மாத்திரமன்றி கைம்மாறு கருதாமல் பூமிக்குப் பயன் வழங்குவதினுலும் இராமனுக்கு உவமையாகக் கூறப்பட்டது. கொடையும், நிறமும் பொதுத்தன்மைகளாகி மேகம் இராமனுக்கு உவமையாயிற்று.

xix. அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய வறமும்
துரக்க நல்லரு டுறந்தன டுமொழி மடமான்
இரக்க மின்மையன் றோவின்றிவ் வுலகங்க ளிராமன்
பரக்குந் தோல்புக ழமுதினைப் பருகுகின் றனவே.

இச் செய்யுளில் வந்த அணி யாது?

அ. இராமனை முடிசூடாமற் றடுக்க மந்தரை விரும்பினுள், கைகேயியிடம் விரைந்து சென்று, "பேரிடுக்கண் வரவிருக்கும் இவ்வேளையிலும் நீ இப்படித் துயில்வது பொருந்துமா?"

என்று கூறினாள். அத்துடன் இராமன் முடிசூடுவதையுஞ் சொன்னாள். மனமகிழ்ந்த கைகேயி முத்துமாலையைப் பரிசளித்து, தனக்கு வீரமைந்தர் இருக்கும்போது யாது குறையுளது என்று வினவினாள். நிலத்திற் குழியேற்படும்படி மாலையை எறிந்த கூனி பரதனுக்கு அரசுரிமை இன்மையால் கைகேயிக்குப் பல கேடுகள் உண்டு எனச் சுட்டிக் காட்டினாள். கைகேயி இராமனுக்குத் தசரதன் முடிசூட்டுவது முறையென எடுத்துக் காட்டினாள். பின்னும் மந்தரை தன் நாவன்மையால் கைகேயியின் மனதை மாற்றம் அடையச் செய்தாள். கைகேயி மனம் மாற்றம் அடைந்த வகையைக் கம்பர் இவ்வாறு கூறுகின்றார்.

ஆ. இராவணன் முதலிய அரக்கர் செய்த பாவமும் மற்றையோராகிய தேவர் முனிவர் முதலியோர் செய்த புண்ணியமுந் தூண்டுதலாலே, நன்மொழிகளைப் பேசுகின்ற இளமையான மான்போன்றவளான கைகேயி, நல்ல இரக்க சிந்தையிலிருந்து மாறுபடலானாள். அவளது இரக்கமின்மையாலன்றோ இந் நிலவுலகனைத்தும் இராமன் பரந்துபட்ட பழைமையான கீர்த்தியாகிய அமுதத்தைப் பருகி நிற்கின்றது.

இ. இச் செய்யுளில் புகழ் அமுதமாக உருவகிக்கப்பட்டுள்ளது. அஃது உருவகவணியின் பாற்படும். கைகேயியின் குற்றங் குணமாகச் சொல்லப்படுவதால் இலேசவணியுளதென்றுங் கூறலாம்.

XX. தூப முற்றிய காரி ருட்பகை துள்ளி யோடிட உள்ளெழும்
தீப முறழவும் நீர்த்த கன்றெனச் சேய தாருயிர் தேய்தலால்
பாப முற்றிய பேதை செய்த பகைத்தி றத்தினில் வெய்யவன்
கோப முற்றி மிகச் சிவந்தன னொத்த னன்குணக் குன்றிலே.
இதில் வந்துள்ள அணி யாது?

அ. மந்தரையின் நஞ்சனைய வஞ்சகச் சொற்களால் மனமாற்றம் அடைந்த கைகேயி தன் அலங்காரங்களை அழித்துப் பூமியிற் கிடந்தாள். நள்ளிரவு அவளரண்மனை அடைந்த தசரதன் வேதனை அடைந்து காரணம் வினவி வேண்டுவன தருவதாக இராமன் மீது ஆணையிட்டுச் சொன்னான். மந்தரை போதனைப்படி தசரதனைக் கொடுமைப்படுத்தி இரு வரங்களையும் வாங்கினாள். தசரதன் அறிவு மயங்கிக் கிடந்தான். தான் எண்ணிய கருமம் முற்றுப் பெற்றதனால் மன மகிழ்ச்சி அடைந்த

கைகேயி துயின்ருள். இரவு கழிந்தது. கோழிகள் கூவின; பறவைகள் ஒலித்தன முதலாய பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவ்வியற்கை நிகழ்ச்சிகளைக் கதையோடு தொடர்புறுத்தித் தமது கற்பனைத் திறத்தால் அற்புதமான கவிகள் படைத்தார் கம்பர். சூரிய உதய வருணனை இச் செய்யுளிற் சொல்லப் படுகின்றது.

ஆ. கரும்புகை போன்ற இருளாகிய பகை எழுந்து விரைந்து ஓடவும், வீடுகளில் உள்ள விளக்குகள் தம் ஒளி குறைந்தன எனவும், தன் குலத்துப் பிறந்தவனுகிய தசரதனது அரிய உயிர் தேயுமாறு தீவினை உடைய கைகேயி செய்த செயலை நினைத்துக் கோபமுற்றவன் போலவும் செந்நிறமாக உதய கிரியின்மேல் சூரியன் தோன்றினுன்.

இ. சூரியன் உதிக்கின்றதாகிய இயற்கை நிகழ்ச்சிக்கு கதையோடு பொருந்திக் காரணங் காட்டித் தன் குறிப்பைக் கம்பர் ஏற்றிச் சொல்வதால் இச் செய்யுளில் தற்குறிப்பேற்ற வணி உளது என்று கூறலாம்.

xxi. திணிசுட ரிரவியைத் திருத்து மாறுமப்
பணியிடைப் பள்ளியான் பரந்த மார்பிடை
மணியினை வேகடம் வகுக்கு மாறும்போல்
அணிநகர் அணிந்தனர் அருத்தி மாக்களே.

இச் செய்யுளில் உள்ள அணி யாது?

அ. வாசனை மிகுந்த மாலையை அணிந்தவனுகிய தசரதன் சோதிடர்களைப் பார்த்து இராமன் முடிசூடுவதற்கு ஏற்ற மங்கல நாளை ஆராய்ந்து சொல்லுங்கள் என்று கூறினன். அவர் களும் அடுத்தநாள் ஏற்ற நாள் என்றனர். தசரதன் குலகுரு வாகிய வசிட்டனை வரவழைத்து, 'இராமனுக்கு முடிசூட்டும் நாள் நாளை ஆதலின், செய்யவேண்டிய சடங்குகளைச் செய்து உணர்த்தவேண்டியவற்றை உணர்த்துங்கள்!' எனக் கூறினன். வசிட்டரும் வேண்டிய அறவுரைகளைக் கூறித் திருமால் கோயி லுக்கு அழைத்துச் சென்று செய்யவேண்டியன யாவுஞ்செய்து தருப்பையில் இருத்தி மன்னனுக்கு அறிவித்தார். மன்னனும் வள்ளுவரை வரவழைத்து இராமனுக்கு முடிசூடடுஞ் செய் தியை அறிவித்து, நகரத்தை அலங்கரிக்கும்படியும் பறையறை யும்படியும் கட்டளையிட்டான். நகரமக்கள் மனமகிழ்ச்சியுடன் நகரை அலங்கரித்தமையைப் புலவர் இப்பாடலிற் கூறுகின்ருர்.

ஆ. இராமபிரான் முடிபுனைய வேண்டும் என்னும் ஆவல் உடைய நகரமக்கள், நெருங்கிய ஒளிபொருந்திய சூரியனை மேலும் அழகுறச் செய்வது போலவும், ஆதிசேடன் என்னும் பாம்பிற் பள்ளிகொள்பவனாகிய திருமாலின் மார்பின்கண் விளங்கும் கௌத்துவ மணியைச் சாணைபிடித்து ஒளியூட்டு வது போலவும் இயற்கை அழகு நிறைந்த அயோத்திநகரை மேலும் அலங்காரஞ் செய்தனர்.

இ. இயற்கை அழகு நிறைந்த அயோத்தி நகருக்குச் சூரியனையும், திருமாலின் மார்பிலுள்ள கௌத்துவ மணியை யுங் கம்பர் உவமையாகக் கூறினார். நகரை, மக்கள் அலங் கரித்தல் சூரியனைத் திருத்தலும், கௌத்துவமணியைச் சாணை பிடிப்பதுபோலவும் இருந்தது. இதில் வந்தவணி உவமையணி யாகும். உவமான உவமேயம் பின்வருமாறு:

| உவமேயம் | உவமானம் |
|---|---|
| நகரைமக்கள் அலங்கரித்தல் | சூரியனைத் திருத்தல் |
| | கௌத்துவமணியைச் சாணைபிடித்தல் |

xxii. <u>அரிந்தான் முன்னோர் மன்னவ னன்றே அருமேனி</u>
வரிந்தார் வில்லாய் வாய்மை வளர்ப்பான் வரநல்கிப்
பரிந்தால் என்னும் என்றனள் பாயுங் கனலேபோல்
எரிந்தா றுதே இன்னுயி ருண்ணு மெரியன்னாள்.

கீறிட்ட பகுதியை விளக்குக.

இச் செய்யுளில் வந்த அணி யாது?

அ. மந்தரையின் போதனைப்படி கைகேயி தன் அலங் காரத்தை அழித்து நிலத்திற் புரண்டாள். நள்ளிரவு அவ ளரண்மனைக்கு வந்த தசரதன் வேதனையடைந்து காரணம் வினவினன். கைகேயி வரமிரண்டையும் வாய் திறந்து கேட் டாள். சொல்லொணு அல்லல் உற்ற தசரதன் செய்வது அறியாது திகைத்து, பெண்ணென மனத்தில் எண்ணிப் பெரு மூச்சுவிட்டான். கைகேயி சிறிதும் இரங்கவில்லை. வஞ்சனையின் வேடமே என முன்னோர் சொன்னவற்றை நினைத்து, இவ் வாறு கைகேயி கேட்ட காரணம் வினவினான். கைகேயி வர மீயாவிடில் இறப்பேன் என உறுதியுடன் கூறினள். கைகேயி யின் உறுதிப்பாட்டைக் கண்ட தசரதன் இரந்து இராமன் காடு ஏகாமற் செய்ய விரும்பிக் காலில் விழுந்து கெஞ்சினான்.

இரங்கவில்லை. உன் அடைக்கலம் என்ருன். ஒன்றுக்கும் இரங்காத கைகேயி வாய்மைக்காக—கொடுத்த வாக்கிற்காக—தன் உடலை அரிந்தான் சிபியெனக் கூறித் தந்த வரத்தை மாற்றல் அழகன்று என்று எடுத்துக் காட்டினுள்.

ஆ. விரைந்து பரவுகின்ற நெருப்பைப்போல எரிந்து தணியாது உயிரை உண்ணும் புதுவகை நெருப்பை ஒத்த கைகேயி, இறுகக் கட்டிய வில்லையுடைய மன்னவ! சத்தியத்துக்காகச் சிபி என்னும் மன்னவன் தன்னுடலையே அரிந்து கொடுத்தானல்லவா? அம் மன்னன் மரபில் வந்த நீ வரத்தைக் கொடுத்துவிட்டு, பிறகு வருந்தினுல் என்ன பயனுண்டாகும்?

இ. பருந்துக்குப் பயந்து தன்னகம் அடைக்கலம் புகுந்த புருவைக் காப்பேன் என்று கூறிய சொல் பொய்யாவண்ணம் சிபிச்சக்கரவர்த்தி தானே தராசில் ஏறி வாய்மையைக் காப்பாற்றினுன். இதை ஞாபகப்படுத்தித் தசரதனை வாய்மை ஓம்பும்படி கேட்கின்ருள் கைகேயி.

இதில், கைகேயிக்கும் நெருப்புக்கும் எரிக்கின்ற தன்மையில் ஒற்றுமை உண்டென்றும் ஆனுல், கைகேயி உயிரையும் எரிப்பாள் என வேற்றுமை தோன்றவும் சொல்லப்பட்டிருப்பதால் வேற்றுமை அணி உளது.

xxiii. கார்மினே லோயதென நூல்களுலு மார்பன்
தேர்மிசைநம் வாயில்கடி தேகுதல்செய் வானே?
கூர்கனக ராசியோடு கோடிமணி யாலும்
தூர்மினெடு வீதியினை யென்றுசொரி வாரும்.

கீறிட்ட பகுதியை விளக்குக.

அ. முடிசூட்டிற்காகத் தசரதனை அழைக்கச் சென்ற சுமந்திரன் அரண்மனையில் அவனைக் காணுதவனுய்க் கைகேயியின் மாளிகையை அடைந்தான். பணிப்பெண்களால் அறிந்த கைகேயி இராமனை அழைத்துவரும்படி அவனுக்குக் கட்டளையிட்டாள். சுமந்திரன் விரைந்து சென்று இராமனுக்கு அறிவித்தான். இராமனும் தாரணி தேரில், அரசவெள்ளங் கடலெனச் சுற்ற, கீதங்கள் ஒலிக்க, தையலார் இரைந்து நோக்கச் சென்ருன். தேரிற் சென்ற இராமனைக் கண்ட மக்கள் மகிழ்ச்சியும், இளமங்கையர் மயக்கமுங் கொண்டனர். இச்

செய்யுளில் தேர் விரைந்து சென்ருல், இராமன் அழகை அள்ளிப் பருகி இன்பமடைய முடியாது என்பதை உணர்ந்த, இராமன்மேல் காதல் கொண்ட இளமகளிர் ஆற்றிய ஒரு செயலைக் கம்பர் அழகாகச் சித்திரிக்கிருர்.

ஆ. சூல்கொண்ட மேகம் மின்னலொடு உலாவுவது போல முப்புரிநூல் மார்பில் விளங்கும் இராமன் தேரின்மேல் செல்வதால் நம் வீட்டு வாயிலை விரைந்து கடந்துவிடுவானே? என்று எண்ணியவர்களாய், இளம் பெண்கள் " அவன் தேர் விரைந்து செல்லாவண்ணம் பொன்னையும் மணியையுந் தூவி நீண்ட தெருவீதியை அடையுங்கள் " என்று கூறிக்கொண்டே பொன்னையும் மணியையுஞ் சொரிந்தார்கள்.

இ. கார்மின்னெடு உலாயதென நூல்கஞலு மார்பன் என்னுஞ் சொற்றொடர் கார்காலத்து மேகம் மின்னலோடு உலாவுகின்ற தன்மைபோல முப்புரிநூல் விளங்குகின்ற மார்பினை உடைய இராமன் என்ற பொருளை உடையது. இராமனுக்குக் கார்காலத்து மேகமும், முப்புரி நூலுக்கு மின்னலும் உவமைகளாக வந்தன.

xxiv. நலங்கிளர் பூமி யென்னும் நங்கையை நறுந்து ழாயின்
அலங்கலான் புணருஞ் செல்வங் காணவந் தடைந்தி லாதார்
இலங்கையி னிருந ரேயிவ் வேழுல கத்து வாழும்
விலங்கலு மாசை நின்ற விடாமத விலங்க லேயால்.

இச் செய்யுளிலிருந்து நீர் அறிவது என்ன?

அ. தன் மாளிகையை நள்ளிரவில் வந்தடைந்த தசரதனிடம் மகன் பரதன் நாடாளவும், இராமன் காடாளவும் இரு வரங்கள் கேட்டாள் கைகேயி. இது செவியுற்ற தசரதன் விட வேகம் அடங்கிவிழும் யானைபோல நிலத்தில் விழுந்து புரண்டான். பின், தன் துயர் கண்டும் கலங்காது நின்ற கைகேயியைப் பல கேள்விகள் கேட்டான். இரங்காத கைகேயியைக் கொல்ல நினைத்துப் பின்னர் மனம் மாறிக் காலில் விழுந்து இரந்தான். கைகேயியின் பிடிவாதக் குணத்தைக் கண்ட தசரதன் வரத்தை நல்கி மூர்ச்சையானுன். பொழுதுபுலர்ந்தது. யாவரும் முடிசூட்டுவிழாக் காணத் தம்மை அழகுபடுத்திக் கொண்டு வந்து கூடினர். முடிசூட்டுவிழாவிற்கு வராதோர் யார் என இக் கவியில் கம்பர் எடுத்துக் காட்டுகிருர்.

ஆ. வாசனை கமழும் துளசி மாலையை அணிந்த இராமன் அழகு விளங்குகின்ற பூமாதேவி என்னும் பெண்ணைத் திருமணஞ் செய்கின்ற சிறப்பைக் காண வந்து சேராதோர் இலங்கைவாழ் அரக்கரும், இந்த ஏழ் உலகங்களிலுள்ள மலைகளும், அட்டதிக்கு யானைகளுமேயாம்.

இ. இராமனுக்கு அரக்கர் தவிர வேறு யாரும் உயர் திணைப் பொருள்களிலே பகைவராய் இல்லெனன்பதும், ஏழுலகில் உள்ள மலைகள் இயங்காதன வாதலாலும், அட்டதிக்கு யானைகள் தம் காவலில் நீங்குதல் முடியாமையால் வரவில்லை என்பதும் இச் செய்யுளில் இருந்து அறியக்கிடக்கின்றன. இச் செய்யுளில் கைகேயியின் தந்தை கேகயன், இராமரின் தம்பியர் பரத சத்துருக்கர் என்போர் பெயர் வாராதோர் பட்டியலில் கம்பராற் சேர்க்கப்படாத காரணம் சிந்திக்கற்பாலது. கம்பர் கூற்றிலிருந்து ஆசை மிக்குள்ள கடமை தவறவிடா மதமலைகள் எனவும் பொருள் கூறி யானைகளுக்கு முடிபுனை விழாக்காண ஆசை இருந்தனவென்றும் அறியக்கிடக்கின்றது. அரக்கர் மலையும், யானையும் போன்றவர் என்றுங் கூறலாம்.

2. "வில்லியல் தோளவற்கு ஈண்டு வேண்டுவ ஒல்லையி னியற்றி நல்லுறுதி வாய்மையுஞ் சொல்லுதி பெரிதெ"னத் தசரதன் பணித்தபடி வசிட்டன் இராமனுக்குக் கூறிய அறவுரைகள் எவை?

இராமன் முடிசூட்டப் பெறுவதற்கு முதனாட் செய்ய வேண்டிய யாவற்றையுஞ் செய்யும்படி கூறிய தசரதன் கட்டளைப்படி இராமனிடம் விரைந்து சென்ற ஒல்கலில் தவத்து உத்தமனாகிய வசிட்டன் இராமனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினன்.

"போர்வல்லமை பொருந்தியவனே! நாளையதினம் மன்னன் நானிலத்திற்கும் உன்னை அரசனாக்கப் போகின்றான். நான் உனக்கு உறுதிப் பொருள்கள் சிலவற்றைக் கூறுகின்றேன். அவற்றை நன்கு கேட்டு அவற்றின் வழி ஒழுகிச் சீருஞ்சிறப்புமாக வாழ்வாயாக.

மும்மூர்த்திகளிலும், ஐம்பெரும் பூதங்களிலும், சத்தியத்திலும் முனிவர்கள் பெரியவர் ஆவர்; ஆதலின் அவர்களைப் போற்றுக. மைந்தனே! தேவர்களுள்ளே அறவோராகிய முனிவரது கோபத்தால் கேடுற்றவரையும், அவரருளால் கேடு

நீங்கினவரையும் எண்ணிற் சொல்ல முடியாது. ஆகையால் அவர்கள் கோபத்துக்காளாகிக் கேடுறுமல் அவர் தாளிணை வணங்கி, இன்சொற் பேசி ஏவியவழி நிற்பாயாக. விதியே அவர் கட்டளைப்படி ஏவல் புரியும் எனின் அவரைப் பணிவதைப்போல் சிறப்புடைய செயல் யாது?

அருள், நடுநிலைமை, அறம் மூன்றும் மனிதனுக்கு மிகவுந் தேவையானவை. இவை நீக்கிய மும்மூர்த்திகளுக்கே உய்வில்லை யென்றுல் மனிதருக்குச் சொல்லவும் வேண்டுமா? பஞ்சமா பாதகங்கள் உன்னிடம் இல்லையாயினும், குற்றம் எனப்படும் அனைத்தையும் அடைதற்குச் சூது முதலியன மூல காரணம் என்பதை அறிந்துகொள்.

ஒரு மன்னன் யாரோடும் பகைகொள்ளமாட்டான் என்று பிறர் சொல்லுமாறு நடந்துகொண்டால் உலகில் போரே இல்லாது போய்விடும்; போரின்மையால் அவன் புகழ் சுருங்காது; அவன் சேனையுங் குறைபடாது; அவன் சந்ததி வேரொடுங் கெடமாட்டாது. ஐம்பொறி ஆசைகளைக் குறைத்து நாட்டின் பொருளைப் பெருக்கி நடுநிலைமையோடு ஆளும் அரசனே சிறந்த அரசனுவான். மும்மூர்த்திகளிலும் மேம்பட்ட வலிமையுடையவராயிருந்தாலும் அமைச்சர் சொல்வழி நடப்பதே சிறந்தது. மூவுலகங்களிலும் உயர்ந்ததான அன்பே எல்லாச் செல்வங்களையுந் தரவல்லது. உலகமாகிய உயிர் வாழும் உடம்பு போன்ற மன்னன் தருமம் தவருது, மெய்ம்மையில் நின்று வாழ்ந்தால் அவன் ஒரு வேள்வியுஞ் செய்ய வேண்டியதில்லை. இன்சொல், ஈகை, ஆராய்ச்சி, வன்மை, விடாமுயற்சி, தூய்மை, பெருந்தன்மை, வெற்றி, நீதி கடவாமை ஆகிய குணங்களை உடைய மன்னனுக்கு ஒரு காலத்தும் அழிவில்லை. நடுநிலைமை பொருந்திய மன்னனுக்குக் காலமே கண்ணுகும். நற்செயலை மேற்கொள்ளும் பெரியோர் ஏவற்படி விதியும் நடக்கும். ஆதலின் அவர் ஆர்வமே மன்னன் ஆயுதமாகும். பெண்களினுல் வளரும் ஆசை இல்லை எனில் இருமையுந் துன்பமில்லை.''

3. மக்கள் நகரை அலங்காரஞ் செய்தமையைச் சுருக்கி எழுதுக.

இராமன் முடிசூடப் போகின்றுன் என்ற செய்தி கேட்ட நகரமக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் அளவு இல்லை,

மகிழ்ச்சிக்கடலுள் மூழ்கிய மக்கள் சூரியனைத் திருத்துவது போலவும் திருமாலின் மார்பிலுள்ள கௌத்துவ மணியைச் சாணை பிடிப்பதுபோலவும் இயற்கை அழகுள்ள நகரை மேலுஞ் செயற்கையாக அழகுபடுத்தினர். பன்னிறக் கொடிகள் வரிசையாகக் கட்டப்பட்டன. அவை இராமன் எய்தும் அரசசெல்வத்தைக் காணவிரும்பி அயோத்திநகர் அடைந்த பறவைக் கூட்டங்கள் போன்றன. வாழை, கமுகு போன்ற மரங்கள் கட்டப்பட்டன. முத்துமாலைகள் தொங்கவிடப்பட்டன. பொன்னாற் செய்யப்பட்ட பூரண கும்பங்கள் எங்கும் நாட்டப்பட்டன. சந்திரனைத் தொடுமாறு உயர்ந்துள்ளனவும், இராமன் முடிசூட்டுவிழாவிற்கெனவே புதிதாகச் செய்யப்பட்ட மகரதோரணங்கள் கட்டப்பட்டனவுமான கோபுர வாயில்களின் வரிசைகள், காலையிற் றோன்றும் இளஞ் சூரியன் புத்தழகோடு வந்தது போற் காட்சியளித்தன. வெண்டுகிலால் மறைக்கப்பட்ட செம்மணித் தூண்களும், பவளத் தூண்களுஞ் சிவனது வடிவத்தையும், சூரியனது தோற்றத்தையும் ஒத்திருந்தன. முத்துக்களாலும், செம்மணிகளாலும், நீலமணிகளாலும் செய்யப்பட்ட அலங்காரம், மூவொளியும் ஒன்று கலந்து தோன்றிச் சோதிடர் கூறும் நன்னாளைப்போன்றது. பூவுலகைக் காணும்பொருட்டு வீட்டுலகில் நின்றும் வீழ்ந்த விமானங்களைப் போலக் குதிரைகள் பூட்டப்பட்ட தேர்களும், உதயமலை சூரியனோடு திரிவதுபோல நெற்றிப்பட்டமணிந்த யானைகளும் வீதியெங்கும் உலாவின. சுவர்களிற் பதிக்கப்பெற்ற மணிகள் இருளை நீக்கின.

நகர் அலங்கரிப்போர் சொரியும் பூமழையும், வாசநீர் மழையும், வாசப்பொடிகளின் மழையும், அணிகள் ஒன்றோடு ஒன்று நெரிவதால் உண்டாகும் பொன்மழையுஞ் சேர்ந்து ஊழியிறுதியிற் பெய்யும் பெருமழையை ஒத்தன. களிறுகளும், பிடிகளும் வீதியெங்கும் உலாவின. அயோத்தி நகரம் பொன்னகர்போல் பொலிவுற்று விளங்கியது.

4. கூனிக்கும் கைகேயிக்கும் இடையில் நடந்த உரையாடலைச் சுருக்கி எழுதுக.

கூனி: வருத்துகின்ற கொடிய நச்சுப்பாம்பு நெருங்கி வருகின்ற காலத்தும் தன்னியல்பு மாறாது ஒளியை நல்குங் குளிர்ந்த வெள்ளிய நிலாவைப்போல மிகப் பெரிய துன்பம் உன்னை வருத்துவதற்கு நெருங்கி நிற்கவும், வருந்தாது உறங்குவது அழகா?

கைகேயி : பகைவரைத் தோற்கடிக்கும் வில்லையுடைய வரும், அறத்தோடு மாறுபடாது வாழ்பவரும், செம்மையுடைய வரும் ஆகிய மக்கள் இருக்கும்போது எனக்கு வருந் துன்பம் யாது? அன்றியும் இராமனைப் பயந்த எனக்குந் துன்பமுண்டா?

கூனி: கோசலாதேவி தன் மதியினால் வாழ்ந்தாள். உன் நலன்களும் செல்வமும் அழிந்தன. நீ சிந்தித்தாயா?

கைகேயி : கூனியே! என் கணவனே இராசாதி இராசன். என் மகன் பரதனே பெரும் புகழுடையோன். இதனினும் மேலாகக் கோசலைக்கு வரும் வாழ்வுதான் என்ன?

கூனி: ஆடவர் இகழ்ச்சி அடையவும், வீரத்திற்கு இழுக்கு உண்டாகவும், தாடகை என்னும் பெண்ணைக் கொலை செய்த இராமன் நாளை மணிமுடிபுனைவான். இதுதான் கோசலை அடையும் வாழ்வு. (கைகேயி கொடுத்த முத்துமாலையைச் சுழற்றி எறிந்து) நீ ஒரு பைத்தியக்காரி; உன் மகனோடு நீயும் எண்ணில் காலம் இன்னல் அநுபவி. நான் கோசலையின் தாதியருக்கு அடிமையாகமாட்டேன். சீதையும் இராமனும் உயர்ந்த ஆசனத்தில் இருக்க, உன்மகன் வெறுநிலத்திருக்க நிலைமை உண்டானபோது நீ உவகை கொள்ளக் காரணம் என்ன? கோசலை தன் மகன் பெருமையை மறக்கவில்லை. ஐயோ! பாவம். பரதன் உன் வயிற்றுதித்தமையால் பிறவாத வன்போல வாழவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டதே! நாடு முழுவதையும் இராமன் இலக்குமணனோடு ஆளப்போகின்றான். பரதன் தவம் மேற்கொள்வதே நலம். வீரன் பரதன் அரசர் வரிசையில் வைக்கப்படாமற் போய்விட்டானே! இறந்தாலும் நல்லதே. பரதனைத் தசரதன் கேகயன் நாட்டிற்கு அனுப்பிய மர்மம் இன்றுதான் புலனாகின்றது. பரதனுக்குத் தந்தையே அன்றித் தாயுங் கொடியளாய் மாறிவிட்டாள். பரதனே! நீ என்ன செய்யப்போகின்றாய்? அஃதிருக்கட்டும்; தேவியே! மன்னர் குடியிற் பிறந்து, மன்னர் வீட்டில் வளர்ந்து, மன்னர் வீட்டிற் புகுந்தாயே! புகுந்தும் துன்பத்தில் வீழ்கின்றாய். போகட்டும். பரதனிடம் அமைந்த பண்பெல்லாம் பாழ்பட்ட இடத்திற் சொரிந்த பாலமுதமாயிற்றே. சிந்தித்தாயா?

கைகேயி : தீயோய்! ஆரிய குலத்தில் உதித்த அரசர்கள் எவை மாறினும் உரை மாறுபடார். அப்படியிருக்க வழிவழியாகப் பின்பற்றப்பட்ட மரபிற்கு மாசு தேட என்ன சொன்னாய்?

எவை அழிந்தாலும் வரன்முறைதிறம்பிப் புகழை இழக்கலாமா? நீதியல்ல, நெறியல்ல நினைத்துக் கூறிய நின் நாவைச் சேதியாது பொறுக்கின்றேன். உன் சொற்களைப் பிறர் அறியின் என்னாகும்? அறிவிலி! அடக்கு நாவை.

கூனி: வஞ்சிக்கொடியே! என் தஞ்சமே! வெஞ்சினங் கொண்டு என்னை வெறுக்கினும் வெறுக்க. உனக்கு நன்மை தருவனவற்றை நவிலாதுவிடேன். முறையாம் முறை! என்ன முறை கண்டாய்? மூப்படைந்த தசரதன் இருக்க இராமன் முடிசூடலாம் என்றால் ஏன் பரதன் முடிசூடக்கூடாது? அருந் தவரும் அருநிதி பெற்றால் அகங்காரங் கொள்வர் என்றால் இராமன் விதிவிலக்கா? அவனுந் தாயுந் துன்பமியற்றார் என்பதற்கு என்ன உறுதி? இராமன் முடிபுனையில் உனக்கும் உன் புதல்வனுக்கும் உரிய பொருள் யாது? வரையாது வழங்கிய நீ! வறுமை தூண்ட வந்து இரந்தால் கைவிரிப்பாயா? அல்லது அவர்களிடம் கைகட்டி வாய்பொத்தி வாங்கி ஈவாயா? அல்லது மாண்டுபோவாயா? சொல். உன் புத்தி கலங்கி விட்டதா? உன் பெற்றோர், உறவினர், குலத்தினர் வந்து தம்மிழிவைப் போக்க விரும்பின் அவர்கள் காண்பது யார் செல்வத்தை? சிந்தித்துப் பார்த்தாயா? சனகன் தசரதனுக்குப் பயந்து உன் தந்தையோடு போரிடாதிருக்கின்றான். இனி என்ன செய்வான்? யோசித்தாயா? தந்தை அழிவை விரும்புகின்றாயா? அரசாட்சி இனிமேல் உங்கள் குலத்திற்கு எவ்வாறு வரும்? இவை யாவையுஞ் சிந்தித்து ஆவன செய்.

கைகேயி: என்னின்னுயிரே! நீ எனக்கு அன்றி, என்மகனுக்கும் நல்லவள். என் மகன் மணிமுடிபுனையும் உபாயம் விரைவிற் சொல்வாய்.

கூனி: நளிர்மணி நகையாய்! என்னுரை தலைநிற்பின் மன்னன் மனநிலை தாழும். ஈரேழு உலகமும் உன் மகனுக்காகும். உனக்கு ஞாபகமிருக்குமல்லவா? சம்பரனை உன் உதவியால் வென்றகாலை இருவரங்கள் தருவதாக உன் கணவர் உரைத்தார் அல்லவா? ஒன்றினால் பரதன் நாடாளவும், மற்றதனால் இராமன் காடாளவும் இருவரங்களையும் வாங்கிக் கொள். இவ்வுலகமெல்லாம் உன்மகன் ஆளுகைக்கு உட்படும்.

கைகேயி: பூமியை என் ஒரு மகற்கீந்தாய். இனிமேல் நீயே என் மகன் பரதனுக்குத் தாய்.

5. இராமன் விழாமண்டபம் நோக்கி வீதியிற் செல்வதைக் கண்ட மக்கள் மகிழ்ச்சியைப் புலவர் எவ்வாறு வருணிக்கின்ருர் ?

இராமன் முடிசூடிக்கொள்ள மண்டபஞ் செல்கின்ருன் என்பதை அறிந்த மக்கள் வீதியின் இருபுறமும் மொய்ந்துக் கொண்டார்கள்; தங்கள் உயிர் எல்லாம் ஒன்ருகித் தேரில் ஏறி வீதியிற் செல்வதைக் கண்டார்கள். கைகேயியின் கட்டளைப்படி முடிதுறந்து, நிலமகளைப் பிரிந்து வனத்துக்குப் போகு முன்னே வனிதையர் தோள்களாகிய மூங்கில்களும் கண்களாகிய வேல்களும் அடர்ந்துள்ள காட்டிற் புகுந்து சென்ருன்.

வாசனைச்சுண்ணம், மலர், சந்தனம் முதலியவற்றைத் தூவவந்த மகளிர் இராமன் அழகில் மயங்கி அவற்றைத் தூவாது, மேகலை, நாண் என்பவற்றைத் தூவினர்; மன்மதன் பாணந்துளைத்த மார்பகங்களைக் கண்பொழிந்த காமநீராற் கழுவினர். வேறு சிலர், நம்மிடத்து அன்பில்லா இவன் உலகங் காத்தற்கு ஏற்றவன் என்று சொல்வது பொருந்துமா? என்று கூறி இராமன் ஒருவனன்றிப் பலர் என்றனர்.

அயோத்தி நகரத்து முதியோர், இளைஞர், முனிவர் யாரும் அன்பினுக்கு எல்லை காணுராய், இராமனை அரசனுகப் பெற்றமையால் உலகம் உய்வடைந்ததென்றும், எங்கள் வாணுள் எல்லாம் உனக்கே தந்தோம் என்றும், எமது தவத்தின் பயனெல்லாம் உனக்கே உரியது என்றும், எமது நல்வினைப் பயனை நீயே பெற்றுக்கொள்க என்றுஞ் சொல்லிச் சொல்லி வாழ்த்தினர்.

தாமரையும், மழைமேகமும் இவன் கண்ணுக்கும், நிறத்திற்கும் உவமையாக என்ன புண்ணியஞ் செய்தனவோ என்பார் சிலர். வேறு சிலர் இராமனைத் தந்த தசரதனுக்கு நாம் செய்யக்கூடிய பிரதியுபகாரம் ஒன்றும் இல்லையே என்பார். இவனின் அருள் ஆதிமூலமே என்றழைத்த யானைக்கு அருள் செய்த திருமால் அருளுக்குச் சமனென்றும் இன்னுஞ் சிலர் கூறினுர். கண்களாற் பார்த்துக் காரணமின்றிக் கண்ணீர் சொரிந்தார் சிலர்.

நீலமேகம் போன்ற இவனது நிறைவும் அறிவும் பிறருக்கு இல்லை; பிறர்க்கு இல்லா ஒழுக்கம் இவனிடத்து இருப்பதால் காலவளவுக்கு உட்பட்ட தேவரில் அடங்கா ஒப்பற்ற

பரம்பொருளே இவன் என்றனர் சிலர். பகீரதன், முசுகுந்தன் புகழெல்லாம் உன் புகழின் பின் நிற்பதே என்றனர் வேறு சிலர். மைந்தனே! சந்தனம், மணிமாலை, சிந்துரம், யானைகள், குதிரைகள், பொன் ஆகிய இவற்றை எல்லாம், இல்லை என வந்திரக்கும் ஏழைகளுக்கு வழங்குக என வரிசையாக வைத்து வேண்டி நின்றனர் சிலர்.

வீதியிற் தேரின்மிசை இராமன் வருவதைக்கண்ட முது மகளிர், தாவி வருங் கன்றைக் கண்டு உருகும் தாய்ப் பசுபோல் மனமுருகி நின்றனர். பெருமை உடைய அரசர் எல்லாம் இராமன் தோன்றிய பின் புதல்வரைப் பெறுதல் பெருமை ஆகாது என்றனர். இராமன் விரைந்து செல்வதை விரும்பாத இளமகளிர் நவமணிகளை வீதியிற் குவித்துத் தேரைத் தடைப் படுத்தினர்.

பெற்றதாயின் கையில் வளராது கைகேயியின் கையில் வளர்ந்தான் தவமுடைமையால் இராமன் என்றனர் சிலர். கைகேயியின் மகிழ்ச்சி இயல்பானதே என்றனர் சிலர். உயர்ந்த பண்புகள் உடைய இராமன் புவிக்கு அரசனாவதால் பூமி எல்லோர்க்கும் பொதுவுடைமை ஆயது என்றனர் சிலர்.

மக்கள் மனமகிழ்ந்து புகழுரை வழங்கி நிற்க, இராமனும் தசரதன் அரண்மனையை அடைந்தான்.

**6. கைகேயி மாளிகையில் தசரதனுக்கும் கைகேயிக்கும் இடையில் நடந்த உரையாடலைத் தருக.**

தசரதன்: கண்ணே! நடந்தது என்ன? அது சொன்ன பின் என செயல் காண்டி. அவர் எவ்வுலகத்திருப்பினும் அவர் உயிர் கவர்வேன்.

கைகேயி: என்னிடம் உனக்கு அருள் உண்டா? உண்டேல், அன்று தருவதாகச் சொன்ன இருவரங்களையும் இன்றே தா.

தசரதன்: வள்ளல் இராமன் மீது ஆணை. உன் உள்ளம் உவந்ததை உடனே செய்வேன். கொஞ்சமேனும் உலோபம் செய்யமாட்டேன்.

கைகேயி: மன்ன! என்னிடந் தோன்றிய இடரைத் துடைப்பது நினைவாயின் கண்ணிமையாத் தேவர் கூட்டஞ் சாட்சியாகச் சொன்ன இருவரத்தையும் ஈ.

தசரதன்: வரம்பெற இடருழந்து கரம் நீட்டல் வேண்டுமா? என் பாரம் அகல அறைந்திடு. கொடுத்துவிடுகின்றேன்.

கைகேயி: இரண்டில் ஒன்றினால் பரதன் நாடாள்வது; மற்றொன்றினால் சீதை கணவன் காடாள்வது.

(தசரதன் துன்பமடைதல்)

தசரதன்: [(தனக்குள்) பெண்கள் வஞ்சனையின் உருவம் என்றே பண்டுதொட்டு மக்கள் அவர்களை நம்புவதில்லை.] நீ மனந் திகைத்துவிட்டாயா? வஞ்சமுடையோர் கற்பித்துக் கூறிய வஞ்சனைச் சொல்லைக் கேட்டாயா? என்மேல் ஆணை இட்டுக் கேட்கின்றேன்; உண்மையை ஒளியாது சொல்.

கைகேயி: அரசே! நான் மனந் திகைத்ததுமில்லை; எனக்குத் தியவர்கள் வந்து சொன்னதுமில்லை; வரந்தரிற் கொள்வேன்; அன்றேல் பழிவைத்து மாள்வேன்.

தசரதன்: ஆ! கொடியாய்! அறங் கொடியதே!! உண்மை அழிவதாக; (கைகேயியின் காலில் விழுந்து) நீ விரும்பிய போதும் நின்மகன் அரசை ஏற்றுக்கொள்ளான். அவன் கொளினும் உலகம் உடன்படாது. பரதனுக்கு முடிசூட்டி ஏன் பழிகொள்கிறாய்? பயன் என்ன? பரதன் முடிசூடின் பாரோர் அன்றி விண்ணோரும் விரும்பார். யான் கொடுக்க இராமன் ஏற்றான். நீ விரும்பின் அவனே பரதனுக்குக் கொடுப்பான். கண்ணை அல்ல உயிரை வேண்டினும் இப்போதே தருவேன். பெண்ணே! வள்ளல் கேகயன் மானே! விரும்பின் மண்ணைப் பெறு. மற்றதை மற. பேயும் இரந்து கேட்டால் தாய் தருவதுபோல் அன்புடன் தரும் நீ இதைத் தருவதில் தவறு என்ன?

கைகேயி: மன்னா! முன்னே தந்த வரத்தை இன்னே தராது மறுப்பாயேல் வாய்மைக்கு இனி யாரிருக்கின்றார் உலகில்?

தசரதன்: உன் மகன் பரதனும் நீயும் பாரை ஆள்க. ஆனால் என் மகனும், கண்ணும் உயிரும் போன்றவனும், நல்லவனுமாகிய இராமன் காடு கடவாமை நிலையை விரும்பு. நங்காய்! இராமன் காடேகில் நான் உய்யமாட்டேன். என் உயிர் உன் அடைக்கலம்.

கைகேயி: அரசே! தந்த வரத்தைத் தவிர் எனக் கூறல் அறநெறியாகுமா?

தசாதன் : கேள்வர் பொன்ருமுன்னம் போற்றிப் புகழ் கொண்ட பெண்களே அன்றிக் கணவரைக் கொன்ற பெண்களைச் சரித்திரங் கண்டதில்லை. கொடியவளே ! நீ உன் கணவனைக் கொல்லலாமா ? நான் இல்லா நீ, நங்கையரால் வெறுக்கப்படுவாய். தேவரையும் வென்று வாகைசூடிய எனக்கு என்வீட்டில் உள்ள பெண்ணுல் வந்தது மரணம் எனச் சொல்லப்படுவேனே ?

கைகேயி : அரசே ! என் சொல் தவறுமாஞல் இன்றே உயிர் துறப்பேன். வாய்மை காக்கச் சிபிச்சக்கரவர்த்தி தன் உடலேயே அரிந்தான் அல்லவா ? அவன் மரபில் வந்த நீ வரத்தைத் தந்து வருந்துவதிற் பயனென்ன ?

தசரதன் : கொடுத்துவிட்டேன் ; கொடுத்துவிட்டேன். என்மகன் கான் ஆள, நான் வான் ஆள்வேன் ; நீ பழி வெள்ளத்தில் நின் மகன் பரதனேடு நீண்டநாள் நீந்துக, நீந்துக.

7. **இராமன் மணிமுடிபுனேயும் விழாக்காணும் மகிழ்ச்சியால் உந்தப்பட்ட மக்கள் செயல்களைப் புலவர் எவ்வாறு வருணிக்கின்றுர் ?**

தன் குலத்தோன்றலாகிய தசரதனை மெலிவடையச் செய்த கைகேயியின் செயலே நினைந்து சினந்தனன்போல் உதய கிரியிற் கதிரவன் தோன்றினுன். வீரருள் வீரனுகிய இராமன் இவ்வுலகைத் தனியாளப்போவதற்கு அறிகுறியாகிய முடிபுனே அழகைக்கண்டு மகிழவாசைகொண்ட பெண்கள் முகம்போல முண்டகங்கள் மலர்ந்தன.

இராமன் முடிசூடப்போகும் நாள் இதுவென்பதைக் கண்ட மக்கள் ஆரவாரித்தனர். யானைபோன்ற வலிய இளைஞரது மனத்தைக் கவருகின்றவராகிய இளநங்கையர், கால்களிலே செம்பஞ்சுக் குழம்பினை ஊட்டுவர் ; பால்போன்ற வெள்ளிய சங்க வளையல்களைத் தெரிந்தணிவர் ; வாளையும் அம்பையும் நிகர்த்த கண்களினுடு மையென்ற பெயரை உடைய நஞ்சினைப் பூசுவர் ; புதிய பூக்களையும் சூடுவார்களாயினர். மங்கையர்தம் குங்குமச்சுவடு நீங்காத தோள்களை உடைய காளையர் எல்லாம் குற்றமற்ற முகத்தவராகி இராமபிரானின் தம்பியரைப் போன்று மகிழ்ச்சி உடையவராயினர். கற்பிற் சிறந்த அயோத்தி நகரிலுள்ள பெண்கள் எல்லாம் கோசலை மனத்தை

ஒத்த மனமுடையவர்போல் ஆனார்கள்; ஏனைய மகளிர் சீதையைப்போல் மகிழ்ந்தார்கள்; ஒழுக்கமுள்ள முதியோர் தசரதனைப்போல் மகிழ்ந்தார்கள்; முனிவர்கள் வசிட்டனைப் போல மகிழ்ந்தார்கள்.

அரசர்கள், உலகம் வறுமை அடையுமாறு அமிழ்தம் உண்ணக் கூடுகின்ற தேவர்போல இராமன் முடிபுனை வதைக் காணும் விருப்பால் அயோத்திக்கு வந்தனர். வீதியில் மங்கையர் கூட்டமும் மைந்தர் கூட்டமும் எங்கும் நெருங்கி ஏகுங்கள் ஏகுங்கள் என்று சொல்லியவண்ணம் இடம் பெய ராமல் நின்றன. கருங்குவளை மலரின் அழகையும், வேற் படையின் கொடுமையையும் சேர்த்துக் குழைத்து மையென்று பெயர்கொண்ட நஞ்சினை நன்கு தெரியுமாறு எழுதிச் சந்திர னிடத்தில் வைத்தாற்போன்ற பெரிய கண்ணையும் சிறிய இடையையும் உடைய மகளிர் மயிற்கூட்டம்போல் வந்து கூடினார்கள்.

இவ்வாறு முடிசூட்டுவிழாக் காண வந்தோரில் யாரது கூட்டம் பெரியது என்று அறிய முடியாதிருந்தது. அரசர் கூட்டமே பெரிது என்று சொல்லுவோரும்; படைவீரர் கூட்டமே பெரிது என்று சொல்லுவோரும்; மகளிர் கூட்டமே பெரிதென் போரும்; நகருள் புகுந்த கூட்டமே பெரிது என்பவரும்; வந்துகொண்டிருக்குங் கூட்டமே பெரிதென்று சொல்பவரு மாய்த் தாம்தாம் கண்டதையே முழுவதுந் தெரிந்ததாகக் கூறினரேயன்றி ஒருவரும் முற்றாகக் காணவில்லை. முடிசூட்டு விழாக்காண அயோத்தி நகருக்கு வராதவர்கள் இலங்கைவாழ் அரக்கரும், மலைகளும், அட்டதிக்கு யானைகளுமே ஆகும்.

தேவேந்திரனைப்போன்ற செல்வச் சிறப்புடைய மன்னர்க ளெல்லாம், கோடிக்கணக்கான சந்திரர் உளர் என்று கூறுமாறு, முத்தவெண்குடைகள் உயர்ந்து தோன்றவும், அன்னப்பறவை கள் எல்லாம் விண்ணில் நிறைந்தன என்னுமாறு வெண் சாமரைகள் நெருங்கவும் வந்தனராய் முடிசூட்டு மண்டபத்திற் புகுந்தனர். அந்தணர் யாவரும், தாம் முதன்முதற் பெற்று வளர்த்த புதல்வனுக்குத் திருமணஞ்செய்து காண்பவர்போல இராமன் இராசலட்சுமியை இணையும் மணத்தைக் காணப் புகுந்தார்கள். வந்த தேவர்கள் விண்ணை நிரப்பினார்கள்; மன்னவர் எட்டுத் திக்கையும் நிரப்பினர்; சங்கொலியும் முர சொலியும் கேட்டவர் செவிகளைத் தூர்த்தன; பொற் காசுகள்

ஏழுகடலேயுந் தூர்த்தன; மன்னரின் மேனியொளிகள் விளக்கொளியை மறைத்தன; முடியொளிகள் சூரியனை மறைத்தன; ஆரணங்குகளின் ஆபரண ஒளிகள் தேவர்களின் கண்களை மறைத்தன.

8. **"நீதியல்லவும் நெறிமுறை அல்லவும் நினேந்தாய் ஆதியாதலின் அறிவிலி அடங்குதி" எனக் கடிந் துரைத்த கைகேயியைப் பார்த்து மந்தரை கூறியவை யாவை?**

கைகேயியின் கடுஞ்சினமொழி கேட்டுங் கலங்காத — அவ்விடம் விட்டகலாத கூனி, கைகேயியைப் பார்த்து, "என் தஞ்சமே! உனக்கு நன்மை தருவதை உணர்த்தாதுவிடேன். மூத்தவனுக்கு அரசு உரியது என்ற மனுக்குல மரபைப் புகழ்கின்ருய். அம்முறைப்படி பார்த்தால் தசரத மன்னனைக் காட்டிலும் இராமன் இளையவனல்லவா? அப்படியிருந்தும் இராமன் முடிபுனைய உடன்பட்டால் ஏன் பரதன் அதற்கு உரியவனுகான்? சிந்தித்துப்பார். ஓடும் பொன்னும் ஒக்க நோக்கும் அருள்நிறை தபசிகளும் அரிய செல்வம் பெற்ற பின் வேறுபாடடைவர். நல்லவராய இராமனுங் கோசலேயும் எப்படி முன்னர்போல அரசசெல்வம் பெற்றபின்னும் இருக்க முடியும்? நீங்கள் மனவருத்தத்தால் அழியும்படி துன்பஞ் செய்வர்.

கோசலேயின் மகன் இராமன் மணிமுடிபுனையின், உலகம் முழுமையும் கோசலேக்கே உடைமையாகும். உனக்கும் உன் மகனுக்கும் கோசலே தரும் ஒரு சிறு பொருளல்லது வேறு பொருள் என்ன இருக்கிறது? வறுமையும் பசியுந் தூண்ட உன்னிடம் வந்து இரப்பவர்க்குக் கோசலேயிடம் இரந்து கொடுப்பாயா? இல்லேயென்று வெட்கமுறுவாயோ? ஈய முடியவில்லேயே என்று இறப்பாயோ? நீ திகைப்புக்கொண் டுள்ளாய். தங்கள் துயர்தீரப் பெற்ருேர், சுற்றத்தவர், உன் குலத்தோர் இங்கு வரின் அவர்கள் காண்பது யார் செல் வத்தை? உன் செல்வத்தையா? மாற்ருர் செல்வத்தையா?

உன் கணவனுகிய தசரதனுக்குப் பயந்தே, சீதையின் தந்தை சனகன் உன் தந்தையை அழிக்கவில்லே; இனி அச் சனகன், மன்னனுகிய இராமன் மாமன் என்ருல் சும்மா இருப்பானு? உன் தந்தைக்கு வாழ்வு உண்டா? மேலும் உன்

தந்தைக்குப் பகைவர் பலர் உளர். அவர் தாக்கும்போது கோசலநாட்டு மன்னன் உதவாவிட்டால் வெற்றி எப்படிக் கிடைக்கும்?

உன் பிள்ளை பரதனை அரசனுக்காது கெடுத்துவிட்டாய். தசரதன் தன் மகனுக்குக் கொடுத்த பேரரசு பரதனுதியோருக்கு உரியதாகாது. சிந்தித்தாயா?" என்ருள்.

9. காலை நிகழ்ச்சிகளைக் கம்பர் கதையோடு தொடர்புறுத்து வதை விளக்குக:

காலை நிகழ்ச்சிகளுங் கம்பர் அவற்றைக் கதையோடு தொடர்புறுத்தலும் பின்வருமாறு :

| நிகழ்ச்சிகள் | தொடர்புறுத்தும் முறை |
|---|---|
| i. இரவு கழிதல்: | i. கழிந்து சென்ற நாளெல்லாம் தனக்கும் தசரதனுக்கும் உயிர் ஒன்று என்பதற்கேற்ற செயல்களையே செய்து கொண்டுவந்து இப்போது வலிய தோளை உடைய தசரதன் துன்பம் அடையவுங் கண்டு சிறிது இரங்காத கைகேயியின் அடாத செயலைக்கண்டு இரவாகிய பெண் மைந்தர் முன் நிற்க வும் நாணினுள் என்று சொல்லுமாறு நீங்கினுள். |
| ii. கோழி கூவுதல்: | ii. தசரதன் பட்ட வேதனையைக் கண்டு கலங்கிச் சிறகாகிய கைகளால் வயிற்றிலடித்துக் கூவுவனபோல் கோழிகள் கூவின. |
| iii. பறவைகள் ஒலித்தல்: | iii. குளத்திலும் மரத்திலும் இருந்து சிறகுகளை அசைத்துப் பறந்த பறவை கள் கைகேயியை வைவனபோல் ஒலித்தன. |
| iv. யானைகள் துயிலெழல்: | iv. இராமன் சீதையோடு வனஞ் செல்கின்றுன் என நடுங்கும் மனத்தை யுடையனவாய் யாமும் இம்மண்ணைத் துறப்போம் என யானைகள் உறங்கும் இடத்திலிருந்து எழுந்தன. |

| நிகழ்ச்சிகள் | தொடர்புறுத்தும் முறை |
|---|---|
| v. விண்மீன் மறைதல் : | v. இராமனது கையில் மங்கலநாண் கட்டுவதற்கு முன்பு முத்துக்கள் பொருந்துவனவாய், உலகத்துக்கு நிழல் செய்ய விரித்த பந்தர் பிரித்தன போல் விண்மீன்கள் மறைந்தன. |
| vi. காரிகையார் எழுதல்: | vi. "இராமனைத் தொழும் நாள் அடைந்தது ; காமன் வில், குடை, கங்குல் கழிந்தன" எனப் பொருள்படக் காலை முரசம் முழங்கக் கணவரின் முன் காரிகையார் எழுந்தனர். |
| vii. கன்னியர் கனவு கலைதல்: | vii. தென்றல்வீச, நெகிழ்ந்த வாடை, மேகலை கலைய வருந்தினர் சிலர். சிலர் இராமனைப் புணரும் கனவினுக்கு இடையூறு வந்ததெனப் புழுங்கினர். |
| viii. குமுதமலர் குவிதல் : | viii. பெண்குலத்தின் பெரும்புகழுக்குப் பழிதேடிய கைகேயியின் செயல் கண்டு சிரிய நங்கையர் சிறந்த வாய் அடங்கின எனக் குமுதங்கள் குவிந்தன. |
| ix. காலைப்பண்கள் ஒலித்தல்: | ix. இராமனைக் கணவனுகப் பெருமையால் மன்மதன் அம்பாலும் வெண்ணிலவாலும் வாடையாலும் ஆவி சோர்ந்து வருந்துகின்ற மகளிரது செவியில் பண்ணொடு பொருந்தும் பாடல்கள் பையராபோல் நுழைந்து பருவரல் கொடுத்தன. |
| x. மைந்தர் துயில் எழல் : | x. எங்கள் கண்ணும் மனமும் வாழ்வின் பயனை அனுபவிக்கும் நாளுக்கு இடையூருக இருந்த இரவு கழிந்ததே ; என மைந்தர் எழுந்தனர். |
| xi. மாதர் துயில் எழல் : | xi. மலர்க்குவையில், கண்மூடி இராமன் முடிபுனைவதை நினைத்திருந்த மகளிர் கொண்டையில் அணிந்த மலர் மேல் இருந்த வண்டுகள் பொம்மென வொலிக்க இராமனைக் காணும் ஆசையால் எழுந்தனர். |

| நிகழ்ச்சிகள் | தோற்றுவிக்கும் முறை |
| --- | --- |
| xii. ஊடியவர் கூடாது எழுதல்: | xii. முடிசூட்டு விழாவிற்குச் செல்லும் அவாவினால் முதனாளே அணி கலங்கள் அணிந்த பெண்கள் கணவருடன் ஊடிக் கூடாது எழுந்தனர். |
| xiii. விளக்கொளி மழுங்கல்: | xiii. வீரருள் வீரனும், இராமன் காடேகவேண்டி வருமென வருந்து கின்றவனுமாகிய தெய்வத்தன்மை பொருந்திய தசரதனின் மேனி ஒளி மழுங்குமாறு போலத் தீபங்கள் ஒளி மழுங்கின. |
| xiv. சூரியன் உதித்தல்: | xiv. தன் குலத்துப் பிறந்த தசரனது ஆருயிர் தேயுமாறு செய்த கைகேயி மீது கொண்ட கோபத்தாற் சிவந்தனன் போன்று சூரியன் உதயமலையிற் றோன் றினான். |
| xv. தாமரை மலர்தல்: | xv. முழுமுதலாய சிவன் பிடித்த வில்லை ஒடித்த இராமன் பூமியைக் காவல் செய்ய முடிசூடும் அழகைக் காணலாம் என்ற ஆசை மிகுந்த பெண்களது முகம்போலத் தாமரைகள் மலர்ந்தன. |

## 10. கூனியின் குணவியல்புகளை ஆர்ாய்க:

இராமன் புகழ் ஈரேழு உலகமும் பரவச் செய்தவளும், இராமன் சரிதம் சிறந்த ஒரு சரித்திரம் ஆகச் செய்தவளும் கூனியாவாள். இவள் கைகேயியின் ஏவலாட்டி. இளமைக் காலந்தொட்டுப் பிரியாது வாழ்ந்தவள். இவளின் இயற்பெயர் மந்தரை. இவள் உடலில் அன்றி உள்ளத்திலும் கூன் உடையவளாக இருந்தாள். "உள்ளமும் கோடிய கொடியாள்" என்பது கம்பர் வாக்கு. இவளுடைய உண்மையான இயல்புகளைக் கம்பர் வாக்குகளாலும், மனமாற்றம் அடையாத கைகேயி உரைகளாலும், இவளின் செயல்களாலும் நாம் அறியலாம். இவளிடம் மிக்கிருந்த குணங்களைச் சிறிது ஆராய்வாம்.

i. தீமை மறவாதவள்: கூனி யானைக்குணம் படைத்தவள். கொன்றன்ன இன்னா செயினும் அதை அன்றே மறவாதவள். தீமையை நினைந்து, அதற்குத்தக்க பாடங் கற்பிக்கக் காலம் நோக்கியிருப்பவள். இராமன் இளமைப் பருவத்திற் கண்டு

வில்லில் வைத்து ஏவிய மண் உண்டை தன் முதுகிற்பட்டு மற்றையோர் நகைப்பிற்கு ஆளாக்கியதை அடிமனத்தில் வைத்து வஞ்சந்தீர்க்கக் காத்திருந்தாள். இராமன் சிறுபிள்ளை என்பதைச் சிந்திக்கவில்லை. விளையாட்டாகச் செய்தது என்பதை நினைக்கவில்லை. இது தீமை அல்லவெனினும் பெருந் தீமையாக எண்ணிக்கொண்டிருந்தாள். "பண்டைநாள் இராகவன் பாணி வில்லுமிழ் உண்டை உண்டு அதனை உள்ளத்துள் உள்ளுவாள்" என்பதனுல் தீமை மறவாதவள் என்பதையும், "மூண்டெழும் பெரும்பழி முடிக்கும் வெவ்வினை தூண்டிட" என்பதனுல் வஞ்சந் தீர்ப்பவள் என்பதையும் நாம் அறியலாம்.

ii. சொல்வன்மை படைத்தவள் : இவளிடம் சொல்வன்மை மிகவும் உண்டு. கைகேயியின் மனதை மாற்றி, இராமன் முடிசூடாமற் செய்தற்கு இவள் கையாளும் முறைகள் இவள் சொல்வன்மையைக் காட்டுகின்றன. கைகேயியின் தூயவுள்ளத்தைத் திரித்தற்கு, கோசலைக்கு வரும் ஆக்கத்தையும், கைகேயிக்கு வரும் அழிவையும்; இராமனுக்கு வரும் உயர்வையும், பரதனுக்கு வருந் தாழ்வையும்; எடுத்துக் காட்டித் தான் இரங்குவதாக நடிக்கின்ருள். கோபங்கொண்ட கைகேயிக்கு, ஈகை முதலியன இன்றி வாழவேண்டும் என்றும், பெற்றவர், உற்றவர் ஆதியோரை வருந்தவிட வேண்டும் என்றுந் தன் சொன்வன்மையை உபயோகித்து உபதேசஞ் செய்து அவளின் மனதை மாற்றினுள் கூனி.

iii. எடுத்த கருமத்தைத் திறமையாகச் செய்துமுடிப்பவள்: இராமன் முடிசூடாமற்றடுக்க விரும்பினுள் மந்தரை. இராமன் முடிசூடுவதைக் கைகேயிக்கு கூறினுள். பரிசு கொடுத்தாள் கைகேயி. பரிசைக் கோபத்தினுல் வீசி எறிந்து நிலத்திற் பள்ளம் ஏற்படுத்தினுள். இராமன் முடிசூடுவதால் ஏற்படுந் தீமைகளை விளக்கினுள். "மதியிலா மனத்தாய்"; "புலைச் சிந்தையால் என்ன சொன்னுய்?", "நாவைச் சேதியாவிட்டேன்", "அறிவிலி அடக்குதி" என்றெல்லாம் தன் எசமாட்டி ஏசிய காலத்தும் மனந் தளராது, தன் நாவன்மையால் நினைத்த காரியத்தைச் செவ்வனே நிறைவேற்றினுள். இவை கூனி எடுத்த கருமத்தைத் திறமையாக முடிப்பவள் என்பதை நமக்குக் காட்டுகின்றனவல்லவா?

iv. நடிப்பிற் சிறந்தவள் : கூனி, தன்னுடைய வஞ்சத்தைத் தீர்ப்பதை மனதில் வைத்துக் கைகேயிமீதும், பரதன் மீதும் அன்புள்ளவள்போல நடிக்கின்ருள். தன் உள்ளக்கிடக்கை புலனுகாதவாறு மறைத்துநடந்தாள். கைகேயி கோபித்தபோது, "வஞ்சிபோலி, நீ வெகுண்டு கூறியபோதும், நான் உறுபொருள் உணர்த்துகைத் தவிரேன்" என்று நடிப்பின்மூலம் தான் பற்றுள்ளவள்போற் காட்டுகின்ருள். பரதன்மீது தான் அளவு இல்லா அன்புள்ளவள் என்பதை, அவன் ஆற்றல் யாவும் புல்லிடை உக்க அமுதம் ஆகும் என்பதினுலும், "தந்தையுங் கொடியன் நற்ருயுந் தீயள்" என்பதினுலுங் காட்டுகின்ருள். அவளின் நடிப்பின் திறமைதான் என்னே!

v. கூரிய புத்தியுள்ளவள் : கைகேயி உரைத்தவற்றிற்கெல்லாம் தன் கூரிய புத்தியால் தக்கவிடைகள் கூறித் தன் புத்தி வன்மையை நமக்குக் காட்டுகின்ருள். மூத்தவருக்கு அரசுரிமை உரியது என்றும், தான் பிறந்த குலத்தும், புக்ககுலத்தும் மரபுக்கு ஏற்றது என்றும் எடுத்துக் காட்டினுள் கைகேயி. உடனே கூனி, தசரதனை மூத்தவன் இருக்க, இராமன் முடிசூடுவதற்கு உரிமை இருப்பின், ஏன் இராமன் இருக்கப் பரதன் முடிசூட முடியாது என்ற விஞவை வினவிப் பரதன் முடி சூடுவது பிழையல்ல என்பதைத் தன் புத்தி வன்மையால் நிறுவினுள். இவை யாவுங் கூனியின் கூரிய புத்தியைக் காட்டுகின்றன அல்லவா?

இவற்றைவிட ஆசிரியர் பலவிடங்களில் "சூழ்ந்த தீவினை நிகர் கூனி", "கொடுமனக்கூனி", "காலக்கோள் அன்னுள்", "வெவ்விட மனையவள்" என்று கூனியைக் கூறியுள்ளார். ஆதலால் நாம் கூனியை ஒரு தீயவளாகவே கருதவிடமுண்டு.

## 11. கைகேயியின் குணவியல்புகளைச் சுருக்கமாகத் தருக :

கைகேயி, கம்பராமாயணப் பாத்திரங்களுள் ஒரு முக்கிய பாத்திரமாக விளங்குகின்ருள். இவள் தசரதன் மனைவியருள் ஒருத்தி. இவளுடைய குணவியல்புகளைக் கம்பர் வாக்குகளாலும், இவளுடைய செயல்களாலும், வாக்குகளாலும் நாம் அறியக்கூடியதாக இருக்கின்றன. மந்தரையின் போதனைக்கு முன் மங்கையர் திலகமாக விளங்கிய கைகேயி, பின் பெண்டிரிற் கூற்றமாகக் காட்சி அளிக்கின்ருள். வஞ்சனை நிறைந்த நஞ்சனைய கூனியது துர்ப்போதனையால் மனம் மாறியபின்

அவள் தியவை யாவினுந் தியவளாய்க் காணப்படுகின்ருள். இமையோர் மாயையும், அவர் பெற்றுள வரமும், அந்தணர் அருந்தவமும், அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும் கைகேயி மனமாற்றத்துக்குக் காரணமாகக் கம்பர் கூறுகின்ருர். ஆகவே, அதற்குமுன் கைகேயியிடம் விளங்கிய குணங்களை ஆராய்வாம்.

i. கணவனை உயிராக மதிப்பவள்: தசரதனுக்கு மனைவியர் மூவர். அவர்களுள் இவள் தசரதனை உயிராக மதித்துவந்தாள். இல்லறக் கடமைகளிற் சிறிதேனுங் குறைபடாமல் மற்றைய விடயங்களிலுங் கணவனுக்கு உறுதுணையாக விருந்தாள். தன் உயிரையே பொருட்படுத்தாது, போர்க்களஞ் சென்று உதவி புரிந்து வெற்றியடையச் செய்தவள். கூனி பேரிடர் வந்துளது என்று கூறியகாலைத் தன் கணவர் மன்னர்மன்னன் எனக் கூறி அவன் இருக்கும்போது தனக்கு யாது இடர் வருமெனக் கேட்கின்ருள். "ஆவி அன்னுள்", "வீரன் தாதைபுக் கேற்ற வள் இதயத்திருக்கவே கொலாம்" என்று கம்பர் கூறியவற்றி விருந்துங் கைகேயி தசரதனை உயிராக மதித்தாள் என அறியக் கிடக்கின்றது.

ii. கணவனின் மற்றைய மனைவியரிடம் அன்புள்ளவள்: "இரண்டு பெண்டிர் ஆசை இழுபடுகிறதே மீசை" என்ற பழமொழி இருமனைவியர் உள்ளவர் படும் வேதனையைக் காட்டும். தசரதனுக்கு மூவர் மனைவியரிருந்தனர். கைகேயியோ மற்றைய இருவர்பாலும் அன்புள்ளவளாகவிருந்தாள். கோசலை வாழ்ந்தனள் மதியினுல் என்றும், இராமன் நாளை முடிசூடு வான் என்றுங் கூனி கூறியபோதும் கைகேயி அடைந்த இன்பத்துக்கு அளவில்லை. இராமன் முடிசூடுவதால் கோசலை அடையும் இன்பத்தைத் தானும் அடைந்தாள். "ஆற்றல்சால் கோசலை உள்ளமும் மங்கை உள்ளமும் ஒத்தலால் வேற்றுமை உற்றிலள்" என்ற கம்பர் வாக்கு கைகேயி கோசலையிடம் வைத்திருந்த பற்றை நமக்குப் புலப்படுத்துகின்றது.

iii. இராமனை மகனுகப் பாவித்தாள்: இராமன் கோசலை மகனுக விருந்தும் தன் மகனுகப் பாவித்து வளர்த்துவந்தாள் கைகேயி. "தாய் கையில் வளர்ந்திலன். வளர்த்தது கேகயன் மடந்தை" என்ற மக்கள் மொழிகள் இதனை வலியுறுத்தும். இராமனைப் பெருவிடத்தும் பெற்ற மகனுகவே நினைத்து

பெருமைப்பட்டவள் கைகேயி. இடர் வருவதாகக் கூறிய கூனியைப் பார்த்து, "இராமனைப் பயந்த எனக்கு இடருண்டோ?" எனக் கடிந்து கேட்கின்றாள். மற்றையோரையும், "தெவ்வடு சிலைக்கை என் சிறுவர் செவ்வியர், அவ்வவர் துறைதொறும் அறந் திறம்பலர்" எனக் கூறிப் பெருமைப்படுகின்றாள். இராமன் முடிசூடுவதை அறிவித்த கூனிக்குச் சுடர்க்கெலாம் நாயகமனையதோர் மாலை நல்கினாள் என்றால் இராமன் மேற் கைகேயி கொண்டிருந்த அன்பைச் சொல்லவும் வேண்டுமா?

iv. அருள் உடையவள்: கைகேயியின் நெஞ்சத்து அருள் நிறைந்திருந்தது. கூனியின் போதனையால் மனம் மாறுமுன் கைகேயி துயின்றுகொண்டிருந்த தன்மையைக் கம்பர் கூறுமிடத்து "கடைக்கண் அருள்பொழியக் கிடந்தாள்" எனக் கூறுகின்றார். இத்தொடர் கைகேயியின் உள்ளத்தில் அருள் நிறைந்திருந்த தன்மையையும், அது துயின்றுகொண்டிருந்த போதுங் கடைக்கண்வழியாகப் பொழிந்துகொண்டிருந்த தன்மையையும் எமக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றது. கைகேயி மனம்மாறியதைக் கூறுகின்றவிடத்து, "அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும், துரக்க நல்லருள் துறந்தாள்" என்று கூறுகின்றார். இதுவும் கைகேயியிடம் அருள் உள்ளமையை நமக்கு அம்பலப்படுத்துகின்றது. இவளிடம் நிறைந்த அருளே தசரதனையன்றி மற்றையோரையும் வேறுபாடு கருதாது நேசிக்கச் செய்தது.

v. சுயநலமற்றவள்: இவள் தனது சொந்த நன்மையைக் கனவிலுஞ் சிந்தியாதிருந்தாள். தன் பெருமையை நினையாமல் கணவன் பெருமை, நாட்டின் பெருமை, குலப்பெருமை இவற்றைக் காக்க அயராது உழைத்தாள். "கின்னலம் வீழ்ந்தது வாழ்ந்தனள் கோசலை மதியினால்" என்று கூனி கூறியபோதும், "இராமன் முடிசூடப்போகின்றான்" என்றவிடத்தும் இன்பம் அடைந்தாள். தன்னிலையைச் சற்றுஞ் சிந்திக்கவில்லை. பரந்த உள்ளமும், விரிந்த நோக்குங் கொண்டவள் ஆதலின் இராமன் வாழ்வையும், கோசலை வாழ்வையும் இருகுல மரபையும் சிந்தித்துக் கணவன்மீது கொண்ட அன்பினால் வேற்றுமை உற்றிலள். தனக்குக் கேடுவரினும் தன் தன்மையில் மாறுபடாச் சந்திரன்போல் விளங்கிக் கணவன் பெருமையைக் காக்க விரும்பினள்.

vi. அறநெறி வாழ விரும்புபவள் : கூனி, இராமன் முடிசூடுவ தால் வருங் கேட்டினை விளக்கியவிடத்து, தன் கணவன் அற நெறி பிறழாது இராமனுக்கு முடிசூட்டினுன் என்று தங்கள் குலமரபையும், தசரதன் குலமரபையும் விளக்கினுள். மரபு தவறுதல் மன்னருக்கு அழகல்ல என்று கூறி, அவளை "அறிவிலி", "புலைச்சிந்தையாய்", "மதியிலா மனத்தாய்" என்றெல்லாம் இழிவாக ஏசினுள். பலநாள் பழகிய தோஷத் தால் நாவைச் சேதியாது விட்டதாகவும் கூறினுள். பின் "நீதியல்லவும் நெறியல்லவும் நினைந்தாய் ஆதி" எனக் கூறி வாயை அடக்கும்படி எச்சரிக்கின்ருள். இது கைகேயி அற நெறி வாழ விரும்புபவள் என்பதை நமக்கு உள்ளங்கை நெல் லிக்கனிபோற் காட்டுகின்றது.

தற்காத்துத் தற்கொண்டார்ப் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாது வாழ்ந்த கைகேயி தீயவளான தற்கும் காரணங் கூறிக் கம்பர், அவள் இயற்கையாகவே நல்லவள் என்பதை வற்புறுத்துகின்ருர்.

## 12. இராமனின் சிறந்த பண்புகளை விளக்குக:

இராமாயணம் என்னும் பெருங் காப்பியத்தின் கதாநாயக ஞகிய இராமன் நற்குணங்களின் திருவுருவெனல் சாலவும் பொருத்தமாகும். குற்றஞ் சொல்லமுடியாத குற்றம் ஒன்றைத் தவிர வேறு குற்றஞ் சொல்லமுடியாதவன் இராமன். "செப் பருங் குணத்து இராமன்", "வசையில் ஐயன்" எனக் கம்ப ரால் புகழ்ந்து பாராட்டப்பெற்றவன் இராமன். இராமனிடம் விளங்கிய சிறந்த பண்புகளை ஈண்டு கூறவியலாதெனினுஞ் சிலவற்றை ஆராய்வாம்.

i. வீரம் நிறைந்தவன் : இளமைப் பருவத்திலேயே, வில், வாள், வேற்பயிற்சி பெற்றுச் சிறந்த வீரனுய் விளங்கினுன் இராமன். வீராதி வீரனுகிய பரசுராமனைத் தோற்கடித்துப் புகழ்பெற்ருன் ; தேவ தேவன் பிடித்த போர்வில்லை ஒடித்து மன்னர் யாவரும் மண்ணேக்கச் சீதையை மணந்தான் ; கடுந் தவம் புரியுந் தவசிகளுக்கு இடுக்கண் விளைத்த அரக்கியாகிய தாடகையைக் கொன்று அவர்களைக் காத்தான். "வடிமழு வாளவர் கடந்த மைந்தன்", "அலங்கல் வீரன்", "போர்வ லான்", "கவியமை கீர்த்தியக் காளை", "வீரருள் வீரன்", "தேவர் தேவர் பிடித்த போர்வில்லொடித்த சேவகன்", "குன்றிவர் தோளன்" என்ற சொற்ருெடர்களே போதும் இராமன் வீரத்தை விளக்க.

ii. அறநெறி வாழ்பவன் : கற்கவேண்டிய நூல்களைக் கற்று அதற்குத்தக நிற்கும் இயல்பினன் இராமன். மூத்தோர் வார்த்தைகளை அமுதமாகப் போற்றி நடப்பவன்; கடிகமழ் தாரினன் கட்டளைப்படி, இராமனைப் பார்த்து உறுதிப் பொருளுணர்ந்த உத்தமன் வசிட்டன் "நீதி மைந்த!" என விளித்து உறுதிப் பொருள்களை உணர்த்துகின்றான். வசிட்டமாமுனிவரே "நீதி மைந்த" என அழைக்கக்கூடிய முறையாக அறநெறி ஒழுகினான். அன்றியும் வசிட்டமுனிவரே, உலகிலே பெருந் துன்பங்களுக்குக் காரணமாகிய பஞ்சமாபாதகங்கள் அவனிடம் இல்லை என்றும், என்றாலும் உணர்ந்துகொள்ளும்படியுங் கூறியுள்ளார். இவையெல்லாம் இராமன் அறநெறி வாழ்பவன் என்பதை அம்பலப்படுத்துகின்றன.

iii. கல்வி கேள்விகளிற் சிறந்தவன் : தசரத மன்னனின் குல குருவாகிய வசிட்டன் ஒல்கலில் தவத்து உத்தமன். அறிவு ஒழுக்கம் என்பவற்றிலும் சிறந்தவர். அவரே இராமனின் கல்வி கேள்வி ஆதியவற்றை வியக்கின்றார். "ஓதுநூல் மல்குகேள்வி வள்ளல்", "புவிக்கெல்லாம் வேதமே அன்னான்" என்ற சொற்றொடர்கள் கல்வி கேள்வி என்பவற்றில் இராமன் சிறந்தவன் என்பதை நமக்கு விளக்குகின்றன. அவனின் ஒழுக்கமும், கடவுள் வழிபாடும், இன்பதுன்பம் இரண்டையும் ஒப்பநோக்குந் தன்மையும் அவன் கல்வி கேள்விகளிற் சிறந்தான் என்பதை இன்னும் வலுவடையச் செய்கின்றன.

iv. இன்ப துன்பம் இரண்டையும் ஒப்ப நோக்குபவன் : இன்ப துன்பம் இரண்டும் மாறிமாறிவரும் இயல்பின. இன்பம் வந்த போது உவகைகொள்வதும், துன்பம் வந்தபோது துடிப்பதும் மக்கள் இயல்பு. தெளிந்த ஞானம் உள்ளவர் இரண்டையும் ஒரே மாதிரியாகக் கொள்வர். இராமன் தெளிந்தஞானமுடைமையால், வசிட்டன், "நல்கும் நாளை நானிலம்" என்று தசரதன் கூறியதாகச் சொல்லிய காலத்து இன்பம் அடையவில்லை. பின் கைகேயி, "பரதன் நாடாள, நீ சீதையோடு காடாள்க" என்று கூறிய காலத்தும் துன்பம் அடையவில்லை. முன்னிருந்த அகமுகமலர்ச்சி அவனில் அப்படியே இருந்தது. எதுவித மாற்றமும் அவனிற் காணப்படவில்லை. அவனுடைய முகப் பொலிவைத் தன்னாற்கூடச் சொல்லமுடியவில்லையே என்று ஆச்சரியமுறுகின்றார். இது இன்பதுன்பம் இரண்டையும் ஒப்ப நோக்கும் பண்பை விளக்குகின்றது.

v. பெற்றதாய் மற்றைத்தம்பி என்ற வேறுபாடில்லாதவன் : இராமனைப் பெற்றவள் கோசலை. வளர்த்தவள் கைகேயி. பெற்ற அன்னையைப்போல் பேணி வளர்த்த அன்னையாகிய கைகேயியைப் பாவித்தான் இராமன். கைகேயியைக் கண்ட இராமன் சென்னி மண்ணுற வணங்கி, ஒரு கையால் வாய் பொத்தி மரியாதையாக நின்றான். கைகேயி தந்தை கூறிய உறுபொருள் உண்டென்றாள். இராமன், "தந்தையுந் தாயும் நீயே தலைநின்றேன் பணியின்" என்றான். அவள் கட்டளையை ஏற்றுக் காடேகினான். கட்டளை கேட்ட இராமன் தன் தம்பி பரதன் பெற்ற செல்வம் தான் பெற்றதாகப் பெருமகிழ்வு அடைகின்றான். அன்றியுங் கைகேயியைப் பார்த்து, "மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ" என்று வினவுகின்றான் இராமன். இவை பெற்றதாய் மற்றைத்தம்பி என்ற வேறுபாடு பாராத இராமன் பெருந்தன்மையை அல்லவா காட்டுகின்றன.

vi. அன்பும் பண்பும் நிறைந்தவன் : இராமனிடம் விளங்கிய அன்பும் பண்பும் மண்ணவரை அன்றி விண்ணவரையுங் கவர்ந்தன. இராமன் முடிசூடலை அறிந்த மக்கள் அடைந்த மகிழ்ச்சியும், செயல்களும் அவர்கள் இராமன்மீதுகொண்ட அன்பைக் காட்டுகின்றன. தேவர், அரசர், மங்கையர், மகளிர், ஆடவர், இளைஞர், மறையவர் யாவரும் முடிசூட்டுவிழாவைக் கண்டுகளிக்க வந்தமையும், அவர்கள் வாயிலிருந்துவந்த சொற்களும் அவன் அன்பும் பண்பும் எல்லோரையும் ஒட்டவைத்தது என்பதை நமக்குக் காட்டுகின்றன. மக்கள் உய்ந்தது உலகம் என்றார்; உலகம் யாவருக்கும் பொது என்றார்; பாவமும் அருந்துயரும் வேர்பறியும் என்றார். அவன் அன்பும் பண்பும் இருந்தவாறென்னே !

"யாரும் மறக்கிலா நம்பி", "ஒத்தவை உலகத்தெங்கும் உள்ளவை உணர்ந்தார் உள்ளம் பூத்தவை வடிவை ஒப்பான்" என்றெல்லாம் புகழுங் குணக்குன்றும் இராமன் குணங்கள் கூறுந்தரத்தன்று !

13. "தசரதன் வாய்மை தவறாதவன்." இக்கூற்றை ஆராய்க.

பத்துத் திக்கையும் வென்ற வீரமுடையவனும், அரசியற் திறமை படைத்தவனும், பழிபாவங்கட் கஞ்சியவனும், நீதி நெறிமுறை வாழ்ந்தவனும், கொடைவள்ளலுமாகிய தசரதனிடம் வாய்மையும் மிக்கிருந்தது. தசரதனுக்கு இராமனைவிட

இலட்சுமணன், பரதன், சத்துருக்கன் என்ற மக்களும், கைகேயியோடு கோசலை, சுமித்திரை என்ற மனைவியரும் இருந்தனர். மக்களில் இராமன் மீதும் மனைவியருள் கைகேயி மீதும் மிக்க அன்பு வைத்திருந்தான். அவர்களைத் தன் உயிராவே பாவித்தான்.

மனமாற்றம் அடையாத கைகேயியைக் குறிக்கும் இடத்தில் கம்பர் "மன்னன் ஆவி அன்னாள்" என்று குறிப்பிடுகின்றார். சோகநிலையில் நிலத்திற்கிடந்த கைகேயியைத் தூக்கிய தசரதன் "இஞ்ஞாலம் ஏழில் வாழ்வார் உன்னை இகழ்ந்தவர் மாள்வர்; உற்றதெல்லாஞ் சொன்னபின் என்செயல் காண்டி" என்று வினவுவதால் தசரதன் கைகேயியின்பாற்கொண்ட அன்பைக் காணலாம். கைகேயியும் "மன்னர் மன்னன் என் கணவர்" என்று தன் அன்பைக் கூனிக்குக் கூறினாள். இதேபோலத் தசரதன் மகனாகிய இராமனையும் உயிராக மதித்தான். "மைந்தனலாது வேறுயிரிலா மன்னன்" என்ற கம்பர் வாக்கும், "என்மகன் என்னுயிர், எல்லாவுயிர்கட்கும் நன்மகன்" என்ற தசரதன் வாக்கும் இதை வலியுறுத்தும். இதேபோலக் கைகேயி இராமனைத் தன் மகனாகவும், இராமன் கைகேயியைத் தன் தாயாகவும் மதித்தனர். இதை "இராமனைப் பயந்த எற்கு", "தாயென நினைவான் முன்னே" என்ற சொற்றொடர்கள் நமக்கு எடுத்துக் கூறுகின்றன. இவற்றிலிருந்து தசரதன் இராமனையும், கைகேயியையும் உயிராக மதித்தான் என்பதும் ஒருவர்மேல் ஒருவர் அன்புள்ளவராக இருந்தனர் என்பதும் பெறப்படும்.

இவர்கள் இருவரையும் உயிராக மதித்ததோடு வாய்மையையும் பேணிவந்தான். இதனால் "வையம் முற்றும் நடந்த வாய்மை மன்னன்", "வைய மேழுமோர் ஆருயிரோடு வழங்கும் மெய்யன்" என்று புகழப்பட்டான். இவன் வாய்மையைப் பற்றிச் சிறிது ஆராய்வாம்.

தசரதன் வாய்மையை அரிச்சந்திரன் வாய்மையோடு ஒப்ப நோக்குகையில் ஒரு சிறந்த வாய்மையாகக் கொள்ள முடியாது. அரிச்சந்திரன், நாடு, நகர், மனைவி, மக்கள், செல்வம் அனைத்தையுந் துறந்து சுடலைகாத்துந் தன் வாய்மையிற் குறையவில்லை. மனைவியைப் பற்றியாவது மகனைப்பற்றியாவது சிந்தியாமல் இன்புடன் இருந்தான். உள்ளத்தாலும் பொய்யாது வாழ்ந்தான்; உலகத்தார் உள்ளத்திலும் இடம்பெற்றான்;

"வாய்மைக்கு அரிச்சந்திரன்" என வையத்தாரால் எக்காலத்தும் புகழும்நிலை அடைந்தான். ஆனால், தசரதனோ கைகேயி வரங் கேட்டவுடன் மயங்கினான்; இருதலைக் கொள்ளி எறும் பாய்த் துடித்தான்! கைகேயியைக் கொலைசெய நினைத்தான்; பழியஞ்சி உற்றுப் பார்த்தான்; பெண்களை வஞ்சனையின் உருவம் என வைதான்; கைகேயியைக் கொன்று பூரியர் எண்ணிடைச் சேர நினைத்தான். "மெய்யுரை குற்றம்" எனப் புழுங்கினான். இவை அவன் வாய்மையின் ஸ்திரத்தை ஓர் அளவு புலப் படுத்துகின்றன. எனினும், இரந்தாவது இராமன் நாடிறவாமை இருத்தலை விரும்பினான். கைகேயி காலடியில் வீழ்ந்து இரந்தான். கைகேயி, "மன்னா! வாய்மைக்கினி யாருளர்?", "தந்த வரத்தைத் தவிர்கென்றல் உரந்தான் அல்லால் நல்லற மாமோ?" என்று வினவியும், சிபிச்சக்கரவர்த்தியின் சரிதத் தைச் சுட்டிக் காட்டியும் வாய்மையைத் தசரதன் காப்பாற்றச் செய்தாள். தசரதன் வாய்மை காப்பாற்றும்போதும், "ஈந்தேன் ஈந்தேன் ......... வசை வெள்ளம் நீந்தாய் நீந்தாய் நின்மகனோடு நெடிது" என்று சொல்லுகின்றான்.

தசரதன் புத்திரபாசத்தால் வருந்தி, கைகேயியின் பிடி வாதத்திற்கும், வினாக்களுக்கும் பதிலிறுக்கமுடியாமல் வாய்மை வழி நின்றான். எனினும் சிறந்த வாய்மையுடையன் என்று கூற முடியாது.

14. பின்வருவனவற்றை இடம்சுட்டி விளக்குக:

i. நான் ஒன்று கூறுவதுண்டு. உறுதிப்பொருள் நன்று கேட்டுக் கடைப்பிடி.

ii. வீழ்ந்தது நின்னலந் திருவும் வீழ்ந்தது.

iii. அறநிரம்பிய வருளுடை அருந்தவர்க்கேனும் பெறலருந் திருப்பெற்றபின் சிந்தனை வேறும்.

iv. மறந் திறம்பினும் வரன்முறை திறம்புதல் வழக்கோ?

v. உன்னை யிகழ்ந்தவர் மாள்வர்.

vi. ஏகுமின் ஏகுமின்.

vii. மணிமுடிவேந்தன் தன்னை வல்லையிற் கொணர்தி.

viii. புத்திரர் இனிப்பெறுதல் புல்லிது.

ix. தரைக்கு நாயகன் தாயினி நீ.

x. தந்தையுந் தாயும் நீரே.

i. நான் ஒன்று கூறுவதுண்டு. உறுதிப்பொருள் நன்று கேட்டுக் கடைப்பிடி: கடிகமழ்தாரை அணிந்தவனாகிய தசரதன், சோதிடர்களை அழைத்து இராமனுக்கு முடிசூட்டுவதற்கு ஏற்ற நாள் பார்த்துக் கூறுமாறு வேண்டினான். அவர்களும் ஆராய்ந்து அடுத்தநாள் ஏற்றநாள் என்றனர். அதுகேட்ட தசரதன் வசிட்டனை வரவழைத்து, "இராமனுக்கு முடிசூட்டும்நாள் நாளையாதலின், செய்யவேண்டிய சடங்குகளைச் செய்து, உணர்த்தவேண்டிய உறுதிப்பொருளை உணர்த்துக" என்றான். உவகைகொண்ட வசிட்டனும் இராமனிடஞ் சென்று, தன்னை அகமும் முகமும் மலர வரவேற்று வணங்கிய இராமனை நோக்கி, "போர்வல்லோய்! மன்னன் நாளையதினம் நினக்கு நானிலம் நல்கும்நாள். அரசனுக்கு ஏற்ற சில உறுதிமொழிகளைக் கூறப் போகின்றேன். கவனமுடன் கேட்டு அதன்படி நடப்பாயாக" என்று கூறி அறவுரைகளைக் கூறினான்.

ii. வீழ்ந்தது நின்னலந் திருவும் வீழ்ந்தது: இராமன் முடி சூடுவதைக் கேட்ட அயோத்திநகர மக்கள் ஆரவாரித்து மகிழ்ந்து ஆடிப்பாடினர்; அதனால் வேர்த்தனர்; உடல் தடித்து மெய்ம்மயிர் சிலிர்த்தனர்; நீள்நிதி வழங்கினர்; நகரைப் பொன்னுலகெனும்படி அழகுசெய்தனர்; மக்கள் மகிழ்ச்சி, ஆரவாரம் முதலியவற்றைக் கண்ட மந்தரை, எதுவிதத்திலும் இராமன் முடிசூடலைத் தவிர்க்க விரும்பினாள். விரைந்து கைகேயியின் அரண்மனையை அடைந்தாள். மலர்ப் படுக்கையில், மகிழ்ச்சியோடு படுத்திருக்குங் கைகேயியை எழுப்பி, பேரிடுக்கண் வரப்போகின்றது என்று கூறினாள். கேட்ட கைகேயி மக்கள் வீரத்தையும் அறவாழ்க்கையையும் புகழ்ந்து கூறி, இராமனைப் பெற்ற தனக்கு வரும் இடையூறு யாதென மந்தரையை வினவினாள். அதுகாலை மந்தரை இவ்வாறு கூறி இராமன் முடிசூடுவதை அறிவித்தாள். இதிலே கூனி கைகேயியைப் பார்த்து, 'கோசலை மதியினால் வாழ்ந்தாள்' என்று கூறி, நீ மதிகெட்டு வீழ்கிறாய் என்று உணரவைக்கின்றாள். இதன்மூலம் மந்தரை கைகேயியின் உள்ளத்திற் பொறாமைத் தீயை வளர்க்க விரும்புகின்றாள்.

iii. அறநிரம்பிய வருளுடை யருந்தவர்க்கேனும் பெறலருந் திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்: கைகேயியின் மாளிகையை அடைந்த கூனி, அவள் பாதங்களைக் கைகளினாற்றீண்டி, துன்பம் வந்த போதும் துயிலுதியோ என்று வினவினாள். அதுகாலை கைகேயி, அறந்திறம்பா மறம்நிறை மக்களும், சிறப்பாக இராமனும்

இருக்கும்போது யாது இடர்வரும் என்ருள். கூனி, கோசலை வாழ்வு உயர்ந்து, அவள் வாழ்வு தாழ்ந்தது என்றும் இராமன் முடிசூடப்போகின்ருன் என்றும் விளம்பினள். கைகேயியோ தான் மன்னர்மன்னன் மனைவியும், பன்னரும் பெரும்புகழ்ப் பரதன் தாயும் ஆக இருக்கும்போது கோசலை வாழ்வு எவ்வாறு சிறப்படையும் என்று வினவிப் பெருமைப்படுகின்ருள். கூனியோ தொடர்ந்து இராமன் முடிசூடுவதால் அவளுக்கு வருங் கெடுதல்களைச் சொல்லி, பரதன் வாழ்வு பாழ் அடையப் போகின்றதென இரங்கினள். கைகேயி இராமன் முடிபுனைவது முறையென வாதிட்டாள். கூனியைக் கோபித்தாள். எனினுங் கூனி இவ்வாறு கூறிக் கோசலையும் இராமனுஞ் செல்வத்தினல் உங்களுக்குத் தீங்கிழைக்கக்கூடும் என வற்புறுத்துகின்ருள். அருளை உடைய அரிய தவத்தைச் செய்த முனிவர்க்காயினும் செல்வம் கைவரப்பெறுமாயின் மனம் மாறுபடும் என்பது இச் சொற்ருெடரின் பொருள்.

iv. மறந் திறம்பினும் வரன்முறை திறம்பல் வழக்கோ : தன் வஞ்சத்தைத் தீர்க்க நினைந்த நஞ்சனைய கூனி கைகேயியின் அரண்மனையை அடைந்தாள். இராமன் முடி புனைவதால் வருந் தீமைகளை ஒன்றன்பின் ஒன்ருக அடுக்கிக்கொண்டே போனுள். கைகேயி, தனது கணவன், இராமனுக்கு அரசுரிமைகொடுத்தது முறையெனவும், புகழ் கெடத்தக்கதாகப் பண்டைய வழக்கினை மீறி நடத்தல் பொருந்தாது எனவும் எடுத்துக் காட்டினுள். அவற்றுள் ஒன்று இது. குற்றமற்ற வீரம் மாறுபட்டாலும், ஒருவன் தனது குல ஒழுங்கில் இருந்து மாறுபடுதல் பொருந்துமோ? (பொருந்தாது) என்பது பொருள். இதில் கைகேயியின் தூயவுள்ளமும், கணவன் மேலும், தன் குலத்தின்மீதுள்ள பற்றும் மறைந்துகிடப்பதை நாம் அறியக்கூடியதாக விருக்கின்றது.

v. உன்னை இகழ்ந்தவர் மாழ்வர் : கூனியின் சூழ்ச்சியால் மனம் மாறுபட்ட கைகேயி, தனது மாளிகையில் தன்னை அலங்கோலஞ் செய்துகொண்டு தரையிற் கிடந்தாள். இராமனுக்குத் தான் அரசுரிமை கொடுத்த நற்செய்தியைத் தானே கூற விரும்பிய தசரதன், தீர்மானித்த அன்றைய நள்ளிரவு அவளது மாளிகைக்குச் சென்ருன். அங்கே மூதேவிபோற் கிடந்த கைகேயியைக் கண்டு நெஞ்சு சோர்ந்து, மானை எடுக்கும் ஆனைபோல் தன் நெடுங்கரங்களால் எடுத்தான்.

உடனே கைகேயி அவனது கைகளை விலக்கிவிட்டு மீண்டும் நிலத்தில் விழுந்து பெருமூச்சுவிட்டாள். அஞ்சிய மன்னன் அவளை நோக்கி, "உனக்கு நேர்ந்தது யாது? உன்னை இகழ்ந்தவர் மாழ்வர்" என்று கூறினன். இதிலிருந்து தசரதன் கைகேயிமேற் கொண்டிருந்த தூயவன்பை நாம் அறியலாம்.

vi. ஏகுமின் ஏகுமின் : கைகேயி தன் பிடிவாதக்குணத்தால் தசரதனிடம் வரங்கள் பெற்று இன்பமாகத் துயின்றுள். தசரதன் துன்பக்கடலுள் மூழ்கினன். சூரியன் உதயமானன். இராமன் மணிமுடிபுனைவதைக் காணவேண்டும் என்னும் அவாவினல் மங்கையர் தம்மை அழகு செய்தனர். மைந்தர்கள் இராமனின் தம்பியர்போன்று மகிழ்ச்சி உடையவராயினர். நகரமக்கள் அனைவரும் இன்புற்றனர். அரசகூட்டம் அமிழ்தம் உண்ணக் கூடுகின்ற தேவர் கூட்டம்போல் அயோத்திக்கு வந்தது. அயோத்தியின் வீதிகளிலெல்லாம் சர்க்கரைப்பாகு போன்ற இனிமையையும், பவளம்போற் செவ்வாயையும், பருத்த மார்பையும், பரந்த அல்குலையும் உடைய மங்கையர் கூட்டமும், மைந்தர் கூட்டமும் எங்கும் நெருங்கி ஏகுங்கள் ஏகுங்கள் என்று சொல்லிக்கொண்டே தாம் நின்ற இடங்களிலேயே நிற்பதன்றிப் போதலுஞ் செய்யவில்லை ; மீளுதலுஞ் செய்யவில்லை. இதன்மூலங் கம்பர் விழாக்காண வந்த மக்கட் கூட்டம் வீதிகளில் நெருக்குண்ட காட்சியைச் சுவைபடச் சித்திரிக்கின்றுர்.

vii. மணிமுடிவேந்தன் தன்னை வல்லையிற் கொணர்தி: இராமன் முடிபுனை விழாக்காண மங்கையர் கூட்டமும், மைந்தர் கூட்டமும் "ஏகுமின் ஏகுமின்" என்று சொல்லி நின்ற இடத்திலே நின்று நெருக்குண்டனர். விழாக் காணவந்தோர் தொகை எவராலுஞ் சொல்லமுடியாமல் இருந்தது. அஞ்சனந் தீட்டிய நஞ்சனைய கண்ணும், துவளு நுண்ணிடை யுடையருமாய்த் தோகையர் வந்து கூடினர்கள். முடிபுனை விழாக்காண வராதோர் இலங்கைவாழ் அரக்கரேயாவர். மன்னர்கள் அனைவரும் மணிமுடிபுனையும் மண்டபம் முறையாகப் புகுந்தனர். அந்தணர்கள், தம் மூத்த மகனுக்கு மணம் நிகழ்வதைப் பார்த்து மகிழுந் தந்தையர் போல் மண்டபம் அடைந்தனர். விண்ணவரும், மண்ணவரும் ஆகாயம், நிலவுலகம் இரண்டையும் நிரப்பினர். சங்கொலியும் முரசொலியுங் கேட்டவர் செவிகளைத் தூர்த்தன. செல்வர்கள் பொன்மழை பொழிந்தனர். மன்னர்

மேனியொளி, மகுடஒளி, மங்கையர் ஆபரண ஒளி யாவும் எல்லாவிடமும் விளங்கின. அதே சமயத்தில் வசிட்டன் அவ்விடம் வந்தான். யாவையுஞ் செய்து சுமந்திரனைப் பார்த்து, இவ்வாறு கூறினன். மணிமுடியணிந்த தசரதனை விரைவில் அழைத்துவருக என்பது பொருள். இதில் இருவரும் (இராமன், தசரதன்) மணிமுடி துறக்கப்போகின்றதை உணர்த்துகின்றார் கம்பர். இக்கூற்று வசிட்டனது பெருமையையும் வலியுறுத்துகின்றது.

viii. புத்திரர் இனிப்பெறுதல் புல்லிது: வசிட்டனால் ஏவப்பட்ட சுமந்திரன் தசரதனை அரண்மனையிற் காணாதவனாய், கைகேயியின் மனையை அடைந்து, பணிப்பெண்டிரிடம் தன் வரவு சொன்னான். அவர்கள் அறிவிக்க, கைகேயி 'இராமனை அழைத்து வருக' என்று சுமந்திரனுக்குக் கட்டளை இட்டாள். உடனே சுமந்திரனும் இராமனிருப்பிடம் விரைந்து சென்று கூறினான். இராமன் அலங்கரிக்கப்பட்ட தேரில், அரசர்கள் புடைசூழ, இன்னிசைப் பாடல்கள் முழங்க, பெண்கள் இமை கொட்டாது நோக்க வீதியிற் சென்றான். அனைவரும் மகிழ்ந்தனர்; பலவாறு புகழ்ந்தனர்; நிதி நல்கினர். பெண்கள் சிலர், அரசர்கள் இராமன் தோன்றியபின் புத்திரரைப் பெறுவது பெருமையாகாது சிறுமையானதே ஆகும் என்று கூறிச் சித்திரம்போற் றனித்தனி நின்றனர். இதில் இராமன் பெருமை செப்பப்பட்டுள்ளது.

ix. தரைக்கு நாயகன் தாயினி நீ: இராமனை வஞ்சந் தீர்க்க விரும்பிய மந்தரை, கைகேயியின் துணையை நாடித் தனது உள்ளக்கிடக்கையை மறைத்து, அவள்மீதும் பரதன்மீதும் பற்றுள்ளவள்போல் நடித்துச் சொன்வன்மையால் அவள் உள்ளத்தை மாற்றியமைத்தாள். அத்துடன் அமையாது பரதன் முடிசூடக்கூடிய உபாயங்களையுங் கூறினாள். கைகேயி கூனியை உயிரோடு உயிர்பொருந்தத் தழுவி, மணிமாலையும் செல்வமுங் கொடுத்து, "கடல்சூழ்ந்த இவ்வுலகத்தை என் ஒரு மகனுக்குக் கொடுத்தாய். ஆதலால் பூமிக்கரசனான பரதனுக்கு இனி நீயே தாய்" என்று கூறினாள்.

x. தந்தையுந் தாயும் நீரே: கைகேயியின் கட்டளைப்படி இராமனை அழைக்கச் சென்ற சுமந்திரன் இராமனுக்குக் கைகேயியின் கட்டளையைக் கூறினான். இராமன் திருமாலை வணங்கி, மங்களவாத்தியங்கள் ஒலிக்க, மன்னர்குழாம் புடை

சூழ, பல வீதிகளைக் கடந்துசென்று முடிசூட்டு மண்டபத்துக்குப் போகாமல், கைகேயியின் மாளிகையை அடைந்தனன். தந்தையை நாடிவரும் இராமன், தன்னை எதிர்ப்பட்ட கைகேயியினைக் காலில் விழுந்து வணங்கினான். உடனே அவள் இராமனைப் பார்த்து, "உனது தந்தை உனக்குக் கூற விரும்பியது ஒன்றுளது" என்றனள். "தந்தையின் கட்டளையைத் தாயாகிய நீரே கூறுவதனால் அதனைச் செய்வதற்கு நான் மிகவும் பாக்கியம் பெற்றவனாகின்றேன். தந்தையுந் தாயும் நீரே ஆவிர்; உங்கள் சொல்லைத் தலைமேற் கொண்டேன். சொல்லுங்கள்" என்று இராமன் மறுமொழி கூறினன். இராமன் கைகேயியைத் தந்தையுந் தாயும் என நினைந்தான் என்பதை நாம் உணர்கின்றோம்.

15. பின்வரும் உவமைகள் எடுத்தாளப்பட்ட இடங்களைச் சுட்டிக்காட்டி உவமேயத்தோடு பொருத்தி விளக்குக:

i. நீறுதோய் வனிதையோர் கூறினன் வடிவு.
ii. உதயமால்வரை தேடருங் கதிரொடு திரிதல்.
iii. இன்னல்செய் இராவணன் இழைத்த தீமை.
iv. நஞ்சு தீர்க்கினுந் தீர்க்கிலா நலிதல்.
v. வானமார் மழை நுழைதரு மதிபிதிர்த்தல்.
vi. பூவுதிர்த்த ஒரு கொம்பு.
vii. மென்செவிப் பையரா நுழைதல்.
viii. அந்திவந்தடைந்த தாயைக் கண்ட வான்கன்று.

i. நீறுதோய் வனிதையோர் கூறினன் வடிவு: திருநீறு பூசிய மங்கை பாகனாகிய சிவபெருமானது வடிவு என்பது இச்சொற்றொடரின் பொருள். அழகிய வெண்துகிலால் மூடப்பெற்ற செம்மணித் தூண்களின் அழகை விளக்கவந்த கம்பர் பெருமான் இவ்வுவமையைக் காட்டினார். இஃது இவரின் தெய்வபத்தியைக் காட்டுகின்றது. இராமன் முடிசூடப்போவதை அறிந்த மக்கள் இயற்கை அழகு நிறைந்த அயோத்தியை மேலும் அழகு செய்தனர்.

| உவமேயம் | உவமானம் |
|---|---|
| செம்மணித்தூண் | சிவபெருமான் |
| புனை துகில் உறைபொதிதல் | நீறுதோய்ந்தநிலை |

ii. உதயமால்வரை தேடருங் கதிரொடு திரிதல்: இராமன் முடி சூடுவதை அறிந்த மக்கள் ஆனந்தம் அடைந்தனர். நகரை அலங்கரித்தனர். வீதியில் குதிரை பூட்டிய தேர்களும், நெற்றிப் பட்டம் அணிந்த யானைகளும் எங்கும் உலாவின. நெற்றிப் பட்டம் அணிந்த யானைகளுக்கு மேற்படி சொற்றொடரை உவமையாகக் கூறினர். உதயமலையானது தேடுதற்கரிய சூரியனோடும் திரிதல் என்பது இச் சொற்றொடரின் பொருள். உவமான உவமேயம் பின்வருமாறு:

| உவமேயம் | உவமானம் |
|---|---|
| ஓடைமாக்கடகளிறு | கதிரோடுந் திரியும் உதயமால்வரை |

iiii. இன்னல்செய் இராவணன் இழைத்த தீமை: இராமன் முடி சூட்டு விழாவிற்கு நகர் அலங்கரிக்கப்பட்டது. அயோத்திநகரம் அமராவதி எனும்படி காட்சி அளித்தது. தேவர்களுக்குத் துன்பத்தை விளைவிக்கின்ற இராவணன் முற்பிறப்பிற் செய்த பாவம் ஓர் உருவெடுத்ததுபோல, தனது வஞ்சத்தைத் தீர்க்கக் கொடுமனக் கூனி தோன்றிக் கைகேயிக்குச் சில நஞ்சனைய வார்த்தைகள் கூறுகின்றாள். கம்பர், இராமன் முடிசூடப்போகும் விழாவிற்கு அல்லல் வந்ததெனக் கூற மனமின்மையால் இச் சொற்றொடர்மூலம் பின்வரும் வரலாற்றுக் குறிப்பைக் கூறுகின்றார். கூனி இழைத்த தீமையால் இராமபிரான் கோல் துறந்து, கானுங்கடலுங் கடந்துசென்று, இமையோர் இடுக்கண் தீரக் கொன்ற வரலாறு முழுவதும் "இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல் துன்னருங் கொடுமனக் கூனி தோற்றினாள்" என்றதொடரில் அமைந்திருப்பதைக் காணலாம்.

| உவமேயம் | உவமானம் |
|---|---|
| கொடுமனக் கூனி | இராவணன் இழைத்த தீமை |

iv. நஞ்சு தீர்க்கினுந் தீர்க்கிலா நலிதல்: இராமன் முடி சூடலைத் தவிர்க்க விரும்பினாள் கூனி. கைகேயியின் மாளிகையை அடைந்தாள். அவளுக்குப் பேரிடர் வரப்போகின்றது என்று கூறினாள். கைகேயியோ தசரதன் பெருமையையும், மக்கள் பெருமையையுஞ் சொல்லித் தனக்கு எவ்வித இடையூறும் வராதென்றாள். கூனி மேலும் இராமன் முடிசூடுவதால் பரதனுக்கும் அவளுக்கும் எண்ணில் இடுக்கண் வருமென

எடுத்துக்காட்டினுள். கைகேயிக்கும் கூனிக்கும் இடையில் சொற்போர் காரசாரமாக நடைபெற்றது. தன்னை வெகுண்டு கைகேயி வெஞ்சொற்கள் சொன்னபோதும், தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்ற மீண்டும் பலமொழிகளை எடுத்துக் கூறுகின்றுள். அச்சமயத்தில் கம்பர் இவ்வுவமையை எடுத்தாண்டுள்ளார். (உடலில் ஏறிய) நஞ்சை மந்திரமொழியால் தீர்க்க முயன்றும் அது தீர்கிலாது வருத்துவதுபோல என்பது இச் சொற்றொடரின் பொருள். உவமான உவமேயம் பின் வருமாறு :

| உவமேயம் | உவமானம் |
|---|---|
| கூனி | நஞ்சு |

கூனியை அப்புறப்படுத்த முயலும்—நஞ்சை நீக்க முயலும் மந்திரவாதி கைகேயி.

இச்சொற்றொடரில் கூனி கைகேயி இருவரினதும் தன்மையைக் கம்பர் காட்டுகின்ருர்.

v. வானமார் மழைநுழை தரு மதிபிதிர்த்தல்: மந்தரையின் போதனையால் மனம் மாறிய கைகேயி அவளிடம் தன்மகன் முடிசூடவேண்டிய உபாயத்தைக் கேட்டாள். கூனியும் உபாயங்களைக் கூறினுள். கூனியைக் கட்டித்தழுவிப் புகழ்ந்து தனது கோபமுந் தணிந்த கைகேயி தனது மாளிகையில் அலங்கோலமாக நிலத்திற்கிடந்து தசரதன் வருகையைக் காத்திருந்தாள். கைகேயி தனது கூந்தலில் சொருகி அணிந்திருந்த மாலையைப் பிடுங்கிச் சிதைத்தெறிந்ததைக் கம்பர் இவ்வுவமை மூலம் எடுத்துக் காட்டுகின்ருர். வானத்தில் உள்ள நீண்ட கார்கால மேகத்தில் நுழைந்திருக்கும் சந்திரனை உதிர்த்தல் என்பது பொருள்.

| உவமேயம் | உவமானம் |
|---|---|
| சோனைவார்குழல் | வானவார்மழை |
| குழலில்உள்ள மாலை | மழைநுழை தருமதி |

vi. பூவுதிர்த்த ஒரு கொம்பு: தசரதனிடம் தான் விரும்பியவற்றைப் பெறுதற்காகத் தன் அலங்காரத்தைச் சிதைத்துத் தன் மாளிகையில் தசரதன் வருகைக்காகக் காத்திருந்த கைகேயியை இவ்வுவமை மூலம் எடுத்துக்காட்டுகின்ருர் கம்பர். மலர்கள் உதிரப்பெற்ற ஒரு கொடி என்பது இதன் பொருள்.

ஆபரணங்கள் அகற்றி, குழல் பரப்பி, கண்கள் அஞ்சனம் கான்றிடக்கிடந்த கைகேயிக்கு மலர்கள் உதிரப்பெற்ற கொம்பு உவமையாயிற்று.

vii. மென்செவிப் பையரா நுழைதல்: வரங்களை ஈந்த தசரதன் மனவேதனை அடைந்தான். வரம் பெற்ற கைகேயி துயின்றாள். இரவு கழிந்தது; கோழிகள் கூவின; பறவைகள் ஒலித்தன; யானைகள் துயில் ஒழித்தன; விண்மீன்கள் மறைந்தன; காரிகையார் எழுந்தனர்; தென்றல் தவழ்ந்தது; குமுத மலர்கள் கூம்பிற்று; பண்ணோடு பொருந்திய இசைப் பாடல்கள் எழுந்தன. மன்மதனது அம்பும், வெண்ணிலவும், வாடைக் காற்றும் உடம்பைத்தாக்கி வருத்துவதால் உயிர்சோர வருந்தும் பெண்களுடைய மென்செவியில் இப் பாடல்கள் நுழைந்து வருத்துவதைப் படத்தையுடைய பாம்பு நுழைந்து வருத்துவதாகக் கூறியுள்ளார். பாம்பு செவியில் நுழைந்து உண்டாக்கும் துன்பத்தைப் பாடல்கள் பெண்களுக்குக் கொடுத்தன என்பது பொருள்.

viii. அந்தி வந்தடைந்த தாயைக் கண்ட வான்கன்று: சுமந்திரன் சொற்படி, மங்கள வாத்தியங்கள் ஒலிக்க, மன்னர் புடைசூழத் தார்அணி தேரில் இராமன் அரண்மனை சென்றான். அங்கே தந்தையாகிய தசரதனைக் காணாதவனாகி, கைகேயியின் கோயிலை அடைந்தான். கைகேயி முன் தோன்றினாள். அவளைக்கண்ட இராமன் அடைந்த மகிழ்ச்சியை இந்த உவமை மூலம் விளக்குகின்றார் கம்பர். மாலையில் வந்துசேர்ந்த தாய்ப்பசுவைக் கண்ட பசுவின் கன்று என்பது இதன் பொருள். இராமன் கொண்ட மகிழ்ச்சிக்குப் பகல் முழுதும் பிரிந்த கன்று மாலையில் தாயைக் கண்ட மகிழ்ச்சி உவமையாயிற்று.

# பாரதச் சுருக்கம்

1. பின்வருவனவற்றை :

அ. இடஞ்சுட்டிக்காட்டி விளக்குக.

ஆ. பொருளை இலகுவான நடையில் எழுதுக.

இ. ஒவ்வொன்றின் கீழ் உள்ள வினாவுக்கும் விடை தருக.

i. எனதன்பிற் சிறந்த தந்தாய், இவ்வளப்பரிய பூமியின் கண்ணே உனக்கும் எனக்கும் அரசுக்கிடமில்லா தொழிந்தது. நான் உனக்குப் புத்திரனாகப் பிறந்து உன்னைப் பிறநாட்டில் உயிர்வாழ வைத்த வுதவியே செய்தேனாயினேன். என்னை நீ புத்திரனாய்ப் பெற்றதினும் பெருதிருத்தலே நன்றாம். நான் பிறந்திங்ஙனம் பயனின்றிக் கிடத்தலினும் இறத்தலே நன்றாம். ஆதலின், இறக்கத் துணிந்தேன். அதற்கு நீ உடன்படுதல் வேண்டும். அது செய்யாயாயின் நான் கேட்பதைச் செய்தல் வேண்டும்.

இதிலிருந்து கேட்டவனைப்பற்றி யாதறிவீர் ?

அ. இந்திரப்பிரஸ்த நகரிலே பாண்டவரினாற் செய்யப்பட்ட இராஜசூய யாகத்திற்குத் துரியோதனனும் சென்றான். அங்கு மன்னர்களும், முனிவரும், மற்றையோரும் பாண்டவருக்குச் செய்த உபசாரங்களையும், கொடுத்த பொருள்களையுங் கண்ணாற் கண்டான். பொறாமை என்னும் நெருப்பின்வாய் விழுந்து துடித்தான். எனினும், தன் நடிப்பின் திறத்தால் அதை மறைத்து அவர்களிடம் விடைபெற்றுத் தனது நகர் சேர்ந்தான். அவர்களிடம் விடைபெற்றது தொடங்கி அவர்கள் செல்வத்தைக் கவர்ந்து தருமனை அடிமைப்படுத்தவேண்டும் என்று விரதம் பூண்டான். அவனிடம் ஏற்பட்ட அழுக்காறும் ஆசையும் அவனைப் பைத்தியக்காரனாக்கியது. யாவரும் அவன் மாறுபாட்டைப் போக்கப் பல முயற்சிகள் எடுத்தனர். யாவும் பயனற்றதாகிவிட்டன. இவ்விடயத்தை அறிந்த திருதராட்டினன் அவனைத் தன்னிருப்பிடம் அழைத்தான். சகுனி, கர்ணனோடு தந்தையிடஞ் சென்ற துரியோதனன் தன் தந்தையை நோக்கி இவ்வாறு கூறினான் :

ஆ. என்மீது அன்புள்ள தந்தையே! இப் பெரிய பூமியிலே உனக்கும் எனக்கும் அரசாட்சி கிடையாமற் போய்விட்டது. நான் உனக்கு மகனாகப் பிறந்தும், உன்னை வேறொருவர் அரசாட்சியில் வாழச் செய்துவிட்டேன். நீ மகனாகப் பெற்றதிலும் பெறாமல் இருந்தால் நல்லது. நானும் பிறந்து பயனின்றி வாழ்வதிலும் இறப்பது நன்று. ஆதலின் நான் இறப்பதற்குத் துணிந்துவிட்டேன். அதற்கு அநுமதி தரவேண்டும். அல்லாவிடில் நான் சொல்வதைச் செய்தல் வேண்டும்.

இ. இதில் கேட்பவனாகிய துரியோதனன், தன் தந்தை தன்மீது கொண்ட அன்பைப் பயன்படுத்தி, தனது சூழ்ச்சிக்குத் தந்தையை உடன்படும்படி இரண்டு வினாக்கள் வினவுகின்றான். இதிலே துரியோதனனின் சொல்வன்மை வெளிப்படுகின்றது. அவன் வினாக்கள் அவனது ஆற்றலைக் காட்டுகின்றன. உள்ளக் கருத்தைத் தெளிவாகப் புலப்படுத்தக்கூடியவன் என அறியலாம்.

ii. " இஃது அக்ஷயபாத்திரம்; தினந்தோறும் ஒருபிடி அன்னம் சமைத்து இதிலிட்டால் இது எத்தனை யாயிரவர் வரினும் அன்னம் வற்றாமற் கொடுப்பது; திரௌபதி கையிலிருக்கக்கடவது. அவள் முதலிலுண்ணலாகாது. ஈற்றில் உண்ணக்கடவள். அவள் உண்டபின் அன்னம் வற்றும். அப்பாலும் நீயிடின் முன்போல வற்றாது."

இப்பாத்திரத்தால் வைத்திருந்தவர் அடைந்த பயன் என்ன ?

அ. துரியோதனன் சூழ்ச்சியாய்ப் பாண்டவர்களைத் தனது புதுமனைப் புகுவிழாவிற்கு அத்தினபுரம் அழைப்பித்தான். விழா முடிந்து யாவரும் இன்புற்றிருந்தனர். சகுனி தருமனைச் சூதாடச் சம்மதிக்கச்செய்து சூதாடினான். தருமன் சூதாடி நாடுநகர் யாவற்றையும் இழந்து தம்மையும் அடிமையாக்கிக் கொண்டான். பின் மறு சூதாடித் தம்மை விடுவித்து, நிபந்தனைப்படி பன்னிரண்டுவருட வனவாசமும், ஒருவருட அஞ்ஞாதவாசமும் செய்யத் தம்பிமாருடன் கானகஞ் சென்றான். அங்கே தம்மைத் தொடர்ந்துவந்த முனிவர் கூட்டத்திற்கு வேண்டியன உதவமுடியாமல் தௌத்தியரிடம் முறையிட்டான். தௌத்தியர் உபதேசப்படி கங்கையில் நீராடிச் சூரிய

பகவானைத் தியானித்தான் தருமன். சூரியபகவான் தருமன் முன்றோன்றி, ஒரு பாத்திரம் அவனுக்கு நல்கி, மேற்கூறியவாறு சொல்லி மறைந்தருளினர்.

ஆ. இதன் பெயர் அக்ஷயபாத்திரம். ஒவ்வொருநாளும் ஒருபிடி சோறு ஆக்கி இதிற் போட்டால், இது எத்தனை ஆயிரக்கணக்கானோர் வந்தாலும் குறைவின்றி அன்னம் கொடுப்பது. இதைத் திரௌபதியே வைத்திருக்கவேண்டும். அவள் முதலில் உண்ணக்கூடாது. ஈற்றிலேதான் உண்ண வேண்டும். அவள் உண்டபின்பு அன்னம் வற்றும். அதன் பின்பு நீ ஒருபிடி இட்டால் முன்போல் வற்றுது.

இ. இப் பாத்திரத்தால் பாண்டவர்கள் தமக்கும், தம்பால் வரும் விருந்தினருக்கும் அன்னக்கவலை ஒழித்தார்கள். இப்பாத்திரம் பாண்டவர்கள் வனவாசகாலம் பன்னிரண்டு வருஷத்தையுஞ் சுகமாகக் கழித்தற்குப் பேருபகாரமாயிற்று.

iii. "வசைமொழிக்கு வசைமொழியும், தீமைக்குத் தீமையும், கொலைக்குக் கொலையுஞ் செய்தலே முறையாமாயின் உலகம் நடைபெறுவதெங்ஙனம்? கோபமே சாதிக்கத்தக்கதும், அனுஷ்டிக்கத்தக்கதுமானல் உலகத்திலே பிறப்புமுளதாகுமா? என்ன தீமைதான் அடையினும் பொறுத்தருள்வதே சிறந்த தருமமாம். தன் கோபத்தை அடக்கியாளுபவனே விவேகியும் உத்தமனுமாவான். நிந்திக்கப்பட்டவழியும், துன்புறுத்தப்பட்டவழியும், குற்றம்புரியாதிருத்தலும், கோபிக்கப்பட்டவழி பொறுமையுமே சிறந்த குணமாம். பொறையே ஞானம்; பொறையே சத்தியம்; பொறையே துறவுக்கங்கமாம். பொறையே துறவறத்துக்கு அரணும். பொறையே துறவாம். பொறையே தெய்வசாந்நித்தியமாம். பொறையே பிரபஞ்சத்திற்கு ஆதாரமாம். விவேகிகள் எதனையும் பொறுத்தருளல் வேண்டும். அங்ஙனஞ் செய்தலால் ஞானத்தை அடைகிறார்கள்."

ஞானவான்களாக எவ்வெக்குணம் இன்றியமையாதவை?

அ. வனவாசகாலத்தில் பாண்டவர்கள் பர்ணசாலை ஒன்றமைத்து வாழ்ந்தார்கள். ஒருநாள் பாண்டவர் இல்லாத சமயம் பார்த்து, தீயவெண்ணங்கொண்டு துச்சளையின் கணவனை

ஜயத்திரதன் அவ்விடம் வந்தான். அவனெண்ணத்தை அறியாத திரௌபதி இன்முகத்தோடு உபசரித்தாள். தன் தீய வெண்ணத்தை வெளியிட்டு அவளைத் தூக்கிச்செல்ல முயன்ருன். காத்திராப்பிரகாரம் அவ்விடம் வந்த பாண்டவருள் ஒருவனுகிய வீமன் அவனைப் பிடித்துத் தருமன் முன்னிறுத்திச் சிரங்கொய்ய முயன்ருன். தருமன் அவனை விடுதலை செய்தான். திரௌபதி கோபங்கொண்டு தங்கள் துன்பமெல்லாவற்றிற்கும் தருமனின் பொறுமையே காரணம் என்று கூறினுள். அப்போது தருமன் மேற்போந்த உபதேசங்களைத் திரௌபதிக்கு எடுத்துக் கூறினுன்.

ஆ. பழிப்பு வார்த்தைகளுக்குப் பழிப்பு வார்த்தையும், தீமைக்குத் தீமையுமாய்ச் செய்வோமாயின் உலகம் பழியுந் தீமையும் நிறைந்ததாகவே இருக்கும். பிறர் செய்யுந் தீமைக்குக் கோபங்கொள்ளாது பொறுத்தலே சிறந்தது. அதுவே தருமமாம். பொறையின் பெருமை சொல்லில் அடக்கிச் சொல்லக் கூடியது அன்று. உலகத்திற்கே பொறுமை ஆதாரம். பொறுமையால் விவேகம் உள்ளவன் ஞானத்தைப் பெறுகின்ருன்.

இ. ஒருவன் ஞானவானுகப் பொறுமையையும், வெகுளாமையையும் மேற்கொள்ளவேண்டும். உலகப் புகழ்பெற்ற மகாத்மாவின் சரிதம் இதனை வலியுறுத்தும்.

iv. "ஒரு சிங்கத்தை நோக்கி, இச்சிங்கம் மான்வயிற்றிலே பிறந்ததென்று ஒருவன் கூறுவானுயின் அவன் அவ்வளவில் அவ்விஷயத்தை நாட்டினுனைகமாட்டான். அதுபோலக் கர்ணனுடைய பெருமைகளை நோக்குமிடத்து இராஜ வமிசத்திற் பிறந்தவனேயாவனன்றி இழிகுலத்துப் புத்திரனுகமாட்டான். இவ்வளவில் உங்களுக்குத் திருப்தியில்லையாயின் அவனை அங்கதேசத்திற் கரசனுக்கி உங்களோடு ஒப்ப உயர்த்திவைப்பேன்."

கீறிட்ட பகுதியை விளக்குக.

அ. பாண்டவர், துரியோதனனுதியர், துரோணுச்சாரியர், கிருபாச்சாரியர் இருவரிடமும் படைக்கலப்பயிற்சி பெற்றனர். பலவருடங்கள் கழிந்தன. அவர்களின் ஆற்றலைப் பிறர் கண்டு களிக்க ஒருநாள் ஏற்பாடு செய்யப்பட்டது. நகரமக்கள், இராஜகுமாரர்கள், மந்திரிபிரதானிகள் விளையாட்டுக்களத்தை

அடைந்து விளையாட்டைக் கண்டுகளிக்க ஆவலுடன் இருந்தனர். துரியோதனனும், வீமனும் ஒருவருக்கு ஒருவர் நிகர் எனும்படி மற்போர் நடத்தித் தமது இருப்பிடம் சென்றனர். பின் அருச்சுனன் தனது வில்லாற்றலைக் காட்டினன். யாவரும் ஆரவாரஞ் செய்து மெச்சிப் புகழ்ந்தனர். அதுகாலை கர்ணன் களத்தை அடைந்து தான் அருச்சுனனினும் மேம்பட்டவன் என்று அகங்காரவார்த்தைகள் பேசி அருச்சுனனை இகழ்ந்தான். சொற்போரும் விற்போரும் நிகழ்ந்தன. அப்பொழுது கிருபாச்சாரியர் எழுந்து கர்ணன் பிறப்பு முதலியவற்றை இழிவாகப் பேசி, அவன் அருச்சுனனுடன் போட்டியிட அருகதையற்றவன் என்றார். உடனே கோபங்கொண்ட துரியோதனன் இவ்வாறு கூறினன் :

ஆ. ஒரு சிங்கத்தைப் பார்த்து இது மான் வயிற்றிலே தோன்றியது என்று ஒருவன் கூறினால் அப்பொழுதே அவன் தன் கூற்றை நிலைநாட்டியவனாகமாட்டான். அதுபோலக் கர்ணனுடைய சிறப்புக்களைப் பார்க்கும்போது கர்ணன் இராஜகுடும்பத்தில் தோன்றியவனாக இருப்பான் அன்றி வேறு குடும்பத்தில் தோற்றியவனாக இருக்கமாட்டான். இதை நீங்கள் ஏற்றுக்கொள்ளா திருப்பின் அவனை நான் அங்கநாட்டிற்கு அரசனாக்கி உங்களோடு சமனாக உயர்த்திவைப்பேன்.

இ. கர்ணன் ஆற்றல்களே அவனை இராஜவம்சத்தில் பிறந்தவன் என்பதை எடுத்துக்கூறும். அதை விடுத்துக் கிருபாச்சாரியர் அவன் இராஜகுலத்தவன் அல்லன் எனக் கூறுவது சிங்கத்தைப் பார்த்து இது மான்குட்டி என்று சொல்வதை ஒக்கும் எனத் துரியோதனன் எடுத்துக்காட்டுகின்றான். இப்பகுதிமூலம் துரியோதனன், கர்ணனை அரசகுமாரன் என்றும், கிருபாச்சாரியர் சிங்கத்தை மான்குட்டி என்னும் மூழ்மகன் என்றும் இழிவாகப் பேசுகின்றார். கிருபாச்சாரியர் கூற்று ஆதாரம் அற்றது என்பது துரியோதனன் கருத்து.

۷. "இது நினக்கும் நின்குலத்திற்கும் பேரழிவைத் தருவதோர் உரையாம். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றக் கருதித் தன் இளைய தாய் பெற்ற புத்திரர் இருவருக்கும் இவ்வாழ்வும், இவ்வரசும் வழங்கிய நின்குலப் பெருந்தகையொருவன் இச் சபையின்கண்ணே விளங்குகின்றான் அன்றோ! அவன் செயற்கருஞ் செயலால் சந்திர

வம்சம் அடைந்த கீர்த்தி இன்னுங் குன்றாது நின்று விளங்குவதன்றோ! அதனையாயினுஞ் சிந்திக்கக்கடவை, சந்திரவம்சத்துக்குரிய பெருங் கீர்த்தியைக் காக்கும் பொருட்டாயினும், பாண்டவர் உரிமையை மறுக்காது கொடுக்கக்கடவை.''

சந்திரவம்சம் எதனாற் பெருமை அடைந்தது ?

அ. பாண்டவரிடம் இருந்து திருதராஷ்டிரனிடஞ் சென்ற கிருஷ்ணன் தனது தூதை எடுத்துக் கூறினன். அதுகேட்ட சபை முழுவதும் "இத்தூது தகும்'' என்று ஏகோபித்துக் கூறிற்று. திருதராஷ்டிரனும் அவ்வாறு செய்வதாகக் கூறினான். கோபங்கொண்ட துரியோதனன் கிருஷ்ணனைப் பார்த்து, எவர் என்ன நினைத்தாலும், எவர் வெறுத்தாலும் தான் அவர் களுக்கு கிருஷ்ணன் அமர்ந்திருக்குஞ் சிறிய இடந்தானும் (ஈ இருக்கும் இடந்தானும்) கொடுப்பதில்லை எனக் கூறினான். அதுகாலை கிருஷ்ணன் கூயறிவை இவை :

ஆ. இவ்வாறு நீ சொல்வது உனக்கும், உனது குலத் திற்கும் பெரிய கேட்டை விளைவிக்கும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற விரும்பி, தனது இளையதாய் பெற்ற மக்களுக்கு அரசுரிமையைக் கொடுத்த ஒரு தியாகி இச் சபையில் இருக் கின்றான். அவனது தியாகத்தால் சந்திரகுலம் அடைந்த பெருமை இன்னும் மங்கவில்லை. அதனை நீ சிந்திப்பாய். அந்தப் பெருமை அழியாமல் இருக்கும்பொருட்டு பாண்டவருக்கு அவர் உரிமையை மறுக்காது கொடு.

இ. வீட்டுமரின் தந்தை சந்தனு மன்னன், பரதவகுலத் தைச் சேர்ந்த மச்சகந்தி என்பவளிடம் காதல்கொண்டு தனது காதலை அவளிடம் வெளியிட்டான். அவள், தனது வயிற்றிற் பிறக்கும் புத்திரருக்கு அரசுரிமைகிடைக்க ஆவன செய்தால் சந்தனுவை விவாகஞ் செய்வதாகக் கூறினாள். ஆனால் சந்தனு மன்னன் அதை விரும்பாது தனது காதலை அடக்கி வாழ்ந்தான். இந்தச் செய்தியை அறிந்த வீட்டுமர், அரசுரிமை தனக்கு வேண்டாம் என்றும், தான் வாணாள் முழுவதும் பிரமச்சரிய விரதம் காப்பது என்றும் தந்தையிடம் கூறித் தந்தையை மச்சகந்தியை மணக்கும்படி கேட்டுக்கொண்டார். சந்தனு மன்னனும் மனமகிழ்ந்து மச்சகந்தியைப் பரிமளகந்தியாக்கி விவாகஞ் செய்து இன்பமாக வாழ்ந்தான். வீட்டுமர் செய்த இச் செயற்கருஞ் செயல் சந்திரகுலத்திற்குப் பெருமை நல்கியது.

vi. "உதிஷ்டிரன் சினமானது சமுத்திர மத்தியிலுள்ள வடவாமுகாக்கினி போல்வது. அதனை இன்னதென் றுணராது துரியோதனனுதியர் அற்பமாக மதிக்கின்றனர் போலும். மூண்டெழுந்து அஃதோங்குமாயின் அதனைத் தடுப்பதெங்ஙனம்? பாண்டவர்களை நன்குகவூன்றி நோக்குவையாயின் உதிஷ்டிரன் தரும விருக்ஷமாகவும், அவ்விருக்ஷத்துக்கு வேதமும், தருமநூலும், யானும் வேர்களாகவும், அருச்சுனன் அதற்குப் பராரையாகவும், வீமன் அதன் வலிய கிளைகளாகவும், நகுல சகாதேவர்கள் புஷ்பமும் பழமுமாகவு மிருத்தலைக் காண்பாய்."

இவற்றுற் சொல்லப்பட்டவை யாவை?

அ. தௌமிய முனிவர் சென்றபின் திருதராட்டினன் மந்திரத்தலைவரோடு ஆராய்ந்து, பாண்டவர்பால் சஞ்சய முனிவரைத் தூதாக அனுப்பினுன். சஞ்சய முனிவர் அங்குச் சென்று, பொறுமையின் பெருமைகளையும், கோபத்தின் சிறுமையையும் விளக்கிப் போர்செயின் பாண்டவர் தோற்பர் என்றுங் கூறினுர். கோபங்கொண்ட தருமர் சில அறவுரைகளை எடுத்துச் சொல்லி ஆண்டிருந்த கிருஷ்ணனைப் பார்க்கக் கிருஷ்ணன், சஞ்சயனைப் பார்த்துச் சில வார்த்தைகள் கூறினுன். அவற்றில் ஒரு பகுதியே இது:

ஆ. தருமரின் கோபம் உலக அழிவில் உண்டாகும் வடவாமுகாக்கினி போன்றது. தருமரின் கோபம் எப்படிப்பட்டதென்று துரியோதனனுக்கும், சகோதரருக்குந் தெரியாது. பொறுமைக்கடலில் கோபந் தோன்றுமாயின் அதனைத் தடுக்க முடியாது என்பதை அவர்கள் உணரவில்லை. அறவிருக்ஷமாகப் பாண்டவர் இருக்கின்றனர் என்பது ஆராயின் தெரியும்.

இ. இவற்றுல் தருமர் பொறுமைக் கடலென்றும், அவருக்குக் கோபந் தோன்றின் அஃது வடவாமுகாக்கினி போற் றீமை விளைக்கும் என்றும், அதைத் தடுக்க முடியாதென்றும் தருமர், அறவழி ஒழுகுகின்றவர் என்றும், அவருக்கு யானும் மற்றைய பாண்டவர்களும் உறுதுணையாக இருக்கின்றோம் என்றுங் கிருஷ்ணர் சஞ்சய முனிவருக்கு எடுத்துக் கூறினர்.

vii. "அரசர்களே! பெரியோர்களே! கேண்மின். இப்போது யான் சொல்லும் வஞ்சினம் முன்னர்க்

காலத்தி லெவராலுஞ் சொல்லப்பட்டதன்று. பின்னர்க் காலத்து மெவராலும் உரைக்கப்படுவதுமன்று. இப்போது கூறுவதை முடியேனாயின் என் முன்னோர் சென்றடைந்த உலகஞ் செல்லேனாக. யுத்தத்தில் இத் தீயிற் றீயனாகிய துச்சாதனனை வன்கொலைபுரிந்து அவன் உரம் பிளந்து உதிரம் குடிப்பது சத்தியம்.''

இவன் கூறிய வஞ்சினத்தை விரிவாக எழுதுக.

அ. பாண்டவர்கள் செய்த இராஜசூய யாகத்திற்குச் சென்று திரும்பிய துரியோதனன், தந்தையாரையும் ஒருவாறு தன் எண்ணத்திற்கு உடன்படுத்தி, சகுனிமூலம் சூதாட்டத்தினால் அவர்கள் அரசுரிமையைக் கைப்பற்ற எண்ணிப் புதுமனை ஒன்று அமைத்தான். புதுமனைப் புகுவிழாவிற்கு, விதுரனைத் தூதாக அனுப்பி அவர்களையும் அழைப்பித்தான். சூதாடல் மூலம் அவர்கள் உடைமைகளையுங் கவர்ந்து அவர்களையுந் திரௌபதியையும் அடிமையாக்கினான். தனது தம்பியாகிய துச்சாதனன்மூலம் திரௌபதியையுஞ் சபைக்கழைப்பித்துத் துகிலுரிந்தான். வீமன் முதலியோரின் கோபம் தருமரின் பொறுமைக்கு அடங்கியது. எவர் துணையுமற்ற திரௌபதி கிருஷ்ணரின் உதவியால் ஆபத்தினின்றும் நீங்கினாள். சபை முழுவதும் ஆச்சரியத்தில் மூழ்கியது. அதுகாலை வீமன் இச் சபத வார்த்தைகளைக் கூறினான்.

ஆ. அரசர்களே! பெரியோர்களே! கேளுங்கள். இப்போது யான் கூறும் சபதமொழிகள்போன்று முன்பு எவராவது கூறவில்லை. இனிமேலும் ஒருவரும் கூறமாட்டார்கள். நான் கூறுவனவற்றைச் செய்யேனாயின் என் முன்னோர் சென்ற உலகஞ் செல்லமாட்டேன். கொடியவரின் கொடியவனாகிய துச்சாதனனைப் போரிலே கொன்று அவன் இரத்தத்தைக் குடிப்பது நிச்சயம்.

இ. ''யான் யுத்தத்தில் துச்சாதனன் மார்பைப் பிளந்து, அவன் இரத்தத்தை இருகைகளாலும் அள்ளிக் குடிப்பதன் முன்னம் கைகளினால் நீர் பருகமாட்டேன். தாகம் அதிகரிக்குமாயின் வில்லினால் தண்ணீரில் அடித்து மேலெழுந் துளிகளை வாயினாற் பருகி உயிர்வாழ்வேன்'' என்றும், தன் கதையாற் துரியோதனனைக் கொன்று, தனது இடதுகாலால் அவன் தலையைப் பொடிபடவரைப்பது என்றும் வீமன் சபதஞ் செய்தான்.

viii. "தரும நூல்களிலே கூறப்பட்ட வறங்களெல்லாம் நின்னிடத்தே குடிகொண்டிருத்தலின் இவ்வற்ப பொய்யினுல் நீ சிறியனுகமாட்டாய். பெருநெருப்புக்கு ஈரமில்லையன்றே. இப் பொய்யினுல் வரும் அற்ப பாவத்தை மற்றைய அறங்களெல்லாந் தகித்துவிடும். அஞ்சாது கூறுக."

கீறிட்ட பகுதியை விளக்குக.

அ. பதினைந்தாம்நாட்போர் தொடங்கியது. அருச்சுனனும், துரோணரும் எதிர்த்துப் போர்புரிந்து ஒருவரை ஒருவர் வெல்லமாட்டாது வெல்லக்கூடியவரை நாடினர். இருபக்கத்திலும் அநேக யானை, குதிரை என்பன இறந்தன. கிருஷ்ணன், அசுவத்தாமன் இறந்தான் என்று சொல்லின் துரோணனை வெல்லலாம் என உபாயங் கூறினுன். அருச்சுனன் மறுத்தான். வீமன் அசுவத்தாமா என்ற யானை ஒன்றைக் கொன்று அசுவத்தாமா இறந்தான் என உரக்கக் கூறினுன். இச் சொற் கேட்டது. நிலைகுலைந்து தருமரிடம் உண்மை அறிந்து வருமாறு ஒரு தூதனை அனுப்பினுர் துரோணர். கிருஷ்ணன் தருமரைப் பொய் கூறும்படி வற்புறுத்தினுர். அப்போது தருமர் மறுத்தார். அதுகாலை கிருஷ்ணர் தருமரை நோக்கி இவ்வாசகங்களைக் கூறினுர்.

ஆ. அறநூல்களிலே சொல்லப்பட்ட நற்பண்புகள் எல்லாம் உன்னிடத்திலே இருக்கின்றமையால் இச் சிறிய பொய்யினுல் நீ சிறியவனுகமாட்டாய். கொழுந்துவிட்டுச் சுவாலித்து எரிகின்ற பெரிய நெருப்பில் ஈரமில்லையல்லவா? ஈரந் தோன்றினும் அந்நெருப்பு அதை அழித்துவிடும். இச்சிறு பொய்யினுல் வரும் பாவத்தை உனது தருமங்கள் எல்லாம் அழித்துவிடும். பயப்படாது சொல்க.

இ. கொழுந்துவிட்டெரியும் பெரிய நெருப்பில் சிறிதேனும் ஈரமிராது என்பது இத்தொடரின் பொருள். சிறிய நீர்த்துளிகள் விழினும் அவை நெருப்பை அவித்துவிடப்போவதில்லை. நெருப்பு அவற்றை அழித்துவிடும். நீயும், இச்சிறு பொய்யையும் துணிந்து சொல்லு. அது உன் அறங்களை அழியாது. அறங்கள் அப்பொய்யை அழித்துவிடும் என்று கூறிக் கிருஷ்ணன் தருமரைத் துணிந்து பொய்கூறும்படி வற்புறுத்துகின்றுர்.

ix. "நீர்தாம் என்னைப்பெற்ற தாயெனக் கூறியதை நான் நம்பமாட்டேன். இங்ஙனம் கூறி என்பால் வந்தோர் எண்ணிலர். அவருள்ளும் என்பால் உள்ள ஒரு வஸ்திரத்தைத் தரித்து எற்புடம்பு கொண்டாரும் பலர். அவ் வென்புகளிங்கே இவ்வறையுட் கிடத்தலுங் காண்க. இவ் வஸ்திரத்தைத் தரிப்பவள் என்னைப் பெற்ற தாயாயின் உயிர் துறவாள். அல்லளேல் உயிர் துறப்பாள். ஆதலால் இங்கே யிறந்து எலும்புருவாகிய மாதர்களைப்போல நீருமாகாது உமக்கு வேண்டியதைப் பெற்றுக்கொண்டு மீளுக."

இதிற் சொல்லப்படுபவனை ஏன் பல பெண்கள் தத்தம் மகனெனச் சொந்தங் கொண்டாடினர்?

அ. திருதராட்டினன்பாற் றூதாகச் சென்ற கிருஷ்ணன் தூது முடித்துத் திரும்பிவந்து, அறம் நிலைநிறுத்தற்பொருட்டும் பாண்டவர் வெல்லற்பொருட்டும் பல தந்திரங்களைச் செய்தான். குந்தியிடஞ் சென்று கர்ணன் அவளது மகன் எனக் கூறிக் கர்ணனிடம், அருச்சுனன்மேல் ஒருமுறைக்குமேல் நாகாஸ்திரந் தொடுக்காதிருக்கும்படி வரம் பெறும்படி கூறினன். வேதனை அடைந்த குந்தி பலரின் நன்மை கருதிச் செய்வதாக ஒப்புக்கொண்டாள். குந்தியிடம் கூறியதுபோலவே கர்ணனிடஞ் சென்று கர்ணனது பிறப்பையும் அவனுக்கு உணர்த்திக் குந்தியைத் தாயென்றும் உரைத்தான். வரம்பெறச் சென்ற குந்தியை உபசரித்து, அவள் தான் தனது தாயெனக் கூறியதை நம்பாது இவ்வாறு கூறினன்.

ஆ. நீங்கள்தாம் என்னைப் பெற்ற அன்னை என்று சொல்வதை நான் நம்பமாட்டேன்; இப்படிச் சொல்லி என்னிடம் வந்தவர் பலர். அவர்களுள் நான் கொடுத்த ஆடையை அணிந்து எலும்புருவம் பெற்றவர் பலர். அவ்வெலும்புகள் இவ்வறையுட் கிடப்பதைப் பாருங்கள். இங்கு இருக்கும் இந்த வஸ்திரத்தை அணிபவள் என்னைப் பெற்றெடுத்த தாயாயின் உயிருடன் இருப்பாள். வேறு யாராயின் இறப்பாள். ஆதலால் முன்பு எலும்புருவான பெண்களைப்போல் நீருமாகாமல் உமக்கு வேண்டியதைப் பெற்றுக்கொண்டு செல்க.

இ. கர்ணன் பெற்றிருந்த ஆற்றல்களையும், அவனுக்கு உலக மக்கள் கொடுத்த பெருமையையும் நினைத்துத் தம்மைக் கர்ணனைப் பெற்றவளாகக் காட்டிப் பெருமைபெறப் பல பெண்கள் விரும்பினர்.

ஜ. "எனக்கு வாக்குத்தத்தஞ் செய்த பொருளைத் தராது கவர்ந்துகொண்டமையால் உனக்கு இத் தண்டம் யான் செய்யும்படி நேர்ந்தது. உன்போலுஞ் செருக்குடையவனையும், நன்றிமறந்தவனையும் யான் யாண்டுங் கண்டதில்லை."

அவன் செய்த வாக்குத்தத்தம் யாது?

அ துரோணாச்சாரியரும், துருபதனும் ஒருசாலை மாணாக்கராக விருந்தனர். துருபதன் அதுகாலை துரோணருக்கு ஒரு வாக்குக் கொடுத்திருந்தான். பின் அரசனான காலத்தில் அத் துரோணரை மதியாது அதையுங் காற்றிற் பறக்கவிட்டான். அதை யுள்ளத்தில் வைத்திருந்தார் துரோணர். தன்னிடம் வில்வித்தை பயின்ற மாணாக்கரில் அருச்சுனனைக் கொண்டு அவனுக்குத் தக்க பாடம் படிப்பிக்க விரும்பினர். ஆனால், அருச்சுனனிடம் மாத்திரம் துருபதனைப் பிடித்துத் தரும்படி சொன்னார். யாவரும் அவனை எதிர்க்கவியலாது பின்வாங்கினர். ஆனால், அருச்சுனன் அவனை எதிர்த்துச் சிறை செய்து துரோணர் முன் நிறுத்தினான். துரோணர் அப்பொழுது துருபதனை நோக்கி இவ்வாறு கூறினர்:

ஆ. எனக்கு அளித்த உறுதிப்படி தரவேண்டிய பொருளைத் தராது அபகரித்துக்கொண்டாய். அதனால் இத் தண்டனையை நான் தந்தேன். உன்னைப்போல் கர்வங்கொண்டவனையும், செய்ந்நன்றி மறந்தவனையும் யான் எவ்விடத்திலேயும் காணவில்லை.

இ. துருபதன் தான் பட்டாபிஷேகம் பெற்றபின்னர் துரோணருக்குக் கனகாபிஷேகம் பண்ணுவதாக வாக்களித்திருந்தான். துருபதன் பட்டாபிஷேகம் பெற்ற பின்னர், துரோணர் அவ்வாக்கை நினைந்து அவன்பாற் சென்றனர். ஆனால், துருபதன் தக்க மரியாதை செய்யாமலும், வாக்கை நிறைவேற்றாமலும் அனுப்பிவிட்டான்.

xi. "இராஜகுமாரர்களே! எனது சகோதரியினது பாணிக்கிரகணத்தின்பொருட்டு நீங்கள் எல்லீரும் இங்கே வரவழைக்கப்பட்டமை அறிவீர்களன்றோ. இங்கே ஓமாக்கினிக்குச் சமீபத்தில் வைக்கப்பட்டிருக்கும் இவ்வில்லை எடுத்து நாண்பூட்டி, அதோ மேலே இடையறாது சுழன்று கொண்டிருக்கின்ற அம் மச்ச யந்திரத்தை ஐந்து பாணங்

களினுற் கீழே வீழ்த்துபவன் யாவனே அவனே என் தங்கையைப் பாணிக்கிரகணஞ் செய்யும் யோக்கியனுவான். அம் மச்ச யந்திரத்தை இலட்சியஞ் செய்யும் பொழுது கண்களை மேலே வைத்து நோக்காது கீழேயுள்ள தண்ணீரிலே விழுகின்ற அதன் நிழலையே நோக்கிப் பாணப்பிரயோகஞ் செய்தல் வேண்டும்."

பாணிக்கிரகணம், மச்சயந்திரம் என்பவற்றை விளக்குக.

அ. பாண்டவர்கள் வேத்திரகீயம் என்னும் நகரில் இருந்தனர். சனங்கள் கூட்டங் கூட்டமாகப் பாஞ்சால நாட்டை நோக்கிச் சென்ருர்கள். காரணம் வினவிய பாண்டவர்கள் திரௌபதியினது சுயம்வரத்திற்கு அந்தண வடிவந் தாங்கிச் சென்றனர். சுயம்வர நாளன்றும் அவர்கள் அந்தணர்போலே அந்தணர்க்குரிய இடத்தில் அமர்ந்துகொண்டனர். அதுகாலை திரௌபதியினது சகோதரனுகிய திட்டத்துய்மன் சபையோரை நோக்கி இவ்வாறு கூறினுன்.

ஆ. அரசகுமாரர்களே! எனது சகோதரியினது திருமணத்தின் பொருட்டு இவ்விடம் நீங்கள் அழைக்கப்பட்டமையை யாவரும் அறிவீர்கள். ஓமத்தீயின் பக்கலில் வைக்கப்பட்டிருக்கும் இப்பெரிய வில்லை வளைத்து, மேலே தொடர்ந்து சுழன்றுகொண்டிருக்கும் இலக்குப்பொருளை அதைப் பார்க்காது, நீரிலே தோன்றும் அதன் நிழலைப் பார்த்து யார் ஐந்துபாணங்களால் வீழ்த்துகின்ருனே அவனே எனது சகோதரியைத் திருமணஞ் செயயத் தகுதியுடையவன்.

இ. பாணிக்கிரகணம் என்ற சொல் கைப்பிடித்தல் என்னும் பொருளை உடையது. பாணி = கை; கிரகணம் = பிடித்தல்; திருமணஞ் செய்தல் என்பது பொருள்.

மச்சயந்திரம் என்ற சொல் குறிப்பொறி என்னும் பொருளை உடையது. மச்சம் = குறி; யந்திரம் = பொறி; குறிபார்த்துக் கலைபயிறலுக்காக மேலே கட்டப்பட்டிருப்பது.

xii. முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ
பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலையோ
சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ யெய்தற்
கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடி லென்ருன்.

கீறிட்டவற்றை விளக்குக.

அ. கிருஷ்ணன் பாண்டவரிடமும், திரௌபதியிடமும் விடைபெற்றுக்கொண்டு, சாத்தகியையும், கிருதவர்மனையுந் துணையாக்கி அத்தினபுரத்தையடைந்தான். திருதராட்டினன் துரோணர், விதுரர் மூலம் வரவேற்றான். திருதராட்டினனும் கிருஷ்ணனும் சிறிதுநேரம் உரையாடியபின் தான் அவனுக்குப் பகைவனென்றும், அவர் வீட்டில் விருந்துண்ணல் தகாது என்றுங் கூறி, மற்றையோருக்குஞ் சமாதானங்கூறி விதுரன் மாளிகையை அடைந்தான். விதுரன் தக்கவாறு உபசரித்து இவ்வாறு கூறினான்.

ஆ. முன்பு அறிதுயில் செய்த பாற்கடலோ, பாம்புகளின் தலைவனாகிய ஆதிசேடனோ, பசிய ஆலிலையோ, நால்வகையான வேதமோ என்பவற்றில் எது என்று நினைத்து, நீங்கள் எனது சிறு குடிலுக்கு எழுந்தருளினீர்கள். நீங்கள் எழுந்தருள்வதற்கு எனது சிறுகுடில் என்ன பெரிய தவத்தைச் செய்ததோ அறியேன்.

இ. பயோததி: பாற்கடல்

பன்னகாதிபதி: பாம்புகளின் தலைவன் ஆதிசேஷன்.
(பன்னக + அதிபதி = பாம்புகளின் தலைவன்.)

நால்வகைச் சுருதி: இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்கள்.

**2. பாண்டவர் பிறப்பையும், பாண்டுவின் இறப்பையுஞ் சுருக்கி எழுதுக.**

பாண்டவர் பிறந்ததெப்படி? பால் கறப்பதெப்படி? என்று ஒரு விடுகதை ஊரில் வழங்குகின்றது. இவற்றிற்கு விடையாகக் குந்தியிருந்து, குந்தியிருந்து என்று சொல்வார்கள். இதிலிருந்து குந்தியிருந்தமையாற்றான் பாண்டவர்கள் பிறந்தார்கள் என்று ஊகிக்கக்கூடியதாக விருக்கின்றது.

சந்திரவம்சத்திலே முன்பு பாண்டு என்னுஞ் சிறந்தவோர் மன்னன் இருந்தான். அவன் மன்னர் வழக்கப்படி வேனிற் காலத்து ஒருநாள், வேட்டுவ வீரர் பலர் சூழ வேட்டை மேற் சென்றான். வேட்டைக்குத் தக்க மிருகம் கிடையாமையால், கானகம் எங்கும் அலைந்து மனமுடைந்து, தனது குதிரையை மிக வேகமாகச் செலுத்தினான். வேட்டுவ வீரருக்கும் அவனுக்கும் இடைத்தூரம் அதிகமாயிற்று. அரசன் கண்களுக்கு

இரு மான் உருவங்கள் தோன்றின. அவன் உடனே அவற்றின் மீது பாணத்தைத் தொடுத்தான். பாணம் அவ்வுருக்களின் உயிர்களைப் பருகியது. மானுக நின்று தம் மனைவியுடன் இன்ப மனுபவித்த முனிவர் "சிற்றின்பம் விரும்பின் உன் சிரம் ஆயிரம் பிளவாக" எனச் சாபமிட்டு உயிர் துறந்தார். தான் செய்த இழிவான செயலால் மனமுடைந்த அரசன் சிற்றின்பம், வாழ்வு என்பவற்றைத் துறக்கத் தயாராயிருந்தும், உலகப் பழியையும், புத்திரப் பேறின்மையையும் நினைந்து சொல்லொணு அல்லல் உற்ருன். பிரிந்த பரிசனங்கள் அவண் வந்தடைய அரசன் நடந்தவற்றை எல்லாம் அவர்கட்குச் சொல்லித் தான் இனிமேல் வாணுளைக் கானகத்திற் கழிக்கப்போவதாகவுங் கூறினுன். அவர்கள் நகர் சென்றனர். இச் செய்தி அறிந்த அரசன் மனைவியர், மந்திரி பிரதானிகள், நகரமக்கள் யாவரும் அவ்விடத்தை அடைந்தனர். அடைந்தவர் அரசனின் துறவு வாழ்வை விரும்பாராய் உண்மைத்துறவு எது என்பதை விளக்கினர். அரசனும் தனக்குக் கிடைத்த சாபத்தை ஓர் அளவு சொல்லிப் புலம்பினுன்.

அப்பொழுது குந்தி, தான் கன்னியாயிருந்த காலத்தில் தங்கள் அரண்மனைக்கு வந்த முனிவருக்குப் பணிவிடை செய்ததையும், அம்முனிவர் தன் பணிவிடையை மெச்சி, புத்திரப் பேற்றிற்கு உரிய சில மந்திரங்களை உபதேசித்ததையும் எடுத்துக் கூறினுள். அவற்றைக் கேட்ட அரசன் மிக்க மகிழ்ச்சிகொண்டு, அரசியற் பொறுப்பை வேருருவரிடம் ஒப்படைத்துத் தான் வனத்திற் காலங்கழிக்கப் போவதாகக் கூறினுன். மந்திரிபிரதானிகள் முதலில் மறுத்துப் பின் ஒருவாறு உடன்பட்டனர். அரசாட்சி திருதராட்டினனுலும், மற்றையோராலும் ஆளப்பட்டது. பாண்டு அங்கேயே ஒரு மலைச்சாரலில் இன்பமாகக் காலங்கழித்தான்.

சாப நினைவு அவன் மனத்தை விட்டகன்றது. ஒருநாள் குந்திதேவியை அழைத்துப் பக்கத்தில் இருத்திப் புத்திரர் பெருமையை விளக்கி, அவள் அருளை வேண்டினுன். அவளும், முனிவரின் மந்திர சத்தியினுல் இயமன், வாயு, இந்திரன் மூவரையும் வரவழைத்து முறையே தருமன், வீமன், அருச்சுனன் என்னும் புத்திரர்களைப் பெற்றுக்கொடுத்தாள். தனது சக்களத்திக்கும் அம்மந்திரங்களைச் சொல்லி அவள் மூலம் நகுல, சகாதேவர்களையும் பாண்டுவின் புத்திரர்களாக்கினுள். அரசனும் இன்பக்கடலுள் மூழ்கினுன்.

காட்டிலே தவவேடம் பூண்டிருந்த பாண்டு, தன் புத்திரர் செய்கைகளாலும், சிறப்புக்களாலும், சாபம் மறந்து, விரதங்கள் கைவிட்டு, சிற்றின்பத்தில் நாட்டங்கொண்டான். பாரியார் மீதும் அன்புகொண்டான். வசந்தகாலத் தென்றல் அவன் உடம்பை வருடியது ; கண்ணுக்கினிய காட்சிகள் கருத்தைக் கவர்ந்தன. பட்சிசாலங்களின் கூட்டுவாழ்வு சிற்றின்ப நாட்டத்தை ஏற்படுத்தியது. ஆசைவெள்ளம் அணைகடந்து பாய்ந்தது. சிற்றின்பப் பித்தனானன். தன்முன் எதிர்ப்பட்ட இளைய மனைவியைப் பொள்ளெனப் பற்றினன். இருவரும் ஒருவரானார். முனிவர் சாபம் பலித்தது. பாரியும் உயிர் நீத்தாள். மனவேதனையோடு கானகத்தில் வசித்த பாண்டவரையும், குந்தியையும் முனிவர்கள் திருதராட்டினனிடம் ஒப்படைத்தார்கள்.

3. திரௌபதி அருச்சுனனுக்கு மாலையிட்டதையும், அருச்சுனன் சுபத்திரையை மணம்முடித்ததையுஞ் சுருக்கி எழுதுக.

## திரௌபதி அருச்சுனனுக்கு மாலையிட்டமை :

அக்கினியூட்டப்பட்ட அரக்குமாளிகையினின்று யாரும் அறியாமற் றப்பிய பாண்டவர் வேத்திரகியத்திற்குச் சென்று வசித்தார்கள். ஒருநாள் திரள்திரளாக மக்கள் செல்வதைக் கண்ட இவர்கள், மக்கள் திரண்டு செல்வதற்குரிய காரணம், பாஞ்சாலதேசத்தரசன் துருபதனின் மகள் திரௌபதியின் சுயம் வரம் என அறிந்தார்கள். தாமும் அந்தணர் வடிவங்கொண்டு பாஞ்சால தேசத்தை அடைந்தார்கள். திருமண தரிசனத்திற்கு வந்தோரும், திருமணஞ் செய்துகொள்ள வந்தோரும் சுயம்வர நாளை ஆவலோடு எதிர்பார்த்து இருந்தனர். நாளும் வந்தது. ஓர் அழகான மண்டபம் அமைக்கப்பட்டது. அரசரின் ஆண்மையைப் பரீட்சிக்கும் மைதானமும் ஒழுங்குசெய்யப்பட்டது. யாவருந் தத்தமக்குரிய இடங்களில் அமர்ந்தார்கள். சித்திரப் பந்தரின்கீழ் ஓமாக்கினி வளர்க்கப்பட்டது. அக்கினியின் ஒரு பக்கலில் குலகுருவுந் திரௌபதியும், மறுபக்கலில் பிராமணோத்தமர்களும் வீற்றிருந்தார்கள். சுபநேரமும் வந்தடுத்தது. திரௌபதியின் சகோதரனை திட்டத்துய்மன் எழுந்து திருமண நிபந்தனைகளை அரசர்களுக்கறிவித்தான். நிபந்தனைகளைக் கேட்டவுடன் பலர் நிலைகுலைந்தார்கள். முயன்றுஞ் சிலைதூக்க முடியாது தலைகுனிந்தனர். கர்ணனும் அவமானப்பட்டான். சபையில் அமைதி நிலவியது.

அந்தணர் கூட்டத்திலிருந்து ஒருவன் எழுந்து மைதானத்தை அடைந்தான். அரசரன்றி அந்தணர் நாண் ஏற்றி வீழ்த்தின் திரௌபதி உரியளோ என வினவி உடன்பாடான பதிலையும் பெற்றான். வில் தூக்கி, நாண் இழுத்துப் பாணம் ஏவி மச்சயந்திரத்தை மண்ணில் இருக்கச் செய்தான். அந்தணரும், அருச்சுனன் சொந்தச் சோதரரும் சிந்தை மகிழ்ந்தார்கள். வந்திருந்த மன்னர் நொந்து வாடினர். திரௌபதியும் குருவினதும், அண்ணனதும் குறிப்புப்படி அருச்சுனனுக்கு மாலையிட்டாள். மனமுடைந்த மன்னர் துருபதன்மீது சொல்லம்பு தொடுத்தனர். துருபதன் தலைகுனிந்து மௌனவிரதம் அனுட்டித்தான். அருச்சுனன் மாமனுருக்காகப் போரிட்டான். எல்லா மன்னரும் வில்லை நிலத்தில் வைக்கப் பெரியார் ஒருவரின் சொல்லை எதிர்நோக்கினர். கிருஷ்ணர் தோன்றி யாவரையுஞ் சமாதானஞ் செய்து மன்னர்களைத் தம்மிருப்பிடஞ் செல்ல விடையளித்தான். திரௌபதி பாண்டவருடன் சென்றாள். துருபதன் அருச்சுனனே தன் மருகனெனவறிந்து அளவிலாவானந்தம் அடைந்தான். வியாசரினதும், நாரதரினதும், குந்தியினதும் கட்டளைப்படி திரௌபதி ஐவருக்கும் பொதுவானாள்.

சுபத்திரை திருமணம் :

வியாசரினதும், திரௌபதியினதும், தாயாரதும் கட்டளைப்படி, ஆண்டுக்கொருவர் திரௌபதியைத் தீண்டுவதென்றும், அவ்வாண்டுக்குரியவரன்றி மற்றையோர் காண்டிடில் தீர்த்த யாத்திரை செய்வதென்றும், விரதம்பூண்டு பாண்டவர்கள் வசித்தார்கள். கள்வன் ஒருவனின் கையகப்பட்ட நல்லவன் ஒருவனைக் காப்பாற்ற வில்லெடுத்துக் காப்பாற்றிய அருச்சுனன், விரதந் தவறியதற்காகத் தருமனிடம் வலிந்து விடை பெற்றுத் தீர்த்த யாத்திரை சென்றான். புண்ணியதீர்த்தம் பல வாடினான். எண்ணிடற்கரிய கோயில்களை வலம்வந்தான். சுபத்திரையின் நிவிர்த்திபெறுவாசையால் துவாரகை அடைந்தான்.

சுபத்திரை, பலராமன், கிருஷ்ணர் என்போரின் தங்கை. தான் சுபத்திரையை மணம்முடிக்கப் பலராமன் மாத்திரம் விரும்பான் என்பதை நினைந்தவண்ணம் அருச்சுனன் நகர்ப் புறத்திருப்பதை உணர்ந்த கிருஷ்ணன் அவனிடஞ் சென்று தக்கதொரு உபாயங் கூறித் திரும்பிவந்து ஒன்றுந் தெரியாதவன்போல் இருந்தான். கிருஷ்ணன் உபாயப்படி, அருச்சுனன்

முற்றத்துறந்த பற்றற்ற முனிபுங்கவர்போல் நகர்ப்புறத்திருந்தான். முனிவர்பால் இயல்பாகப் பற்றுக்கொண்ட பலராமன் இதையறிந்து சென்று, அருச்சுனனைப் பலமுறை இரந்து வேண்டி அரண்மனைக்கு அழைத்துவந்து உபசரித்துச் சில காலம் அரண்மனையிற் றங்கும்படி கேட்டுக்கொண்டான். மறுப்பான்போல் நடித்த அருச்சுனன் ஈற்றில் உடன்பட்டான். சுபத்திரையும் பணிவிடை செய்ய நியமிக்கப்பட்டாள். அருச்சுனன் எவ்வித சந்தேகமும் ஏற்படாமல் நடந்துகொண்டான். நாட்கள் சில நகர்ந்தன. சுபத்திரையும் மனம்விட்டுப் பேசத் தலைப்பட்டாள்.

ஒருநாள் சுபத்திரை பாண்டவர் சுகத்தைப் பொதுவாக வினவி, அருச்சுனன் நலத்தைச் சிறப்பாக விசாரித்தாள். தன்னை மறந்த அருச்சுனன் தானே அருச்சுனன் எனக் காட்டினன். நாணமுற்ற சுபத்திரை அன்று முதல் அவன் கண்களுக்கு விருந்தளிக்கவில்லை. அருச்சுனனுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படாமல் கிருஷ்ணன் தன் மனைவியர்மூலம் உதவினன். அப்பெண்மணிகள் வேண்டுகோட்படி சுபத்திரை அன்னம் மாத்திரம் படைக்கச் சென்றாள். அருச்சுனனுக்கு விநாடிகள் வருடங்களாயின.

கிராமத்தில் விழாநாள் ஒன்று. நகரமக்கள் யாவரும் கிராமத்தை நகரமாக்கினர். நகரத்தில் ஒருவரும் இல்லை. இது தான் சமயம் என்று அருச்சுனன் சுபத்திரையையும் அழைத்துக்கொண்டு இந்திரப்பிஸ்தம் சென்றான். கண்டவர்கள் அருச்சுனனுனைமையின் போர் தொடாது வாளாவிருந்து பலராமனுக்கு அறிவித்தார்கள். கோபங்கொண்டு பலராமன் பழிவாங்கச் சென்றான். கிருஷ்ணன் சமாதானமுறச் செய்து சுபத்திரை திருமணத்தைச் சிறப்புற முடித்தான்.

**4. அஞ்ஞாதவாசம் என்றால் என்ன? பாண்டவர் அஞ்ஞாதவாசத்தைச் சுருக்கி எழுதுக.**

பிறர் அறியாமல் மறைந்து வாழுதல் அஞ்ஞாத வாசம் எனப்படும்.

பன்னிரண்டு வருட வனவாசம் கழித்த பாண்டவர், ஒருவருட அஞ்ஞாத வாசத்தை எவ்வாறு கழிக்கலாம் எனச் சிந்தித்தார்கள். ஒன்றுகூடி ஆராய்ந்து, பிறர் அஞ்ஞாத

வாசத்தில் தம்மையறியின் பழையபடி பன்னிரண்டுவருட வன வாசமும், ஒருவருட அஞ்ஞாதவாசமும் செய்ய வேண்டும் எனக் கவன்ருர்கள். ஈற்றில் அஞ்ஞாதவாசம் செய்தற்குரிய தேசம், துரியோதனனும் ஒற்றரும் செல்லமுடியாத நாடான விராடதேசமே எனக் கருத்திற்கொண்டனர். பின் ஒவ்வொருவரும் தாம் கொள்ளவேண்டிய வேடத்தையுந் தொழிலேயும் மற்றையோருக்குக் கூறினர். ஒவ்வொருவர் கூற்றையும் மற்றையோர் ஒப்புக்கொண்டனர். தம்மயலில் வசித்த முனிவர்களிடம் ஆசிபெற்று, பாண்டவருந் திரௌபதியும் தாம் தீர்மானித்தபடி விராடதேசஞ் சென்றனர்.

விராடதேசஞ் சென்ற தருமர், அந்தண வடிவுடன் விராடன் அரண்மனையை அடைந்து, தாம் தருமருடன் இருந்த கங்கன் என்றும், கதாப்பிரசங்கத்தில் வல்லவர் என்றுங் கூறி அவனுக்குக் கதாப்பிரசங்கியாகி, அவனை மகிழ்வித்தலேயே தொழிலாகக் கொண்டார். அடுத்தநாள் வீமன் விராடன் மாளிகையை அடைந்து, விராடனை வணங்குவான்போல் தருமனை வணங்கி, தான் வீமனுடன் இருந்த பலாயனன் என்றும், தனக்கு மடைத்தொழிலும் மற்போருங் கைவருமென்றுங் கூறி மடைப்பள்ளி யதிபதியானன். இருதினங்களின்பின் அருச்சுனன், ஊர்வசியிடம் பெற்ற வரத்தினுற் பேடியுருக்கொண்டு, விராடனிடஞ்சென்று, தான் அருச்சுனனுடன் இருந்த பிருகந்நளை எனச் சொல்லி, விராடன் மனைவியருக்கும், கன்னியர்க்குஞ் சங்கீத ஆசிரியையாகக் காலங்கழித்தான். இவ்வாறே நகுல சகாதேவர் இருவரும், விராடனிடம் தத்தம் ஆற்றல்களை எடுத்துக் கூறி முறையே குதிரைப் பந்திக்கும், ஆனிரைக்கும் வைத்தியராக அமர்ந்தார்கள். திரௌபதியும் விரதசாரணி என்னும் பெயரோடு விராடன் தேவியருக்கு அலங்காரஞ் செய்யும் பணிப்பெண்ணுக அரண்மனையிலே இருந்தாள். விராடனும் பாண்டவரிடம் பணிபுரிந்தவர்களைப் பணியாளராகப் பெற்றமையால் மனம் பூரித்தான்.

திரௌபதிபால் விராடனின் மைத்துனனுகிய கீசகன் தகாத காதல் கொண்டுள்ளான் என்பதை அறிந்த வீமன் தமது அஞ்ஞாதவாசத்திற்கு ஊறுவிளையாவகையிற் கீசகனைக் கொன்ருழித்தான். பாண்டவர் அஞ்ஞாதவாசம் எவ்வித பங்கமும் இன்றி இனிது முடிந்தது.

**5. தௌமியர் என்பார் யார்? இவர் துரியோதனனுதியர் பாற் சென்று உரைத்தவற்றைச் சுருக்கமாகத் தருக.**

பாண்டவரின் குலகுருவே தௌமியராவர். இவர் அவர்களுடன் இருந்து அறநெறிகூறி வாழ்ந்தார். வனவாசகாலத்தும் அவர்களுடன் வசித்தனர்.

பாண்டவர்கள் திருதராட்டினன் கட்டளைப்படி வனவாசம், அஞ்ஞாதவாசம் இரண்டையுஞ் செவ்வனே முடிக்குங் காலத்தில், விராட மன்னன் அவர்களுக்குத் தனது அரசையும், அபிமன்யுக்குத் தனது புத்திரியையுங் கொடுத்தான், விராடன் அரண்மனையில் திருமணஞ் சிறப்பாக நடைபெற்றது. யாவருஞ் சபாமண்டபத்திற் கூடி, இனி யாது செய்யலாம் என்று கலந்தாலோசித்தனர். கிருஷ்ணன், பலதேவன், சாத்தகி, துருபதன் யாவரும் தத்தம் அபிப்பிராயங்களைக் கூறினர். துருபதன் அயல்நாடுகளுக்குப் படைத்துணை கேட்டுத் தூதனுப்ப வேண்டும் என்றும், அதேசமயத்தில் திருதராட்டினனிடத்தும் தூதொன்று செல்லவேண்டும் என்றுங் கூறினுன். அவை யாவர்க்கும் உடன்பாடாயிற்று.

பாண்டவர் தூதாகத் திருதராட்டினனிடம் தௌமிய முனிவர் சென்ருர். யாவரும் அவரைத் தக்கவாறு உபசரிக்கச் சபையுங் கூட்டப்பட்டது. முனிவர் யாவருக்கும் ஆசி வழங்கி, "வேந்தனே! பாண்டு உன் தம்பி. நீயாளும் அரசு குருகுலச் சொத்து. உனது முயற்சியினுல் கிடைத்தது அல்ல. உனது அங்கக் குறைவு உன் உரிமையை மறுக்கின்றது. அவ்வாறு இன்றி உரிமை இருப்பினும் பாதியல்லவா உனக்குண்டு. ஆனுல், நீ அவர்கள் பங்கையும் கவர்ந்து அவர்களைத் திருப்தி செய்ய ஒரு சிறு நாட்டைக் கொடுத்தாய். அவர்கள் அதனைப் பெருப்பித்துச் சிறப்பாக வாழ்ந்தார்கள். ஆனுல், அதனையும் மாயச் சூதாடிக் கவர்ந்து, பன்னிரண்டு வனவாசத்துக்கும் ஒருவருட அஞ்ஞாதவாசத்துக்கும் அனுப்பினுய். அனுப்பும் போது திரும்பிவருங்கால் அரசுரிமையைத் தருவதாக வாக்களித்தீர்கள். திரும்பிவந்து இதுகாலை அரசுரிமையைக் கேட்கின்ருர்கள். அரசை நல்கின், செய்த தீமைகளையும் மறந்து, சபதங்களையும் விடுவதாக வாக்களித்துள்ளார்கள். போரை அவர்கள் கனவிலும் விரும்பவில்லை. காரணம் பெரியோர்பாற் கொண்ட மதிப்பும், ஜீவகாருண்யமுமேயாகும். இதனைப் பயன்படுத்தி உயிர்பிழைப்பாய். பயன்படுத்தாவிட்டால் தருமர், வீமன், அருச்சுனன் என்போர் கோபம் கிருஷ்ணன் என்னுங்

காற்ருல் பெருநெருப்பாகி உன் குலத்துளார் யாவரையுஞ் சாம்பராக்கும். இதிற் சிறிதேனுஞ் சந்தேகம் இல்லை. இவற்றை எல்லாம் மனத்திடை நினைந்து அவர் உரிமையை நல்குக" என்று தனது தூதைச் சொல்லிமுடித்தார்.

வீட்டுமர் இது நியாயமானதெனக் கர்ணன் அகங்காரத்தாற் சில வார்த்தைகள் பேசினன். ஆனல் வீட்டுமர் வாய்வழி வந்த சில சொற்கள் கர்ணனை மௌனியாக்கின. திருதராட்டினன், பாண்டவர்பால் மிக்கன்புள்ளான்போல் நடித்து யாவற்றிற்கும் பதில் சஞ்சய முனிவன்பாற் கூறியனுப்புவதாகச் சொல்லித் தௌமியருக்கு விடை நல்கினன்.

6. **பின்வருவனவற்றைப் பற்றிச் சுருக்கமாகத் தருக:**

அ. அருச்சுனன் காண்டவவனத்தை எரித்தமை.

ஆ. திரௌபதியின் துகிலுரிதல்.

இ. அருச்சுனன் பாசுபதம் பெறுதல்.

அ. அருச்சுனன் காண்டவவனத்தை எரித்தல்: திரௌபதியின் திருமணத்தின்பின் திருதராட்டினன் பாண்டவரை அழைத்துப் பாதி இராச்சியங் கொடுத்தான். அவர்கள் இந்திரப்பிஸ்தம் என்னும் நகரை இராசதானியாக்கிக் கொண்டு சீருடன் விளங்கினர். இதுகாலை, தான் செய்த தவறுக்காகத் தீர்த்த யாத்திரை செய்த அருச்சுனன், சுபத்திரையை மணம் முடித்தான். சுபத்திரை திருமணத்தால் கிருஷ்ணன் அருச்சுனன் என்ற இருவரினதும் நட்புப் பெருகிற்று.

ஒருநாள், அக்கினிபகவான் அந்தணன் வடிவில் அருச்சுனன் முன் தோன்றி, நரமாமிசம் உண்ணும் அரக்கர் வசிக்கும், காடு ஒன்றுளது என்றும், அங்குள்ள அரக்கரை அழித்து அக்காட்டைத் தனக்கு உணவாகத் தரும்படியுங் கேட்டான். கேட்கும்பொழுது, காண்டீபம் என்ற வில்லையும், இரண்டு அம்பறுத்தூணிகளையும், பகைவரால் ஊறுபடுத்த முடியாத ஓர் இரதத்தையுங் கொடுத்தான். கிருஷ்ணன் தானும் சக்கரமும், கவசமும் பெற்முன். இவ்வாயுதங்களினுலும், தம் புயபலத்தினுலும் இருவரும் அக்கினிபகவானின் வேண்டுகோளை நிறைவேற்றினர். இதில் அருச்சுனன் அருளால் உயிர்பிழைத்த மயன் என்பான், கிருஷ்ணன் சொற்படி, பாண்டவருக்கு இந்திரப்பிரஸ்த நகரில் ஓர் அழகிய மாளிகை அமைத்துக்கொடுத்தான். தருமனது தம்பியருக்குத் தண்டு, சங்கு என்பனவும் ஈந்து தனது நன்றியை வெளிப்படுத்தினன். இவ்வனத்தி

னின்றும் உயிர் பிழைத்த பாம்பு ஒன்று, அருச்சுனனைப் பழி வாங்கும் பொருட்டு அவன் பகைவனாகிய கர்ணனைச் சரண் அடைந்தது.

ஆ. திரௌபதியின் துகில் உரிதல்: தருமன் விதிவசத்தால் சகுனியுடன் மாயச் சூதாடி, நாடு நகர் யாவற்றையுந் தோற்றுப் பின் தம்பியரையுந் தோற்று, தன்னையுந் தோற்றான். ஈற்றில், சகுனி திரௌபதியையும் பந்தயமாக வைத்துச் சூதாடும்படி கேட்டான். சபையிலிருந்தோர் பலரும் பலவாறு பேசிக்கொண்டனர். விதுரன் நீதியை இடித்துக் கூறினன். சகுனியின் சொல்லாற் பேய்வாய்ப்பட்ட தருமன் சூதாட உடன்பட்டுத் திரௌபதியையுந் தோற்றான். அகமிகமகிழ்ந்த துரியோதனன் எழுந்து ஆனந்தக் கூத்தாடினான்; திரௌபதியை அரச சபைக்கு அழைத்துவரும்படி கட்டளையிட்டான். ஏவலரிடம் திரௌபதி நியாயம் வினவினாள். ஏவலர் சொற்கேட்ட துரியோதனன் கோபமடைந்து திரௌபதியை உடன்சென்று இழுத்து வருமாறு அருமைத் தம்பி துச்சாதனனுக்கு அறிவித்தான். விகர்ணன் யாவரையும் இகழ்ந்து பேசினான். அவன் சொற்களை எவரும் பொருட்படுத்தவில்லை. துச்சாதனன் விரைந்துசென்று திரௌபதியிருந்த அரண்மனையை அடைந்தான். நடுங்கிப் பயந்த திரௌபதி காந்தாரியிடஞ் சரண் புகுந்தாள். அது பலன் அளிக்கவில்லை. குழல்பற்றி இழுத்து வந்த திரௌபதியைச் சபைநடுவில் நிறுத்தினான் துச்சாதனன். திரௌபதி சபையோருக்கு முறையிட்டாள். சபை மௌனம் சாதித்தது. வீமன் ஆதியோர் கோபமுற்றனர். தருமன் தடை கோபத்தை அடக்கிற்று. அண்ணன் அன்புக் கட்டளையை ஏற்றுப் புலியெனப் பாய்ந்து, துச்சாதனன் துயில் களைந்தான். உதவுவார் எவருமில்லையெனக் கண்ட திரௌபதி, சிரமேற் கரங் குவித்துக் கிருஷ்ண பரமாத்மாவின் திருநாமங்களை உச்சரித்தாள். ஆடை வளர்ந்தது; அரசர் அதிசயித்தனர்; ஆடை களைந்த ஆண்மகனும், ஆகஞ்சோர்ந்து அறிவுமயங்கி அவனியில் வீழ்ந்தான். கோபம் மீறிய வீமனாதியோர் சபதம் பல செய்தனர். இவற்றையெல்லாம் அறிந்த திருதராட்டினனுங் காந்தாரியும் பாண்டவரையும், திரௌபதியையுஞ் சமாதானப் படுத்தினர்.

இ. அருச்சுனன் பாசுபதம் பெறல்: பாண்டவர் வனவாசஞ் செய்யுங்காலத்தில், ஒருநாள் திரௌபதியின் கற்பைச் சூறையாட வந்த ஜயத்திரதன், வீமனால் சிறைப்படுத்தப்பட்டு,

தருமரால் உயிர்ப்பிச்சை அளிக்கப்பட்டான். பின் வேதவியாசர் கட்டளைப்படி, தருமர் அருச்சுனனைச் சிவன்பாலும், இந்திரன் பாலும் அஸ்திரங்கள் பெற்றுவருமாறு அனுப்பினார். அண்ணன் கட்டளைப்படி அருச்சுனன் இமயமலைச்சாரலில் உள்ள இந்திர நீலமலையை அடைய, வில்லை எறிந்து வருக என ஓர் அசரீரி அவன் செவிக்கெட்டியது. கேட்டுங் கேளாமல் நடந்த அருச்சுனன் முன் இந்திரன் தோன்றிச் சிவனிடம் அஸ்திரம் பெற்றுத் திரும்பும்போது, தானும் அஸ்திரம் தருவதாகக் கூறியனுப்பினன். அருச்சுனன் ஊண் உறக்கமின்றிப் பசுபதியை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். தவத்தைக் குலைக்கத் துரியோதனனால் அனுப்பப்பட்ட மூகதானவன் என்னும் அசுரன், பன்றியுருக்கொண்டு அருச்சுனனைச் சமீபித்தான். சிவபெருமான் வேடனுருக்கொண்டு பன்றிமீது பாணந்தொடுத்தார். அதே சமயத்தில் அருச்சுனனும் பாணந்தொடுத்தான். பன்றிஇறந்தது. இருவருந் தத்தம் பாணந்தான் பன்றியைக் கொன்றதென்று சொற்போரும் மற்போரும் புரிந்தனர். அருச்சுனன் தனது வில்லால் இறைவன் தலையிலும் அடித்தான். ஈற்றில், மற்போரில் சிவன் அருச்சுனனை அந்தரத்தில் தூக்கி எறிந்து தனது சுந்தர வடிவைக் காட்டினார். அருச்சுனன் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு கேட்டு வணங்கினன். சிவனும் அவன் வேண்டிய பாசுபதாஸ்திரத்தையும் நல்கினார். பாசுபதம் பெற்றுத் திரும்பிய அருச்சுனன் இந்திரனிடஞ் சென்று அவன் பகைவர்களை அழித்து வச்சிராயுதங் கொண்டு, தன்பாற் காதல்கொண்டு தன்னைப் பேடியாக்கிய ஊர்வசியிடம் தான் விரும்பிய நேரம் பேடியாக வரமும் பெற்று ஐந்தாண்டுகளின் பின் திரும்பினன். யாவரும் இன்பக்கடலுள் மூழ்கினர்.

## 7. துரியோதனன் ஆதியோர் பாண்டவர்களுக்கு இழைத்த தீமைகள் எவை?

திருதராட்டினன் மக்களாகிய துரியோதனனாதியோர், சிறிய தந்தையின் மக்களாகிய பாண்டவரின் ஆற்றல்களையும், அவர்களுக்கு மக்கள் செலுத்தும் மதிப்பையுங் கண்டு பொருமைக் கடலுள் மூழ்கினார்கள். எதுவிதத்திலும் அவர்களின் உயிருக்கு உலைவைக்க வேண்டும் என்று எண்ணி, தமது தந்தையையும் வயப்படுத்தி, கர்ணனையும் தம்பக்கல் சேர்த்து எண்ணில் அல்லல்கள் செய்தனர். இவற்றையெல்லாந் தலைமைவகித்துச் செய்தவன் துரியோதனன். இவனுக்குப் பக்கபலமாக விருந்த

வர்கள் தம்பியாகிய துச்சாதனனும், மாமனாகிய சகுனியுமே யாவர். துரியோதனனாதியோர் விளைத்த தீமைகள் பின்வருமாறு:

i. வாரணவதம் அனுப்பியமை: இரவு பகலாக ஊண் உறக்க மின்றி வாழ்ந்த துரியோதனன் புரோசனன் என்னும் சிற்பியால் எவரும் சந்தேகியாவண்ணம் மெழுகினால் ஓர் அழகிய மாளிகையை வாரணவதத்தில் அமைப்பித்தான். அதன் பெருமையைப் பாண்டவருக்கு எடுத்துக்கூறும்படி தன் பக்கஞ் சேர்ந்தோர்மூலம் செய்வித்தான். ஆக்குவித்தோன் விருப்பத்தினாலும், அதனுடைய சித்திர அலங்காரத்தினாலும் ஏவப்பட்ட பாண்டவர் அங்குச் சென்று வசித்தார்கள். இவை யாவும் எதற்கென்பதை விதுரனாலும், தனது விவேகத்தினாலும் உணர்ந்த தருமர் தாயார்க்கும், தம்பியருக்கும் அறிவித்துத் தப்பிச் செல்லச் சமயம் பார்த்திருந்தனர். குறித்தநாளில் புரோசனன் தீவைத்தான். பாண்டவரும் குந்திதேவியும் விதுரன் அமைத்த சுருங்கை வழியே தப்பினர். துரியோதனன் எண்ணம் நிறைவேறவில்லை.

ii. சூதாடச் செய்தமை: இந்திரப்பிரஸ்தத்தில் இராசசூய யாகஞ் செய்து சிறப்புப்பெற்றதைக் கண்ட துரியோதனன், மாமனாகிய சகுனியோடு ஆலோசித்துப் புதுமனையொன்று அமைத்து, அதன் புகுவிழாவிற்கு அழைப்பித்துத் தருமனை ஒருவிதமாகத் திகைப்புண்டாக்கிச் சூதாடி, நாடு, நகர், செல்வம் அனைத்தையுங் கவர்ந்து, திரௌபதியைத் தம்பி துச்சாதனனால் மானபங்கஞ் செய்வித்துப் பன்னிரண்டுவருட வனவாசமும், ஒருவருட அஞ்ஞாதவாசமும் செய்யும்படி செய்வித்தான். வனவாசம், அஞ்ஞாதவாசம் இரண்டும் பாண்டவருக்கு எண்ணில் நலன்களை அளித்தன.

iii. வாசஞ்செய்த வனத்தை அழித்தமை: நகரமாந்தரும் மற்றுள்ளோருந் துன்பக்கடலில் மூழ்க, முனிவர் யாவரும் பின்தொடர, திரும்பியபின் எவை நடக்கும் என்பதை உணர்த்தும் நிலையில் வேடந் தாங்கி வனஞ் சென்றனர் பாண்டவருந் தாயாரும். அங்கு ஆச்சிரமம் ஒன்று அமைத்து வாழ்ந்தார்கள். துரியோதனன், மற்றையோர் உதவியுடன் பசுக்காவலின் பொருட்டு வனத்தை அழிப்பதாகக் கூறி இவர்கள் இருந்த வனத்தை அழித்தான். ஆனால், வனத்திற்குரிய சித்திரரதன் பலவறிவுரை கூறியுங் கேளாத துரியோதனனைச் சிறை செய்தான். ஆனால் அவன் அருச்சுனனால் சிறை நீக்கப்பட்டு விடுதலை பெற்றான்.

iv. பன்றியை ஏவியமை: வியாசமுனிவரின் கட்டளைப்படி இந்திரனிடமும், சிவனிடமும் அஸ்திரங்கள் பெறும்பொருட்டு இமயமலையை அடைந்தான் அருச்சுனன். அங்கு இந்திரனைச் சந்தித்தபின், இறைவனை நோக்கித் தவஞ் செய்தான். ஊண் உறக்கமின்றி ஒருகாலில் நின்று தவஞ் செய்து கொண்டிருக்கும்போது, துரியோதனன் ஏவலினால் மூக தானவன் என்னும் அசுரன் பன்றியுருக்கொண்டு அருச்சுனனைக் கொல்ல வேகமாக வந்தான். பரமபிதாவாகிய இறைவன் பாணந்தொடுத்தார். அருச்சுனனும் அதேசமயத்தில் பாணந்தொடுத்தான். பன்றியும் இறந்தது. வேடனுருக் கொண்ட இறைவனுக்கும் அருச்சுனனுக்கும் சொற்போர், மற்போர் இரண்டும் நடைபெற்றன. ஈற்றில் அருச்சுனன் இறைவனென வுணர்ந்து வணங்கி வேண்டிய அஸ்திரம் பெற்றுத் தனது இருப்பிடஞ் சேர்ந்தான்.

v. விராடன் நிரைகவர்ந்தமை: பாண்டவர்கள் அஞ்ஞாத வாசத்தைச் சிதறடித்து, அவர்களை மீண்டும் வனவாசமனுப்ப வேண்டும் என நினைத்தான் துரியோதனன். விராடதேசத்தில் இருக்கிறார்கள் எனச் சந்தேகித்து விராடனது நிரைகளைக் கவர்ந்தான். போர் நடைபெற்றது. போரில் பாண்டவர்கள் வெளிப்பட்டார்கள். சந்தோஷமடைந்த துரியோதனன், காலக் கணக்குச் சரியென்பது கேட்டு மிக்க துயரம் அடைந்தான்.

துரியோதனன் இழைத்த கொடுமைகள் எல்லாம், பாண்டவர் பெருமையை உயர்த்தி அவர்களுக்குப் பெரு நன்மைகள் அளித்தன.

## 8. கர்ணனின் குணவியல்புகளை ஆராய்க.

குந்திதேவி கன்னியாயிருக்குங் காலத்தில், சூரியன் அருளாற் பெற்றெடுத்து, பழிக்கஞ்சி ஆற்றில் விடப்பட்டு, தேர்ப் பாகன் ஒருவனால் வளர்க்கப்பட்டவன் கர்ணன் சகல கலைகளிலுஞ் சிறந்துவிளங்கினான். இவனிடம் அமைந்த ஆற்றல் களைக் கண்ட துரியோதனன், அங்கதேசத் தரசனாக்கி, இவனைத் தன்னுயிர் நண்பனாக்கிக்கொண்டான். இவனிடம் விளங்கிய குணங்கள் பின்வருமாறு :

i. தற்பெருமை கொண்டவன் : இவனிடந் தற்பெருமை அதிகம் இருந்தது. தன்னை வீரருள் வீரன் என மதித்தான்; தன் வீரத்தை எப்பொழுதும் புகழ்ந்தான். போரை விரும்

பினுன். கதையின் பல விடங்களில் நாம் இதைக் காணக் கூடியதாக விருக்கின்றது. அருச்சுனன் தனது வில்வித்தையைக் காட்டி மக்கள் மதிப்பைப் பெற்றகாலத்தும், திரௌபதியை மாலையிட்டகாலத்தும், பாண்டவரை வெல்லும் வழிகளை ஆராய்ந்த காலத்தும், தூதாகவந்த கிருஷ்ணனை யாது செய் யலாம் எனத் தனது துணையாளுேரைத் துரியோதனன் வினவியகாலத்தும் இவனின் தற்பெருமையை நாம் கண்டு கொள்ளலாம். அருச்சுனன்மீது கொண்ட பொருமையே இதற் கெல்லாங் காரணம். அது மறைந்து நின்று தொழிற்பட்டது.

ii. செய்ந்நன்றி மறவாதவன்: நன்றிகளின் நாயகமாய செய்ந் நன்றி மறவாமை கர்ணனிடம் இருந்தது. தன்னைக் கிருபாச் சாரியர் விளையாட்டுக் களரியில் அவமதித்தகாலை துரியோத னன் அரசுரிமையைக் கொடுத்து உதவியதை மனதில் நினைந்து, வாணுள்முழுவதும் அவனுக்காக வாழ்ந்தவன் கர்ணன். தனது தாயாகிய குந்திதேவி கிருஷ்ணன் ஏவலால் வரங்கேட்டபோது நன்றியின் பெருமையைத் தாயாருக்கு எடுத்துக்காட்டி, செஞ் சோற்றுக்கடன் கழிக்காவிட்டால் செய்ந்நன்றி கொன்ற பாவத்திற்காளாகி மீளா நரகத்தில் வாழவேண்டும் என்றும் விளக்கினுன். பாண்டவரைத் தம்பியர் எனவுணர்ந்தும் இறுதிவரை துரியோதனன் பக்கல் நின்று, அவனுக்காகத் தன் உயிரையே கொடுத்தான். இவை கர்ணனின் செய்ந்நன்றி மறவாச் சிறந்த குணத்தை நமக்குக் காட்டுகின்றன.

iii. ஈகையாளன்: "கொடைக்குக் கர்ணன்" என என்றும் அழியாப் பெரும் புகழைப் பெற்றவன் கர்ணன். தனது உயி ருக்கு ஆபத்துவருமென்று தெரிந்தும் அதைப் பொருட்படுத் தாமல் ஈகையை மேற்கொண்டான் இவன். தாய் குந்திதேவி கேட்ட வரங்களைத் தயங்காது வழங்கினுன்; இந்திரன் இரந்தவற்றை இல்லையென்னுது ஈந்தான்; தன் இறுதிக் காலத்தில் கிருஷ்ணன் தவமுனிபோல் வந்து, யாசித்தகாலைத் தன் புண்ணியமனைத்தையுங் கொடுத்தான். இவை யாவும் இவனிடம் விளங்கிய ஈகையை நமக்குக் காட்டுகின்றன. தனது உயிர்போங் காலத்து, தன்முன் முனிவேடம் பூண்டுநின்ற கிருஷ்ணனிடம் பெற்ற வரம் ஒன்றே இவனின் ஈகையைக் காட்டும். "முனிசிரேஷ்டரே! எனக்கு இன்னும் பிறப்புளா தாயின் ஏழேழு பிறப்பினும் இரப்பவர்க்கு இல்லையென்றுரை யாத மனமும் வண்மையுந் தந்தருள வேண்டும்." இதுவே கர்ணன் கிருஷ்ணனிடம் கேட்ட வரம்.

iv. சத்தியம் தவறுதவன் : யுத்தத்திற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றன. துரியோதனன் வீட்டுமரைச் சேனுதிபதியாக்கினுன். அது கர்ணன் மனத்துக்கு வேம்பாயிற்று. வீட்டுமர் இறந்த பின்னன்றிக் கையில் வில்லெடேன் என்று சபதஞ்செய்தான். தாயாராகிய குந்திதேவிக்கும் அருச்சுனன்மீது ஒருமுறைக்கு மேல் நாகாஸ்திரம் தொடேன் என்று வாக்குத்தத்தஞ் செய்து கொடுத்தான். இறுதிவரை தான் சொன்ன வாக்குகளிற் சிறிதேனும் மாறுபடாமல் காப்பாற்றி வாழ்ந்தான். இவையெல்லாம் கர்ணனின் சொற்றவருமையை அல்லவா காட்டுகின்றன.

v. நட்பைப் போற்றியவன் : துரியோதனன் பாண்டவரில் அருச்சுனனை எதிர்ப்பதற்கு ஏற்றவன் கர்ணன் என்பதை உணர்ந்து அவனைத் தன் நண்பனுக்கினுன். ஆனுல் கர்ணனே துரியோதனன் செய்த நன்றியை உள்ளத்தில் வைத்து உயிர் உடலைவிட்டு நீங்கும்வரையும் அவன் நட்பைப் போற்றி வாழ்ந்தான். அவன் தன்மீதுகொண்ட நட்பைத் தாயாருக்குக் "கோக்கவோ, பொறுக்கவோ" என்று கூறிச் செய்ததை எடுத்துக் காட்டினுன். இதன்மூலம் அவன் நட்பைப் போற்றியமையை நாம் அறியலாம். கர்ணன் தற்பெருமை, பொருமை என்னும் இரண்டு குணத்தையும் நீக்கி வாழ்ந்திருப்பனேல் சிறந்தவனுகக் காட்சியளித்திருப்பான்.

9. பாண்டவர் ஆக்கத்திற்குக் கிருஷ்ணன் செய்த உதவிகளைச் சுருக்கி எழுதுக.

காத்தற் கடவுளாகிய திருமால், தருமத்தை உலகில் நிலைநிறுத்துவதற்காகக் கிருஷ்ண அவதாரம் எடுத்தார். பாரதக் கதையில் சிறப்புற்று விளங்குங் கிருஷ்ணபகவான், நற்குணங்களெல்லாம் நிரம்பப்பெற்ற பாண்டவர்களுக்கு உறுதுணையாக நின்று, தீயவர்களாகிய துரியோதனனுதியோரை அழித்து, அவனியில் அறத்தை நிலைநாட்டினுர். பாண்டவர் ஆக்கத்திற்கண்ணுங் கருத்துமாயிருந்த கிருஷ்ணன் செய்த செயல்களை ஆராய்வாம் :

i. திரௌபதி திருமணம் : மண்ணரசர் எல்லாம் மனமுடைந்து மண்ணை நோக்க, மற்றெவராலும் நினைக்கமுடியாச் செயற்கருஞ் செயல் புரிந்து, மங்கையர் திலகமாம் திரௌபதியின் மணமாலைக்கு இலக்கானுன் அருச்சுனன். மனமுடைந்த மன்னர், துருபத மன்னனுடன் போர்தொடுத்தனர். துருபதன்

மௌனியாய்ச் செயலற்று நின்றான். அருச்சுனனும் மற்றை யோரும் அனைவரையும் நிலைகுலையச் செய்தனர் கிருஷ்ணன் வந்து சமாதானஞ் செய்து யாவரையுந் திருப்திப்படுத்தினான்.

ii. இராஜசூய யாகம்: பாதியரசுபெற்ற பாண்டவர், இந்திரப் பிரஸ்த நகரைத் தலைநகராகக்கொண்டு அரசியற்றுங்கால் நாரத முனிவர் வந்து இராஜசூய யாகத்தை நினைவுறுத்தினார். அவ் வார்த்தை கேட்ட தருமன் தம்பியரைக்கொண்டு சகலதேசத் தரசர்களையும் வென்று இராஜசூய யாகத்தைச் சிறப்புறச் செய்தான். அக்கிரபூசையை அனந்தசயனனுக்கு அளித்து அவன் ஆதரவைப் பெற்றான். அப்போதே சிசுபாலனைக் கொன்று அவர்களுக்கு அனுக்கிரகம் நல்கினார்.

iii. சுபத்திரை திருமணம்: இந்திரப்பிரஸ்த நகரத்தில் பாண்டவர் பாதி அரசுபுரிந்த காலத்தில் அருச்சுனன் தான் எண்ணுமற் செய்த தவறுக்காகத் தீர்த்தயாத்திரை சென்றான். பலதலங்களைத் தரிசித்தபின் சுபத்திரை எண்ணந் தோன்றத் துவாரகை சென்றான். அங்கு கிருஷ்ணன் உபதேசப்படி தவ முனி வேடம் பூண்டு பலராமன் அரண்மனையுள் நுழைந்து, விழா நடந்த ஒருநாள் அவளையும் அழைத்துச் சென்றான். கோபங்கொண்ட பலராமனைச் சாந்தப்படுத்தித் திருமணத்தை முடித்துவைத்தான் கிருஷ்ணன்

iv. திரௌபதி மானங்காத்தல்: மாமன் சகுனிமூலம் மாயச் சூதாடித் துரியோதனன் பாண்டவரின் நாடு, நகரம், செல்வம் அனைத்தையுந் தனது உடைமையாக்கினான். அடிமையாய திரௌபதியின் அரசவுடைகளை அருமைத்தம்பி மூலம் அகற்று வித்தான். அதுகாலை தருமர் குறிப்பின்படி மற்றையோர் அடங்கியிருந்தனர். கிருஷ்ணர் திரௌபதியின் மானத்தைக் காப்பாற்றிப் பாண்டவரின் பொறுமைக்குக் கௌரவம் அளித்தார்.

v. தூதாகச் செல்லல்: பாண்டவர் வனவாசமும், அஞ்ஞாத வாசமும் முடித்தனர். அவர்களுக்குரிய பாகத்தைப் பெற்றுக் கொடுத்தற்காகத் துரியோதனனிடஞ் சென்றான். சென்று நீதிகள் எடுத்துக்கூறி உரிய பாகத்தைக் கொடுக்கும்படி வற்புறுத்தினான்.

vi. விதுரன் வில்முறித்தல்: நீதியும் நேர்மையும் நிறைந்த வனும், வில்வித்தையில் சிறந்தவனுமாகிய விதுரன் துரியோ தனனுக்கு உதவி செய்யாதிருப்பதற்காக, துரியோதனனுதி

யோரின் உணவை அருந்தாமல், விதுரன் மாளிகையில் உண வருந்தி விதுரனைத் துரியோதனன் கோபிக்கச் செய்து, வில்லை முறிப்பித்துத் தன் எண்ணத்தை முடித்தான் கிருஷ்ணன்.

vii. கர்ணன் பிறப்புணர்த்தல்: துரியோதனனுதியோரிடம் தூதாகச் சென்ற கிருஷ்ணன் கர்ணனுக்கு அவன் பிறப்பை உணர்த்தினுன். இதுவரை காலமும் தந்தை தாயர் இன்னுர் என அறியாத கர்ணன் அளவிலா ஆனந்தம் அடைந்தான். குந்தி வரம் பெறுவதற்கு இலகுவாக முன்கூட்டியே கிருஷ்ணன் இதைச் செய்துவைத்தான்.

viii. குந்திக்கு மகன் கர்ணன் எனல்: குந்திதேவியை அடைந்து, கர்ணன் அவளது மகன் என்பதை எடுத்துக்கூறி, அருச்சுனன்மீது இரண்டாம்முறை நாகாஸ்திரம் பிரயோகிக்க வேண்டாம் என்று அவனிடம் வரம் வாங்கும்படி சொன்னுன். ஆனுல் குந்திதேவி மனமுடைந்தாள். தக்க நியாயங் கூறி அவளை உடன்படும்படி செய்தான்.

ix. அசுவத்தாமனைத் துரியோதனன் சந்தேகிக்கச் செய்தல்: தூதாகச் சென்ற கிருஷ்ணன், அசுவத்தாமனைத் தனியாக அழைத்துச் சென்று அறிவுரைகள் கூறி, தந்திரமாகத் தனது மோதிரத்தைக் கழற்றிவிட்டு, அதனை எடுப்பித்துச் சூரியனைக் காட்டித் துரியோதனன் சந்தேகிக்கும்படி செய்தான்.

x. தேற்றல்: பாண்டவரும், குந்திதேவியும், திரௌபதியும் மனந்தளர்ந்து சோர்ந்த காலங்களில் அவர்களுக்கு அறிவுரைகள் கூறி அவரைத் தேற்றுவித்து கருமத்திற் கண்ணுயிருக்கும்படி செய்தான்.

xi. போரில் வெற்றியீட்டல்: பஞ்சபாண்டவர் போரிலே வெற்றியீட்டப் பல தந்திரங்கள் செய்தான். கொடுத்த வாக்கின்படி அருச்சுனனுக்குத் தேர்ச் சாரதியானுன். யுத்தகளத்தில் தருமர்மூலம் வீட்டுமரின் சாவை அறியும்படி செய்தான். இந்திரன்மூலம் முன்பாகவே கவசகுண்டலங்களைக் கவர்ந்தான். தான் கர்ணனிடம் புண்ணியமனைத்தையும் பெற்றுன். தருமர் வாயினுல் பொய் பேசும்படி செய்வித்தான். அருச்சுனனை நோக்கி நாகாஸ்திரம் வரும்போது தேரை அமிழ்த்தி அதன் குறியைப் பிழைக்கும்படி செய்தான். இவை யாவும் பாண்டவர் வெற்றிபெறச் செய்த தந்திரங்கள்.

இப்படியாகப் பலவிடயங்களில் ஆவன செய்து, பாண்டவர் ஆக்கத்திற்கு உறுதுணையாக விருந்தவன் கிருஷ்ணன்.

10. பாரதகாலத்தில் அரசர்களுக்கிடையில் இருந்த பழக்க வழக்கங்களைச் சுருக்கி வரைக.

பாரத நாட்டு மக்களால் இதிகாச காவியங்கள் என்று போற்றப்படுவன கம்பராமாயணம், பாரதம் என்னும் இரண்டு மாம். மனிதனை நல்வாழ்வின் கண் செலுத்தும் நூலானமையின் பாரதத்தை நான்கு வேதங்களுடனுஞ் சேர்த்து ஐந்தாம் வேதம் எனச் சொல்வர். இதனை வியாச முனிவர் சொல்ல விநாயகப் பெருமான் மாமேரு மலையில் எழுதியதாகச் சொல்வார்கள். இதிலிருந்து அக்காலவரசர்களின் பழக்கவழக்கங்கள் பல வற்றை நாம் அறியக்கூடியதாக விருக்கின்றது. அவை பின்வருமாறு:

i. அரசுரிமை: ஓர் அரசனுக்குப் பிறக்கும் மக்கள் பலருள்ளும் மூத்தவனுக்கே அரசுரியது. மூத்தவன் அங்கக்குறை பாடுடையவனாக விருந்தால் மற்றவனுக்கு உரியதாகும். திருதராட்டினன் பாண்டுவிலும் மூத்தவனாயிருந்தும், நேத்திரதரித்திர முடையவனாயிருந்தபடியால் அரசுரிமை கிடைக்கவில்லை

ii. அரசர்க்குப் பல மனைவியர் இருந்தனர்: ஓர் அரசனுக்குப் பல மனைவியரிருந்தனர். பாண்டுவுக்கு இருமனைவியர் இருந்தனர் என்று சொல்லப்படுகின்றது. அரசரும் புத்திரப்பேற்றைப் பெருஞ் செல்வமாக மதித்தனர். பாண்டு முனிவரின் சாபத்துக்காளாகி அடைந்த வேதனையை நாம் அறிகின்றோம். வீமன், அருச்சுனன் இருவருக்கும் மனைவியர் பலர்.

iii. முனிவர்கள் மந்திரிசபையில் இருந்தனர்: கல்வி கேள்விகளிற் சிறந்த முனிவர்கள் அரசனின் மந்திரிசபையில் அங்கம் வகித்தனர். அரசன் எக் கருமத்தையும் அவர்களோடு கலந்தாலோசித்தே செய்வான். பாண்டவர் அவையில் தௌமிய முனிவருந் துரியோதனன் அவையில் சஞ்சயமுனிவரும் அங்கம் வகித்தனர். முனிவர்களுக்கு அரசர்கள் தக்க மரியாதை கொடுத்தனர். கன்னிப் பெண்களையே பணிவிடை செய்ய விட்டாரெனின் அவர்கள் முனிவருக்குக் கொடுத்த மதிப்பு எவ்வளவு என்று சொல்லவேண்டியதில்லை; குந்திதேவி, சுபத்திரை வரலாறுகள் இதை வலியுறுத்தும்.

iv. கலையரங்கேற்றம்: அக்காலத்தில் தக்க ஆசிரியர்கள் மூலம் அரச குமாரர்களுக்குக் கலைகள் போதிக்கப்பட்டன. அவர்கள் ஆற்றல்கள் யாவும், மக்கள் கண்டு களிக்கப் பகிரங்க

மாகக் காட்டப்பட்டன. பாண்டவர்கள், துரியோதனனுதியோர் ஆற்றல்கள் பகிரங்கமாக்கப்பட்டன. மக்கள் திரண்டிருந்து தம் களிப்பை வெளிப்படுத்தினர். பொருமையும் சிலர் மனத்தில் குடிகொண்டது.

v. மன்னர் வேட்டைமேற் சென்றனர்: பாண்டு மன்னன் வேட்டைமேற் சென்று முனிவரின் சாபத்துக்காளானுன் என்றும், துரியோதனன் ஆனிரைகளைப் பாதுகாப்பான் வேண்டிப் பாண்டவர்கள் இருந்த வனத்தை அழித்தான் என்றும், அக்கினி பகவானுக்கு உணவளிப்பான் நினைந்து அருச்சுனன் காண்டவவனத்தை அழித்தான் என்றுஞ் சரித்திரங் கூறுகின்றது. இவை அரசர்கள் வேட்டைமேற் சென்ருர் என்பதைக் காட்டுகின்றன. வேட்டையாடல் அரசர் வழக்கமாயிருந்தது.

vi. குருதட்சணை: அரசகுமாரர்கள் தமக்குக் கலை பயிற்றிய ஆசிரியர்களுக்குத் தக்க மரியாதை வழங்கி அவர் ஏவலின்படி நடந்தார்கள. வீட்டுமர் குருதட்சணையாகத் துருபதனைச் சிறைப் பிடித்துத் தருமாறு தமது மாணுக்கராகிய பாண்டவரையுங் கௌரவரையுங் கேட்டுக்கொண்டார். எல்லோரும் முயன்ருர்கள். முயற்சி பலனளிக்கவில்லை. அருச்சுனனே அரை நொடிப்பொழுதில் அவனைச் சிறைசெய்து குருதட்சணையைச் செலுத்திஞன்.

vii. திருமணம்: அரசர்கள் தம் மக்களை ஒரு வீரனுக்கு மணம் முடித்துக்கொடுக்க விரும்பினுர்கள். அதற்காகப் போட்டிகளும் வைத்தார்கள். துருபதன் தன்னைச் சிறைப் பிடித்த வீரனுக்கு ஒரு மகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று தவமிருந்து திரௌபதியைப் பெற்றெடுத்துப் போட்டி வைத்து அருச்சுனனுக்கு அவளைத் திருமணஞ் செய்து கொடுத்தான். விராடன் அருச்சுனன் ஆற்றலை மெச்சித் தனது மகளை விவாகஞ் செய்யும்படி கேட்டான்.

viii. தூது: அரசர்கள் தமக்குள் ஏதாவது பிணக்கு ஏற்பட்டால் சாம, பேத, தான, தண்டம் என்னும் நால்வகை உபாயங்கள் மூலம் தீர்த்தனர். தமக்கு இழைக்கப்பட்ட தீங்கை விலக்கும் பொருட்டுக் கல்வி, கேள்விகளிற் சிறந்த பெரியாரைத் தூதாக வனுப்பினர். அவர்கள் எவ்விதமாகப் பேசிய போதுங் கொல்லமாட்டார்கள். தூதுவருக்குச் சிறந்த மதிப்புக் கொடுத்தார்கள் சஞ்சயன் தூது, தௌமியர் தூது, கிருஷ்ணன் தூது என்பனவற்றைப் பாரதச் சரித்திரத்திலே காணலாம்.

ix. சூதாடல்: அரசர்கள் பொழுதுபோக்குக்காகச் சூதாடினார்கள். இது அவர்களுக்கிடையில் வழக்கமாக விருந்தது. பஞ்சமா பாதகங்களில் ஒன்றெனத் தெரிந்தும் இதை மேற்கொண்டார்கள். தருமனே சூதாடினன் என்றால் மற்றையோரைச் சொல்லவேண்டியதில்லை.

x. போர்: போர் கடைசியாகக் கொள்ளப்பட்டது. ஒன்றும் சரிவராதவிடத்தே போர் ஆரம்பித்தார்கள். போரில் அறவழி பின்பற்றப்பட்டது. முரசறைதல், நிரை கவர்தல் என்பன ஒழுங்காக நடைபெற்றன. ஒரேவிதமான ஆயுதங்கள் உள்ளவரோடே போர்புரிந்தனர். ஆயுதம் இல்லாதவரோடு ஒரு காலத்தும் போர் செய்யமாட்டார்கள். அரசர்கள் பண்பாடான முறையிற் போர் செய்தனர் என்பதை நாம் அறிகின்றோம்.

xi. தெய்வபத்தி: தெய்வபத்தியுடையவர்களாய் இருந்தனர் அரசர்கள். தெய்வங்களை நோக்கித் தவமிருந்து சிறந்த ஆயுதங்களைப் பெற்றனர். அருச்சுனன் வியாசமுனிவர் கட்டளைப்படி தவஞ்செய்து சிவபெருமானிடம் பாசுபதாஸ்திரம் பெற்றான். தெய்வத்தன்மையுள்ள அஸ்திரங்களை அரசர்கள் வைத்து அதைப்போற்றி உபயோகித்தனர். இவை தெய்வபத்தியைக் காட்டுகின்றன.

இவையேயன்றி இன்னும் பல பழக்கவழக்கங்கள் அரசரிடம் இருந்தன என்பதைப் பாரதச் சரித்திரத்தில் இருந்து அறிகின்றோம்.

**11. பாரதத்தில் நீர் விரும்பும் கதாபாத்திரம் எது? விரும்புவதற்குரிய காரணங்களைத் தருக.**

பாரதத்தில் பல பாத்திரங்கள் வருகின்றன. இவர்களில் தருமர் என்ற கதாபாத்திரத்தை நான் மிகவும் விரும்புகின்றேன். இவர் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறை தெய்வமாகப் போற்றப்படுகின்றார். மனிதப்பிறவி எடுத்தவர் எவ்வாறு வாழவேண்டும் என்று வாழ்ந்துகாட்டியுள்ளார். இவர் இன்றும் "பொறுமைக்குத் தருமர்" என்று போற்றப்படுகின்றார். இவரிடம் அமைந்திருந்த குணங்கள் என்னை மிகவுங் கவர்ந்துள்ளன. இவரிடம் பொறுமை, வெகுளாமை, இன்னுசெய்யாமை, அன்பு, நாண், வாய்மை, பெரியார் சொற்படி நடத்தல் ஆதியாம் நற்குணங்கள் நிறையவிருந்தன. இவரைக் குணக்குன்றெனல் சாலவும் பொருந்தும். இவருடைய குணங்களை இவரின்

கருமங்களாலும், சொற்களினாலும், இவரைப்பற்றி மற்றையோர் கூறியவற்றாலும் நாம் அறியலாம். இவரின் குணங்களைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்.

i. பொறுமையுள்ளவர்: இவரைப் பொறுமையின் உறைவிடம் எனலாம். கோபம் உண்டாகக்கூடிய பல சந்தர்ப்பங்களில் கோபத்தை அடக்கிப் பொறுமையை மேற்கொண்டார். திரௌபதியைத் துச்சாதனன் அரசசபையில் மானபங்கஞ் செய்தபோதும், வனவாசத்தில் ஜயத்திரதன் திரௌபதியின் கற்பைச் சூறையாட நினைத்தபோதுங் கோபத்தை அடக்கி, தம்பியரையும் அடங்கச்செய்து தமது பொறுமைக்குக் கூடிய மதிப்புத் தேடினார். "தம்பியுள்ளவன் சண்டைக் கஞ்சான்" என்பது நாடறிந்த பழமொழி. வீரமிக்க தம்பியர் இருந்தும் பொறுமையை மேற்கொண்டமையே என்னைக் கவர்ந்தது. "ஒறுக்கும் வலிமையுடையான் பொறையே பொறை!"

ii. தெளிந்த வறிவுள்ளவர்: கற்பவை கற்றுக் கற்றாங் கொழுகியவர் இவர். கறுத்தின்னா செய்தவராகிய துரியோதனனாதியோர்க்கு மறுத்தின்னா செய்யாமல் வாழ்ந்தார், என்றும் அவர்களுடன் ஒற்றுமையாக வாழ விரும்பினார். நச்சுப் பொய்கைக் கதிபதியாயுள்ளவர்க்குக் கூறிய விடைகள் இவர் தூயவறிவைத் துலாம்பரமாக்கும். தமது கூரிய புத்தியாலும், விவேகத்தாலும் எவ்வித இடையூறும் அடையாது தப்பினார். திரௌபதி ஜயத்திரதனைத் தண்டிக்க வேண்டும் என்ற காலை இவர் கூறிய மொழிகள் மாணிக்கக் கற்கள். யாவருஞ் சிந்திக்க வேண்டியவை. அவற்றைச் சிந்தித்து நடந்தால் உலகஞ் சிறப்படையும். சிறந்த வறிவுரை கூறிச் சொல்லுஞ் செயலும் ஒன்றுபட வாழ்ந்த இவரை நாம் விரும்பாமல் இருக்கலாமா?

iii. அன்புள்ளவர்: அன்புள்ளவரானமையின் அன்றோ துரியோதனனுக்காக விரங்கி அவர்களையும் நல்வழிப்படுத்தி ஒட்டியுறவாடி வாழ விரும்பினார். வனவாசம் செய்தகாலத்தில் தன்னிடம் வந்த யாவர்க்கும் உதவவேண்டியன வில்லாது சூரிய பகவானிடம் அக்ஷயபாத்திரம் பெற்று அளவிலா வானந்தம் அடைந்து யாவரையும் பாதுகாத்தார். போரை நிறுத்தவே முனைந்தார் எனின் இவரின் அன்பின் பெருக்கை யாரால் அளவிடமுடியும்.

iv. மூத்தோர் வார்த்தையைப் போற்றுபவர் : மூத்தோர் வார்த்தை அமுதம் எனப் போற்றி வாழ்பவர். மூத்தோர் வார்த்தைகளை ஆராயாது பின்பற்றுபவர். தனக்கு அன்புடையவர் கூறுவதெதனையும் நம்பியொழுகுபவர். திருதராட்டினன் கட்டளைப்படி வாரணாவதஞ் சென்றார். சூதினால் அழைக்கின்றார் என உணர்ந்தும் புதுமனைப் புகுவிழாவிற்கு வந்து சூதாடினார். போர்க்களத்தில் "அசுவத்தாமா இறந்தது மெய்யே யானை" எனக் கண்ணன் கட்டளைப்படி பொய்போலும் மெய் பேசினார். போர்க்களத்தில் பெரியோர் சொற்படி நடந்தார்.

v. சத்தியந் தவறாதவர்: சொன்ன சொற்களினின்றுந் தவறாது நடப்பவர். துரோணரின் வாக்கொன்றே தருமர் சத்தியந் தவறாதவர் என்பதைக் காட்டும். போர்க்களத்தில் நின்ற துரோணர் ஒருவரைப் பார்த்து, "மூன்றுலகங்களையும் ஒருங்கே பெறினும் ஓர் அணுத்துணையும் பொய்யுரைக்கத் துணியா உயர் நெறியுடையனாகிய உதிஷ்டிரன்பாற் சென்று உண்மையை அறிந்துவா" என்று கூறினார். இது ஒன்றே இவரின் சத்தியந் தவறாமையை வலியுறுத்தும்.

குணக்குன்றாய், தூயவாழ்வு வாழ்ந்து நாமும் நலம்பெறப் போதனை செய்யுந் தருமரை விரும்புவதில் இழுக்கொன்றும் இல்லை !

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்